கழக வெளியீடு : இஉஅ

# ஓமந்தூரார்

## எழுத்தும் கருத்தும்

OFFICE OF THE ... OF BOOKS
... APR ...
MAD... A...

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை, 1.

First Edition: Jan. 1950

V211,2137M95
N50

(*Rights Reserved*)

*Published by:*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY :: MADRAS 1.

Head Office:
24, EAST CAR STREET, TIRUNELVELI.

113486

அப்பர் அச்சகம், 2-140, பிராட்வே, சென்னை 1.

OFFICE OF THE ... OF BOOKS
MADRAS

## பதிப்புரை

உலகம் போற்றும் உத்தமர் **காந்தியடிகள்** போன்ற பெறலருந் தவப்பெரியார்களின் இடையறாத பேருழைப்பின் பயனாக இன்றுமுதல் "குடியரசு" மலர்கின்றது.

உரிமைபெற்ற மக்களுள்ளங்கள் உவகைக் கடலில் திளைக்கின்றன. உரிமைக்குப்பின் ஆற்ற வேண்டும் பெரும்பணியைப்பற்றிய சிந்தனையலைகள் தோன்றுகின்றன. பிறந்த பொன்னாட்டை உலக முன்னணி நாடெனச் செய்ய ஒவ்வொருவரும் துடிக்கின்றனர்.

இத்தகைய குடியரசு நன்னாளில் சிந்தனைக்கு விருந்தாக, வாழ்வுக்கு வழிகாட்டியாக "**ஓமந்தூரார் எழுத்தும் கருத்தும்**" என்ற இவ்வரிய தொகுப்பு நூலை வெளியிடும் பெருவாய்ப்புப் பெற்றமைக்குப் பெரிதும் மகிழ்கின்றோம்.

விடுதலைப்போரின் முன்னணியில் தன்னலமற்றுப் பெரும்பணியாற்றிய பின்னர், மக்கள் நலன் கருதிச் சென்னைமாநில முதலமைச்சராகி, நேர்மை வாய்மை திறமை இவற்றின் ஒருருவாக வீற்றிருந்து இரண்டாண்டுகள் ஆட்சிபுரிந்து

மக்களிதயங்களில் அன்றும் இன்றும் என்றும் நிறைந்து நிற்பவர் திரு. ஓமந்தூர் இராமசாமி **ரெட்டியார்** அவர்களாவர்.

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்றார் பாரதியார். இத்தகைய ஒளி அவர்கள் உரை ஒவ்வொன்றிலும் ஊடுருவி நிற்கின்றது; அனைவரையும் தன்பால் அவர் தம் அரிய கருத்துக்களில் இழுத்துச் செல்கின்றது; சிந்தனையும், ஆழ்ந்த கவலையுங் கொண்டு மக்கள்நலங்கருதி யமைந்து விளங்கும் அவர் வகுக்கும் திட்டங்களில், ஈடுபடுத்திவிடுகின்றது. சொல்லழகும் கருத்தழகும் அமைந்த அவர்தம் பேருரைகளிலே, தமிழகத்தின் இக்கால நிலையும், வருங்காலம் வளம்பெறத்தக்க முறையும் நிழலோவியங்களைப்போன்று காட்சியளிக்கின்றன. அவை மீண்டும் மீண்டும் படித்துச் சிந்தித்துப் பயன்பெறத்தக்க கருத்துவளம் நிறைந்த கருவூலங்களாக விளங்குகின்றன.

புன்னகை தவழும் இன்முகம், கருணைபொழியும் கண்கள், அன்பு கனியும் அருள் நோக்கம், வாய்மையும் உரமும் நிரம்பிய திருவுள்ளம்,—இவையனைத்தும் ஒருங்கே வாய்ந்து தமிழர்தம் நலமொன்றே கருதி வாழும் திரு. ரெட்டியாரவர்கள் தமிழர்தம் தனிப்பண்பின் திருவுருவாகவே நம்மிடை வாழ்கின்றார் என்றால், அது மிகையாகாது; அவரைப் பெற்றமை தமிழகத்தின் தவப்பயன் என்றே கூறலாம்.



இத்தகைய பெருந்திருவினர் தமிழகத்தின் நலங்கருதி இத்தொகுப்பை வெளியிட இசைந்தருளிய பேரன்பிற்கு யாம் பெரிதும் கடப்பாடுடையோம்.

திரு. ஓமந்தூரார் அவர்கள் கட்டுரை, சொற்பொழிவுகளின் அடுத்த தொகுதியினையுந் தொடர்ந்து வெளியிடும் கருத்துடையோம்.

தமிழ்மக்கள், தமிழ்நாட்டு அரசியல்-பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள அன்பர்கள், அனைவரும் இதனை நன்கு வரவேற்று வாழ்வும் வளனும் பெற்றுச் சிறந்தோங்க இறைவன் திருவருளை வேண்டுகின்றோம்.

சென்னை,
26-1-1950.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

OFFICE OF THE RE...AR OF BOOKS
APR
MAD A

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| | | *பக்கம்* |
| 1. | மகாத்மா காந்தியும் தைப் பொங்கலும்<br>*கல்கி பொங்கல் மலரில் வந்த கட்டுரை* | 1 |
| 2. | தமிழ் இசை<br>*தமிழிசை இயக்கத்தின் ஆறுவதாண்டுத் தொடக்க விழாச்சொற்பொழிவு (23-12-48)* | 7 |
| 3. | கம்பன் காட்டும் இலட்சியப் பெருவாழ்வு<br>*கம்பர் மாநாட்டுச் சொற்பொழிவு* | 22 |
| 4. | சுதந்திரதினச் செய்தி<br>*வானொலிப் பேச்சு, ஆகஸ்டு 1947* | 33 |
| 5. | புத்தாண்டு<br>*சர்வதாரி ஆண்டுத் தொடக்கநாள் வானொலிப்பேச்சு* | 38 |
| 6. | மாகாண மக்களுக்கு வேண்டுகோள்<br>*வானொலிப்பேச்சு (30-3-1948)* | 46 |
| 7. | இந்துமத தர்ம ஸ்தாபனங்கள்<br>*சென்னைச் சட்டசபையில் 10-2-1949-ஆம் நாள் நிகழ்த்திய சொற்பொழிவு* | 50 |
| 8. | கோயில்கள், மடங்கள், அறநிலையங்கள்<br>*தமிழ்நாட்டு மடாதிபதிகள் முதலியோர் பேரவையின் முன்னுரை* | 74 |
| 9. | 1938-ல் இராசபாளையத்தில் நடந்த தமிழ் மாகாண அரசியல் மாநாட்டின் தலைமையுரை (30-12-38) | 95 |

10. அலுவலாளர் கடமை
*கெசட் பதிவில்லாத அலுவலாளர் வேலைநிறுத்தத்தின்போது பேசியது* 121

11. ஏரி குளங்களைச் செப்பனிடுவோம்
*தினசரியில் வெளிவந்த கட்டுரை* 125

12. விவசாயச் சீர்திருத்தமும் தொழில் சமநிலையும்
*சென்னை அரசாங்கப் பொருளாதார ஆலோசகரால் முதற்கண் வெளியிடப்பெற்றது.* 156

13. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை
1947-ம் *ஆண்டு அக்டோபர் மாதம்* 9-*ஆம் நாள்* 205

14. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அப்பர் அச்சகத் திறப்புவிழா
1948-ம் *ஆண்டு அக்டோபர் மாதம்* 4-*ஆம் நாள்* 227



# ஓமந்தூரார்

## எழுத்தும் கருத்தும்

### 1. மகாத்மா காந்தியும் தைப்பொங்கலும்

பொங்கலுக்கும் காந்தியடிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது; மிகுந்த பொருத்தம் இருக்கிறது. 'தொடர்பு என்ன, பொருத்தம் என்ன? மகாத்மா காந்தி குஜராத் தேசத்தில் பிறந்தவராயிற்றே; பொங்கல் தென்னாட்டு விழா ஆயிற்றே,' என்று கேட்கலாம். பொங்கல் என்னும் விழாவினுடைய வரலாற்று உண்மையையும், காந்தி அடிகளின் வாழ்வின் அடிப்படையான உண்மையையும் தெரிந்தால் இந்தத் தொடர்பும் பொருத்தமும் தெளிவாகும்.

ஆவீன, மழைபொழிய, இல்லம் வீழ,
அகத்தினள் மெய்நோவ, அடிமைசாவ,
மாவீரம் போகுதென்று விதைகொண்டோட,
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளாத விருந்துவர, சர்ப்பம் தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்க,
குருக்கள் வந்து தக்ஷிணைக்குக் குறுக்கே நிற்க,
பாவாணர் கவிபாடிப் பரிசு கேட்க,
பாவிமகன் படுந்துயரம் பார்க்கொணாதே

இதுதான் இன்றிருக்கும் உழவரின் நிலைமை.

ஓய்வின்றி, உலைப்பின்றி கண்ணிணைக் காக்கும் இமைபோல் பயிரைப் பல திங்களாகக் காத்துவந்து, இறுதியில்

அதன்பலனை அடையும் உழவர்கள் அறுவடைவிழா பொங்கல். அந்த உழவர்கள் நலனே உலகோர் நலன் என்று எடுத்தோதி, அவர்களுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணம் செய்தவர் காந்தி அடிகள். இதைவிட வேறென்ன தொடர்பு வேண்டும்? பொருத்தம் வேண்டும்?

பொங்கல் விழா தென்னாட்டுக்கு மட்டும் உரியதன்று. எங்கெங்கு விவசாய சமூகங்களிருக்கின்றனவோ, அங்கெல்லாம் அறுவடை முடிந்ததும் களியாட்டு நடைபெறுகின்றது. வடநாட்டிலுமுண்டு; மேலைநாடுகளிலுமுண்டு. காலத்துக்கேற்ப, சமூகப் பண்புகளுக்கேற்ப விழா வேறு வேறு உருவம் பெறலாம். ஆனால், எங்கும் நல்லுழைப்பினால் வரும் பயனால் பொங்கலுண்டு.

### உழைப்பாளியின் தோழர் காந்தி

எங்கெங்கு விவசாய சமூகங்கள் இருந்தனவோ அங்கெல்லாம் மகாத்மா காந்தியின் அன்பும் சென்றது. எங்கெல்லாம் நல்லுழைப்பு இருந்ததுவோ அங்கெல்லாம் அவர் ஆசியும் நிறைந்தது. மேலைநாடு, கீழநாடு என்று மகானுக்கில்லை. தென்னாடு, வடநாடு என்று அவருக்கில்லை. உழைப்பு எங்கும் உவகையை ஊட்டவேண்டும். ஊட்டுமிடமெல்லாம் அவர் கருணை விழி சென்றது; ஊக்கமில்லாத இடமெல்லாம் ஊக்கமூட்ட அவர் உயிர் துடித்தது; உடலும் அர்ப்பணமாயிற்று.

### அடிகள் கனவு

உழவர்கள் எங்கும் எப்பொழுதும் ஏழைகளாக இருக்கிறார்கள். உழவோ உலகத்துக்கு அச்சாணிபோன்ற தொழில்.



"காற்றுபோல் வருகின்ற கார்விடினும் கடல்சுவரி,
ஆற்றுநீர் வெள்ளி அரசனும் தெற்காயிடினும்,
ஏற்றமே கொடுநாளு மிறைத்துலகம் விளைவித்துக்,
காத்துமே உயிர் வளர்த்தல் காராளர் தங்கடனே"

காராளர் அணிவயலில் நட்டமுடி திருந்தினாலன்றோ, இந்தப் பாராளும் குடிமக்கள் வாழ்வு திருந்தும். சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம். உழவு செழிக்க, உழவர் வறுமை நீங்க வேண்டும். உழைப்பவர் ஊதியம் பெற வேண்டும். உழைப்பில் இன்பம் பெருக வேண்டும். இன்பம் பெருக வேண்டுமென்றால் கிராமக் கழிபொருள்களை வீணாக்காமல் பாதுகாத்து உரமாக்கவேண்டும். அப்பொழுது கிராம சுகாதாரம் முற்னேற்றமடைவதுடன் அதிக உணவு உற்பத்தி செய்யவும் முடியும். இதுவே காந்தி அடிகள் அல்லும் பகலும் கண்ட கனவு; இதுவே அவர் தியான மந்திரம்; இதுவே அவர் எல்லோர்க்கும் சொல்லிவந்த உபதேசம். இதுவே அவர் வாழ்வின் இலட்சியமுமாகியது.

### புரட்சிகரமானதோர் நிகழ்ச்சி

*சரித்திர பூர்வமாகப் பார்த்தால், மிகப் புரட்சிகரமானதோர் நிகழ்ச்சி இது என்பது தெரியவரும். செயற்கருஞ்செயல் அடிகள் செய்தனர் என்பது புலனாகும். அடிகள் அரசியல் வானத்தில் தோன்றிய அன்று, இயந்திரப் பொருளாதாரமும், அதோடு கலந்து மேலைநாட்டு நாகரீகமும் அதிவேகத்தில் வந்துகொண்டிருந்தன. புதுமை மோகத்தில் மக்கள் நிறை அழிந்தனர். விவசாய நாடுகள், இயந்திரத் தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு அடிமையாகி, ஏழ்மையாவதை அறிந்திலர். பொருளாதாரத் துறையில் மட்டுமன்றி, அரசியல் துறையிலும்,

சமய கலாச்சார துறைகளிலும் அடிமையாய் வறியவரா வதை உணர்ந்திலர். அழிவு ஆற்றலைக்கொண்டு தடுக்கரிய வெள்ளம்போல் புதுமைச் சக்திகள் பாய்ந்தன.

தடுக்கரிய வெள்ளம்போல் வந்த புதுமை இயந்திர அழிவு சக்திகளுக்கு ஆத்ம சக்தியால் ஒரு அணை போட்டார் அடிகள். அந்த அணையால், பெருவாரியான மக்கள் சிந்தனையும் செயலும் பாறிக்கிடந்த நிலங்களில் பாய்ந்தன. ஏழ்மைப்படுத்தப்பட்ட உழவர், தொழிலாளர் முதலியவர்களின் உள்ளங்களில் பரந்தன. நகரங்களி லிருந்து அறிஞர் நாட்டம், நாட்டுப்புறத்திற்குச் சென்றது; பேராலைகளிலிருந்து சிறு கைத்தொழில்களில் சென்றது. இராட்டினமும் கலப்பையும் நடுநாயகம் பெற்றன. வாழ்வின் மையம் மாறுபட்டது.

## எங்கும் பொங்கல்

புதியதோர் பொங்கலுண்டாகியது. தேசியத்திலே பொங்கல்; அரசியலிலே பொங்கல்; சமூகத்திலே பொங்கல்; கலையிலே பொங்கல்; அறிவிலே பொங்கல்; அன்பிலே பொங்கல்; உள்ளத்திலே பொங்கல்; உணர்ச்சியிலே பொங்கல்; எளியோர் வாழ்விலே பொங்கல்; முன்னூறு கோடி மக்கள் வரலாற்றிலே என்றுமில்லாத பெரும் பொங்கல் எழுந்தது.

இந்தத் தைப்பொங்கலை ஏழைகள், பணக்காரர்கள், பெண்கள், குழந்தைகள் ஆகிய எல்லோரும் நம் தென்னாட்டிலே கொண்டாடுகிறார்கள். தேசத்திலே எங்கும் மங்களம் பொங்கவேண்டுமென்றால் எல்லோருக்கும் உணவு கொடுக்கும் உழவனும், உழவனுக்கு ஆதாரமான பசுக்களும் நன்றாகப் பேணப்படவேண்டும். அப்பொழுதுதான், கிராம சமுதாயம் முன்னேற்றமடையும். கிராமசமுதாயம்



முன்னேற்றமடைந்தால்தான் நாட்டிலேவாணிபமும், கைத்தொழிலும், கலைகளும் செழித்தோங்கும். அதை எண்ணியே மகாத்மா காந்தி அடிகள் ஏழைபங்காளனாக இருந்து, கிராம முன்னேற்றத்துக்கானப் பதினெட்டுத் திட்டங்களை வகுத்து, அவற்றை நடைமுறையில் கொண்டுவர அடிகோலிச் சென்றிருக்கிறார். இந்தப் பதினெண் திட்டங்களையும் நாம் செவ்வனே கடைப்பிடித்து எவ்வளவு ஊக்கத்துடன் நடைமுறையில் கொண்டுவருகின்றோமோ, அதைப் பொறுத்திருக்கின்றது நம் சமூகத்தின் முன்னேற்றம். சமூகச் செழிப்புத்தான் பொங்கும் மங்களம் ஆகின்றது.

## செங்கதிர்த்தேவனையும் ஞானசூரியனையும் போற்றுவோம்

இதற்கெல்லாம் அதிதேவதையான சூரியனை நமது முன்னோர்கள் வழிபட்டு வந்தார்கள். அதுவே இந்தப் பொங்கல் கொண்டாட்டம். இந்தத் தைப்பொங்கல் நாளிலே, அந்தப் பெரும்பொங்கலான சூரியனை நினைத்து விழாக் கொண்டாடுகின்றோம்.

சூரியன் தன்னுடைய கிரணங்களால் நீர்நிலைகளை மேகரூபமாக்கி மலை, காடு, நாடு எங்கணும் மழையைப் பொழிந்து, பயிர்பச்சைகளைத் தளிர்விக்கின்றான். அதனால் அப்பயிர் பச்சைகளின் முதல்பலனை சூரியனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டுமென்று நம் பெரியோர்கள் ஏற்படுத்தினார்கள். உலகவாழ்வை அளிக்கும் கோளசூரியனை வணங்கும் இந்தப் பொங்கல் நாளிலே, தேசமனைத்துக்கும் இறவாப் பெருவாழ்வை அளித்த அந்த ஞானசூரியனையும் நினைந்து நினைந்து வணங்குவோமாக. மகான் போட்ட அணைமீது மீண்டும் வெள்ளம் வந்து மோதுகின்றது. தூக்கமிலாக் கண்விழிப்போடு அதைக்காப்போமாக.

அடிகள் காட்டிய வழியிற் சென்று அனைத்துலகும் நலன் பெற்று, மங்கலில்லா இலட்சியத்தோடு பொங்கல் கொண் டாடுவோமாக.

நின்னருள் வேண்டுகின்றோம்—எங்கள்
நீதியுந் தர்மமும் நிலைப்பதற்கே
பொன்னவிர் கோயில்களும்—எங்கள்
பொற்புடை மாதரு மதலையரும்
அன்னநல் லணிவயல்கள்—எங்கள்
ஆடு மாடுகள் குதிரைகளும்
இன்னவை காத்திடவே—அன்னை
இணைமலர்த் திருவடி துணைபுகுந்தோம்.

பொங்கும் மங்களம் எங்குந் தங்குக.

---



தமிழிசை இயக்க ஆறாவது ஆண்டு விழா [பக்கம் 7

ஓமந்தூரார் பரிசு வழங்கல்



## 2. தமிழ் இசை

அன்பர்களே !

### தோற்றுவாய்

இந்த ஆறாவது தமிழிசை விழாவை என்னைத் தொடங்கி வைக்குமாறு பணித்த அன்பர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்த விழாவைத்தொடங்கிவைக்க நான் எவ்வகையில் அருகதையுடையவன் என்று எனக்குப்புலப்படவில்லை. நான் இசை வித்துவானல்ல; இசை ரசிகன் கூட அல்ல. இவை நாடறிந்த விஷயம். அப்படியிருந்தும் அன்பர்கள் என்னை வேண்டிக் கொண்டதும், அதற்கு நான் இணங்கிக் கொண்டதும் பொருத்தமற்றவை யல்லவா என்று தோன்றலாம்.

### இசை ரசிகர் அல்லாதவர் யார் ?

இசைப் புலவன் இல்லாவிட்டாலும், இசை ரசிகன் கூடவா இல்லை? சங்கீதத்தால் மயங்காதவர் யாராவது உண்டா? எந்த உயிர்ப்பிராணியாவது உண்டா? நஞ்சுடைய நாகமும் அதில் லயிக்கின்றதே. கண்ணன் குழலோசையினில் ஆடு மாடுகளும் மூழ்கினவே. அண்ட சராசரங்களும் அசைந்தனவே. சங்கீதம் தன்னுள்ளே இல்லாதவன் எந்தப் பாதகமும் செய்ய அஞ்சாதவன் என்று ஷேக்ஸ்பியர் போன்ற புலவர்களும் சொல்லியிருக்கிறார்களே. அங்ஙனமாக, என்னையோ பிறரையோ சங்கீத ரசிகனல்ல என்று எங்ஙனம் சொல்லலாகும்?

### சங்கீதத்தின் சக்தி

உண்மையே; இசைக்குச் செவிசாய்க்காத மனிதரில்லை; உயிரினம் இல்லை; தேவரும் இல்லை. யாழிசையினாலே மதயானையும் அடங்கிற்றென்று கலித்தொகை,

பெருங்கதை முதலிய தமிழ் நூல்கள் கூறுகின்றன. வீரரசம் கொண்ட இசை கேட்ட குதிரை பறக்கும் வேகத்தில் ஓடி உக்கிரத்தோடு போரில் தாக்கின தென்று நற்றிணை கூறுகிறது. பசியினால் தினையைத் தின்ன வந்த யானை கானகமங்கை பாடிய இசைகேட்டுப் பசிமறந்து நின்ற செய்தியை அகநானூறு சொல்கின்றது. ஆனாய நாயனார் வேய்ங்குழலைக் கானகத்தில் வாசித்த காலத்தில் பசுக் கூட்டங்கள் அருந்திய புல்லை அசைவிடாது அவர் அருகணைந்தன, பாலைப்பருகி நின்ற கன்றுகள் வாயில் நுரையோடு மறந்து நின்றன, மயிலினங்களும் ஆடாது மயங்கி நின்றன எனப் பெரியபுராணம் கூறுகிறது. பாணபத்திரர்க்காக இறைவன் மதுரையில் விறகு சுமந்து பாடிய அன்று, நாகமும் மயிலும், யானையும் சிங்கமும், மானும் புலியும், தமது பகைமையகற்றி இணைந்து நின்றன என்று திருவிளையாடல் புராணம் அறிவிக்கின்றது. எனவே தன்னை இசை ரசிகன் அல்ல என்று ஒருவன் எவ்வாறு சொல்லிக் கொள்வது?

## தற்காலச் சங்கீதம்

ஆனால் தற்போது தென்னாட்டில் சங்கீதம் இருந்து வருகிற முறையில் "நான் இசை ரசிகன்" என்று ஒருவன் சொல்லிக்கொள்ள அதிக தைரியம் வேண்டும். சங்கீதம் ஒரு பெரிய நுட்பசாஸ்திரமாகிவிட்டது. அதைப் பயில்கிறவர்கள் மட்டுமல்ல, ரசிக்கிறவர்கள் கூட அந்தச் சாஸ்திரத்தில் ஞானம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். இன்றைய சங்கீதத்தை அனுபவிப்பதற்கே தனிப் பயிற்சி வேண்டும். இன்றைய சங்கீதம் மூளைக்கு எட்டும் முறையில் மட்டும் வளர்க்கப்பட்டிருக்கிறது. புலன்களை ஊடுருவி உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் முறையில் வளர்ச்சியடையவில்லை. ஒரு சிலர்க்கே உரிய கலையாகி



விட்டது. பெரும்பாலான மக்களுக்கு எட்டாத அதி நுட்பக் கலையாகி விட்டது.

## உண்மைச் சங்கீதம்

உண்மையான சங்கீதம் இவ்வளவு குறுகிய லட்சியத்தோடு இருக்கலாகாது. கேட்போரையெல்லாம் ஒன்றாய்ப் பிணைக்கவல்லதாய் இருக்க வேண்டும். மெய்ம்மறந்து, தன்வயமிழந்து, ஆனந்தநிலைக்கு எடுத்துச் செல்வதாக இருக்கவேண்டும். உச்சிமுதல் உள்ளந்தாள் வரையில் உணர்ச்சி வேகவெள்ளத்தில் திளைக்க வைப்பதாய் இருக்க வேண்டும். உயிரனைத்தும் மகிழ்ந்தாடும் ஓசையின்பம் கொண்டதாய் இருக்க வேண்டும். செம்பாகமான உயர்ந்த கருத்துக்களைத் தழுவியதாக இருக்கவேண்டும்.

## சங்கீதமும் சாகித்தியமும்

தற்காலக் கர்நாடக சங்கீதம் இவ்வாறில்லாது, ஒரு சிலர்க்கே உரியதான நுட்ப சாஸ்திரமாய்ப் போய்விட்டதற்கு ஒரு முக்கிய காரணம், சங்கீதம் வேறு சாகித்தியம் வேறு என்ற பிரிவினை ஏற்பட்டதென்றே எனக்குப் படுகிறது. சாகித்தியம் எப்படியிருந்தாலும் சங்கீதம் நன்றாக இருந்தால், 'கச்சேரி வெற்றி' என்று தீர்மானிப்பது தவறு என்பதே என்போன்ற சாதாரண மக்களுக்குப் படுகிறது. இசை எவ்வளவோ அவ்வளவு இசைப்பொருளும் முக்கியம். சங்கீதமும் சாகித்தியமும் இருகண்கள் போன்றவை; உயிரும் உடலும் போன்றவை; ஒன்றையொன்று துறந்து வாழ்தல் அரிது. திருவள்ளுவரும்,

"பண்ணென்னும் பாடற் கியைபின்றேல் கண்ணென்னும்
கண்ணோட்டமில்லாத கண்" என்றார்.

நம்மாழ்வாரும் "செவிகளாலார நின்கீர்த்திக் கனியெனும் கவிகளே காலப்பண்தேனுறைப்ப" என்ற அடிகளில்

பாட்டையும் இசையையும் கனியாகவும், கனி தோய்த் துண்ணும் தேனாகவும் உருவகித்தார். இப்படியாகப் பார்க்கும்பொழுது தமிழிசை இயக்கம் என்பதன் உண்மை லட்சியம் நன்றாக விளங்கும்.

## தமிழிசை இயக்கம்

தமிழிசைக் கலைவளர்ச்சிக்கு விதை போட்டவர் ஏறக் குறைய முப்பது ஆண்டுகட்கு முன்னர் கர்ணாமிர்த சாகரம் என்னும் நூலைச் செய்த ஆபிரகாம் பண்டிதரேயாவர். அவரே சங்கீதத்துக்கும் சாகித்தியத்துக்கும் தமிழ் நாட்டில் இருந்து வந்த பிளவை எடுத்துக்காட்டி, "மணியொலியின் இன்னிசையால் மான் இறப்பதுபோல செவிக்கின்பம் மாத்திரம்தேடும் மக்கள்கதியு மிருக்குமே. கீதத்தில் நற் பொருளில்லாது போனல் அதை உயிரற்றதென்றே சொல்ல வேண்டும். அதைக் கேட்டு என்ன பயன் அடை யப் போகிறார்கள்," என்று சொல்லித் தியாகையர்போன்ற மகான்களின் பக்திரசமான கீர்த்தனைகளைப் பாடும்போது பாகவதர்கள் முதலில் பொருளைத் தெரிவித்துப் பின் பாடவேண்டு மென்றார். ஆபிரகாம் பண்டிதர் மேற்கூறிய வாறு எழுதிப்போன பின்னர், நாட்டிலே தேசிய உணர்ச்சி பொங்கியது. தேசியம் தழைக்க, நாட்டின் வெவ்வேறு பகுதியிலுமுள்ள கலாச்சாரங்களும் புத்துயிர் பெறலாயின. பாரதநாடு முழுவதும் பரந்த ஒரு பொது மலர்ச்சியில் தமிழிசைக் கலையும் புது மணம் பெற்றது.

## தமிழிசையின் தொன்மை

தமிழிசை நினைப்பிற்கெட்டாத நெடுங்காலத்திலேயே தோன்றி வளர்ந்தது. இசைத்தமிழைத் தமிழின் ஒரு பகுதியாக முன்னையோர் அமைத்து முத்தமிழ் எனத் தமிழை வழங்கினர். மொழியின் ஓர் பிரிவாக இசையினை



அமைத்த பெருமை தமிழைத் தவிர வேறு எந்த மொழிக் கும் இல்லையென்றே சொல்லலாம்.

## பாணர்

பண்ணொடு பாட்டிசைக்கும் மக்கள் பழந் தமிழ் நாட்டிலிருந்தனர். அவர்கள் பாணர் என அழைக்கப் பட்டனர். பெண்பாலரைப் பாடினி என வழங்கினர். பாணர் பெருமக்கள் மன்னரோடும் மக்களோடும் கலந்து வாழ்ந்தவர். குடிகளுக்கும் மன்னவர்க்கும் இடையே அன்பையும் அருளையும் வளர்த்தவர்.

## சங்கீதத்தால் சமாதானம்

அருந்தமிழ் அன்னையாகிய ஔவையார் இப்பாணர் குடியைச் சார்ந்தவரெனக் கூறப்படுகிறது. அதிகமானுக் கும் தொண்டைமானுக்கும் இடையே ஏற்பட்ட பகையைத் தன் இன்னிசைப் பாடலால் மாற்றி ஒன்றுபடுத்தியவர். சங்கீதத்தால் சமாதானம் ஏற்படுத்திய காலம் அது; பிற்காலத்திற் சைவரிற் சிறந்த பாணர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். வைணவரிற் சிறந்து விளங்கியவர் திருப் பாணாழ்வார்.

## சங்கீதத்தால் மருத்துவம்

சமூக சமாதானத்துக்கு மட்டுமே அன்றி, பல கொடிய உடல் நோய்களையும், மனநோய்களையும் தீர்க்கக் கூட நம் முன்னோர் சங்கீதத்தைப் பயன்படுத்தி வந்தார் கள். இது சங்கீத சிகிச்சை, இராக சிகிச்சை முதலிய நூல்களால் தெரியவருகின்றது.

## தமிழிசை நூல்கள்

பாணரால் பாடப்பெற்ற பாடல்களையன்றி இசை இலக்கண நூல்களும் இருந்தன. ஐம்பெருங் காவியங்க

னாள் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தின் உரையில் பல இசை நூல்கள் குறிக்கப்படுகின்றன. இசை நுணுக்கம், வரி, சிற்றிசை, பேரிசை, பெருநாரை முதலியவற்றை அடியார்க்கு நல்லார் கூறுகிறார்.

### இயற்புலவரும் இசைப்புலவரும்

பாடலைப் பாடுவோரும், அதற்குப் பண்ணமைப்போரும் பழந்தமிழ் நாட்டில் இருந்தனர். இதற்குச் சான்றாய் பாடலையாத்தவர் பெயரும் அதற்குப் பண்ணமைத்தவர் பெயரும் பரிபாடல் ஒவ்வொன்றின் இறுதியிலும் காணலாம்.

### தமிழிசைக் கருவிகள்

எண்ணிறந்த இசைக் கருவிகளும் இந்நாட்டிலிருந்தன. இவற்றுள் யாழ் ஒன்றாகும். யாழ் என்பது வீணையினும் வேறு. திருவாசகத்தில், 'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்' என இரண்டும் பிரித்துப் பேசப்படுகின்றன. 'குழலும் வீணையும் யாழு மென்றினையன குழைய' என இக்கருவிகள் இரண்டையும் கம்பர் பிரித்துக் காட்டுகிறார். யாழில், சீறியாழ், பேரியாழ், மகரயாழ், வில்யாழ், செங்கோட்டுயாழ், சகோடயாழ் எனப் பல பிரிவுகள் உண்டு. ஆயிரம் தந்திகளையுடைய யாழ் ஒன்றைப்பற்றிச் சிலப்பதிகாரம் கூறுகிறது. அந்த யாழின் இயல்பைச் சுவாமி விபுலானந்தர் தமது யாழ் நூலில் விளக்கிக் காட்டுகிறார். மற்றொரு இனிய இசைக் கருவி குழலாகும். குழலினும் கொன்றையந் தீங்குழல், முல்லையந் தீங்குழல், வேய்ங்குழல் எனச் சில பிரிவுகள் இருந்தன. இவற்றைக் 'கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி,' 'முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி' 'அவன் வாய் ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி' என இளங்கோவடிகள்



எழுதிக் காட்டுகிறார். இவ்விருவகை இசைக் கருவிகளையும் சேர்த்துத் தெய்வப் புலவர் 'குழலினிது யாழினிது என்ப' எனக் குறிப்பிடுகிறார்.

இசைக் கருவிகளைத் தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என வகைப்படுத்தி வழங்கினர். தோற்கருவியில் கரடிகை, பேரிகை, கணை, முழவு, முரசு முதலிய பல பிரிவுகள் இருந்தன.

### ஆடல்

பண்ணுடைய பாடலையன்றிக் கண்ணைக் கவரும் ஆடலும் தமிழ் நாட்டின் கலைச் செல்வமாகும். ஆடலும், பாடலும் ஆறிரண்டாண்டு மாதவி பயின்றாள் எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. நாதவடிவான இறைவன் நடனம் செய்வதையும் நம் மக்கள் கண்டனர்.

### தமிழிசையின் இடைக்கால நிலை

பழந்தமிழ்க் கலைகளாம் பாடலும் ஆடலும் பற்பல காரணங்களால் இடைக்காலத்து மங்கலாயின. வேற்றுருப் பெறலாயின. தமிழ்ப்பண்கள் பல வடமொழிப் பெயர்களைத் தாங்கிக் கர்நாடக சங்கீதத்தின் பகுதியாயின. சீராகம், வராடி, தனாசி, தேசாக்கிரி, சுருதி காந்தாரம், மேகராகக்குறிஞ்சி, குச்சரி, நட்டராகம், கொண்டைக்கிரி முதலிய பண்கள் முறையே ஸ்ரீராகம், தராடிகா, தன்யாசி, தேசாக்ஷி, தேவகாந்தாரம், மேகரஞ்சி, குர்ஜரி, நாட்டராகம், குண்டக்கிரி என வழங்கி வருவதாக ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள்.

### பிற்கால இசைவளர்ச்சி

சிலப்பதிகார வரிப்பாடல்களும், தெய்வமணக்கும் தேவாரமும், தேனினுமினிய ஆழ்வாராதிகளின் பிரபந்தங்

களும் தமிழிசையின் அடிப்படையாம். அதன்மீது அருணகிரியார், தாயுமானவர், முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், அண்ணாமலை ரெட்டியார், கோபாலகிருஷ்ண பாரதி, கவிக்குஞ்சரம் ஐயர், இராமசாமி ஐயர், வேதநாயக சாஸ்திரியார், வேதநாயகம் பிள்ளை முதலிய தெய்வ இசைத் தச்சர் அழகுறத் தமிழிசை அரண்மனையை ஆக்கி அளித்தனர். வடலூர் வள்ளலாரும், பைந்தமிழ்க் கவிஞன் பாரதியும் கவிதையாகிய ஓவியத்தை வரைந்து மணி மண்டபத்தை அழகுபடுத்தினர். தற்காலத்தும் இசைச் செல்வர் இலக்குமணப் பிள்ளை, புத்தேரி கவிமணி, நாமக்கல் கவிஞர், புதுவை புரட்சிக் கவிஞன் பாரதிதாசன், தவ ஞானச் செல்வர் சுத்தானந்த பாரதி ஆகியோர் அழகு படுத்தி வருகின்றனர்.

## இசை ஆராய்ச்சி

தமிழ்ச் சாகித்யத்தில் கர்நாடக முறையிலோ இந்துஸ்தானி முறையிலோ கீர்த்தனங்கள் வண்ணங்கள் அமைத்துக் கச்சேரிகள் செய்து விட்டால் மட்டும் தமிழிசையைப் பேணியது ஆகாது. பழைய தமிழ்ப்பண்கள் எவ்வாறிருந்தன ; பழைய இசைக் கருவிகள் எங்ஙனமாய் இருந்தன ; பழைய ஆடல் மரபுகள் எத்தகைய பாணியிலிருந்தன என்பனவற்றைக் கண்டு, மீண்டும் அவற்றை மலரச் செய்ய வேண்டும். இதற்கு ஆராய்ச்சி வேண்டும். கருணாமிர்த சாகரம் கண்ட ஆப்ரகாம் பண்டிதரும், யாழ்நூல் யாத்த விபுலானந்தரும், இசையியல் இயற்றிய பொன்னையா பிள்ளையும் இந்த ஆராய்ச்சிக்கு வழிகாட்டிப் போயினர். அவர்கள் காட்டிய நெறியில் சென்று தமிழிசைக்கலை புத்துயிர் பெறுவதற்கு வேண்டிய ஆராய்ச்சிக்கழகம் அமைய வேண்டும்.



## நாட்டுப் பாடல்கள்

தமிழிசையின் மற்றொரு முக்கிய உறுப்பு நாட்டுப் பாடல்களாகும். இந்த நாட்டுப் பாடல்கள் நவரசங்களையும் எழுப்பி எல்லோர் வாழ்க்கையையும் வளம்பெறச் செய்ய வல்லன. ஆனால் அவற்றைப் பாமரர் பாடலெனப் பண்டிதர் ஒதுக்கியதால் தமிழிசை விரிந்த வளர்ச்சி பெறவில்லை. கவிஞர் தாகூர் நாட்டுப் பாடல்களை மீண்டும் உயிர்ப்பித்தார். தமிழ் நாட்டில் பாரதியார் அதற்குப் புத்துயிரளித்தார். சுண்ணமிடிப்பார் சுவை மிகுந்த பாடல்களும், பண்ணை மடவார் பழகு பல பாடல்களும், ஏற்றமிறைப்பார் இசை நிறைந்த பாடல்களும், களையெடுக்கும் மாதரார் கூறும் கவிதைகளும், வண்டிக்காரன் பாடும் தெம்மாங்கும், குழந்தை தூங்க தாய் பாடும் தாலாட்டும் நெஞ்சை அள்ளுவன. எளியோர் வாழ்விலும் இன்பம் புகுத்துவன. இவற்றை வழக்கிலே கொண்டு வரல் வேண்டும். புதிய கருத்துக்களைப் பழைய நாடோடி மெட்டுகளில் புகுத்தி, அறிவும் இன்பமும் வளரச்செய்ய வேண்டும்.

## ஓசையின்பமும் ஒருமையின்பமும்

மற்றுமொரு விஷயம் கூற விரும்புகிறேன். கர்நாடக, இந்துஸ்தானி உட்பட்ட இந்திய சங்கீதத்தில் பல கருவிகள் வாசிக்கப்படுகின்றன. கச்சேரி நடக்கையில் அவை தனித்தனி ஓசையின்பம் தருகின்றனவேயன்றி அனைத்துங் கூடி ஒருமையின்பம் தருவதில்லை என்று நமது கச்சேரிகளைக் கேட்ட மேலைநாட்டு இசைக் கலைஞர்கள் கூறுகிறார்கள். இந்தக் கருத்தைத் தழுவவோ மறுக்கவோ இசைப் பண்டிதர்களே தகுந்தவர்கள். ஆனால் ஒன்று மட்டும் நான் கூறுவேன். பழந்தமிழர் கண்ட இசை விருந்தில்

ஓசையின்பம் பொருளின்பம் ஒருமையின்பம் எல்லாம் முரணின்றி ஒன்றாய் இருந்தன. சிலப்பதிகாரத்தில்,

"பாடிய வாரத்து ஈற்றினின் றிசைக்கும்
கூடிய குயிலுவக் கருவிகளெல்லாம்
குழல்வழி நின்றது யாழே ; யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே ; தண்ணுமை
பின்வழி நின்றது முழவே ; முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை"

எனக் கூறப்பட்டிருக்கிறது.

### இயற்கையோடிசைவதே இசை

இசைக் கருவிகளோடன்றியும் இயற்கையோடும் ஒன்றி நின்றது தமிழிசை. மேலை நாட்டில் மேம்பாடுற்று விளங்கிய வாக்னர் என்னும் இசைவல்லார் இயற்கையை இசைமயமாகக் கண்டனர். மேகத்திடை தோன்றும் இடியையும் தன்னிசையில் காட்டினார். ஆனால் வாக்னருக்கு நெடுங்காலம் முன்னரே, இயற்கையோடிசைந்த இசை கண்டு இன்புற்றவர் நம்மவர். காலத்துக் கேற்றவாறு பண்களைப் பாடவேண்டும் என்ற இயற்கை நுட்பமும், இசை நுட்பமும் கண்டவர் தமிழ் மக்கள். நள்ளிரவாகிய யாமத்தில் குறிஞ்சி என்னும் சிறந்த பண் இன்பந் தருவதாகும். நண்பகலில் பாலைப் பண்ணும், மாலைப் பொழுதில் சாதாரியும், எற்படு பொழுதில் செவ்வழியும் இன்பம் செய்யும். வைகறைப் பொழுதிலும், விடியலிலும் மருதம் மகிழ்ச்சியைத் தருவதாகும். இவ்வாறு இயற்கையோடியைந்த இசைபரப்பியே அகத்தியர் கற்பாறை இளகச் செய்தார். வெள்ளிமலையை எடுத்த அரக்கர் கோனும் சாமகீதத்தால் சிவபெருமானிடம் நீண்ட ஆயுளும் நெடிய வாளும் பெற்றான். பிற்காலத்தும் அக்பரது அவைக்களத்தில் இருந்த தான்சன், கோபால நாயக்கர் என்னும் தலை



சிறந்த இசைவாணருள், தான்சன் 'தீபக்' ராகத்தால் நெருப்பெழவும், கோபால நாயக்கர் மேகராகக்குறிஞ்சியால் மழை பெய்யவும் செய்தார்.

### சங்கீதமே சம்யோகம்

'இயற்கையோடிசைவதே இசை; ஏனைய எல்லாம் வசை' என்றார் அன்பர் திரு. வி. க. அந்த நுட்பம் உணர்ந்தவர் தமிழர். அதை உள்ளடக்கியது தமிழிசை. இவ்வுண்மையைப் பரிபாடலின் பின்வரும் பாட்டில் காணலாம்.

"ஒரு திறம் பாணர் யாழின் தீங்குரலெழ
ஒரு திறம் யாணர் வண்டின் இமிரிசையெழ
ஒரு திறம் கண்ணார் குழலின் கரைபு எழ
ஒரு திறம் பண்ணார் தும்பி பரந்திசை யூத
ஒரு திறம் மண்ணார் முழவின் இசையெழ
ஒரு திறம் அண்ணல் நெடுவரை அருவிநீர் ததும்ப
ஒரு திறம் ஆடனல் விறலியர் ஒல்குபு நுடங்க
ஒரு திறம் வாடையுளர் வயற்பூங்கொடி நுடங்க
ஒரு திறம் பாடினி முரலும் பாலையங் குரலின்
நீடுகிளர் கிழமை நிறைகுறை தோன்ற
ஒரு திறம் ஆடுசீர் மஞ்ஞை அரிகுரல் தோன்ற
மாறு மாறுற்றன போல் மாறெதிர் கோடன்
மாறட்டான் குன்ற முடைத்து"

இயற்கையோடிசைந்த வாழ்வு நடத்திய தமிழ் மக்கள் இசையை நிலத்தொடு இணைத்து முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலையென நிலப் பெயர்களைப் பண்களுக்கும் வழங்கினர். அந்த அந்தத் திணைக்குரிய இசைக் கருவிகளை வரையறுத்தனர். அந்தந்தச் சூழ்நிலைக்கேற்பப் பண்களை வகுத்து, நவரசங்களிலும் திளைத்தனர். இயற்கை வேற்றுமைக்கேற்ப தமிழர் கடவுள் தத்துவங்கூட மாறுபட்டது. தமிழன் அன்று இசையோடு ஒன்றினான். இசை இயற்கை

யோடு ஒன்றியது. ஒன்றும் நிலையில் இசை உயர்ந்த யோக நிலையாகியது. 'சங்கீதமே சம்யோகமே' என்றார் இசைச் செல்வர் இலட்சுமணப்பிள்ளை.

**இறைவன் இசை வேண்டுகின்றான்**

இறைவனையும் அடியாரையும் இணைக்கும் சங்கிலி இசையினும் வேறில்லை. இசைக்கு வசப்படும் இறைவன் அடியாரைப் பாடுவதற்காக இவ்வுலகில் வாழுமாறு செய்கிறான். சுந்தரமூர்த்தி நாயனாரை நோக்கி, 'நமக்கு அர்ச்சனை, பாட்டேயாகும்; ஆதலின் சொற்றமிழில் பாடுக' என இறைவன் ஆணையிட்டான். ரவீந்திரநாத் தாகூரும் கீதாஞ்சலியில் இக்கருத்தைக் கூறுகிறார். அதனைப்

"பண்ணொழுகு பாடலைப் பாடென்றனக்கருள்
பாலிக்கும் வேளையிந்தப்
பாரெங்கு மறியாத கர்வமது பொங்கிப்
பரத்துளம் விம்ம நிற்பேன்"

என மூலத்துக் கிணையாகக் கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளை மொழிபெயர்த்துத் தருகிறார்.

**கலைத்தேன் திரட்டல்**

இசைக்கலை வளர்ச்சியைக் குறித்து எனக்குத் தெரிந்தவற்றை இதுகாறும் சொன்னேன். இறுதியாகக் கலை வளர்க்க முன் வருவோர்க்கு ஒன்று கூறவிரும்புகிறேன். கலை கடல்போல் பரந்தது; வேற்றுமை அறியாதது; ஒற்றுமை ஒன்றே அறிவது. குறுகிய நோக்கமும், இகலிய மனப்பான்மையு மின்றிக் கலையுலகில் வேலை செய்ய வேண்டும். இந்துஸ்தானி, கர்நாடகம் ஆகிய இரண்டுக்கும் காலத்தால் முற்பட்டது தமிழிசை. முற்பட்டதாயினும் அடிப்படையில் இம்மூன்றுக்கும் ஒற்றுமை உண்டு. ஒரே செடியில் மலரும் மூவகை வண்ணமலர்களென்று சொல்லலாம்.



ஒரே தாய் வயிற்றிற் பிறந்த மூன்று குழந்தைகளென்றுங் கூறலாம். வளர்ச்சியில், பழக்க வழக்கங்களில், நடையுடை பாவனைகளில் வேற்றுமை காணப்படினும் மூன்றுக்கும் குடி ஒன்றே; பிறப்பொன்றே; இயல்பொன்றே. பழங்காலத் தமிழர்கள் தங்கள் நாட்டு இசையுடன் தெலுங்குநாடு, ஆரியநாடு, சிங்களநாடு முதலிய இடங்களில் இருந்தெல்லாம் பல முறைகளைக் கைக்கொண்டு அவற்றைத் தமிழிசைக்கு ஏற்பச் செய்திருக்கிறார்கள். அங்ஙனம் செய்து கொள்ளலும் முறை என்பது சிலப்பதிகார அரங்கேற்று காதை உரையில் கூறப்பட்டிருக்கிறது. பல மலர்களிலிருந்து மதுவைச் சேர்க்கும் வண்டுகள் போல இசை வளங்களை எத்திக்கும் சென்று சேர்த்துத் தமிழிசைச் செல்வத்தை வளர்க்க வேண்டும்.

**கலைக்கழகம் காண்டல்**

இதற்கு அடிப்படையாக வேண்டுவது தமிழிசை ஆராய்ச்சி. இந்த ஆராய்ச்சியால், மறந்த பண்களும் இசைக் கருவிகளும் பயிலப்பெறுதல் வேண்டும். புதிய பண்களும், புதிய இசைக் கருவிகளும் தோற்றுவிக்கப்படுதல் வேண்டும். எண்ணற்ற சங்கீத கிரந்தங்கள் பல பாஷைகளில் நமது தேசத்தில், குறிப்பாக தமிழ் நாட்டில், அச்சுப் பெறாமல் ஓலைச் சுவடிகளாக தனி மனிதர்களிடமும் பொது நூல் நிலையங்களிலும் ஒதுங்கிப் பதுங்கிக் கிடக்கின்றன. கோயமுத்தூரில் வேணுகான விசாரத வேணுகோபால் நாயுடு என்பவரிடம் முந்நூற்றுக்கு மேலான மிகப் புராதன சங்கீதச் சுவடிகள் வெளியிடப்படாமலிருப்பதாக சமீபத்தில் நான் பத்திரிகையில் படித்தேன். இம்மாதிரியாகப் பல மொழிகளிலுமிருக்கும் சங்கீத கிரந்தங்களை வெளியிட முன்வருவோர்க்கும், பழைய தமிழிசையைப் பற்றிய ஆராய்ச்சி செய்வோர்க்கும் ஊக்கமளிக்கப்

பரிசுகளும் பட்டங்களும் வழங்கல்வேண்டும். வடநாட்டில் இத்தகைய ஆராய்ச்சி நிலையமொன்றை மத்திய அரசாங்கத்தார் நிறுவப்போவதாகத் தெரிகிறது. தென்னாட்டு இசைக் கலைகளை வளர்க்கவும் ஒரு ஆராய்ச்சி நிலையத்தை விரைவில் சென்னையில் தொடங்க அரசாங்கத்தில் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

**ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் சேவை**

அதில் அரசாங்கத்தோடு பொது மக்களும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும். பொது மக்கள் எவ்வளவுக் கெவ்வளவு ஆர்வமும் ஆதரவும் காட்டுகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அரசாங்கமும் துணைபுரிய முன்வரும். நிதி படைத்தவர் பொற்குவை கொடுத்துக் கலையாராய்ச்சிக் கழகத்தைப் போஷிக்க வேண்டும். 'வாழ்வு சிறிது; வளர் கலை பெரிது' என்பதை நாளும் நினைந்து இசைவாணர்களைச் செல்வர்கள் சொல்லாலும், பொருளாலும் ஊக்குவிக்க வேண்டும். இந்தத் துறையில் காலஞ்சென்ற ராஜா ஸர் அண்ணாமலைச்செட்டியார் அவர்கள் செய்த அருந்தொண்டு மலைமேலிட்ட விளக்குப்போல் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி மகிழ்கிறேன்.

**இசையில் விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்**

அன்பர்களே !

சங்கீதம் ஒரு தெய்வீகக் கலை; ஆத்மீக விருத்திக்கு நிலைக்களனான கலை; கற்பனைசக்தி மிஞ்சிய கலை. பிரளய காலத்தே அண்டங்களை ஒடுக்கி மீண்டும் படைக்குந் தறுவாயில் சிதாகாயத்தே விளங்கிய பேரருட்பெருங் கருணை வள்ளல் நாத உலத்திலே லயித்தான். அந்த நிலையிலேயே இறைவனை நம் முன்னோர் நாதப்பிரம்மம் என்றனர். ஓம் என்னும் ஒலி பிறந்தது. ஒலியினின்று உலகங்கள் எழுந்தன. ஒருமை மனத்தொடு நாத உலகில் ஒன்றியவர் இறைவனை அணுகுகின்றனர். இன்றைய விஞ்ஞானிகள் ஒலி உலகத்து அலைகளை ஒளி வடிவாக்கி மீண்டும் வானொலியில் ஒலிக்கச் செய்து இன்பம் பயக்கச் செய்கின்றனர். அன்றைய மெஞ்ஞானிகள் நாதஉருவாகிய இறைவனை 'ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்' எனப் புகழ்ந்து போற்றிப் பேரின்பம் எய்தினர்.



**இறைவனை அடைய எளியவழி இசையே**

பக்தி மார்க்கத்தின் ஊற்றுக்களனான தமிழ் நாடு இசை வடிவாம் இறைவனை அடைய இசையே எளிதுக்கு எளிதான வழியென அறிந்தது. பண்ணொன்ற இசை பாடும் அடியார்க்கு இறைவன் மண்ணகமும் விண்ணகமும் வழங்குகிறான். இன்னிசையால் உடல் குளிர்கிறது. உயிர் தழைக்கிறது. உணர்ச்சி ஓங்குகிறது. ஆணவம் அழிகின்றது. ஐம்புலன்கள் அவிகின்றன. கடலனைய பேரின்பம் கரைபுரண்டு எழுகின்றது.

**வாழ்த்து**

இத்தகைய அரிய கலையைப்போற்ற முன் வந்த இந்தத் தமிழிசைக் கழகத்தார் நன்முயற்சியை எல்லாம் வல்ல இசைவாணி ஆசீர்வதிப்பாளாக! அனைவர்க்கும் அவள் அருள் சுரப்பாளாக! வாழ்க நம் தமிழ்மொழி! வாழ்க நம் தமிழிசை! வாழ்க இசைக்கலை!

# 3. கம்பன் காட்டும் இலட்சியப் பெருவாழ்வு

## கவிகள் அமரர்கள்

கவிகள் கால தேச வர்த்தமானத்தைக் கடந்தவர்கள்; என்றும் வாழ்பவர்கள்; எல்லோர்க்கும் அன்பர்கள்; 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற நற் பண்பு கொண்டவர்கள். 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற மனத் திண்மை கொண்டவர்கள். 'அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே' என்று மார்புதட்டுபவர்கள். சாதி சமய சழக்கறுத்தவர்கள். ஞானவொளி பரப்புபவர்கள். இன்பத் தேன் ஊட்டுபவர்கள். வான் மாறினும் தான் மாறாத அழியா ஒழுக்கநெறியினை உலகுக்கு அழகுற எடுத்தோதுபவர்கள்.

அழியா ஒழுக்க நெறியினை உலகுக்கு அழகுற எடுத்தோதுவதாலேயே கவிஞர்கள் அமரராய் வாழ்கின்றனர்; அதனாலேயே ஏனைய அழகுக்கலைகளாகிய இசை, ஓவியம், சிற்பம், போன்றவற்றைவிட கவிக்கலை உயிருள்ளதாக, உயர்வுள்ளதாக மதிக்கப்படுகிறது. அதனாலேயே உலகினை உய்விக்கக் காலந்தோறும் தேசந்தோறும் தோன்றிய முனிவர்கள், சித்தர்கள், ஞானிகள், பக்தர்கள், தீர்க்கதரிசிகள், ஆழ்வாராதிகள், நாயன்மார்கள், அடியார்கள், தொண்டர்கள்—அனைவரும் தங்கள் போதனைகளை, ஆத்ம அனுபவங்களை, விழுமிய கோட்பாடுகளை இன்பக் கவிகளில் அமைத்துப்போந்தனர். பன்மாலைத்திரளிருக்க இறைவனைப் பாமாலையால் வாழ்த்தினர். இசை, ஓவியம், சிற்பம்போன்ற ஏனை அழகுக்கலைகளெல்லாம் மக்கட்கூட்டத்தினரில் எல்லோராலும் எல்லாக்காலத்தும் அனுபவித்து இன்பம் பெறும் தரத்தினவல்ல. ஒரு சிலர்க்கே உரிய உயர்கலைகள் அவை. கவியின்பம் கங்கு கரையின்றி எங்கும் பரந்



தது. ஏழையென்றும் எளிமையென்றும் கவிதை அன்னைக்கு வேற்றுமையில்லை. நாட்டிலே, சிறிய ஊர்ப்புறங்களிலே, ஊர்ப்புறமடுத்த காட்டிலே, பருக்கைக் கல்லிலே, புஞ்சைக் களத்திலே, சோலையிலே, மலையிலே, ஆற்றிலே, காற்றிலே, கடலிலே, வானத்திலே, ஏட்டிலே-எங்கும் கவிதாதெய்வம் இன்பத்திருநடனம் செய்கிறாள். இதையே நமது கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையும்,

"அலகில் சோதியான—ஈசன்
அருளினாலே அமையும்
உலகில் எந்தப்பொருளும்—கவிக்கு
உரிய பொருளாமையா" என்றார்.

கவிஞன் ஒப்பற்ற சிருஷ்டிகர்த்தா. ஏன், குமரகுருபர சுவாமிகள் கவியை சிருஷ்டிகர்த்தாவுக்கும் மேலென்று கூறுகிறார். 'மலரவன் படைத்த வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா மற்றிவர் புகழுடம்பு' என்று காரணம் காட்டுகிறார். இக்கருத்தையே 'என்றும் கிழியாது என் பாட்டு' என்று பெருமிதமாகப் பேசுகிறார் ஔவையார். கவியின் புகழுடம்பு மட்டுமன்று; அவர் செய்து வைத்த தீம்பாவினமாகிய சொல்லுடம்பும் அழியாத் தன்மையது, அச் சொல்வரிசைகளுள்ளே என்றும் பொன்றா அறநெறிகளும் சமய உண்மைகளும் நித்தியமாய் நிஷ்களமாய் நிலவும் காரணத்தால்.

## கம்பரும் திருவள்ளுவரும்

காலஞ்சென்ற செல்வகேசவராய முதலியார் தமிழுக்கு 'கதி' யாவார் இருவர்; 'க' கம்பனையும் 'தி' திருவள்ளுவரையும் குறிக்கும் என்று சொன்னார். செல்வகேசவராய முதலியார் சொன்னதிலிருந்து கடந்த நாற்பது ஐம்பது வருடங்களாய் அவர் கூற்றை எத்தனையோ

பொதுக்கூட்டங்களிலும், பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் பற்பலர் எடுத்தாள நான் கண்டிருக்கிறேன். ஆயினும் இதுவரை எனக்குத் தெரிந்தவரையில் அதை எவரும் ஆட்சேபித்ததாகவோ, அன்றி அதற்கு ஒப்பாகவோ மேலாகவோ மற்றொரு பொருத்தமான கருத்தைத் தெரிவித்ததாகவோ அறியேன். பிற்காலத்துவந்த புலவர்கள் எல்லாரும் திருப்பித்திருப்பி அதே கருத்தைத் தான் தங்கள் கவிகளில் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு, என்றும்
வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு, என்றும்

'யாமறிந்த புலவரிலே வள்ளுவர்போல் கம்பனைப்போல் இளங்கோவைப்போல் யாங்கணுமே கண்டதில்லை' என்றுந் தானே பாரதியாரும் பாடிப்போனார். செல்வகேசவராய முதலியார் சொன்னது பழமைக்குப் பழமையாகிப் புதுமைக்குப் புதுமையான பெற்றி உடையதாயிருக்கிறது.

இருகண்ணனைய இக்கவிஞருள் வள்ளுவரைத் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் என்று கூறிவிட்டார்கள். ஆகவே அவர் புலமை மனித வரம்பு கடந்தது; இலக்கிய இலக்கணக் கோலால் அளவிடமுடியாதது; இரசிகர்கள் நாவன்மைக்கு இரட்டைத்தாழ்ப்பாள் போடப்பட்டது; ஆனால், கம்பரை அவ்வாறல்ல கருதுவது. அவரைக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் என்றும், கல்வியிற் பெரிய கம்பனென்றும் சென்ற 800 ஆண்டுகளாக கல்லாரும் கற்றவரும் ஒருங்கே போற்றி வருகிறார்கள்.

வள்ளுவர், கம்பன் ஆகிய இருபெரும் கவிஞரும், ஒரு கவிஞன் எந்தத் தொண்டைச் செய்யவேண்டுமோ அந்தத் தொண்டைத்தான் மேற்கொண்டார்கள். அதாவது, குற்



றமேசெய்யும் இயல்புடைய மனிதனுக்கு, நன்மையிது, தீமையிது எனக்காட்டி, என்றும் எக்காலத்திலும் அழியாத உண்மைகளை எடுத்துச் சொல்லி, அவன் ஈடேறுமாறு ஒரு இலட்சியப் பெருவாழ்வை சிருஷ்டித்தல். இந்த சிருஷ்டிப்பணியிலே இருவரும் மக்களைக் கவரும் எளிய சொற்களையே கையாண்டிருக்கிறார்கள். பொருள் நயத்தையும் சொல் நயத்தையும் அள்ளி அள்ளி இறைத்திருக்கிறார்கள். அவர்கள் உள்ளத்திலே உதித்த ஒளி வாக்கிலும் விளங்குவதாயிற்று.

ஆனால் வள்ளுவர் கையாண்ட பாணி தந்தை மகனுக்குச் சொல்லும் வகையில் அமைந்தது. ஞானாசிரியன் சீடனுக்கு எடுத்துரைக்கும் முறையையொத்தது. கம்பர் முறையோ காதலி காதலனுக்கு எடுத்துரைக்கும் பண்பில் அமைந்திருக்கிறது. கடும் மருந்தை வெல்லத்தில் பொதிந்து புகட்டும் மருத்துவ லாவகத்தையொத்திருக்கிறது. இங்ஙனமாக இவர்கள் கையாண்ட முறைகளில் வேற்றுமை தோன்றுவதற்குக் காலவேற்றுமையும், மக்கள் மனப்பக்குவநிலையுமே பெரிதுங்காரணங்களாக இருந்தன.

## சமயகுரவர்கள் காலத்துக்குப்பின்

கால அளவில் கம்பர் ஆழ்வாராதி நாயன்மார் இவர்களை அடுத்து வந்தவர். இறைவன் புகழையும், அதன் துணையாக மனிதர் வாழவேண்டும் இலட்சிய நல்வாழ்வையும் பொதுமக்களுக்கு பத்திச்சுவை சொட்ட இனிய பாசுரங்களால் எடுத்தோதி உணர்ச்சி வேகத்தை ஊட்டிவிட்டுப் போய்விட்டனர் சமயக்குரவர்கள். அந்த உணர்ச்சி வெள்ளத்தில் திளைத்த மக்கள் வேறொன்றையும் வேண்டாராயினர். புது உணர்ச்சிப் பெருக்கைப் புது முறைகளில் உருப்படுத்த வேண்டியது பின்னே வந்த கவிஞன் யுகதர்ம

மாகிவிட்டது. பரந்தவொரு முதியவர் கல்வித் திட்டத்தை வகுக்கும் சமூகத்தொண்டனாக வேண்டியதாயிற்று அன்றைய கவிஞன்.

### கம்பன் கவிதை

இதற்கு வேண்டிய கருவிகள் எளிய சொல், கற்பனை, உணர்ச்சி ஊட்டும் செய்யுள் வகை, கவர்ச்சி செய்யும் கதை. இந்நான்கு கருவிகளை வைத்துக்கொண்டுதான் கம்பன் தன் காவியக் கோயிலைக்கட்டி உத்தமமான இலட்சியப் பெருவாழ்வு என்னும் தெய்வ பிம்பத்தை பிரதிஷ்டிக்க முற்பட்டான். இந்நான்கும் சிற்பிக்கு நன்றாய் வாய்த்துவிட்டன. எளிமை, வடகடலும் தென்கடலும் கடந்த அவன் புலமையில் தோன்றியது. அதுவே

வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை, நேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்
வெண்மை இல்லை, பல்கேள்வி மேவலால்,

என்று அடுக்கடுக்காகப் பாடச் செய்தது. கற்பனை அவன் தெள்ளிய உள்ளத்தில் திளைத்தது. அதுவே அரக்கர் நெஞ்சிலும், மன்னர் வாழ்விலும், முனிவர் வாழ்விலும் இரண்டறக்கலந்து புதுப்புதுச் சித்திரங்களை அமைத்துத் தந்தது. செய்யுள் வகைக்கு இனிமை பயக்கும் விருத்தத்தைத் தேர்ந்தெடுத்தான்.

பண்ணுக் கிசைவாக—விருத்தம்
பாடி அளித்திடுவாய்
எண்ணும் கருத்துடனே—சந்தம்
இசையச் செய்திடுவான்—என்றார். கடைசியாக,

கதைக்கு இராம கதையைப் பற்றினான்.



### கவிதையும் வாழ்க்கையும்

கதைகள் வழியாக உயர்ந்த அறநெறிகளைப் பரப்புவது தொன்றுதொட்டே பெரியோர்கள் கையாண்டு வந்த போதனா முறையாகும். புத்தபெருமான் ஜாதகக் கதைகளால் ஞானோபதேசம் செய்தார். ஏசுநாதரும் கதைகளையே தன் ஆத்மீகத் தூண்டிலில் இரையாகக் கொளுவி வைத்தார். கம்பனும் இராமகாதை வழியாக உத்தம வாழ்க்கையின் இலட்சியங்களை உலகுக்குப் பரப்பினான்.

கம்பன் ஏன் இராமகதையை எடுத்துக்கொள்ள வேண்டும்? அவன் இராமபக்தனா? தன் பக்திப்பெருக்குக் கரைகாண இராமாயணத்தைச் செய்தானா? அல்லது வெறும் கவிஞனா? தன் கற்பனாசக்திக்கு எல்லை காண ஒரு காப்பியம் செய்தானா? அல்லது இலட்சியப் பெருவாழ்வின் இலட்சணங்களை உலகுக்கு அறிவுறுத்த வந்த ஞானாசிரியனா கம்பன்? இராம கதையை அதற்கு வேண்டுமட்டும் இடங்கொடுக்கும் ஒரு அரங்கமாக வைத்துக் கொண்டானா?—என்ற கேள்விகளெல்லாம் கேட்கப்படுகின்றன. இவற்றிற்கு விரிவான விடைகள் கொடுக்க நான் முற்படவில்லை. ஒன்றுமட்டும் சொல்வேன். உண்மைக் கவிஞன், வெறுங்கற்பனையின் அடுக்குகளைக் காட்டும் வித்தைக்காரனல்ல. அருளும், அன்பும், அறனும் கலந்த சான்றோனே மெய்யான கவிஞனாய் புகழ்பெற முடியும். கடவுட்காட்சியே கம்பன் காட்சி. கடவுட்காட்சி கண்டவனே ஒப்பற்ற கவிஞனும்.

உத்தமமான பெருவாழ்வின் இலட்சியங்களை உலகத்துக்குப் படம்பிடித்துக் காட்டவேண்டுமென்ற ஆசை கம்பனுக்கு மிக மிக இருந்தது என்பதற்கு மட்டும் பல சான்றுகள் உள்ளன.

ஆசைபற்றி அறையலுற்றேன் மற்றிக் காசில்
கொற்றத்து இராமன் கதையரோ

என்ற இடத்தில் அவன் இலட்சிய ஆசையே வெளிப்படுகிறது.

இராமகதை மிகப் பழமையானது. புத்தர் ஜாதகக் கதைகளில் ஒன்றாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. அகநானூறு, சிலப்பதிகாரம் போன்ற பழைய இலக்கியங்களிலும் இடம்பெற்றிருக்கிறது. கடல் கடந்து சாவகம் போன்ற தீவகங்களிலும் பரவியுள்ளது. வான்மீகி, எழுத்தச்சன், துளசிதாசர் போன்ற பற்பல மொழிக் கவிஞராலும் பாடப்பட்ட பெருமை வாய்ந்தது. ஆனால் எந்தக் கவிஞனும், எந்த இராமாயணமும் கம்பன் செய்த பணியை மேற்கொள்ளவில்லை என்றே எனக்குப் படுகிறது. எவரும் இராமகாதை மூலம் உத்தமப் பெருவாழ்வின் இலட்சணத்தையோ, உத்தம புருஷன், உத்தம ஸ்திரீ இவர்கள் இலட்சணத்தையோ, போதிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டார்களோ என்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது. வால்மீகி எழுதிய வடமொழி நூலில் இயற்கை அழகு, வருணனை முதலிய கவிதா விலாசங்கள் நிறைந்திருக்கின்றன. மலையாளத்து எழுத்தச்சன் எழுதிய இராமாயணம் தோத்திர வடிவத்திலிருக்கின்றதாம். துளசிதாசர் எழுதிய இந்தி இராமாயணம் பக்திப் பெருக்கெடுத்தோடும் பரம பாகவத நூலாகப் பரிணமித்திருக்கிறது. கம்பன் ஒருவனே தன் இராமாயணத்தில் ஒரு இலட்சியப் பேருலகத்தையும், இலட்சியப் பெருவாழ்வையும் சிருஷ்டித்திருக்கிறான். அறநூல்கள் செழித்த தமிழ் நாட்டுக் கம்பனுக்கு வேறு என்ன இலட்சியம் இருக்கக்கூடும்?

**கம்பன் கண்ட இராமராஜ்யம்**

இங்ஙனம் கம்பன் கற்பனையிற் கண்ட அறப்பெரு உலகம்தான் இராமராஜ்யம் எனப்படும். இராமன் ஆரியனென்றும், இராமராஜ்யம் என்பது ஆரிய ஆட்சிமுறை என்றும், இராவணன் திராவிடனென்றும், அரக்கரெல்லாம் திராவிட மக்கள் என்றும், இராமாயணம் திராவிட மக்களைப் பழிக்கவந்த நூலென்றும், இவற்றையெல்லாம் சரித்திர வாயிலாகத் தாம் தெரிந்துகொண்டதாகவும், ஆதலால், 'கம்பனைக் கொளுத்துவோம்' என்றும் சிலர் துணிந்துவிட்டனர். இதனினும் மடமை இருக்கமுடியாது. கம்பர் கண்ட இராமன் ஆரியனுமல்லன்; திராவிடனுமல்லன். அவன் உலக புருஷன். அவனுக்கு அயோத்தியென்றும், இலங்கை என்றும் இல்லை. அவன் எல்லா தேசத்தாருக்கும், எக்காலத்தினர்க்கும் உரியவன். அவன் ஆண்ட இராமராஜ்யம் ஆரியர் வாழ்வுமன்று, திராவிடர் தாழ்வுமன்று. அது அறம் தழைக்கும் ஒரு இலட்சிய வளநாடு. இலங்கையில் இருந்தவர் அரக்கர் அன்று; இரக்கமொன்றில்லாதவரே அரக்கர். இந்த இலட்சியக் கருத்துக்களைக் கம்பன் அடிக்கடி எடுத்துக்காட்டிப் போகிறான்.

இத்தகைய உத்தம இலட்சியப் பெருவாழ்வையே நம்மையாளுடைய காந்தி அடிகள் இராமராஜ்யம் என்றார்; இரவு பகலாக கனவு கண்டுகொண்டிருந்ததுவும் இந்த வாழ்வை ஏற்படுத்தவே. இதையே ஏசுநாதர் பரலோக சாம்ராஜ்யம் என்றதும். இங்கே சத்தியம் அரசுவீற்றிருக்கும். வால்மீகியிலிருந்து விலகி, மற்றொன்று விரித்தல் என்னும் குற்றத்துக்கும் அஞ்சாது இரணியவதை என்ற படலத்தின் வழியாகப் பிரகலாதன் கதையை ஏன் கம்பன் எடுத்தோதத் தலைப்படவேண்டும்? அறத்தமிழ் வழங்க வந்த கம்பனுக்கு சத்திய நாட்டத்திலே கவிதையின் விதிகளெல்லாம் புல்லெனப்படுகிறது. காந்தி அடிகளும் பிரகலாதனை சத்தியத்துக்குச் சிகரம் என்று குறிப்பிட்டார்.

### கம்பனின் இலட்சிய சாம்ராஜ்யத்திலே மக்கள் வாழ்க்கை

இந்த இலட்சிய சாம்ராஜ்யத்திலே இராமனை ஒத்த ஒழுக்கத்தினராய் மக்கள் வாழ்தல் வேண்டும்; சீதையை யொத்து கற்பினுக்கணிகலமாய் பெண்கள் திகழ்தல் வேண்டும்; அனுமனையொத்த பக்தியுடையவராதல் வேண்டும்; இளையவனையொத்த சகோதரவாஞ்சை வேண்டும்; கும்பகர்ணனையொத்த வீரம் வேண்டும்; விபீஷணனையொத்த மெய்ஞானம் வேண்டும்; குகனையொத்த நட்பு வேண்டும்; பரதனையொத்த நீதி வேண்டும்—என, இவ்வாறாக, நற்குடிப்பிறந்த மக்களுக்கு இருக்கவேண்டிய அருங்குணங்களையே கம்பன் இராமராஜ்யம் என்னும் ஒரு கற்பனை உலகமாகத் தம் கவிதாசக்தியில் சிருஷ்டித்தது.

### அரசன் குடிகளைக் காக்கவே

இந்த இராமராஜ்யத்தில் அரசு குடிகளைக் காப்பதற்காகவே; ஆளுவதற்கல்ல.

> வையகமுழுதும் வறிஞன் ஓம்பும் ஓர்
> செய் எனக்காத்து இனிது அரசு செய்கின்றான்

என்றார் கம்பநாடர். இவ்வாறு காவல் செய்கையில், கொலையிற் கொடியாரைக் களைகடிவதுபோல் ஒறுத்து விலக்குவது வேண்டும். இராமராஜ்யத்தில் அஹிம்சையே அரசு வீற்றிருக்குமாயினும், படைவலிமை குன்றாது.

> ஈந்தே கடந்தான் இரப்போர்கடல்; எண்ணில் நுண்ணூல்
> ஆய்ந்தே கடந்தான் அறிவென்னும் அளக்கர்; வாளால்
> காய்ந்தே கடந்தான் பகைவேலை.........என்றார்.

பின்னும் இராமராஜ்யத்து அரசன் பண்பை, 'தாயொக்கும் அன்பின்', என்றும், 'உயிரெல்லாம் தம் உயிர் ஒப்ப ஓம்பலால்', என்றும் 'உயிரெல்லாம் உறைவதோர் உடம்பும் ஆயினன்' என்றும் கூறுகின்றார். படைவலிமை மிகுந்திருப்பினும், அதை ஆளுந்தன்மையில் பொறுமை காட்டுவதே இராமராஜ்யத்தின் பண்பு கொதித்தெழுந்த இலட்சுமணனுக்கு,



> புயத்துறை வலியரேனும் பொறையொடும் பொருந்தி
> வாழ்தல் சயத்துறை

என்று இராமன் சமாதானம் கூறுகிறான்.

'இன்றுபோய் தானையொடு நாளை வா' என்று யுத்தத்திலும் தர்மயுத்தம் நடைபெறும். வென்ற நாடுகளை அடிமைப் படுத்துவது இராமராஜ்யத்தில் இல்லை. கிஷ்கிந்தையை வென்றான்; உரியவர்க்கு ஈந்தான்; இலங்கையை வென்றான்; மீண்டும் அரக்கர்க்கே கொடுத்தான்.

இராமராஜ்யத்திலே குடிகள் பேச்சுரிமை சிறக்கும். தசரதன் கண்ணினைக் காக்கும் இமைபோல் குடிகளைக் காத்து வந்த காவலனே ஆயினும், அவன் தவறு செய்த போது கண்டிக்கத் தயங்கவில்லை பொதுமக்கள். 'ஆதி அரசன் அருங்கே கயன் மகள்மேல், காதல் முதிரக் கருத்தழிந்தான் ஆம் என்பார்' என்றும், 'சீதை மணவாளன் தன்னோடும் தீக்கானம்போதும்' என்றும், 'சின்னாளில் புற்றுடைய காடெல்லம் நாடாகிப்போம்' என்றும், 'நல்ல பரதன் நாட்டை ஆளமாட்டான்' என்றும் பொதுஜனம் தம் சாத்வீக எதிர்ப்பையும் சத்தியாக்கிரக உணர்ச்சியையும் காட்டுகிறது. இந்தப் பொதுஜனப் பேச்சுரிமையின் வேகத்தையும், நேர்மையையும், அதைத் தன் தந்தை புறக்கணித்த தவறையும் உணர்ந்தே போலும் பிற்காலத்தில் இராமன் சீதையை மீண்டும் காட்டுக்கு அனுப்ப நேர்ந்தது. கம்பர் நம்மை அவ்வளவு தொலைவுக்குக்கொண்டு போகாதிருந்துவிட்டார்.

## கம்பர் கண்ட கனவு: இராமராஜ்யம் தமிழர் ராஜ்யம்

இங்ஙனமாக இராமராஜ்யமென்னும் இலட்சியப்பெரு வாழ்வின் பற்பல பண்புகளைக் கவிஞன் நமக்குக் காட்டிப் போந்தார். இவை அழியாப் பண்புகள். இவை தமிழர் என்றும் உயிரேபோல் போற்றிவந்த பண்புகள். இவையே காந்தி அடிகள் உலகுக்கு எடுத்தோதிய உண்மைகள். காந்தியடிகள் இப்பண்புகளைத் துளசிதாசர் இராமாயணத்திலிருந்து தெரிந்துகொண்டார். துளசிதாசர் கம்பராமாயணத்திலிருந்து குமரகுருபர சுவாமிகள் வாயிலாகத் தெரிந்துகொண்டார். கம்பர் திருவள்ளுவரிலிருந்து தெரிந்துகொண்டார். திருவள்ளுவர் தெய்வப் புலவர்; தமிழ் அன்னையிடமிருந்து தெரிந்துகொண்டார். இராம ராஜ்யம் தமிழர் ராஜ்யம்; காந்தி அடிகள் இன்று கண்ட கனவு. தமிழர் அன்று கண்ட கனவு. ஒரு சுற்றுச்சுற்றி நம் தமிழ்ப் பண்பே நமக்கு வந்து கொண்டது. கம்பனைப் பயின்று இராமராஜ்யத்தைச் சிருஷ்டிப்போமாக.

பாவின் சுவைக் கடலுண்டெழுந்து—கம்பன்
பாரிற் பொழிந்ததீம் பாற்கடலை
நாவின் இனிக்கப் பருகுவமே—நூலின்
நன்னயம் முற்றுந்தெளிகுவமே.

கம்பன் வாழ்க.

# 4. சுதந்திரதினச் செய்தி

## சுதந்திர நன்னாளில் மக்களுக்கு எனது வாழ்த்து

பாரத மக்கள் தங்கள் நாட்டைத் தாங்களே ஆளும் உரிமையை அடையும் இம் மகத்தான நன்னாளில் இம் மாகாண மக்களுக்கு எனது வாழ்த்தும் வணக்கமும் உரித்தாகுக. இவ்வைபவத்தன்று அஹிம்ஸாமார்க்கத்தின் மூலம் நம்மைச் சுதந்திர இலட்சியத்துக்கு அழைத்துவந்த நம் மாபெருந்தலைவர் மகாத்மா காந்தியடிகளுக்கு நாம் எல்லோரும் நமது பக்தியையும் அன்பையும் தெரிவிப்பது நம் கடமை. பாரதத் தாயின் அடிமைத் தளைகளை அறுத்தெறியும் திருப்பணியில் தங்கள் ஆவியை அர்ப்பணம் செய்த ஆயிரக்கணக்கான தியாகிகளுக்கும், தங்கள் சொத்து, சுதந்திரம், இளமை ஆகிய சகலவற்றையும் தியாகம் செய்த லட்சக்கணக்கான ஆண்கள், பெண்கள், இளைஞர் குழந்தைகள் ஆகிய அனைவர்க்கும் நமது நன்றி உரித்தாகுக.

## சரித்திரம் கற்பிக்கும் பாடம்

இந்தச் சந்தர்ப்பத்தில் நமது நாடு சுதந்திரமாயிருந்த காலத்தை நோக்கி எனது நினைவு செல்கிறது. நம்முள் ஒற்றுமைக் குறைவும் ஒரு சிலரின் துரோகமுமே முதல் முதலாக அன்னியர் நம் நாட்டின் மீது படையெடுக்கக் காரணமாயிற்று. ஜயசந்திரன் பிருத்விராஜ் கதையைப் பற்றியும், மகாராஷ்டிர ஆட்சியின் வீழ்ச்சியைப் பற்றியும் சற்று யோசித்தால் தெரியும்.

1857-ம் வருஷத்தில் சுதந்திரப் போர் மிகுந்த வீரத்துடன் நடத்தப்பெற்று, ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தும், வெற்றி நமக்குக் கிட்டவில்லை. ஆனால் அன்று ஏற்றப்பெற்ற

சுதந்திரக் கனல் ஒளி குறைந்ததேயாயினும், அணையவில்லை. மக்கள் மனச் சோர்வடைந்தனர். 28 வருஷங்களுக்குப் பின்புதான் மக்கள் மறுபடியும் சோர்வு தீர்ந்து, விழித்தெழுந்து, சுதந்திர ஆர்வம் கொண்டு இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையை அமைத்தனர். காங்கிரஸ் மகாசபை முதலில் சற்று தயக்கத்தோடு ஆரம்பித்து, நாட்கள் செல்லச் செல்ல, உரம்கொண்டு போராட ஆரம்பித்தது. அதன் கொடியின்கீழ்த்தான் நாம் இன்று சுதந்திரம் அடைந்திருக்கிறோம்.

### சுதந்திரப்போர்

1921-ல் மகாத்மாகாந்தியடிகளால் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. 1930 - 1932-ம் வருடங்களில் நடந்த சட்டமறுப்பு இயக்கங்களால் தேசமக்கள் வலுப்பெற்று தங்கள் பலத்தை உணர ஆரம்பித்தனர். 1942 ஆகஸ்டில் மகாத்மா காந்தியடிகள் 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்ற வீரவாக்கை நாடெங்கும் பரப்பிய பொழுதுதான், சுதந்திரப்போர் உச்ச நிலையை அடைந்தது. அதே ஆகஸ்ட்டு மாதத்தில் நாடு சுதந்திரமடைவது மிகவும் பொருத்தமுடையதே. நாம் பல இன்னல்கள் அடைந்தோம். நம்மில் பலர் தங்கள் உடைமைகளையும் உயிரையுங்கூட இழந்தனர். ஆயினும் மற்ற நாடுகளின் சுதந்திரப் போரோடு நமது சுதந்திரப் போரை ஒப்பிட்டால் நாம் அடைந்த கஷ்ட நஷ்டங்கள் குறைவேயாகும். இதற்குக் காரணம் மகாத்மா காந்தியடிகளின் அஹிம்ஸா மார்க்கமே. நமது சுதந்திரப் போர் யார்மீதும் மனக் கசப்பும் பகையும் இல்லாமல் நடந்திருக்கிறது. ஆளுவோர் மீது பகையில்லாமல் ஆட்சிமுறையின் மீது மாத்திரம் நடத்தியபோர் உலகத்துக்கே புதுவழி காட்டியது.



### பெற்ற சுதந்திரத்தைக் காத்திடுவோம்

நாம் பெற்ற சுதந்திரத்தைப் போற்றிக் காக்கவேண்டுமாயின் நமது நாட்டின் நிர்வாகத்தைச் சீரிய முறையில் நடத்த நம்மைத் தயார்செய்துகொள்ளவேண்டும். நமது நாடு இயற்கை வளங்கள் எல்லாம் அமைந்தது. ஆயினும், நமது மக்கள் மிகவும் எளிய நிலைமையில் இருக்கின்றனர். விவசாயம் மிகவும் அதிகமாயிருந்தாலும், போதிய அளவு உணவு கிடைக்கவில்லை. உணவுக்குக்கூட வெளி நாட்டார் தயவை எதிர்பார்க்கும் நிலைமையில் இருக்கிறோம். வேண்டிய அளவு துணியும் இல்லை. மற்றும் பல பொருள்களுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காத நிலைமைக்கு நாம் வந்தாலன்றி அடைந்த சுதந்திரம் வீணேயாகும்.

இதுவரையிலும் சுதந்திரத்தை அடைவதற்காக அன்னியருடன் போராடுவதிலேயே நம் காலத்தைக் கழித்தோம். சுதந்திரம் அடைந்ததன் பொருள் என்னவென்றால் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருந்தவைகளை அகற்றிவிட்டோம் என்பதுதான். இனி நாம் நமது நாட்டு மக்கள் எல்லோரும் கல்வியிலும் செல்வத்திலும் வாழ்க்கையிலும் முன்னேறுவதற்கு வேண்டியவாறு நமது அரசாங்கத்தை நடத்தும்படி தயார் செய்யவேண்டும். இந்நாட்டுப் பாமரமக்கள் முன்னேற்றமடைந்து, வேண்டிய அளவு உணவு, உடை, குடியிருக்க வீடு ஆகியவற்றை அடைந்தாலொழிய, நாம் சுதந்திரம் அடைந்தோம் என்பதற்குப் பொருளில்லை. அறியாமை வறுமை என்னும் இராகு கேதுக்கள் அகன்றாலன்றி சுதந்திர சூரியன் பிரகாசிக்காது. வலியோர் மெலியோரை வாட்டாது அவர்களை எல்லாத் துறைகளிலும் முன்னேற்றுவதற்கு உதவிபுரிய வேண்டும்.

## குழப்பம் குறையட்டும்

நாடு முழுவதும் ஒரே குழப்பமாயிருக்கிறது. இந்தியா துண்டிக்கப்பட்டதன் காரணமாக நாட்டின் உற்பத்தி சாதனங்கள் தள்ளாட்டமடைகின்றன. ஆகையால், இந்தியனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் நமது நாடு உலகத்தில் மேம்பட்டு விளங்கத் தன்னாலியன்றவாறெல்லாம் பாடுபடக் கங்கணம் கட்டிக்கொள்ளவேண்டும். நமது மாகாணத்துச் சர்க்கார் ஊழியர்கள் திறமையிலும் புத்திசாலித்தனத்திலும், யோக்கியப் பொறுப்பிலும் பேர்போனவர்கள். நாடு சுதந்திரம் அடைந்தபின் அவர்கள் தாங்கள் பொது ஜனங்களின் ஊழியர்கள் என்பதை உணர்ந்து இன்னும் அதிக ஊக்கத்துடனும் பற்றுடனும் சேவை செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தங்கள் வர்க்கத்தை மாசுபடுத்தும் சிலரை வெளியேற்ற வேண்டியது அவர்கள் கடமை. பொதுமக்கள் தாங்கள் இப்பொழுது ஒரு சுதந்திரநாட்டு மக்கள் என்பதை மனதிற்கொண்டு தங்கள் பொறுப்பையும் கடமையையும் சரிவர உணர்ந்து நாட்டின் பொருளாதார, ஆத்மார்த்திக, சமூக முன்னேற்றத்துக்குப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

## உணவு உற்பத்தியைப் பெருக்குவோம்

இந்தச் சந்தர்ப்பத்தில் நமது மாகாணத்தின் தற்போதைய உணவு நிலைமையைப்பற்றிக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. உணவுநிலைமை மிகவும் சீர்கேடடைந்திருக்கிறது. ஒவ்வொரு விவசாயியும் முன்வந்து தன்னால் கூடியவரையும் ஆழாக்கு அரிசிகூடக் குறையாமல் கொடுத்து உதவினாலன்றி இந்தச் சங்கடமான கட்டத்தைத் தாண்டுவது கஷ்டம். ஆகையால், இந்தப் புனித



நாளில் ஒவ்வொருவரும் தங்களிடம் உபரியான எல்லா தானியத்தையும் கொடுப்பதை ஒரு எக்ஞமாகக்கொண்டு, கொடுக்கவேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

நாம் அடைந்த சுதந்திரத்தை மனித சமூகத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தும் அறிவு, ஆற்றல், தைரியம், தீர்க்கதரிசனம் ஆகியவற்றை நமக்கு அளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளைப் போற்றுகிறேன்.

---

# 5. புத்தாண்டு

கடவுள் அருளால் சர்வசித்து வருடம் முடிந்து சர்வதாரி வருடம் இன்று ஆரம்பித்திருக்கிறது. இந்தப் புது வருடத்தில் மக்கள் எல்லோரும் சௌக்கியமாகவும் சுபிட்சமாகவும் வாழக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

## சென்ற வருடத்திலே

சென்ற ஒரு வருடத்திற்குள் தேசத்தில் என்ன நடந்தது என்பதையும், அதிலிருந்து என்ன நன்மை தீமைகள் ஏற்பட்டன என்பதையும், அந்த அனுபவத்தின் மூலமாக நாம் எம்மாதிரி நடக்கவேண்டும் என்பதையும் தெரிந்துகொண்டால், அது வழிகாட்டியாக இருக்கும் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். அரசாங்கத்தை நடத்துபவர்கள் எல்லோரும் மக்கள்சமூகத்தின் தர்மகர்த்தர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

## சுதந்திரம் அடைந்தோம்

சென்ற வருடத்தில் அரசாங்கத்தை ஏற்று நடத்திக் கொண்டு வரும்போது, மத்தியில் சுயராஜ்யம் நமக்குக் கிட்டியது. இந்த சுயராஜ்யத்தின் ஆரம்பத்திலேயே அநேக தீமைகளும் தேசத்தில் ஏற்பட்டன. துவேஷ மனப்பான்மை காரணத்தினால் இந்துக்களும், முஸ்லிம்களுமான அநேக குடும்பங்கள் வீடிழந்து, நாடிழந்து வெளியே ஓடும்படியான நிலை ஏற்பட்டு இன்று அனாதைகளாக இருக்கிறார்கள். இந்தத் துன்பத்திலிருந்து இன்னும் நாடு பரிபூரணமாக விடுதலை அடையவில்லை. ஆனால், துவேஷ மனப்பான்மையோ தேசத்தில் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. நம் சமீபத்தில் இருக்கும் ஐதராபாத்தில் அதிகமாகத் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் மனிதன் மனிதத்தன்மையை இழந்து, தன்னுடைய சுகதுக்கங்கள் மற்றவர்களுக்கும் உண்டு என்பதை உணராமையே. அதை உணர்ந்து அதற்குத் தகுந்த முறையிலே தனி மனிதர்களும் அரசாங்கமும் ஒழுங்காக நடந்துகொள்ள ஆரம்பித்தால், இம்மாதிரி மனப்பான்மை வளராது எல்லோரும் நியாயமாகவும் தர்மமாகவும் நடக்க ஏதுவாக இருக்கும்.

## அண்ணலை இழந்தோம்

சென்ற வருடத்தில்தான் சுயராஜ்யத்தைத் தேடித் தந்த மகாத்மா காந்தி அடிகளை இழக்கும்படியான நிலைமையும் நமக்கு ஏற்பட்டது. இது உலகத்தாருக்கும் நம் தேசத்தாருக்கும் தாங்கொணாத் துயரத்தை அளித்தது. சத்தியத்தையும் தர்மத்தையும் அடிப்படையாகக்கொண்டு, தன்னலமற்ற சேவையின் மூலமாக மனிதத்தன்மையை நிலைநாட்டுவதற்கு உலகத்திலும், குறிப்பாக நமது நாட்டிலும், இராமராஜ்யத்தை நிலைநாட்ட வழிகாட்டிய ஒரு மகானுடைய உதவி இல்லாமல் உலகம் தவிக்கின்றது. அழிக்கும் சக்திகள் தலைவிரித்து ரௌத்திர நடனம் புரியும்படியான நிலை ஏற்படுமோ என்ற பீதியும் ஏற்பட்டிருக்கிறது. இதிலிருந்து கடவுள்தான் நம்மைக் காப்பாற்றவேண்டும்.

## பொருளாதார நெருக்கடி

சுயராஜ்யம் அடைந்த பிறகு நம் தேசத்தில் ஜனங்கள் எல்லோரும், குறிப்பாக ஏழைகள், தொழிலாளிகள், பலவீனர்கள் ஆகியோரும், அந்த சுயராஜ்யத்தின் சுவையை உடனே அடையவேண்டுமென்ற அவாவினால் தூண்டப்பட்டு, மிகுந்த ஆவலுடன் இருக்கின்றார்கள். நெடுங்காலமாக வறுமையிலும், பசியிலும், பிணியிலும், உழன்று கிடந்தவர்கள், அதிலிருந்து விடுபட்டுத் தாங்களும்

மனிதர்களாக வாழவேண்டும் என்ற அவா இருப்பது அவசியந்தான். ஆனாலும், ஒரேஅடியில், உடனேயே எல்லாவற்றையும் அடைந்துவிட முடியுமா என்பதையும் யோசிக்கவேண்டியிருக்கிறது. 'எண்ணியதை எண்ணியாங் கெய்துவது' நமக்கு இருக்கும் திறமை, தகுதி, பொருளாதார நிலைமை, ஒழுங்குடனும் பணிவுடனும் வேலைசெய்யும் திட்டம் இவைகளைப் பொறுத்திருக்கிறது. எனவே, அறிவிலும் தொழில்திறனிலும் ஆற்றல் படைத்து முன்னேற்றம் அடைந்தவர்கள் தங்களைவிட பல துறைகளிலும் தாழ்ந்து, முன்னேற்றம் அடையாமல் இருப்பவர்களுக்கு துணைபுரிந்து முன்னேற்றமடைய வழிகாட்ட வேண்டும்.

### மக்கள் கடமை

இதற்கு மக்களும் அரசாங்கமும் ஒத்துழைத்து தகுந்த முறையில் திட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும். வகுத்த திட்டங்களை நடைமுறையில் நடத்துவதற்கு வேண்டும் உணர்ச்சியை மக்களிடையே எழுப்பவேண்டும். ஜனங்கள் தங்கள் குறைகளை உணர்ந்து அவற்றைத் திருத்திக்கொண்டு, உணர்ச்சிஒழுங்கும் கட்டுப்பாடும் கூடிய ஆக்க வேலையாக மலரச்செய்தல் வேண்டும். அப்பொழுது தான் அதனுடைய பலனை அடைய முடியும் என்பதை நாமெல்லோரும் நன்கு உணரவேண்டும். ஒழுங்கும் கட்டுப்பாடும் அற்ற ஒரு ஜனசமூகமோ, அரசாங்கமோ செவ்வையாக முன்னேற முடியாது. திட்டங்கள் வெற்றி பெறத் தகுந்த காலவரையையும் நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். சூழ்நிலையையும் வருவித்துக் கொள்ளல் வேண்டும். நம்முள் ஒவ்வொருவரும், சமூகத்தையோ, சாதியையோ, சமயத்தையோ அடிப்படையாக வைத்துக் கொண்டு மற்றவர்களுடைய நன்மை தீமைகளைக் கவனி



யாது, சுயலாபப் பதர்களாக வேலை செய்வோமானால், அதனால், துவேஷ மனப்பான்மையும் பொறாமையும் நமக்கே தெரியாமல் வளர்ந்து, நம் முன்னேற்றத்தைத் தடை செய்யும். ஆகையினாலே ஒவ்வொருவரும் தங்கள் எண்ணமும், சொல்லும், செயலும், தனக்கும் சமூகத்திற்கும் எவ்விதமான நன்மை தீமைகளை உண்டாக்கும் என்ற உணர்ச்சியுடன் வேலை செய்ய ஆரம்பித்தாலொழிய நமக்கு விமோசனம் கிடையாது.

இந்தியாவிலேயே நமது மாகாண அரசாங்க ஊழிய வர்க்கத்தினரே நுண்ணிய அறிவு படைத்து காரியங்களைத் திறனாகச் செய்யும் திறம்படைத்தவர்கள். ஆனால், அவர்களிற் சிலர் இன்று இலஞ்சத்தினாலும் ஊழலினாலும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களைத் திருத்திக் கொள்வார்களென்று எதிர்பார்க்கிறேன்.

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்

என்றார் வள்ளுவர். அரசாங்கத்தை நடத்தும் மந்திரிகள், பிரதிநிதிகள், தலைவர்கள், ஊழியவர்க்கத்தினர், பொது மக்கள் ஆகிய எல்லோரும் நியாயமாக நடந்திருந்தால், நாட்டில் பஞ்சம் ஏற்பட்டிருக்குமா?

### உணவுப் பஞ்சம்

நமது மாகாணத்தில் பஞ்சம் ஏற்பட்டு நம்மிடம் உள்ள விளைபொருள்களையும், மத்திய அரசாங்கம் அனுப்பும் தானியங்களையும் வைத்துக்கொண்டு, ஏழைமக்கள் பட்டினியால் வாடி வதங்காமல், பங்கிட்டுப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. அதைச் சரிவர நடத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தாருக்கும் பொதுமக்களுக்கும் ஒருங்கே இருக்கின்றது. ஆகையினாலே, நன்றாக விளைந்த

ஜில்லாக்களைச் சேர்ந்த விவசாயிகள் எவரேனும் தாங்கள் கொடுக்கவேண்டிய தானியங்களை அதிகாரிகளிடத்திலோ, அல்லது மொத்த வியாபாரிகளிடத்திலோ சேர்ப்பிக்காமலிருந்தால், அவைகளை உடனே கொடுத்து, மற்ற சகோதரர்களுடைய பசிப்பிணியைத் தீர்ப்பதற்கு உதவிசெய்ய வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். அரை வயிற்றுக்காவது நல்ல அரிசியாகவோ பிற தானியங்களாகவோ கொடுக்க முடியாத நிலைமையை நம் தேசத்திலிருக்கும் சில நெல் அரைக்கும் மிஷின்காரர்களும், மொத்த வியாபாரிகளும் உண்டாக்கியிருக்கிறார்கள். நியாயமற்ற முறையில் பொருளைத் திரட்டவேண்டி நெல்லை அதிகமாக ஊறவைத்து, அளிய வேகவைத்து, சரிவர உலரப் போடாமல், ஈரத்துடன் அரிசியை மூட்டையில் கட்டி சப்ளை செய்வதனால் அரிசி நாற்றம் பிடித்து, புழுப் பிடித்து, அடை கட்டி, சாப்பிடுவதற்குத் தகுதியில்லாது போகின்றது. அதற்குச் சில உணவு இலாகா உத்தியோகஸ்தர்களும், சுகாதார அதிகாரிகளும் துணையாக இருப்பதனால் தான் இது நடைபெறுகின்றது. இத்தகைய தீச்செயலில் ஈடுபடுபவர்கள் எல்லோரும் தேசத் துரோகிகளாகக் கருதப்படவேண்டும். புது வருஷத்திலாவது தன்னைப் போல் பிறரையும் பாவித்து, குறைந்த அளவாக அளிக்கப்படும் இந்த அரிசி முதலிய தானியங்களையாவது ஏழை மக்கள் உண்ணும்படியான நிலையில் கொடுக்க உதவி புரிவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

## உணவு உற்பத்தி

உணவு உற்பத்தி அதிகமாகச் செய்யவேண்டுமென்று மத்திய, மாகாண அரசாங்கங்களும், பொதுமக்களும் பிரசாரம் செய்தும், அதற்குக் கோடானுகோடி ரூபாய் செலவழித்தும் நாம் எதிர்பார்த்த பலன் நடைமுறையில்



தெரியவில்லை. அதற்குப் பல காரணங்களுண்டு. குறிப்பாக விவசாயிகளுக்கு அளிக்கப்படும் விவசாயக் கருவிகள், இஞ்சின் ஓட்டும் சீமை எண்ணெய்கள், உரம், பிண்ணாக்கு முதலியவைகளை காலாகாலத்தில் பகிர்ந்துகொடுப்பதில்லை. பிண்ணாக்கு உரத்துக்காகக் கூப்பன்களை அளித்தும், அந்தக் கூப்பன்களுக்குரிய உரம் இதுவரையில் சப்ளை செய்யப்படாமல் பல ஜில்லாக்களில் கிடங்குகளில் மக்கி உளுத்து நாசமாய்க்கொண்டு வருகிறது. ஏன் அந்த மாதிரி அந்த ஜில்லாக்களில் நடக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. இதையும் அந்த இலாகாவில் இருப்பவர்கள் கவனித்து உணவு உற்பத்திப் பெருகும் முறையில் விவசாயிகளுக்கு உதவும்படியான ஏற்பாடுகளைச் செவ்வனே செய்வார்களென்று எதிர்பார்க்கிறேன். விவசாயிகளும் கூப்பன்களை வாங்கிக் கள்ளமார்க்கெட்டில் விற்காமல் இருக்க வேண்டும்.

## ஆதாரக் கல்வி

தேசம் முன்னேற்றம் அடையவேண்டுமென்றால், பாமர மக்களிடத்தில் கல்வி பரவவேண்டும். விவசாயம், பசு வளர்த்தல், வியாபாரம், கிராம மறுமலர்ச்சி, கிராமக் கைத்தொழில், எந்திரத்தொழில், முதியோர் கல்வி, பூத பௌதிக விஞ்ஞான சாத்திர ஆராய்ச்சி, மதுவிலக்கு, தீண்டாமைவிலக்கு, பெண்கள் முன்னேற்றம், இந்தி கற்பித்தல், முதலிய அரும்பணிகள் திறம்பட நடைபெறுவது பாமர மக்களின் கல்வி அறிவையும் சேவா உணர்ச்சியையும் பொறுத்திருக்கிறது. அதற்காகத்தான் காந்தி அடிகள் அடிப்படைக் கல்வித் திட்டத்தை ஏற்படுத்தி, அதன் மூலமாக மூளையை மாத்திரம் அன்றி, மனிதனுடைய பொறி புலன்களையெல்லாம் பண்படுத்தி, கைத்தொழில் மூலமாக அறிவைப் பரப்பவேண்டுமென்று

கண்டார்கள். நம் மாகாணத்தில் இக் கல்வி முறை நடந்து கொண்டு வருகின்றது. ஆனால், ஆரம்பக் கல்வியையும் அடிப்படைக் கல்வியையும் நடத்தும் ஆசிரியர்களும் மேற் பார்வை செய்யும் அலுவலாளரும் அதைத் திறம்பட நடத்துவதாகத் தெரியவில்லை. மிகுந்த கவனம் செலுத்தி, அடிப்படைக் கல்வியையும், ஆரம்பக் கல்வியையும் தற் சமயம் இருக்கும் பள்ளிகளிலாவது திறம்பட நடத்திக் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

### மதுவிலக்கு

மதுவிலக்கு சென்னை நகர் உட்பட நமது மாகாணம் முழுதும் இந்த வருஷம் அக்டோபர் மாதம் அமுலுக்கு வருகிறது. இந்தப் புனித சீர்திருத்தமானது மக்களின் பொருளாதார, ஆத்மீக, சுகாதார முன்னேற்றத்திற்கு உதவிசெய்து, பஞ்சமாபாதகம் செய்வதிலிருந்து அவர் களைத் தடுத்து, அவர்களைப் பொருளாளராகவும், அருளாளராகவும் செய்ய முயலும் நல்ல திட்டமாகும்.

துஞ்சினர் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்

என்றல்லவோ சொன்னார் நாயனார்.

அதை நூற்றுக்கு நூறு வெற்றியடையச் செய்ய வேண்டிய பொறுப்பு இந்த இலாகா அதிகாரிகளுடைய தும் பொதுமக்களுடையதுமாகும். அந்த எண்ணத்தை மக்கள் சமூகத்தில் பரப்பி ஒழுக்கமுள்ளவர்களாகச் செய்ய வேண்டியது சட்டசபைப் பிரதிநிதிகளுடையதும், காங் கிரஸ்காரர்களுடையதும் ஆகும். அவர்கள் மேலும் முயன்று திட்டம் செவ்வனே நடைபெற உழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நமது மாகாணத்தில் முழு மது விலக்கு அமுலுக்குக் கொண்டு வருவதில் அரசாங்கத்



திற்குப் பதினேழுகோடி ரூபாய் நஷ்டமும், ஏழைஎளியவர் களுக்கு எழுபது கோடி ரூபாய் லாபமும் ஆகிறது.

### இராமராஜ்யம்

இவையெல்லாம் சரிவர நடைபெற வேண்டுமென்றால், தேசத்தில் இராமராஜ்யம் ஏற்படவேண்டுமென்று மகாத்மா காந்தி அடிகள் அடிக்கடி பறைசாற்றி வந்தார் கள். இராமராஜ்யம் என்றால் என்ன? எல்லோரும் நியாயமாகவும், தருமமாகவும் நடந்து, ஒருவரேனும் முன் னேற்றம் அடைவதற்குத் தடையில்லாமல் சம சந்தர்ப்பம் அளித்துத் துணைபுரியும் சூழ்நிலைதான். அதைத்தான் தேசியகவி பாரதியார்,

"இல்லையென்ற கொடுமை உலகில் இல்லையாக வைப்பேன்"

என்றார். அந்த நிலை ஏற்படவேண்டுமென்றால், காந்தி அடிகளால் ஏற்படுத்தப்பட்ட ஆக்கவேலைத் திட்டங்களை அரசாங்கமும் பொதுமக்களும் செவ்வனே நடைமுறையில் கொண்டுவருவதற்கு சிரத்தை பக்தியுடன் வேலை செய் தால்தான் முடியும்.

இந்தப் புத்தாண்டில் புனல்வளம், பயிர்வளம் பொங்கி, பூவளம் பெருகி, கொலை, கள், பொய், பொறாமை, சூது முதலியவைகள் அகன்று, நாட்டில் தொண்டும் தொழிலும், வாணிபமும் வீரமும், கல்வி யும் கேள்வியும், விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் செழித்தோங்கி உலகத்தில் சமாதானம் ஏற்பட்டு எல் லோரும் சகோதரபாவத்துடன் கடமையை உணர்ந்தும், தொண்டுபுரிந்து, உரிமையை அடைந்தும் வாழ எல்லாம் வல்ல இறைவன் நமக்கு அன்பும், அறிவும், ஆற்றலும் அளிப்பாராக. நாம் எல்லோரும் கர்மவீரர்களாகவும், ஞானவீரர்களாகவும் விளங்க நல்லருள் புரிவாராக.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

# 6. மாகாணமக்களுக்கு வேண்டுகோள்!

## அன்பும் சீலமும் வளரட்டும்

தேசத்தின் பிதாவாகவும் நண்பனாகவும் தோழனாகவும் இருந்து வழிகாட்டி நம்மை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்த மகாத்மாகாந்தி அடிகள் மறைந்த பிறகு, இன்றுதான் நான் முதல் தடவையாக உங்களுடன் பேசுகிறேன். எங்குபார்த்தாலும் உலகத்தில் குறிப்பாக நமது தேசத்தில், அழிக்கும்சக்திகள் அதிகமாகத் தலைவிரித்து ஆடிக் கொண்டிருக்கின்றன. எந்தக்கொள்கைக்காக அடிகள் தன் வாழ்க்கையின் மூலமாகவும் போதனை மூலமாகவும் சுயராச்சியத்தை அடைவித்து தன் உயிரையும் அர்ப்பணித்தாரோ, அந்தக்கொள்கையை இன்று தேசத்தில் அநேகர் மறந்துவிட்டனர். இது தனி மனிதனுடைய முன்னேற்றத்திற்கோ, நாட்டின் முன்னேற்றத்திற்கோ உகந்ததல்ல. உகந்ததல்ல என்று அறிந்திருந்தும் சுயநலம், பேராசை, பொறாமை இவற்றால் தாக்குண்டு, அறிவாளிகள் கூட தங்கள் நிலையை மறந்து ராஜீய அபிலாஷைகளை அடையும் பொருட்டு, உத்தியோக வேட்டையில் ஈடுபட்டு, மதத் துவேஷத்தையும், ஜாதி துவேஷத்தையும் வளர்த்து வருகின்றனர். பலவான் பலவீனனை முன்னேற்றத்திற்குக் கொண்டுவருவதைவிட்டு அவனை நசுக்குவதில் ஈடுபட்டுக் கொண்டு வருவதால் தேசத்தில் தொல்லைகள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. ஆகையால் தேசத்திலிருக்கும் அறிவாளிகளும் ராஜீயவாதிகளும் பெரியோர்களும் சிந்தித்து, இந்த நிலையை மாற்றும்வகைதேடவேண்டும். தங்கள் தங்கள் குறைகளை உணர்ந்து திருத்திக்கொண்டு, மற்றையோரையும் திருத்தும்பொருட்டு எண்ணம், சொல், செய்கைகளில் அன்பு எதிரொலிக்குமாறு நடந்துகொள்ளவேண்டும்.



குறிப்பாக பத்திரிகையாளர்களுடைய பொறுப்பு மிகவும் அதிகம். அவர்கள்தான் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குகிறார்கள். தங்கள் ஜீவனோபாயத்துக்காக மக்களுடைய தாழ்ந்த சிந்தனைகளைத் தூண்டிவிடும்படியான செய்திகளைப் பரப்புவதை அவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல், தேசத்தின் நிலை குலைந்து அவர்கள் கிளப்பிய தீத்தணலில் எல்லோருமே எரிந்துவிடக்கூடும். அந்நிலையிலிருந்து கடவுள்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்.

## உணவுப் பிரச்சினை

நமது மாகாணத்தின் உணவுநிலையைச் சரிசெய்யும் பொருட்டு மத்திய அரசாங்கம் வேண்டிய அளவு உதவி செய்ய முயற்சி செய்துகொண்டிருக்கிறது. அதனால் நம்முடைய பொறுப்பு அதிகமே ஆகிறது. ஆந்திர ஜில்லாக்களில் இவ்வருடம் சராசரியைவிட அதிகமாக விளைந்திருக்கிறது. தமிழ், மலையாளம் ஜில்லாக்களிலோ பருவமழை இன்மையால் தஞ்சை தவிர, மற்ற ஜில்லாக்களில் புஞ்சை, நஞ்சைப் பயிர்கள் தீய்ந்துவிட்டன. ஆகையால், தமிழ், மலையாள சகோதரர்களைக் காப்பாற்றும்பொறுப்பு ஆந்திர சகோதரர்களுடையது. குறிப்பாக வடசர்க்கார் ஜில்லாக்களில்தான் தானியம் உபரியாகச் சேகரித்து மற்ற ஜில்லாக்களுக்கு வினியோகிக்க வேண்டியதாக விருக்கிறது. அங்கிருக்கும் விவசாயிகள் அவர்களுக்கு விதித்திருக்கும் விகிதாசாரத்தில் ஏறக்குறைய 100-க்கு 40 தான் கொடுத்திருக்கிறார்கள். பாக்கி 60 கொடுக்கவேண்டியதிருக்கிறது. 1948-ம் வருஷம் மார்ச்சு மாதம் 20-ந் தேதி முடிய, கிழக்கு கோதாவரி ஜில்லாவில் எதிர்பார்த்த தான்யம் 1,21,800 டன். ஆனால், அங்கு சேகரித்தது 64,200 டன். குண்டூர் ஜில்லாவில் எதிர்

பார்த்த தானியம் 84,000 டன். ஆனால், அவ்விடத்தில் சேகரித்தது 28,072 டன்தான். கிருஷ்ணா ஜில்லாவில் எதிர்பார்த்தது 1,79,200 டன். ஆனால், அங்கு சேகரித்தது 88,462 டன். நெல்லூர் ஜில்லாவில் எதிர்பார்த்த தானியம் 50,000 டன். அங்கு சேகரித்தது 12,698 டன். மேற்கு கோதாவரி ஜில்லாவில் எதிர்பார்த்தது 2,73,200 டன். சேகரித்தது 91,015 டன். ஆக மேற்கண்ட ஜில்லாக்களில் எதிர்பார்த்த மொத்த தானியம் 7,08,700 டன். சேகரித்தது 2,84,527 டன்தான். சில கிராமங்களில் பொதுவுடைமைக்காரர் தூண்டுதலால் தானியங்களைக் கொடுக்க மறுப்பதாகத் தெரிகிறது. பொதுவுடைமைக்காரர் விவசாயத் தொழிலாளர்களைத் தூண்டிவிட்டுக் கொஞ்ச நஞ்சம் விளைந்ததைக்கூட அறுவடை செய்யாதபடி நட்டமாக்கிவிட்டார்கள். இம்மாதிரிப் பருவமழை யின்மையால் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில், கட்சி நலனுக்காக விஷயமறியாத ஏழை மக்களைத் தூண்டிவிட்டு, தேசத்தின் உணவுக் கஷ்டத்தை அதிகமாக்கி, ஜனங்களுக்குத் தொந்தரவுகளை உண்டாக்கி, அவர்கள் நிதானம் இழந்து கலகம் செய்யுமாறு தூண்டுவது அடாத செய்கை என்பதைச் சொல்லவேண்டுவதில்லை.

## தொழிலாளர் பிரச்சினை

இதேமாதிரி, துணிவிஷயத்திலும் மத்தியஸ்தர்கள் தீர்ப்பை ஒப்புக்கொள்ள மறுத்து, வேலைநிறுத்தம் செய்து துணிப்பஞ்சம் ஏற்படுமாறு தொழிலாளர் தலைவர்கள் தூண்டிவிடுகிறார்கள். முதலாளிகளும் மிராசுதாரர்களும் தங்கள் சுயநலத்தைக்கருதிப் பணத்தைச் சேகரிக்கும் ஒரே நோக்கத்துடன், தொழிலாளர்கள் விழிப்பையும் உலக நிலையையும் கவனிக்காது கண்மூடித்தனமாய் நடந்து



வருகிறார்கள். தொழிலாளிகளும் தாங்கள் சாதாரணமாகச் செய்யும் அளவு வேலைகூடச் செய்வதில்லை. எந்த விவகாரத்திலும் மத்தியஸ்தர் தீர்ப்பை ஒப்புக்கொண்டாலொழிய விவகாரத்திற்கு எல்லையேயில்லை. பிறகு, விடாச் சண்டை போட்டுக்கொண்டு அழிந்துவிடவேண்டியதுதான். கோயம்புத்தூரில் சென்ற 10 வாரங்களாக நடக்கும் வேலைநிறுத்தத்தால் மட்டும், 30 இலட்சம் மனிதர்கள் ஒரு நாள் எவ்வளவு வேலை செய்வார்களோ, அவ்வளவு வேலை வீணே விரயமாயிற்று. எவ்வளவு பெரிய நஷ்டம். இதை ஈடுசெய்யவே முடியாது. இதனால் பொதுமக்களுக்கு 34 ஆயிரம் பேல் நூலும், 34 இலட்சம் கஜம் துணியும் குறைவுபட்டதோடு தொழிலாளிகளுக்கு 50 இலட்சம் ரூபாய் கூலி நஷ்டமும் ஏற்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளரும், கைத்தறி நெசவுத் துணிகளை உபயோகிக்கும் பொதுமக்களும் துன்பத்துக்குள்ளாகி யிருக்கிறார்கள். சற்றேறத்தாழ 40 ஆயிரம் தொழிலாளர்களும் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். சென்ற வருடம் நடந்த பக்கிங்காம் தொழிலாளர் வேலை நிறுத்தத்தால் தொழிலாளர்களுக்கு 34 இலட்சம் ரூபாய் கூலி நஷ்டமும், பொது ஜனங்களுக்கு மூவாயிரம் பேல் நூலும், பத்தாயிரம் பேல் துணிக் குறைவுபாடும் ஏற்பட்டது. ஏற்கனவே உணவுக்கும், உடைக்கும் பஞ்சமேற்பட்டு, வெளிநாட்டிலிருந்தும் பொருள்கள் வர இயலாதிருக்கும் காலத்தில், தொழிலாளியும் முதலாளியும் ராஜீய வாதியும் போட்டி போட்டுக்கொண்டு தத்தம் தலைமையே பெரிதென்று கருதி நாட்டின்நலனைப் புறக்கணித்துவிடுகிறார்கள்.

எனவே, இவ்விஷயங்களைக் கவனித்து, இந்த நிலையிலிருந்து தேசத்தைக் காப்பாற்ற அரசாங்கத்திற்கு உதவ வேண்டுமென்று உங்கள் எல்லோரையும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

---

## 7. இந்துமத தர்ம ஸ்தாபனங்கள்

இம்மசோதாபற்றிச் சில தினங்களாக இச்சபையில் விவாதம் நடைபெற்று வருகிறது. விவாதம் மிகவும் விரிவாகவும் பூரணமாகவும் இருந்ததென்றே நான் சொல்லுவேன். சபைக்கு வெளியேயும் பத்திரிகைகளிலும் பிரசங்க மேடைகளிலும் இதுபற்றி சர்ச்சை நடைபெற்றிருக்கிறது. இம்மசோதாவின் விவாதத்திற்குச் சபாநாயகரவர்கள் தாராளமாக அவகாசம் அளித்துள்ளார்கள். இதைப் பற்றிப் பேசவிரும்பிய யாவருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. இது எனக்குப் பரம சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. இம்மசோதாவுக்குக் கொண்டுவரப்பட்ட திருத்தத்தை ஆதரித்துத் தீவிரமாகப் பேசிய அங்கத்தினர்களில் ஒருவர் கூறியதை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மசோதாவைப்பற்றிய விவாதம் நீண்டநேரம் நடைபெற்றதால், தான் உட்கார்ந்திருந்த இடம் சூடேறிவிட்டதென்று அவர் புகார் கூறினார். இதிலிருந்து மசோதாபற்றிய பலதிறப்பட்ட அபிப்பிராயங்களையும் யாவரும் வெளியிட்டுப் பட்டவர்த்தனமாகப் பேச வசதியளிக்கப்பட்டதென்பதை ஒருவரும் மறக்கமுடியாது.

### 1937-ம் ஆண்டிலேயே சட்டமாயிருக்கவேண்டியது

இம்மசோதாவின் அவசியத்தைப்பற்றி என் சகாவான கனம் டாக்டர் ராஜன் அவர்கள் சபையில் வெகு திறமையாகவும் விளக்கமாகவும் விவரித்துப் பேசினார். அவர் பேசியதற்குப் பிறகு, சர்க்காரின் சார்பாக மேலும் சொல்லவேண்டியது ஒன்றும் இருக்காது என்று எல்லோரும் நினைப்பது இயற்கையே. இம்மசோதாவை டாக்டர் ராஜன் பிரேரேபிப்பதில் விசேஷ முக்கியத்துவம் இருக்கிறது. ஏனென்றால், அவர் பழைமையையும், புதுமையை



யும், புராதனத்தையும், நவீனத்தையும் பிரதிபலிப்பவர். மேலும், 1937-ம் வருஷ காங்கிரஸ் மந்திரி சபையில் அவர் ஸ்தானம் வகித்தபோது இந்துமத தர்மபரிபாலன இலாகாவுக்குப் பொறுப்பாக இருந்தார். அவரே அப்பொழுது இம்மசோதாவை உருவாக்குவதற்கு முக்கிய பொறுப்பாளியாகவும் இருந்தார். ஆனால், இம்மசோதா சட்டமாக்கப்படுவதற்கு முன்னரே சரித்திரப் பிரசித்திபெற்ற சம்பவங்களின் காரணமாக காங்கிரஸ் மந்திரிசபை ராஜினாமாச் செய்யநேரிட்டது யாவருக்கும் தெரிந்த விஷயம். அப்படிக்கில்லாதிருந்தால் இம்மசோதா வெகு காலத்திற்கு முன்னரே சட்டமாகியிருக்கும். அதுபற்றிய புகழோ இகழோ வேறொரு பிரதமருக்கு அதாவது நமது அன்புக்குரிய ராஜாஜிக்குக் கிடைத்திருக்கும். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. இப்பொழுது இந்துமத தர்மபரிபாலனம் எனது அதிகாரத்துக்கு உட்பட்டிருக்கிறது. அந்த ஹோதாவிலும், பிரதமர் என்ற முறையிலும் இம்மசோதா கொண்டுவருவதற்கு நானே பொறுப்பாளியாகத் தற்சமயம் இருப்பதால் இதைப்பற்றிய சுருக்கமான விளக்கத்தை நான் கூறாவிடில், என் கடமையில் தவறியவனாவேன்.

### மதத்துக்கு ஆபத்து என்பது வீண் கூக்குரல்!

பாமர மக்களின் சமூக, பொருளாதார அரசியல் நிலைமையை உயர்த்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்க முற்படும்போதெல்லாம் 'மதத்துக்கு ஆபத்து' என்ற கூக்குரல் துர்ப்பாக்கியவசமாக நம் நாட்டில் கிளம்புவது சகஜமாகிவிட்டது. ஏழைமக்களின் கதிமோட்சத்துக்கான மதுவிலக்குப் போன்ற ஒரு சமூகப் பொருளாதாரத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முற்பட்டோமானால், தனிப்பட்டவரின் சுதந்திரத்துக்கு ஆபத்து வந்துவிட்டது

என்ற கூக்குரல் கிளம்பிவிடுகிறது. பலதார மணங்களைத் தடைசெய்து மாதர்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி வைத்திருக்கும் சமூக, பொருளாதாரக் கேடுகளைக் களைந்தெறிய விரும்புவோமானால், இங்கேயும் மதத்துக்கு ஆபத்து என்ற கூச்சல்புறப்பட்டுவிடுகிறது. இதுபோலவே, விவாகச் சம்மத வயது மசோதா, தேவதாசி ஒழிப்பு மசோதா, ஹரிஜன ஆலயப் பிரவேச மசோதா போன்ற பல முற்போக்கான மசோதாக்கள் கொண்டுவரப்பட்ட போதெல்லாம் மதத்தின் பெயரால் எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய சிறந்த மசோதாக்கள் சட்டமாக்கப்படாமலிருந்தால், மூடநம்பிக்கையென்னும் அந்தகாரத்தில் அழுந்திக்கிடக்கும் மக்களாக நாம் இன்றும் இருந்திருப்போம். மேலே கூறப்பட்ட எதிர்ப்புக் கூச்சல்களைச் சமாளித்து மேற்படி மசோதாக்கள் சட்டமாக்கப்பட்டன. உலகம் முன்னேறி வருகிறது; நாமும் துரிதமாக முன்னேற வேண்டும்; மதத்தின் பெயரால் நமது முற்போக்கின் வேகத்தைத் தடுக்க முன்வருபவர்கள் தாங்கள் நம்புவதாகக் கூறும் தங்கள் மதத்துக்கே தீமை செய்தவர்கள் ஆவார்கள்.

இம் மசோதாவுக்கு இருந்துவரும் ஓரளவு எதிர்ப்புக் கூட சுயநலக்காரர்களின் ஏற்பாடே என்று சில அங்கத்தினர்கள் இச்சபையில் கூறியதை நான் நம்பத்தயாராயில்லை. இவ் வெதிர்ப்புக்கு இக்காரணம் முக்கியமானதாக இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. நமது சமூகத்தில் ஆண்டவன் நாமத்தாலும், மதத்தின் பேராலும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் தர்ம ஸ்தாபனங்களை துஷ்பிரயோகம் செய்துவரும் கோஷ்டியைச் சேர்ந்த பெரும்பான்மையோர் இம் மசோதாவினால் பாதிக்கப்படுகின்றனர். இம் மசோதா தங்களது சுரண்டலுக்குச் சாவுமணி



அடிக்கின்றது என்பதை அவர்கள் உணர்ந்துவிட்டார்கள். அவர்களைப்பற்றி எனக்கு அக்கரை இல்லை. அதுமட்டுமல்ல. மசோதாவின் உன்னத அடிப்படைக் கொள்கைகளுக்கு இவர்களின் எதிர்ப்பே தக்க நற்சான்றாகும். அவர்களின் எதிர்ப்பு எவ்வளவுக்கெவ்வளவு வலுக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு மசோதாவின் அத்தியாவசியமும் புலப்படுகிறது.

## மத உரிமைகள் பாதிக்கப்படமாட்டா

சீர்திருத்த நடவடிக்கையாகிய இம் மசோதாவினால் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ லௌகிக வழியில் பாதிக்கப்படுவோரின் வாதங்களுக்குச் சமாதானம் கூறுவதற்காக நான் இன்று முன்வரவில்லை. எதிர்ப்பவர்களில் பெரும்பான்மையோர் இப்பேர்ப்பட்டவர்கள்தான். ஆனால், தப்பாகவோ, சரியாகவோ இப் பிரேரபணையால் மத உரிமைகளுக்கு மெய்யாகவே பாதகமேற்படும் என்று நம்பும் ஒரு சிலரும் இருக்கலாம். அவர்களுக்காகவே நான் பேச முற்பட்டுள்ளேன். அவர்களுக்கே என் வேண்டுகோளை விடுக்கின்றேன். தாங்கள் என்ன சொல்லுகிறோமென்பதை உணராமலேயே அவர்கள் பேசுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

## மதத்தின் பெயரால் நடக்கும் அக்கிரமங்கள்

மதம் என்பதுதான் என்ன? அரசாங்கத்துக்கும் மதத்துக்கும் உள்ள உறவு எப்படி இருக்கவேண்டும்? இக் கேள்விகள் இந்த விவாதத்துக்கு முக்கியமான விஷயங்களாகும். இவைகள் இத்துடன் நெருங்கிய சம்பந்தமுள்ளவைகள். ‘மதமென்பது சுயநலச் சுரண்டலா?’ என்று கேட்கின்றேன். ‘உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்களைத் துஷ்பிரயோகம் செய்வதுதான் மதத்தின்

பொருளா?' என்று நான் வினவுகின்றேன். நமது மூதாதையர்களால் தாராளமாக நன்கொடைகள் வழங்கப்பட்டு நமது பரிபாலனத்துக்கு விடப்பட்டிருக்கும் தர்ம ஸ்தாபனங்களையும், சொத்துக்களையும், சீர்கேடாக எப்போதும் நிர்வகித்து வரவேண்டுமென்பதுதான் மதமா? ஆலயங்களில் நடைபெறவேண்டிய அர்ச்சனைகள், அபிஷேகங்கள், பூசை, புனஸ்காரங்கள் அலட்சியம் செய்யப்பட்டு அலங்கோலமாக இருந்தபோதிலும் அதை எதிர்த்து யாரும் வாய்கூடத் திறக்கக்கூடாது என்பதுதான் மதமா? கோயில் சொத்துக்களைச் சில நடுவாந்திர ஆசாமிகள் பேரில் குறைவான தொகைக்குக் குத்தகையாக விட்டுவிட்டு ஒருபுறம் விவசாயிகளைச் சுரண்டுவதும், மற்றொருபுறம் கோயிலுக்குச் சேரவேண்டிய பணத்தை ஒரு சிலர் கொள்ளையடித்து பங்குபோட்டுக்கொள்வதும், கோயில் கஜானாவுக்குத் தம்படிகூடப் போய்ச் சேராதபடி செய்வதுந்தான் மதமா? கடவுளின் பெயரால் தென்னை மரங்களைக் கள்ளிறக்கவிட்டு, ஏழை மக்கள் குடித்துக் குடிகெட்டு மீளாப்படுகுழியில் புதையச் செய்வதுதான் மதமா? இவைகளெல்லாம் நடந்தவைகளே!

### கள்ளிறக்கிக் கடவுளுக்குப் பூசையா?

திருவண்ணாமலை தேவஸ்தானத்துக்குச் சொந்தமான தென்னந்தோப்புகள் பல சென்னை நகரில் இருக்கின்றன. 1937-ம் வருஷத்தில் ராஜாஜி மந்திரி சபை அதிகாரத்தில் இருந்தது. இதே டாக்டர் ராஜன் அவர்கள் இந்துமத தர்ம பரிபாலன இலாகாவின் பொறுப்பை வகித்துவந்தார். அப்பொழுது மந்திரி சபைக்கு நான் ஒரு கோரிக்கை சமர்ப்பித்தேன். அதாவது நமது லட்சியங்களுக்கு ஏற்ப, கறைபட்ட பணத்தினால்—அல்வழியில் கிடைத்த பணத்தினால்—கடவுளைப் பூசிப்பது ஒவ்வாது என்ற



காரணத்தினால், கோவில்களுக்குச் சொந்தமான மரங்களில் கள்ளிறக்குவதைத் தடைசெய்யவேண்டுமென நான் ஒரு ஆலோசனை கூறினேன். அதைச் சர்க்காரும் அங்கீகரித்தனர். இதுபற்றி இந்துமத தர்ம பரிபாலன போர்டாருடன் சர்க்கார் கடிதப்போக்குவரத்து நடத்தினர். போர்டார் இதுபற்றிய சர்க்கார் விருப்பத்தை தர்மகர்த்தாக்களுக்குத் தெரிவித்தனர். ஆயினும், இதனால் யாதொரு பயனும் விளையவில்லை. அக்கிரமவழியில் வரும் பணப்பிடிப்பிலிருந்து ஆண்டவனை விடுவிக்க தர்மகர்த்தாக்கள் முடியவே முடியாது என்று கூறிவிட்டனர். போர்டாரோ, சர்க்காரோ ஒன்றும் செய்ய முடியவில்லை. மரங்களிலிருந்து மது இறக்குவதுமட்டும் தொடர்ந்து நடைபெற்றுவந்தது. அம்மதுவை மக்கள் அருந்தி, மதிமயங்கி வந்தனர். இவை யாவும் கடவுளின் புகழுக்காகவே நடைபெற்றுவந்தன!

### ஊழலகளை நீக்கப் போதிய அதிகாரம் இல்லை

இவ்விஷயம் இத்துடன் நின்றுவிடவில்லை. நான் பிரதமரான பிறகும், கோவில்களின் நிர்வாக இலாகாவின் அதிகாரத்தை நான் ஏற்றுக்கொண்டதற்கப்புறமும் மதத்தின் பெயரால் நடத்தப்பட்டுவரும் இந்த அக்கிரமச் செயலைத்தடுக்க என்னால் முடிந்த அளவு சுமுகமான வழிகள் யாவும் கையாண்டு பார்த்தேன். என்னாலும் ஏதும் சாதிக்கமுடியவில்லை யென்பதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுகிறேன். மதுவிலக்குச் சட்டம் வந்தபிறகுதான் இது நின்றது. அதுவரை நாம் காத்திருக்கவேண்டியிருந்தது.

### சுரண்டலும், சூதும் கணக்கிலடங்கா

எவ்வளவு மோசமான அக்கிரமங்கள் எத்தனை அதிகமாக நடந்துவந்திருக்கின்றன வென்பதை எடுத்துக்காட்ட

எண்ணற்ற உதாரணங்களை நான் அடுக்கிக்கொண்டே போகமுடியும். அவைகளைத் தடுக்க சர்க்காருக்குப்போதிய அதிகாரம் இப்பொழுதுள்ள நிலைமையில் கிடையாது. கோவில்களுக்குச் சொந்தமான நகைகளையும், விலையுயர்ந்த பொருள்களையும் கணக்கிட்டு ஜாபிதா தயாரிப்பதற்காகச் சமீபத்தில் ஒரு விசேஷ அதிகாரியைச் சர்க்கார் நியமித்தார்கள். அவர் தனது வேலையைச் சரிவர செய்ய முடியாதபடி எவ்வளவு இடையூறுகள் செய்யமுடியுமோ அவ்வளவையும் தர்மகர்த்தாக்கள் செய்து முட்டுக்கட்டை போட்டுவருகிறார்கள். அவர்கள் அந்த வேலையில் முன்னேற முடியவில்லை. எத்தனையோ தர்மகர்த்தாக்கள் வேண்டுமென்றே நிலத் தீர்வையையோ, அல்லது போர்டாருக்குச் செலுத்தவேண்டிய தொகையையோ செலுத்தாது வைத்து, கோவில் நிலங்களை ஏலத்துக்குக் கொண்டுவந்து தாங்களே தட்டிக்கொண்டு போயிருக்கிறார்கள். பெருவாரியான விவரங்களைக் கூறி உங்களுக்குச் சிரமம் கொடுக்கப்போவதில்லை. வடக்கே விசாகபட்டணத்திலிருந்து, தெற்கே திருநெல்வேலிவரை இம்மாதிரி நடந்துள்ள மோசடிகள் 65-க்கு நான் ஜாபிதாவைத் தயார் செய்து வைத்திருக்கின்றேன். ஒவ்வொரு மோசடியிலும் 100 ரூபாய் முதல் பல லட்சக்கணக்கான ரூபாய்வரை, பொது தர்மப் பணம் கையாளப்பட்டோ, துர்வினியோகம் செய்யப்பட்டோ விருக்கின்றது. இந்த மசோதாவை எதிர்ப்பவர்கள் மேற்படி புள்ளி விவரங்களைக் காட்டும் எனது ஜாபிதாவைப் படித்துப் பார்க்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுது• அவர்கள் உண்மையை உணர்வார்கள்.

தஞ்சாவூர் ஜில்லாவில் வேதாரண்ய ஈஸ்வரர் தேவஸ்தானத்துக்கு 16,000 ஏக்கர் நிலம் கொண்ட 45 கிராமங்கள் சொந்தமாக இருக்கின்றன. இருந்துங்கூட இதன் வருஷ வருமானம் இன்று ரூ. 75,000 என்றுதான் காட்டப்படுகிறது. தென் கன்னடத்திலுள்ள ஒரு மடம் புரோநோட்டுகளின்பேரிலேயே ஒரு லட்சம் ரூபாய் கடன் வாங்கியிருக்கிறது. இதற்குப் போர்டாரின் அனுமதியும் கிடையாது. வடாற்காடு ஜில்லாவில் ஒரு கோவிலின் தர்ம சொத்துக்கள் பூராவுமே ஒரு ஜாகீர்தாரின் சொந்த சொத்தாக மாறிவிட்டது. மேல் கோதாவரி ஜில்லாவில் கோவில் நிலங்கள் தனிப்பட்ட நபர்களுக்குப் பராதீனம் செய்யப்பட்டிருக்கின்றன. ரூபாய் 30,000 வரை கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் ஸ்வர்க்கபுரம் மடத்தில் சுமார் ரூ. 15,000 ரொக்கம் கையாடல் செய்யப்பட்டு 26 ஏக்கர் நிலம் பராதீனம் ஆகியிருக்கிறது. திருச்செங்கோட்டிலும் வேதாரண்யத்திலும் நகைகள் காணாமற்போன விஷயம் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. உடுப்பி பூஜாவர மடத்தின் ஏஜெண்டுகள் மடத்துக்குச் சொந்தமான நகைகளைத் தங்கள் சொந்த தேவைகளுக்காக அடகு வைத்திருக்கிறார்கள். இம்மாதிரியான அக்கிரமங்களை நம் கண்ணெதிரே பார்த்துக்கொண்டிருந்தும் சர்க்கார் கைகட்டி, வாய்புதைத்து, வாளாவிருக்க முடியுமா? என்று நான் கேட்கின்றேன். எந்த நாகரீக சர்க்காரும், பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த ஜனநாயக சர்க்காரும், மக்களின் ஆத்மீக லௌகீக வளர்ச்சியில் சிரத்தைகொண்ட எந்த நேர்மையான சர்க்காரும், இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு கண்மூடி மௌனிபோல் பராமுகமாய்ச் சும்மா இருக்க முடியாது.



### மத நடுநிலைமை வாதம்

இருந்தபோதிலும், மதசம்பந்தப்பட்ட காரியங்களை ஒழுங்குபடுத்த சர்க்காருக்கு உள்ள அதிகாரங்களைப்பற்றி

நீண்டகாலமாக விவாதம் நடந்துவந்திருக்கிறது. ஒரு காலத்தில் மதவிஷயமாக சர்க்கார் நடுநிலைமையே வகிக்க வேண்டும் என்ற கூக்குரல் கிளப்பப்பட்டது. அத்தியாவசியமான சீர்திருத்தங்களாகிய சாரதா சட்டம், தேவதாசி ஒழிப்புச்சட்டம் ஆகியவை கொண்டுவரப்பட்ட போதும் இதே கூக்குரல்களுடன்தான் எதிர்ப்பு நடைபெற்றது. ஆனால், அப்பொழுது அதிகாரத்திலிருந்தவர்கள் நமது மத, பொருளாதார, கலாச்சார முன்னேற்றத்தில் கொஞ்சமும் அக்கரையில்லாத அந்நிய நாட்டினர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இருந்தும், மத விஷயத்தில் சர்க்கார் தலையிடக்கூடாது என்ற இந்தக் கோட்பாடு அபாயகரமானது என்பதை நாம் அப்போதே உணர்ந்தோம். இந்தக் கொள்கை வெகு சமீபத்தில் தோன்றியதுதான் என்பதையும், அதற்கு முந்திய சரித்திரத்தில் அதற்கு ஆதாரமில்லை யென்பதையும் நாம் நன்கு தெரிந்துகொண்டோம். இந்தக் கொள்கை முற்போக்குக்கு முட்டுக்கட்டை யென்பதை நாம் சரியாக உணர்ந்து கொண்டோம்.

## சர்க்கார் தலையிடு எப்பொழுதுமே இருந்துவந்திருக்கிறது

மதசம்பந்தமான விஷயங்களில் சர்க்கார் தலையிட்டு ஒழுங்குபடுத்தவேண்டு மென்பதற்குச் சமஸ்கிருத ஆகமங்களிலும், தமிழ் திருமந்திரங்களிலும் பல ஆதாரங்கள் இருக்கின்றன. எனினும், அந்த மேற்கோள்களை இங்கு நான் எடுத்துக் கூறாதபடியே, பண்டைக்காலத்து நமது அரசர்கள் மதம் வேறு, அரசாங்கம் வேறு என்று பாகுபாடு செய்யவில்லையென்பதை மாத்திரம் உறுதியாகக் கூறுவேன். மதமே ஒரு லட்சியமாகவும், அதுவே அந்த லட்சியத்தை அடையும் மார்க்கமாகவும் இருந்து



வந்தது. அந்த லட்சியம் சமூக க்ஷேமமே. இதுவே நம் முன்னோர் கண்ட முடிவு.

## கோவில்களின் பண்டைப் பெருமை

நமது கோவில்கள் பிரார்த்தனை இடங்களாக மட்டுமில்லாமல் பள்ளிக்கூடங்களாகவும், அனாதரக்ஷக நிலையங்களாகவும், நீதிசபைகளாகவும், கலைக்கழகங்களாகவும், சமூகப் பொருளாதார வாழ்வுக்கு நடுநாயகமாகவும் திகழ்ந்துவந்தன. அந்தமாதிரியான உணர்ச்சியினால்தான் நமது சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் ஏராளமான சொத்துக்களைக் கோவில்களுக்கு எழுதிவைத்தனர். அதே நோக்கத்துடன்தான் மதகுருக்களை மேற்படி சொத்துக்களை மேற்பார்வையிடும்படி அவ்வரசர்கள் ஏற்பாடு செய்தார்கள். அவர்களுக்குப் பின்னர் வந்த விஜயநகர மன்னர்கள், நாயக்க அரசர்கள், மஹாராஷ்டிர மன்னர்கள் யாவரும் அதேபோலவே நடந்துவந்திருக்கிறார்கள். வேறு வழியில் அவர்கள் செல்லவில்லை. முஸ்லிம் மன்னர்கள்கூட இந்தத் தொன்றுதொட்டு வந்த கோட்பாட்டுக்குக் கௌரவம் அளித்தனர். அப்படி இல்லையெனின், இந்துக் கோவில்களுக்கும் சிருங்கேரி மடத்துக்கும் ஏன் திப்பு சுல்தான் ஏராளமான மான்யங்களும் நன்கொடைகளும் அளிக்கவேண்டும்?

## பிரிட்டிஷாரின் கொள்கை

பிறகு வந்த பிரிட்டிஷாரும் நாட்டின் சட்டதிட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் காப்பாற்றி வருவதிலேயே கவலை செலுத்தினர். அப்படிக் காப்பாற்றுவதற்கு கோயில்கள், மதஸ்தாபனங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்திலும், இதர விஷயங்களிலும் தீவிரமாகத் தலையிட வேண்டியது அதிக அத்தியாவசியமான கடமை என்பதை அவர்

கள் உணர்ந்தார்கள். 1795-ம் வருடம் முதல் 1848-ம் வருடம் வரை நடைபெற்ற கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியில் நல்லெண்ணத்தோடு இம்முறையில் பற்பல முறைகள் தலையிட்டிருக்கின்றனர். 1795-ம் வருஷம் செங்கற்பட்டு ஜாகீருக்கு லெயனல் ப்ளேஸ் என்பவர் கலெக்டராக இருந்தார். காஞ்சீபுரம் கோவிலின் நிர்வாகம் மிக ஊழலாக நடந்து வந்ததை அவர் கண்டார். உடனே அவர் தான் அன்னிய நாட்டான் என்பதையும் தனது அரசாங்கம் அன்னிய அரசாங்கம் என்பதையும் மறந்து, ஊழல்களை ஒழித்து, ஒழுங்குபடுத்த முற்பட்டார். ‘பிரஜைகளின் சுகவாழ்வை வளர்ப்பது அவசியமான காரியம். இந்நாட்டு மக்கள் நல்லொழுக்கமுடையவர்கள். மதச் சடங்குகளும், ஆசார அனுஷ்டானங்களும் சரிவர நடத்தப்பட்டு வரவேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டவர்கள். அவற்றையெல்லாம் நல்ல அதிகாரிகளின்மூலம் ஒழுங்காக நடந்துவரும்படி செய்யவேண்டும் என்று அவர்கள் நம்பினார்கள். ஆகையினால்தான், இவ்வித தலையீடும் கண்காணிப்பும் அவசியமாயிற்று’ என்று லெயனல் ப்ளேஸ் எழுதியிருக்கிறார்.

மற்றக் கலெக்டர்களும் அதைப் பின்பற்றினர். அதன்பிறகு 1817-ம் வருஷத்திய ரெகுலேஷன் நிறைவேறியது. 1795-ம் ஆண்டிலிருந்து 1849-ம் ஆண்டு வரையில் 21 ஜில்லாக்களில் வெவ்வேறிடத்திருந்த 8292-க்குக் குறையாத கோயில்கள் சர்க்கார் நேரடி நிர்வாகத்தின்கீழ் வந்தன. ஊழல்கள் புரிந்துவந்த தர்மகர்த்தாக்கள் அலுவல்களிலிருந்து நீக்கப்பட்டனர். அதுகாறும் மூடிக்கிடந்த கோவில்கள் வழிபாட்டுக்குத் திறந்து விடப்பட்டன. பூசைகளும் உற்சவங்களும் தவறாமல் நிறைவேறிவந்தன. கோவில் மானிய நிலங்கள் கருத்துடன் கண்காணிக்கப்



பட்டு அவற்றைச் சாகுபடி செய்துவந்த விவசாயிகளின் நலன்களும் ஓம்பப்பட்டு வந்தன. இதுமட்டுமல்லாமல் கிழக்கிந்தியக் கம்பெனி - தஸ்தாவேஜுக்களிலிருந்து இன்னொரு செய்தியையும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அது திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் எழுதிவைத்ததாகும். அவர் கூற்று பின்வருமாறு:—

‘ஜில்லா சர்க்கார் தற்போது கோயில்கள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விஷயத்திலும் தலையிடுவதுமல்லாமல் கட்டுப்பாடு செய்தும் வருகின்றது. உதாரணமாக, கோயில் வருமானத்தை வசூலித்தல் முதற்கொண்டு, கோயிலுக்குரிய நிலங்களை நிர்வகித்தல், அவற்றிற்கான நித்திய வாலாயச் செலவுகள், நைமித்திய உற்சவங்கள், ஜீர்ணோத்தாரணம் முதலியவற்றைச் சரிவர நிறைவேற்றுதல் வரையில் எல்லா வேலைகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர். இவ்வாறாக சர்க்காரின் ஆதிக்கம் பரிபூரணமாக இருந்தது.’

### ஆங்கிலேயக் கலெக்டர்கள் அளித்த நன்கொடை

லயனெல் ப்ளேஸ் என்னும் கலெக்டர் காஞ்சீவரத்திலுள்ள கோயிலுக்கு நகைகளைச் செய்து வழங்கினார். அந்நகைகளை மக்கள் பெருமிதத்துடன் கண்டும் காட்டியும் மகிழ்ந்தனர். மற்றும், மதுரை கலெக்டராக இருந்த பீட்டர் ரூஸ் என்பவர் ஒரு ஜதை அபரஞ்சி அங்கவடிகளை மீனாட்சி அம்மன் கோயிலுக்குத் தானங்கொடுத்தார். இதையும் மக்களெல்லோரும் ஏகமனதாய் வரவேற்றனர்.

### காலத்துக்கேற்ற மாறுதல்கள்

துரதிர்ஷ்டவசமாய் அன்றைய வெள்ளைக் கிருத்துவப் பாதிரிமார் சிலர் இத்தகைய காரியங்களின் மூலம் தங்கள் மதத்துக்கே ஆபத்து வரும் என்று கருதினர். கம்பெனி கலெக்டர்கள் மெய்க்கடவுளை மறந்து பொய்க் கடவுளரைப்

பின்பற்றுவதாகக் குற்றம் சாட்டினார்கள். இது இவ்வாறிருக்கையில், சிப்பாய்க் கலகம் தோன்றியது. அதன் விளைவாக கம்பெனி ஆட்சியும் முடிவடைந்தது. அதற்குப் பின் வந்த பிரிட்டிஷ் முடியாட்சி மக்களின் பாதுகாப்பு அளவோடு நின்று, மற்றசமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் அக்கரை காட்டத் தவறிவிட்டது. பராமரிப்பு அரசாங்கத்திற்கு வேண்டிய பண்பு நலன்கள் இல்லாதொழிந்தன. விக்டோரியா மகாராணியாரின் சரித்திரப் பிரசித்திபெற்ற மகாசாசனம் மேல் சொல்லிய கொள்கையை அதிகாரபூர்வமாக ஆமோதித்துவிட்டது.

ஆனாலும், கோயில் விஷயங்களைச் சட்ட பூர்வமாகச் சீரமைக்க வேண்டுமென்னும் மக்களின் அபிலாஷையை நிறைவேற்றுவது அவசியமாகியது. இவ்வபிலாஷையை ஓரளவு திருப்தி செய்யும் வகையில், அதாவது கோயில் விஷயங்களை நிர்வகிக்கும் பாவனையில், 1863-ம் வருஷத்திய சட்டம் ஒன்று நிறைவேறியது. அச்சட்டம் போதிய பலனளிக்கவில்லை. கோயில்களின் பெருமை மங்கியது. நிர்வாக அக்கிரமங்கள் மலிந்தன. ஊழல்கள் தலைவிரித்தாடின. அதிகாரங்கள் துர்வினியோகிக்கப்பட்டன. இவற்றின் விளைவாக மதத்தை அலட்சியம் செய்யும் அளவுக்கு மக்கள் மனப்பான்மை சென்றுவிட்டது. மற்றும், நம்முடைய இந்துமதம் செல்வாக்கையும் இழக்கலாயிற்று. அதுகாரணமாக இந்துக்களில் பெரும்பாலோர் ஆத்மீக உணர்விழந்து மதமாற்றத்துக்கும் இசையலாயினர். இவைதான் மதவிஷயங்களில் நடுநிலைமை வகித்தல் என்ற கொள்கையின் விளைவாக நாம் கண்ட பலன்கள்.

### பல பெரியோர்களின் சீர்திருத்தம்

1920-ம் ஆண்டு வரையில் இந்நிலைமை நீடித்தது. 1863-ம் வருஷத்திய சட்டம் அப்போதைய தேவைகளுக்



குப் போதுமானதாக இல்லாததால், அதைத் திருத்தியமைக்க அவ்வப்போது பலரும் முயன்றனர். அவர்களுள் கனம் ஸ்ரீ ராமய்யங்கார், ஸர். முத்துசாமி ஐயர், ஸ்ரீ சென்சல் ராவ் ஆகியோர் முறையே 1872, 1889, 1894 ஆகிய வருஷங்களில் திருத்த மசோதாக்கள் கொண்டுவந்தனர். ஆயினும், சுயாட்சி ஒருவாறு நமக்குக் கிடைக்கும் வரையில் இப்பிரச்சினையைத் திருப்திகரமாகத் தீர்க்க வழியேற்படவில்லை. இதற்குப் பின்பு தீர்க்கதரிசனம் படைத்த சர். டி. சதாசிவ ஐயர், பனகல் ராஜா ஆகிய இந்துமதப் பெரியோர்கள் அரிதில் முயன்று 1927-ம் வருஷத்தில் இந்துமத தர்மபரிபாலன சட்டத்தை நிறைவேற்றினார்கள். இந்தச் சட்டம் நிறைவேறியதும் மதவிஷயங்களில் நடுநிலைமை வகித்தல் என்ற கொள்கையும் மலையேறிவிட்டது.

### புதிய கோஷங்கள்

தப்பபிப்பிராயங்கள் எளிதில் அகல்வதில்லையல்லவா? எனவே, சுயநலக்காரர்கள் காலத்துக்கேற்ற புதுப்புது வேடங்களில் தோன்றி புத்தம்புதிய சுலோகங்களைக் கோஷிக்கின்றனர். அவற்றில் ஒன்றுதான் நமது அரசாங்கம் மதச்சார்பற்றதாகும் என்பது. நம்முடைய அரசியல் அமைப்பின் நகல் திட்டத்திலுள்ள பாகங்களையும் பிரிவுகளையும் நோக்குமாறு நம்மை வற்புறுத்துகின்றனர். இது சம்பந்தமாகச் சட்ட நிபுணர்களை நானும் கலந்து ஆலோசித்துள்ளேன். அதன்பேரிலேயே நான் ஸ்திரமான சட்ட வரம்புக்குட்பட்டு இருக்கிறேனென்று நிச்சயமாகக் கூறுகிறேன். மதச்சார்பற்ற அரசாங்கம் அல்லது லௌகீக அரசாங்கம் என்றால், பொதுஜன சொத்துக்கள் துர்வினியோகிக்கப்படுவதை எப்போதும் அனுமதித்துக் கொண்டிருக்கவேண்டும் என்பதில்லை. கடவுள் வழிபாடு,

மனச்சாட்சிவழி ஒழுகல், மதப் பிரசாரம் ஆகியவை சம்பந்தமான சுதந்திரங்களுக்கு நிலைக்களனாக நிற்பதே லௌகிக அரசாங்கமாகும். இதுமாத்திரம் நிச்சயம். அதாவது, கோயில் சொத்துக்களையும், பொதுஜன தர்ம ஸ்தாபனங்களையும் துர்விநியோகிக்கச் சுதந்தரம் வேண்டுமென்பதை லௌகிக அரசாங்கம் சகித்துக்கொண்டிருக்க முடியாது.

**நம் மாகாணத்துக்கே உரிய விஷயம்**

குறிப்பாக, தென்னிந்தியாவிலுள்ள நமக்கு இது சம்பந்தமாய் விசேஷப் பொறுப்புக்கள் உண்டு. ஏனெனில், நமது மாகாணம் தனிச்சிறப்பு வாய்ந்தது. நம் மாகாணத்தில் இருப்பதுபோல் புராதனக் கோயில்களும், மடங்களும், மத, தர்ம ஸ்தாபனங்களும் இந்தியாவில் வேறெங்கும் அவ்வளவு ஏராளமாக இல்லை.

எனவே, மதவிஷயங்களில் நடுநிலைமை வகித்தல் என்ற கொள்கையின் அடிப்படையாகவோ, அல்லது லௌகிக அரசாங்கம் என்ற தத்துவத்தின் காரணமாகவோ இந்த மசோதாவை எவரும் எதிர்க்க முடியாது. ஏனெனில், முதல் கொள்கை அதைப் பிரகடனம் செய்த விக்டோரியா மகாராணியாரைப்போலவே மறைந்தொழிந்தது. இரண்டாம் தத்துவத்துக்குரிய உண்மைப்பொருள், தற்போது சுயநலக்காரரின் வியாக்கியானத்துக்கு முற்றும் வேறானதாகும். கோயில் நிர்வாக விஷயங்களில் ஊழல்கள் இருப்பதை இதுகாறும் எவரும் மறுக்கவில்லை. அத்துடன், இப்போதிருந்துவரும் சாதனங்கள், அவற்றைச் சீர் செய்வதற்குப் போதுமானவையல்ல என்பதையும் ஒத்துக்கொள்வர். காந்திஜியைவிட பக்தி சிரேஷ்டரான இந்து யாரும் இருக்கமுடியாதல்லவா? அவரே நம்முடைய



கோயில்களைப்பற்றிக் கூறும்போது, அவை பாபச் செயல்களின் உறைவிடமாக இருக்கின்றன எனக் குறிப்பிட நேர்ந்தது.

**பக்கத்துச் சமஸ்தானங்களில் முன்னேற்றம்**

திருவாங்கூர், கொச்சி, மைசூர் ஆகிய முற்போக்கான சமஸ்தானங்கள் வெகு காலத்துக்குமுன்பே இத்தகைய சீர்திருத்தத்தைக் கொண்டுவந்துவிட்டன. அவையெல்லாம் இந்து சமஸ்தானங்களென்றும், நம் மாகாணம் அப்படிப்பட்டதல்ல என்றும் கூறுவது உண்மையைத் திரித்துக்கூறும் முயற்சியேயாகும். அரசியல் நகல் திட்டத்தின்படி எல்லாச் சமஸ்தான மாகாண சர்க்காரும் மதச் சார்பற்ற லௌகிக அரசாங்கங்களேயாகும். அந்த சமஸ்தானங்களிலுள்ள கோயில்களும் தர்ம சொத்துக்களும் நம் மாகாணத்திலிருப்பவை போன்றவைதான்.

மேலும், இந்த மசோதாவுக்குப் பொதுஜன ஆதரவு இல்லையென்று கூறுவது மிகவும் தவறானது. ஏனெனில், இந்துக்களையே மிகவும் பெரும்பான்மையான அங்கத்தினர்களாகக் கொண்டிருக்கும் கட்சியில், பெருவாரியானவர்கள் எனக்கு இது சம்பந்தமாகக் கட்டளையிட்டிருக்கின்றனர். அதையொட்டியே இந்த மசோதாவை நிறைவேற்ற நான் முனைந்து நிற்கிறேன்.

இதுவரை இந்த மசோதாவை எதிர்த்துவந்த ஒரு சில பத்திரிகைகளின் போக்கிலும் மாறுதல் ஏற்பட்டுள்ளது. இதுவரையில் குற்றம் சாட்டப்பட்டது கொள்கை சம்பந்தமாகத்தான்; இப்போது குறைகூறப்படுவது நிர்வாக முறையைப்பற்றித்தான். இந்தச் சீர்திருத்தத்தைச் செவ்விய முறையில் நிறைவேற்றுவதற்குப் போதுமான அளவு சிப்பந்திகள் கிடைப்பார்களாவென்று சில பத்திரிகைகள்

கேட்கின்றன. சிறந்த நிர்வாகிகளுக்கு வேண்டிய பயிற்சி அளிப்பதற்குக் கலாசாலை யொன்றை ஆரம்பிக்கக்கூடாதா என வேறு சில பத்திரிகைகள் வினவுகின்றன. இவை எல்லாம் உபயோககரமான ஆலோசனைகளேயாகும். பொறுக்குக் கமிட்டியினர் இவற்றைத் தக்கமுறையில் ஆராய்வார்களென்று நம்புகிறேன்.

### அரசாங்கமே ஏன் இவற்றை நிர்வகிக்கவேண்டும்?

இந்தச் சீர்திருத்தத்துக்காக சர்க்கார் இலாகா ஒன்றைத் தனியாக ஏற்படுத்துவதற்குப் பதிலாக, தர்ம சொத்துக்களின் பாதுகாப்பு ஸ்தாபனம் ஒன்று இருந்தால் போதாதா? என்று சிலர் கேட்கின்றனர். இதையும் நாம் பரீட்சை செய்து பார்த்துவிட்டோம். வேறொன்றுக்கும் போகவேண்டியதில்லை. இந்துமத பரிபாலன போர்டையே பார்ப்போம். இந்த ஸ்தாபனத்துக்கு ஓரளவுதான் அதிகாரம் உண்டு. அதனால் வழக்குகள் பெருகி, காரியங்கள் நிறைவேறுவதில் காலதாமதம் ஏற்படலாயிற்று. போதுமான அளவு அதிகாரம் இல்லாததால் யாரும் அதை மதித்து நடந்துகொள்வதில்லை. கீழ்க் கோர்ட்டுகளில் விளையாட்டுக் கருவிபோல் நடத்தப்பட்டுவருகிறது. வழக்காடுவதையே தொழிலாகக்கொண்டுள்ள ஒரு சிலர், அதை ஒரு கோர்ட்டிலிருந்து மற்றொரு கோர்ட்டுக்கு இழுத்தடிக்கலாயினர்! இவற்றிற்கெல்லாம் தர்ம சொத்துக்களின் வருமானத்திலிருந்தே செலவு செய்யப்பட்டு வந்தது. கோயில்களின் வரவுசெலவுத் திட்டங்களைத் தங்களுக்கு அனுப்புமாறு கேட்கப் போர்டுக்கு அதிகாரம் உண்டு; ஆனால், அவற்றை ஆராய்ந்து பார்க்கும் அதிகாரம் இல்லை. கணக்குகளை அனுப்புமாறு போர்டு கேட்கிறது. ஆனால், அவற்றை யாரும் அதனிடம் அனுப்புவதில்லை. அக்கிரமங்களைப் போர்டு கண்டுபிடிக்கிறது. ஆனால், அவற்றைச் சீர்திருத்தும் அதிகாரம் அதற்கில்லை. சீர்திருத்தங்கள் செய்வதுபற்றிப் போர்டு ஆலோசனை கூறுகிறது. ஆனால், அதை அமுல் நடத்த அதனால் முடியாது. சுருங்கச் சொன்னால், இப்போது அமைந்துள்ள போர்டு, முரண்பாடு நிறைந்ததாகவும், அதிகாரமற்றதாகவும், தேவையைப் பூர்த்தி செய்யாததாகவும் உள்ளது என்று கூறலாம். எனவே, அதைத் திருத்தி ஒழுங்குசெய்வதென்பது இயலாது. அடியோடு மாற்றியமைப்பது ஒன்றுதான் சிறந்த முறை. அஃதாவது, தகுந்த முறையில் சர்க்காரே அதன் வேலையை மேற்கொள்ள வேண்டும். இதுதான் இந்த மசோதாவின் நோக்கமாகும். மசோதாவிலுள்ள முக்கிய அம்சங்களெல்லாம் இதை நன்கு எடுத்துக்காட்டுகின்றன.



### ஆத்மீகத்துறையில் அதிகக் கவனம்

இப்போதுள்ள இந்துமத பரிபாலனச் சட்டம் 21 வருடங்களுக்கு மேலாக அமுல்நடந்து வந்திருக்கிறது. ஆயினும், மதஸ்தாபனங்களின் ஆத்மீகத்துறைகளில் எந்த விதமான நல்ல அபிவிருத்தியும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. உண்மையில் சொல்லப்போனால், நிலைமை முன்னிலும் மோசமாகியிருக்கிறது என்றே கூற வேண்டும். மதச் சடங்குகளைத் தக்க முறையில் செய்வதற்கும், சமய காரியங்களை ஒழுங்காக அமுல் நடத்துவதற்கும் போர்டுக்கு இப்போதுள்ள சட்டப்படி அதிகாரம் இல்லையென்று சிற்சில சமயங்களில் கோர்ட்டுகள் அபிப்பிராயப்படுகின்றன. இப்போது சட்டசபையில் கொண்டுவரப்பட்டுள்ள இந்த மசோதாவின் 15 (2) வது சரத்து இந்தக் குறையைப் போக்குகிறது. மேலும், இதுவரையில் தன் சொந்த நிர்வாகத்துக்குத் தேவையான கட்டணங்களை வசூலிப்பதிலேயே போர்டு அதிக

நேரத்தைச் செலுத்தவேண்டியிருந்தது. எனவே, மத விஷயங்களில் போதிய அளவு அக்கறை செலுத்துவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இந்த இலாகாவை சர்க்கார் நேரடியாக நிர்வகிக்கத் தொடங்கும் போது, மேற்சொன்ன முறையில் அமைந்த சில்லறைக் கடமைகளிலிருந்து அதிகாரிகள் விடுதலையடைந்து, மத விஷயங்களில் அதிகக் கவனம்காட்ட வசதி ஏற்படும்.

இப்போதுள்ள போர்டின் அமைப்பில் மற்றொரு பெரிய குறையும் உண்டு. அஃதாவது இப்போதுள்ள சட்டத்தின் பல்வேறு சரத்துக்களின்கீழ் கணக்கற்ற வழக்குகள் தொடரப்பட்டு அதன்வாயிலாக போர்டுக்கு ஏராளமான செலவு ஏற்படுகிறது. சென்னையிலமைந்துள்ள அந்தப் போர்டு நம் மாகாணத்திலுள்ள பெரும்பாலான கோர்ட்டுகளிலும் தன்னுடைய உத்தரவுகளை நிலைநிறுத்துவதற்காக வழக்காடவேண்டியிருக்கிறது. இப்போது கொண்டுவரப்பட்டுள்ள மசோதா பல விஷயங்களில் வெளியூர்க் கோர்ட்டுகளுக்கு இந்தவகையிலிருந்துவரும் அதிகாரத்தை ரத்துச்செய்துவிடுகிறது. ஆயினும், 48-ம் சரத்துப்படி, கமிஷனர் நிறைவேற்றும் உத்தரவுகளைப் பரிசீலனை செய்யும் அதிகாரம் ஹைகோர்ட்டுக்கு எப்போதும் இருந்துவரும் என்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

### பல்வேறு குறைகள் நீங்குகின்றன

மற்றும், தற்போதுள்ள ஏற்பாட்டின்படி நீதி வழங்கும் விஷயத்தில் அதிக காலதாமதம் ஏற்படுகிறது. குறையுள்ளவர்கள் தங்கள் விஷயமாகப் போர்டின் உத்திரவுகளைப் பெறுவதற்குப் பல மைல் தூரம் கடந்து சென்னைக்கு வரவேண்டியிருக்கிறது. காலதாமதத்தோடு நீதி செலுத்துவதால் அதிகப் பயன் விளையாது. நீதியை அளிக்காமல் மறுப்பதற்கும் அதைக் காலம் தாழ்த்தி வழங்குவதற்கும்



அதிக வித்தியாசம் இல்லையல்லவா? இந்தக் குறையையும் இப்போது வந்திருக்கும் மசோதா போக்கமுயல்கிறது. இது தவிர, தற்சமயம் யாத்ரிகர்களின் விடுதி, பாதுகாப்பு முதலிய வசதிகளைக் கவனிக்கச் சட்டபூர்வமாக எந்த முயற்சியுமில்லை. ஆனால், புதிய மசோதாவினுடைய 25-வது சரத்தின்மூலம், யாத்ரிகர்களின் வசதிகளுக்காக நியாயமான ஒரு தொகையைச் செலவிடத் தர்மகர்த்தாக்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மற்றும், ரூபாய், நகை முதலிய பொருள்களை ஒழுங்கான முறையில் பத்திரப்படுத்தி வைப்பதற்கு இப்போதுள்ள சட்டத்தில் சரத்தில்லை. இதனால் பல்வேறு ஸ்தாபனங்களுக்கும், பொதுவாக நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள நஷ்டம் மிகவும் அதிகம். இந்தக் குறையைப் புதிய மசோதாவின் 37-வது சரத்துத் தீர்த்துவிடுகிறது. மேலும், எழுத்தறிவேயில்லாத அர்ச்சகர்கள் பூசை செய்யும் தங்கள் உரிமையை இனிமேல் விற்கவோ அல்லது வாங்கவோ முடியாது. பரம்பரையாகச் செய்துவரும் இந்தப் பணிகளில் காலிஸ்தானம் ஏற்பட்டால் அதற்குத் திறமையும் தகுதியும் வாய்ந்த அர்ச்சகர்களை நியமிக்க 35(3)ம் சரத்து இடமளிக்கிறது. 56-வது சரத்தின்படி மத ஸ்தாபனங்களின் செலவைச் சரியான வகையில் கட்டுப்படுத்த இயலும். கோயில்களின் வருமானத்தை எந்தெந்தக் காரியங்களுக்குச் செலவிடலாம் என்பது சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட்டுவிடும். கோயில்கள், மற்ற அறநிலையங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்க்கவோ அல்லது புதுப்பிக்கவோ தக்கவாறு மசோதாவில் வழி செய்யப்பட்டுள்ளது. பொதுவாகப் பார்த்தால், லௌகீக விஷயங்களைக் கவனிக்கும் தொல்லைகளிலிருந்து மடாதிபதிகளை விடுவிக்கவே நாம் முயற்சிசெய்கிறோம் என்பது தெளிவாகும். எதிர்காலத்தில் ஆத்மீகத் துறையிலேயே

தங்கள் முழுநேரத்தையும் ஒருமுகமாக அவர்கள் பயன்படுத்தும் வசதி ஏற்படும். அப்போதுதான் மதத் தலைவர்கள் என்ற பெயருக்கேற்ப அவர்கள் செல்வாக்கும் அந்தஸ்தும் உயரும்.

## இந்துமதமே நம்முடைய சிறந்த பொக்கிஷம்

இந்த மசோதாவைக் கொண்டுவரும் நான் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அஃதாவது நம் மதத்தின் நலனொன்றே என் மனத்தில் என்றும் குடிகொண்டுள்ளது. மதமே எனக்கு ஆத்மசாந்தி அளிக்கும் மருந்து. என் வாழ்விற்குப் புத்துணர்ச்சியூட்டும் சஞ்சீவி. மதத்தை உயிரெனப்போற்றி வாழ்பவன் நான். நமது மதம் ஒரு பெரிய சமுத்திரம் போன்றது என்று சொல்லுவார்கள். அதில் வேதங்கள், உபநிஷதங்கள், ஆகமங்கள், பிரபந்தங்கள், தேவாரங்கள் முதலிய வற்றாத ஜீவநதிகள் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் பாய்ந்தோடிச் சங்கமமாகியுள்ளன. தீர்க்கதரிசிகள், தியாகசீலர்கள், ரிஷிபுங்கவர்கள், சித்தர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகிய பெரியோர் திருக்கூட்டம் வாழையடிவாழையாகத் தோன்றி நம் மதத்தைப் பாதுகாத்து வளர்த்து வந்துள்ளனர். இந்து மதத்திலிருந்து ஆதிகாலத்திலே ஜைனம், பௌத்தம் முதலியனவும், சமீப காலத்திலே ஆரியசமாஜம், பிரம்ம சமாஜம் முதலியனவும் கிளைத்தெழுந்துள்ளன. அப்படியிருந்தும் ஆதி மதமாகிய இந்துமதம் நிலைமை குன்றாமல் திகழ்ந்து, சகிப்புத்தன்மைக்கு அணிகலனாய் நின்று, சமரச நோக்கிற்கு எடுத்துக்காட்டாய்ப் பொலிந்து வருவது கண்கூடு.

நம்முடைய கோயில்கள் கலாச்சாரத்தின் பெரிய நிலைக்களன்களாகும். அவை வழிபாட்டுக்குமட்டும் உரிய இடங்களல்ல. சமுதாயத்தின் வாழ்வு முழுதும்-அஃதாவது



சமூக, அரசியல், பொருளாதார, ஒழுக்கத்துறைகள் யாவும்—கோயிலை மையமாகக்கொண்டே இயங்கியது. கோயில்கள் ஜீவகளை பெற்று அறிவுச்சுடர்வீசி நின்றபோது இந்து சமுதாயம் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. அதன் வலிமையும் ஆற்றலும் பெருக்கெடுத்தோடின. எனவே, இந்துமதக் கோயில்கள், மடங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தி, சரியான வகையில் இயங்கவைப்பதைப் பொறுத்துத்தான் நம்முடைய சமுதாய வாழ்வும், ஒழுக்க நெறியும் உருக்கொள்ள முடியும். கோயில்களைப் புனருத்தாரணம் செய்வதென்றால், நம்முடைய மக்கள் வாழ்வைச் சீர்படுத்துகிறோம் என்பது பொருள். மனிதனையும் கடவுளையும், சமூகத்தையும் சமயத்தையும், பொதுவான ஒழுக்கத்தையும் தனிப்பட்டவரின் ஒழுக்கத்தையும் ஒன்றுபடுத்தும் அரிய சாதனம் கோயிலேயாம். இவற்றையெல்லாம் தக்கவாறு இணைப்பதன்மூலம்தான் சமுதாயக் கட்டுக்கோப்பு வலிமைபெற்று நிற்கும். நம்முடைய கோயில்கள் ஆக்கப் பண்பை வளர்த்து, சிறந்த இலட்சியங்களை எங்கும் பரப்பி, சமூக கலாச்சாரத் துறைகளில் முற்போக்கான கொள்கைகளைக் கடைப்பிடித்து இயங்கவேண்டும். இல்லாவிட்டால் இப்பொழுது குமுறிக்கொண்டு வளர்ந்துவரும் நாத்திகக் கூட்டம் மேலும் ஓங்கி வளரவே நாம் துணைசெய்தவர்களாவோம். இந்த அடிப்படையான கொள்கையை மனதிற்கொண்டுதான் இம் மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. நம்முடைய மதம் நம் மூதாதையர்கள் நமக்களித்துச் சென்றுள்ள பெரும் பொக்கிஷமாகும். அந்தப் புனிதமான செல்வத்தை—பரம்பரைச் சொத்தை—அரிய கருவூலத்தை—நாம் என்றும் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அதனுடைய ஜீவ ஒளி, நந்தாவிளக்காய் என்றும் திகழ்ந்துவரவேண்டும். அவ்வாறு செய்வதற்கு

வேண்டிய அறிவையும் ஆற்றலையும் நமக்கு இறைவன் அளித்தருள்வானாகை.

## நம்முன் நிற்கும் வேலைகள்

நாம் இனிமேல் மகத்தான காரியங்களைச் சாதிக்க வேண்டியிருக்கிறது. நம்முடைய கோயில்களில் நடைபெறும் பூசைகளும் உற்சவங்களும் சாஸ்திர பூர்வமாக நடைபெறவேண்டுமானால், நம்முடைய அர்ச்சகர்கள் ஆகம, தாந்திரிக சாஸ்திரங்களில் சிறந்த பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றவர்களாக இருக்கவேண்டும். நம் நாட்டில் சிற்பிகளின் பரம்பரை வரவர க்ஷீணித்துக் கொண்டே வரக் காண்கிறோம். அவர்கள் தொழிலுக்குப் புத்துயிரளித்துப் பழம்பெருமைவாய்ந்த நம்கோயில்களின் சிற்பக்கலையை அழியாமல் காப்பதற்கான முறைகளை வகுக்கவேண்டும். நம்முடைய தர்ம ஸ்தாபனங்கள் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கல் முதலிய தர்மங்களைச் சரிவர நடத்துவதில்லை. அவையெல்லாம் தக்கவாறு நடைபெறச் செய்யவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, இப்போது ஜடப்பொருள்களின் ஆராய்ச்சியே எல்லாமாகும் என்று அதிலேயே மூழ்கிக்கிடக்கும் இந்த உலகத்தில் சமரச நோக்கம்கொண்ட ஆத்மீக உணர்ச்சியைப் பரவச் செய்யவேண்டியது மிகவும் அவசியம். இந்த வேலையைத் திட்டமிட்டு ஸ்தாபன ரீதியாக நடத்தவேண்டும்.

இந்த மசோதாவின் வாயிலாக பல பெரிய பிரச்சினைகள் தோன்றும். தற்சமயம் நமது மாகாணத்தில் உள்ள பெரிய மடங்கள் 184. பெரிய கோயில்கள் 12,232. சிறிய மடங்கள் 114. சிறிய கோயில்கள் 357. இவைமட்டுமல்லாமல் சில குறிப்பிட்ட காரியங்களுக்கென தர்மச் சொத்துக்கள் கொண்ட பெரிய ஸ்தாபனங்கள் 622-ம்



சிறிய ஸ்தாபனங்கள் 109-ம் உள்ளன. ஆக மொத்தம் 13,040 பெரிய ஸ்தாபனங்களும், 15,580 சிறிய ஸ்தாபனங்களும் இப்போது இருக்கின்றன. இவற்றிற்குச் சுமார் 8 லட்சம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலங்கள் உள்ளன. அவற்றிலிருந்து வருஷந்தோறும் சுமார் மூன்றரைக்கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. நம் நாட்டிலுள்ள சில சமஸ்தானங்களின் வருமானம்கூட இவ்வளவு இல்லையென்பது இங்கே குறிப்பிடத்தக்கது. எனவே, இவ்வளவு பெரிய பிரச்சினைகளைத் தகுந்த முறையில் தீர்ப்பதற்கு முயலும்போது, அவசியமான அதிகாரமும் பொறுப்புமுள்ள ஒரு சாதனத்தை அமைக்கவேண்டியது எவ்வளவு இன்றியமையாததென்று சொல்லத் தேவையேயில்லை. அதைத்தான் இந்த மசோதாவின் மூலம் ஏற்படுத்த முயல்கிறோம்.

## உபயோககரமான ஆலோசனைகள் கவனிக்கப்படும்

இந்த மசோதாவின் கருத்துக்களைப் பெருக்கும் வகையில் இந்தச் சபையிலேயும் வெளியேயும் உள்ள பலர் அநேக பயனுள்ள ஆலோசனைகளைக் கூறியுள்ளனர். இனிமேலும், அத்தகைய ஆலோசனைகள் பல வரலாம். இவற்றையெல்லாம் நான் வரவேற்கின்றேன். பொறுக்குக்கமிட்டியினர் ஒவ்வொரு ஆலோசனையையும் கவனத்தோடு பரிசீலனை செய்து இந்த மசோதாவின் அடிப்படை நோக்கங்களுக்கு முரண்படாத முறையில் வெளியிடப்படும் நியாயமான கோரிக்கைகளுக்கு மதிப்புத்தந்து ஆவன செய்வார்களென்று நம்புகிறேன். ஆகையால், இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்ற பிரேரேபணையை ஆதரிக்குமாறு சபையினரைக் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

---

## 8. கோயில்கள், மடங்கள், அறநிலையங்கள் செய்ய வேண்டுவதென்ன?

எனது அழைப்பிற்கிணங்கி, நமது நாட்டின் கோயில்கள், மடங்கள், அறநிலையங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பையும், வளர்ச்சியையும் பற்றி யோசிக்க உங்களுக்குரிய அலுவல்களினின்றும் சற்றே விடுபட்டு இங்கு விஜயம் செய்திருப்பது குறித்து, என் மனமார்ந்த நன்றியை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் நாடு மடங்களுக்கும் கோயில்களுக்கும் அறநிலையங்களுக்கும் பெயர்போனது. இவை தொன்றுதொட்டு நிலைபெற்றிருப்பவை. ஆன்றோரது தெய்வ எண்ணங்களினின்றும் தோன்றியவை. பத்திமை நிறைந்த பொதுமக்களாற் பெரிதும் பாதுகாக்கப்பட்டு வந்தவை. இன்று வரையில் நமது மொழிக்கும் கலைக்கும் அறத்திற்கும் தெய்வானுபவத்திற்கும் நிலைக்களனாக விளங்குகின்றவை. பழங்கால முதலே அரசர்களது உள்ளன்பு பொருந்திய ஆதரவுபெற்று வளர்ந்து வருபவை. சுருங்கச் சொல்லுமிடத்து, நமது நாகரிகமும் நல்வாழ்வும் அவற்றைச் சார்ந்திருக்கின்றன. இங்ஙனம் தெய்வ சம்பந்தத்தை அடிப்படையாகக் கொள்ளாதிருந்தால், இந்நாட்டின் நாகரிகமாவது குடிவளமாவது இது வரையில் நிலைத்திருக்காது.

நாகரிகம் முற்ற முற்ற, அஃதாவது மனிதனின் அறிவு நுட்பம் ஓங்க ஓங்க, அவ்வறிவைக்கொண்டு அவன் உலகத்தில் நிலைபேறாக உள்ள சத்திகளைக் கையாளும் முறைகளை உணர உணர, தெய்வ வழிபாடு குறைய நேரிடலாம் என்னும் ஓர் அச்சம் இக்காலத்தில் மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது.



ஆனால், மனிதன் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கும் எந்தவித சத்திகளுக்கும் ஆதார சத்தியாக ஒன்று இருப்பதையும் அவன் காண்கிறான். அதிநுட்பமான ஓர் இயந்திரத்தையும் மேலோட்டமாகப் பார்க்கும்போது, அதை மனக்கண்ணால் நிர்மாணித்த ஒருவனது அறிவே காணப்பட்டாலும், அதை இன்னும் சற்றுக்கூர்ந்து பார்த்தால், அந்த இயந்திரத்தைக் காட்டிலும், அதை நிர்மாணித்த மனிதனின் அறிவைக்காட்டிலும் அளவிடமுடியாத அளவு பெருமையும் நுண்மையும் வாய்ந்த ஒரு பெரு நிர்மாணிப்பும் ஒரு பேரறிவும் நித்தியமாக நிலைபெற்று இலங்குவதையும் காண்கிறோம்.

இந்தப் பேருண்மைகளையே நமது தெய்வப் பெரியோர்கள் மிக மிகத் தெளிவாக:—

> "அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்
> அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
> ஒன்றினுக் கொன்று நின்றெழில் பகரின்
> நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" என்றும்,

> "கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார், தங்கருத்தின்
> நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே"
> என்றும்,

> "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு" என்றும்,

போற்றியிருக்கிறார்கள்.

இந்தத் தெய்வ மறைகளால் விளக்கமாக மேலும் தெரியக்கிடப்பது ஒன்றுண்டு: படைப்பின் நுட்பமும் பெருமையும், அதற்கும்அடிப்படையாக உள்ள பேராற்றலும் பெருநுண்மையும் எக்காலத்தும் எவராலும் எவ்வாற்றாலும் அளவிட்டறியப்படாத பெரிய உண்மைகளாகவே இருக்கும் என்பதே. அணுவைப் பிரித்து ஒரு மாபெரும்

சத்தியை வெளிப்படுத்தி அதை மறுபடியும் கட்டுக்குள் அடக்கி, வேண்டும்போது வெளிப்படுத்தக் கற்றிருக்கும் நுண்புலன் வாய்ந்த மேல்நாட்டு அறிவாளிகள் போன்ற பெரிய அறிவாளிகள்தான் நமது பெரியோாகள். அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய மேற்சொன்ன தெய்வ உண்மை மக்கட்பிறப்பினருக்கு விளங்க, பல கோடி ஆண்டுகள் சென்றிருக்கவேண்டும். இது,

"பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்,
கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்,
செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்,
நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்,
புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்,
தெய்வம் என்பதோர் சித்தமுண் டாகி"

என்று சொல்லப்பட்டிருப்பதிலிருந்து ஒருவாறாக விளங்கும். தெய்வப் பேருண்மையின் அருமையினை நமது நாட்டில் மிகப் பழைய காலத்திலேயே எப்படி நமது முன்னோர்கள் கண்டு போற்றியிருக்கிறார்கள், பாருங்கள்!

இந்த மாபெரும் உண்மையினைத்தான் "கடவுள்" என்று பெயரிட்டழைத்து, அது மேலும் மேலும் மக்கள் உள்ளத்தில் நிலைத்து விளங்க "கோட்டம்" என்றும், "கோயில்" என்றும் பெயரிட்ட பல அமைப்புக்களை அவ்வக்காலத்திய சூழ்நிலைக்கேற்ப அமைத்திருக்கிறார்கள். இக்கோயில்களோ—பொறி புலன்கள் அடங்கி அமைந்த ஆன்றோர்களானாலும் சரி, உலகியலில் ஈடுபட்ட விவகாரிகளானாலும் சரி, நாட்டை ஆளும் அரசர்களானாலும் சரி, பகல் இரவு உழைத்து வயிறு வளர்க்கும் ஏழைகளானாலும் சரி, ஆண் மக்களானாலும் சரி பெண் மக்களானாலும் சரி—இவர்கள் யாவர்களாலும் போற்றப்பட்டு



உயிரேபோல் இன்றுவரையில் காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றன. இங்ஙனம் காலாந்தரங்களாகப் பாதுகாக்கப்பட்டிராவிட்டால் நாம் வாழும் வரையில் இவை நிலைத்திருத்தல் கூடுமா?

மேலும், தெய்வ நூல்கள் நம் நாட்டில் பழங்காலந் தொட்டே நூற்றுக்கணக்காக மலிந்திருக்கின்றன. இவற்றுக்குச் சமானமாக வேறெந்த நாட்டு நூல்களையும் சொல்ல மனம் துணியவில்லை. இக்காலத்தில் கணித நூல், பொருள் நூல், சத்தி நூல், உயிர் நூல் முதலிய எந்த நூலிலும் அதனதன் அடிப்படைக் கருத்துக்கள் மனிதனுடைய அறிவிற்கு எட்டாமலேதான் இருக்கின்றன. இவையே இப்படியானால் பொறிபுலன்களுக்கும் அறிவுக்குமே அப்பாற்பட்டதெனப்படும் "கடவுள்" என்ற ஒன்றை எந்நூலாராலும் எவ்வறிவாற்றல் உடையவராலும் அளவிட்டு வரையறைசெய்து காட்டுதல் இயலாதல்லவா? நமது பெரியோர்கள் பின்விட்டுப்போன பலப்பல தெய்வ நூல்கள் தாமும்,

"என்னை என்னை என்னின் அல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்துகேனே" என்றும்,

"ஊழிகளாய் உலகாய் ஒருவர்க்கும்
உணர் வரியான்" என்றும்,

"இன்ன உரு இன்ன நிறம்
என்றறிவதேல் அரிது" என்றும்,

"தன்மையாரும் அறிவாறில்லை" என்றும்,

"பிரான் உன்பெருமை பிறர் யார்
அறிவர்" என்றும்

"ஒதியாரும் அறிவாரில்லை" என்றும்,

"நூலுணர்வுணரா நுண்ணியோன்" என்றும்,

திருப்பித் திருப்பிச் சொல்லிச் சொல்லித் தர்க்கரூபமான நமது சிற்றறிவைக்கொண்டு அப்பேருண்மையை அறிய முடியாதென்றே ஓலமிடுகின்றன.

இங்ஙனம் அறிவுக்கு உட்படாது நிற்கும் பூரணப் பொருளை எப்படித்தான் நமது முன்னோர்கள் ஐயந்திரிபறக் கண்டு தங்களதாக ஆக்கிக்கொண்டார்கள் என்றால், அஃது ஓர் ஆச்சரியமான சம்பவம். நமக்கு அநுபவமான ஆனால் அதைச் சொல்லி விளங்கவைத்தல் இயலா. சொற்கள் நமது பெரியோர்களது தெய்வத்தன்மை நிறைந்த—தெய்வமே பேசுவதுபோன்ற—சொற்களைக் கொண்டுதான் அதை நாம் ஒருவாறு உணர்தல்கூடும். கடவுளைக் காணவேண்டும்; அறியவேண்டும்; உணரவேண்டும்; நுகரவேண்டும்—என்றெல்லாம் ஆசைப்பட்டவர்களது "அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவாக" அப்பெரிய பொருளே இருந்து வழிகாட்டுகிறது. அந்தப் பரம்பொருளே "கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போல, சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நிற்கிறது." மேலும் தெய்வாநுபவத்தை,

"பத்தி வலையில் படுவோன்" என்றும்,
"அன்பருக்கன்பன்" என்றும்.
"கண்ணால் யானுங் கண்டேன்" என்றும்,
"என் கண்ணும் நெஞ்சும்வாயும் இடங்கொண்டான்" என்றும்,
"தெளிந்தார்தம் ஊனை உருக்கும் உடையான்" என்றும்,
"தாயிற் பெரிய தயாவுடைய தம்பெருமான்" என்றும்,
"அன்போடுருகும் அடியார்க்கன்பர்" என்றும்,
"தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவான்" என்றும்,

உடல் குழைந்து, உள்ளம் தழைய, என்புநெக்குருக, பெருங்களிப்போடு நமது முன்னோர்கள் திருவாய்மலர்ந்



திருக்கின்றார்கள். நமது பெரியோர்களின் அருள் நூல்களினின்றும் எடுத்துக் காட்டிய இவை இங்குக் கூடியுள்ள பத்திமான்கள் மனதில் இவைபோன்ற பல்லாயிரக் கணக்கான மற்ற தெய்வத் திரு உரைகளையும் ஞாபகப் படுத்தும் என்று நம்புகிறேன். நமது நாட்டுக் கடவுட் கருத்தின் உயிர்க்குயிர் இச் செந்தமிழ்ச் சொற்களில் நிரம்பி இருக்கிறது. இவற்றைத் தம் உயிரேபோல் போற்றுபவர் ஒருவராவது இருக்கும் வரையில் "கடவுள்" என்ற கருத்து இந்நாட்டில் மறைந்து போகாது.

இங்ஙனமாகிய ஒப்புயர்வற்ற இந்தத் தெய்வக் காட்சி, இந்தத் தெய்வ உணர்வு, இந்தத் தெய்வ நுகர்ச்சி, அதில் ஆசைப் படுபவர்கள் எல்லார்க்கும் கைவரக்கூடியதொன்று என்பதே நமது ஆன்றோர் கருத்து. "யாவரும் பெறவுறும் ஈசன்" என்பது அவர்கள் சொன்னதுதான்.

கடவுள் என்பது இப்படி மக்கட் பிறவியினர் யாவரும் அநுபவிக்கக்கூடிய உண்மையாக இருந்தும், அது எங்ஙனம் ஆன்மநேய உரிமை இல்லாதவர்க்கும், மூடர்களுக்கும், தர்க்க வாதிகளுக்கும், அன்பற்ற கொடியர்களுக்கும் புலப்படுவதில்லை என்பதும் அப்பெரியோர்களே விளங்க வைத்திருக்கிறார்கள். அவர்கள்

"அன்பு செய்வார்க்கு எளியவர், அரியவர் அல்லார்க்கு" என்றும்,
"உருகி நைபவர்க் கல்லால் ஒன்றுங் கைகூடுவதன்றால்" என்றும்,
"கல்லா நெஞ்சின் நில்லான் ஈசன்" என்றும்,

சொல்லியிருப்பதைக் கவனித்துப் பார்க்கக்கடவோமாக.

வேறு சிலர் மக்கட் பிறவி எடுத்தும், தெய்வம் என்னும் சித்தம் இல்லாமல், தான் தான் என்னும் செருக்கு அதிகரித்து அழிந்து போகிறார்கள் என்பதை "ஆத்தமானார் அயலவர் கூடி, நாத்திகம் பேசி நாத்தழும் பேறி

னர்" என்று நமது பெரியோர்கள் மனக் கசப்போடு உரைத்திருக்கின்றார்கள். அப்படிப்பட்ட மக்கள் ஒரு காலத்தில் குறைவாக இருப்பார்கள். மற்றொரு காலத்தில் அதிகமாக இருப்பார்கள். அஃது உலக இயல். அந்தக் காரணத்தைக்கொண்டு தெய்வ எண்ணத்தில் பற்றுடைய நாம் உண்மையினையோ, நல் ஒழுக்கத்தையோ, ஆன்ம நேயத்தையோ கைவிட்டு விடக்கூடாது. இக்காலத்தில் நமது நாட்டில் இந்தவித மனப்பான்மை, அநுபவம் அற்ற சிறுபிள்ளைகளிடையே பொறுப்பும் அன்பும் அற்ற வழிகளினால் பரப்பப்படுவது யாவரும் வருந்தத்தக்கதோர் விஷயம்.

அந்தக் குற்றம் அங்ஙனம் பரப்பும் சிலரைமட்டும் சாராது. கடவுள் எண்ணம் உடையவர்கள் என்று கருதப் படும் நாமே நமது சோம்பலாலும், நமது அலட்சியத் தாலும், நமது புன் செயலாலும், நமது பொறுப்பற்ற தன்மையாலும், நமது மற்றக் குற்றங் குறைகளாலும் அந்தக் குற்றத்திற்கும் முதன்மையான காரணம் ஆகிறோம்.

நமது நாட்டின் கோயில்கள், மடங்கள், தர்ம நிலையங் கள்—இவையாவும் தெய்வ எண்ணத்தைப் பொதுமக்கள் உள்ளத்தில் நிலைநாட்டுவதற்காகப் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டன என்றும், அவை இன்றுகாறும் பத்திமை நிறைந்த குடிமக்களாலும், அரசர்களாலும், மற்றெல்லோராலும் தங்கள் தங்கள் உயிரைப்போல் பாது காக்கப்பட்டும் வளர்க்கப்பட்டும் வந்திருக்கின்றன என்றும் கண்டோம். தெய்வ எண்ணத்தை மனத்துள் ஐயந்திரிபற விளக்கிக்கொண்டு அதை அநுபவித்த அப் பெரியோர்கள் மற்ற மக்கள்பால் வைத்த ஆன்மநேய உரிமையினாலே நாமும் அங்ஙனம் அநுபவித்து இன்பம்



அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டு இடைவிடாது நம்மிடம் மன்றாடிக்கொண்டிருக்கிறார்கள்.

"நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்" என்றும்,

"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வுருவாய்க் கிடக்குதையோ இன்புற் றிடநாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே" என்றும்,

"சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே யபிமானித் தலைகின்ற வுலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே" என்றும்,

முரசறைவித்ததுபோல் முழங்குகிறார்கள். நாம் கேட்கக் காதின்றிச் செவிடாயிருக்கிறோம். யார் எப்படிப்போனால் நமக்கென்ன என்று இருப்பது நமது மடங்களிலும் கோயில்களிலும் அமைந்திருக்கும் தெய்வக் கருத்திற்கு முரணானது. அரிய தெய்வக் கருத்துக்களையும் உணர்ச்சி களையும் நன்கு உணர்ந்து அவற்றை நமது தினசரி வாழ்க் கையில் கடைப்பிடித்து ஒழுகக் கடமைப் பட்டுள்ளோம்.

பெரியோரது மேற்சொன்ன சொற்கள் எல்லாச் சமயங்கட்கும் எல்லா மதங்கட்கும் எல்லா மூர்த்திகட்கும் பொதுவானவை. அப்படித்தானே உண்மை யிருக்கும். ஒவ்வோர் ஆளுக்கு ஒவ்வோர் தனிப்பட்ட உண்மை இருக்க முடியுமா? இப்பெரிய உண்மையினையே அவ னவன் காலத்துக்கும் இடத்துக்கும் நிலைமைக்கும் மற்ற சூழ்நிலைக்கும் தக்கபடி நடைமுறையில் அமைத்து ஒவ் வொருவனும் போற்றுதல் செய்கிறான். எந்த மூர்த்தி யைப் பத்தியால் வழிபட்டாலும் அது எல்லாம் வல்ல அவ் இறைவனையே சேரும்.

அதனால், மூர்த்திபேதம், மதபேதம், சமயபேதம் மனிதர்களைப் பிரிவுபடுத்தவே கூடாது. நமது பழங் கோயில்கள் பலவற்றில் நெடுங்காலமாக சைவ வைணவ வழிபாடுகள் ஒருங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் நமது முன்னோர்களின் சமரசப் போக்கு நன்கு விளங்குகிறது. பேத புத்தி இடைக்காலத்தில்தான் ஏற்பட்டது என்பது வெளிப்படை. குளிர்நாட்டில் உள்ள ஓர் சகோதரன் கம்பளி போர்க்கிறான்; வெய்யில் நாட்டிலுள்ள மற்றோர் சகோதரன் நூல்துணி அணி கிறான். இதனால் இவர்கள் உடன்பிறந்தார் தன்மையை மறந்து மாற்றவர் ஆவரோ? எனவே, நமது தெய்வக் கொள்கையின் பொதுத்தன்மையைக் கைவிட்டு, இடம் பொருள் ஏவலால் ஏற்பட்ட மூர்த்திபேதம், தர்க்கபேதம் ஆகியவற்றைப் பெரிதாகக் கருதி, அடிப்படையான பொதுக்கொள்கைகளை மறந்தொழிந்து, நமக்குள் பூசல் புரிந்து, சகோதரத்தன்மையை இழந்து அழிவது அழகல்ல. இதுவரைக்கும் நடத்திய சைவ வைணவப் போர்கள், வடகலை தென்கலை விவகாரங்கள் போதும்.

"கலையுரைத்த கற்பனையே நிலையெனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக"

என்று வள்ளலார் மக்களுக்குள் வேற்றுமை கற்பித்த நூல்களையும், அவற்றைப் பின்பற்றும் பேதைமையையும் குறித்து வருந்துகிறார். ஆதலால், இப்பேத புத்தி இனி ஒருகாலும் தலையெடுக்கக்கூடாதபடி, எல்லா மக்களையும் உடன் பிறந்தாரைப்போல் பார்த்து, அன்பு செலுத்துவதையே தெய்வ நம்பிக்கையின் முதற் கொள்கையாகக் கொண்டு, தினசரி வாழ்க்கையில் நடந்து, நாட்டில் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் வளர்த்தல் வேண்டும்.



இந்தப் பெரிய தெய்வக் கருத்தையே இந்நாளைய சோஷலிஸம் தெய்வத்தைச் சம்பந்தப்படுத்தாது ஒரு வகையில் உரைக்கிறது. நமது பெரியோர்களது தெய்வ முறை, ஆன்மநேய உரிமையை விவரித்து அமைதியான வழிகளில் மக்களிடையே மனமாற்றம் அடைவிப்பது. இந்நாளைய "சோஷலிஸம்" உடல்வன்மை, அறிவுவன்மை ஆகியவற்றைக்கொண்டு வலுகட்டாயத்தில் மாற்றம் ஏற் படுத்த முயல்வது. இரண்டுக்குமிருக்கும் வேறுபாட்டைக் கண்டு, இந்தச் "சோஷலிஸம்" என்பது பரவி, நாட்டில் சச்சரவு வருவதற்குள், மேலான நமது பெரியோர்களது தெய்வமுறையைக் கடைப்பிடித்து, நமது நாட்டு மக்கட் குள் "ஒரு குலத்துக்கு ஒரு நீதியாக" நேர்ந்திருக்கும் சாதி சமய வேற்றுமையை அறவே களைந்து, எல்லாருக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், வழிபடுவதற்குக் கோயிலும், கல்வி கற்றற்குக் கூடங்களும், நோய் தீர்த்துக்கொள்ள மருத்துவ நிலையங்களும், மடம் கோவில் ஆகியவற்றைச் சார்ந்த நாம், முதற்கண் அமைக்க முன்வருவோமாக.

இதைச்சார்ந்த இன்னொரு கருத்தை இங்குக் கூற விரும்புகிறேன். அது கோயில்களிலும் மடங்களிலும் மூர்த்திகளின் வழிபாட்டிற்கு என்று சடங்கு முறையில் செய்யப்படுவனவற்றைக் குறித்ததாகும். பொது மக்கட் குக் கல்வி ஓங்க ஓங்க, பகுத்தறிவு வளர வளர, உழைப்பு அதிகரிக்க அதிகரிக்க, அவர்கள் தம் உணவும் ஆடையும் உறைவிடமும் மற்ற இன்றியமையாத வசதிகளும் குறையக் குறைய, வழிபாட்டு இடங்களில் சடங்கு முறையில் உபயோகிக்கப்படும் உணவுப்பொருள் முதலியவற்றை அளவிற் சிறிது குறைத்து மக்கள் வறுமையை நீக்க ஏன் பயன்படுத்தக்கூடாது என்கிற கேள்வி உண்டாகிறது.

குறியீடுகளாக நிர்மாணித்துப் பாவனையின்பாற்படும் இவ் வழிபாடு நாட்டின் பொதுமக்களது உழைப்பைக் கவர்ந்து அவர்களின் வயிற்றைக் காயப்போடும் நிலையில் ஏன் நடக்க வேண்டுமென்றும் கருதப்படுகிறது. இந்த வகைக் கருத்துத் தொகுதிகளை முன்னே சுட்டியதுபோல் "சோஷலிஸம்" என்றோ அல்லது "கம்யூனிஸம்" என்றோ சொல்லு கிறார்கள்.

இந்த வகையான கருத்துக்களைக்கூட நமது முன் னோர்களே மிகமிகப் பொருத்தமாகப் பேரிரக்கத்தோடு விளங்க வைத்திருக்கிறார்கள்.

"படமாடக் கோயில் பகவற்கு ஒன்றீயில்,
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா,
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றீயில்,
படமாடக் கோயில் பகவர்க்கு அது ஆமே"

என்கிறார் ஒரு பெரியார். இதை ஒருக்கால் அடியார் எனப்படும் பரதேசிகள் சாதுக்கள் என்பவர்கள் பசியை மட்டும் குறித்து, அவர்கள் பசியை மாற்றுதற்கு இயற்றிய தாகக்கொள்ள நேரிடலாம். ஆனால், இந்த ஐயுறவுக்கு எள்ளளவும் இடமில்லாமல், ஏழை மக்கள் அனைவரின் பசி முதலிய துன்பங்களை நீக்குதல் வேண்டும் என்றும், அதுவே கோயில் வழிபாட்டைக் காட்டிலும் மேலான அறிவு நிறைந்த—அன்பு நிறைந்த—கடவுள் வழிபாடு என்றும், அங்ஙனம் பசி நீக்குபவர்களே மேலான கோயில்க ளாகவும் மடங்களாகவும் விளங்குகிறார்கள் என்றும் நமது பெரியோர்கள் மன்றாடி இருப்பதைப் பாருங்கள்.

"பசியை நிவர்த்தி செய்துகொள்ளத்தக்க புவன போக சுதந்தரங்களைப் பெறுதற்கரிய அறிவிருந்தும் பூர்வ கர்மத்தாலும் அஜாக்கிரதையாலும் அச் சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளாமல், பசியினால் வருந்துகின்ற சீவர்



களுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசி வருத்தத்தை நீக்கித் திருப்தியின்பத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாகிய சீவகாருண்ய மென்கின்ற திறவுகோலைக் கொண்டுதான் மோட்சமாகிய மேல்வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழவேண்டும். ஆகலின், சீவ காருண்யமென்கிற மோட்சவீட்டுத் திறவுகோலைக் கால முள்ளபோதே சம்பாதித்துக்கொண்ட சமுசாரிகள், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற சாதன சகாயங் களை வேண்டாமல், எக்காலத்தும் அடையாத இன்ப வீட்டை அடைந்து அவ்வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள்....... இதனால், அறிவு விளங்கிய சீவர்களுக்கெல்லாம் சீவ காருண்யமே கடவுள் வழிபாடென்று அறியப்படும்" என்றும்,

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம் எனநான் தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ"

என்றும் மற்றொரு பெரியார் மிக மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

ஆதலால், தெய்வ நம்பிக்கை மறையாது இருப்பதற்கும் அதை வளர்த்தற்குமாக அமைக்கப்பெற்ற ஆலயங்களையும் மடங்களையும் நிர்வகிப்போர் மேற்சொன்ன பெரியோரது உபதேசங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவது கடனாகும். இந்த உபதேசங்கள் இக்காலத்திய 'சோஷலிஸம்' 'கம்யூ

னிஸம்' என்பனவற்றால் உண்டான புதுக்கொள்கையல்ல. இந்த மடங்கள் கோயில்கள் தோன்றிய நாள்தொட்டே இருந்துவரும் தமிழ்நாட்டுப் பழந்தெய்வக் கொள்கையென்றும் அறியக்கிடக்கிறது. பழைய கோயில்கள் பலவற்றில் பொறிக்கப்பட்ட தருமங்களில் பலப்பல அகதிகளுக்கு ஆகாரம் இடுவதற்கும், அவர்கள் நோய் தீர்ப்பதற்கும் ஏற்பட்டிருக்கின்றன. கல்வித் தருமத்தைக் குறித்தவையும் பல. இந்தப்படி மக்களின் பொது நன்மைக்காக ஏற்பட்டிருக்கும் கோயில் மடம் முதலியன மேற்சொன்ன மேலான தெய்வ வழிபாட்டிற்காக, அதாவது, பொது மக்களது பசி, பிணி, அறியாமை நீங்குவதற்காக, மேலும் மேலும் பாடுபட்டு வருதல் தவிர்க்கமுடியாத கடமையாகும்.

பத்திமை மேலீட்டால் நமது பெரியோர்கள் திருவாய் மலர்ந்தருளிய பாடல்களில் அவரவர்கள் வழிபடு மூர்த்தி பேதம் தவிர்த்து மற்றைய எல்லாம் பொதுவே. மூர்த்தி பேதங்கள், சடங்குபேதங்கள், தர்க்கபேதங்கள் முதலிய பேதங்களை எல்லாம் தனிப்பட்டவர்களுக்கு விட்டுவிட்டு, கடவுட் கொள்கையின் முதன்மையான பொதுவகையை மட்டும் நாம் உறுதிப்படுத்திப் பேசி நடந்துவந்தால், நமது நாட்டின் கல்வி நிலையும் நமக்குள் ஆன்மநேய உரிமை என்கிற சகோதரப்பான்மையும், ஜீவகாருண்யமும் விருத்தியாகி, தெய்வலோகமே இஃது என்று சொல்லும்படியாய் இந்நாடு ஆய்விடக்கூடும். இதுபற்றி நமது பெரியோர்கள் சொல்லியிருக்கும் பேரழகு நிறைந்த சொற்களைக் கேளுங்கள்.

"ஆறு சமயங்கட்கு ஒரு தலைவன்" என்றும்,

"உலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்" என்றும்,



"இருமுச் சமயத்து ஒருபேய்த் தேரினை
நீர் நசை தரவரு நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடு
அவப்பெருந் தாப நீங்காது அசைந்தன" என்றும்,

"சமயவாதிகள் தத்தம் மதங்களில் அமைவதாக
அரற்றி மலைந்தனர்" என்றும்,

சொல்லி, சமய மதபேதங்களைக் கைநழுவ விட்டிருப்பதைக் கூர்ந்து உணருங்கள்.

இங்ஙனம் பெருமைவாய்ந்த நமது முன்னோர்களது உபதேசத்தைக் கட்டிக்காப்பாற்றுவதற்காக ஏற்பட்டிருக்கும் கோயில்கள், மடங்கள், தர்மங்கள் இவற்றைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். தமிழகத்தில் பெரிய மடங்கள் நூற்றுக்குக் குறைவாகவே இருக்கின்றன. அவற்றின் வருஷ வருமானம் ஏறக்குறைய 14 இலட்சம் ரூபாய். தமிழ் ஜில்லாக்களைப் பற்றியமட்டில் தஞ்சாவூரிலிருக்கும் 15 பெரிய மடங்களுக்கு வருஷத்திற்கு ஏறக்குறைய 7½ இலட்சம் ரூபாய் வருமானம். திருநெல்வேலியிலுள்ள 9 மடங்களுக்கு வருஷவருமானம் சுமார் 2 இலட்சம். திருச்சிராப்பள்ளியிலிருக்கும் 8 பெரிய மடங்களுக்கு வருமானம் ஏறக்குறைய 1½ இலட்சம். மற்ற தமிழ் ஜில்லாக்களில் உள்ள பெரிய மடங்களின் வருமானம் ஏறக்குறைய 3 இலட்சம். தமிழ்நாட்டில் உள்ள பெரிய கோயில்கள் ஏறக்குறைய 5000 ஆகின்றன. இவற்றின் மொத்த வருஷ வரும்படி சுமார் 1½ கோடி ரூபாய் ஆகிறது. இக் கோயில்களைச்சார்ந்த பெரிய கட்டளைகள் சுமார் 500 இருக்கின்றன. அவற்றின் வருஷ வருமானம் ஏறக்குறைய 8½ இலட்சம் ஆகிறது. ஆக இந்த 5600 தெய்வ நிலையங்களுக்கும் ஓர் ஆண்டின் வருமானம் சுமார் 1¾ கோடி ரூபாய் ஆகிறது.

இவ்வளவு மடங்களையும், கோயில்களையும், கட்டளைகளையும் பரிபாலிக்கும் புண்ணியம் வாய்ந்தவர்கள் இவற்றைத் தெய்வ நோக்கத்தோடும், விரிந்த மனத்தோடும், ஆன்ம நேயத்தோடும், ஜீவகாருண்யத்தோடும், பாரபட்சமில்லாமலும், வஞ்சனை, பொய், களவு, அலட்சியம் முதலியவற்றால் நஷ்டம் ஏற்படாமலும் பரிபாலித்து வந்தால், இந்தத் தமிழ்நாட்டில் உலோகாயதக்கொள்கை பரவ இடங்கொடுக்குமா? இத்தனைபேரும் தக்கபடி தங்கள் தங்கள் கடமையைச் செய்யாததால்தானே இப்போது 'தெய்வ மறுப்பு' என்னும் கொடிய காலம் இந்நாட்டிற்கு வந்திருக்கிறது. "கடவுள் இல்லை" என்று உபாத்தியாயர்களே பிள்ளைகளுக்குக் கல்வி நிலையங்களில் போதிப்பதாகக்கூட, சர்க்காருக்குத் தகவல் எட்டியிருக்கிறது. இதற்கெல்லாம் மருந்து நமது படிப்புவகை மாத்திரமின்றி, நமது கோயில்களையும் மடங்களையும் பரிபாலிக்கும் வகையிலும் இருக்கிறது. நமது கடவுட் கொள்கையின் உயர்ந்த பொதுக் கருத்துகள் உலகம் எப்பாங்கரும் ஏற்கக்கூடியது. அப்படியானால், அவற்றைத் தெரிவித்த முன்னோர்களின் வழிவழி வந்த இந்நாளைய தமிழ்நாட்டு மக்களுக்கு அவற்றை ஏற்பதில் என்ன கஷ்டம் இருக்க முடியும்? பொதுக் கொள்கைகளை விரிவாகவும் அழுத்தமாகவும் சொல்லிப் பரப்பும் காலம் இது. மூர்த்தி பேதங்களையும், மூர்த்திகளின் ஏற்றத்தாழ்வை விவரிக்கும் சொற்கோவைகளையும், தர்க்கப்பாகுபாடான மதக்கொள்கைகளையும், பேதமான சடங்குகளின் வேறுபாடுகளையும் சிறப்பித்தலாலேதான் இங்ஙனம் தெய்வமறுப்பு நிகழ்கிறது. சடங்குகட்கும் தர்க்க வாதங்கட்கும் வேறு வேறு குலத்திற்கு வேறு வேறு நீதி என்ற கொள்கைகட்கும் இக்காலம் இடந்தராது. ஒருகாலமும் இடந்தரக்கூடாது.



"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே"

என்ற நமது பெரியோரது பெருவாக்கியம் நடைமுறையில் வரவேண்டிய நல்லகாலம் வந்துவிட்டது. எஞ்ஞான்றும் நிலைத்த தர்மமும் இதுவே. ஆகையால், இந்தத் தெய்வப் பொதுமுறையில் நீங்கள் எல்லோரும் கவனம் செலுத்தி நாட்டில் தெய்வ மறுப்பும் உலோகாயதமும் பரவுதற்கு இடங்கொடாமல் ஒவ்வொரு நாளும் ஜாக்கிரதையாக இருந்து வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று ஜமீன்தார்களுடைய நிலங்களைக் குறித்துப் புதியதோர் சட்டம் நடைமுறையில் வரவிருக்கிறது. தமிழ்நாட்டு மடங்கள் பலவற்றிற்கு ஜமீன் வகை நிலங்கள் இருக்கிறதாகத் தெரிகிறது. தகவல் கிடைத்த வரையில் 5 மடங்களுக்கு இனும் ஜமீன்வகை நிலங்கள் சுமார் 30 ஆயிரம் ஏக்கரும் 12 கிராமங்களும் இருக்கின்றன. பயிரிடும் குடிகளின் வறுமையையும் தாழ்வையும் அகற்றவே இச்சட்ட மாறுதல் செய்யப்போவதால், பொதுமக்கள் நன்மைக்காக ஏற்பட்டிருக்கும் மடங்களும் குடிகளும் ஒன்று என்ற மனப்பான்மை வரும்படியாக மடங்கள் நடந்துகொள்ளவேண்டும். இங்ஙனம் விரைவில் தொழிற்பட்டால்தான் மடங்களுக்கெனச் சிற்சில வகைகளிலாவது சலுகைகள் காட்ட இடம் ஏற்படும். சிறிது நாட்களுக்குமுன் போர்டாரால் கூட்டிய கூட்டத்துக்கு வந்திருந்த மடாதிபதிகளின் அதிகாரம் பெற்றவர்கள் அத்தனை பெயரும், மடங்களுக்கும் கோயில்களுக்கும் பொதுமக்களுக்கும் இப்போது இன்றியமையாது வேண்டியிருக்கும் பொது நன்மையான காரியங்களை மனமாரச்

செய்வதாக வாக்களித்திருப்பது தெரிந்து சந்தோஷப் படுகிறேன்.

மடங்கள் கோயில்கள் இன்னின்னவை செய்ய வேண்டும் என்பதை இங்கு சொல்ல விரும்புகிறேன். (1) திக்கற்ற குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும், ஏழைகளுக்கும், உண்ண உணவு உதவுவது. (2) ஆதரவற்ற நோயாளிகட்கு மருந்து அளிப்பது. (3) கடவுட் கொள்கையின் சாதி சமய பேதமற்ற பொதுக்கருத்துக் களைநாட்டில் பரப்ப ஏற்பாடு செய்வது. (4) பிறப்புயர்வு பாராட்டாது ஆன்மநேய உரிமை பாராட்டி வேறுபாடின்றி நடந்துகொள்வது. (5) இரவு பகல் உழைக்கும் ஏழைமக்களின் அறியாமையை நீக்குவதற்குப் பள்ளிக் கூடங்களை நடத்துவது. (6) அர்ச்சகரும் பட்டரும் வேதாகம வழிபாட்டு முறைகளைச் சொல்பொருள் குற்றமில்லாமல் சொல்லுதல் வேண்டி அவர்களுக்கு வேதாகமக் கல்வியை முறையாகக் கற்பிப்பது. (7) ஓதுவார்கள் பிரபந்தக்காரர்கள் முதலியோரைச் சரியான முறையில் கற்க ஏற்பாடு செய்வது. (8) நமது பெரியோர்கள் பின் விட்டுப்போன தெய்வப் பெருநூல்கள் பலப்பல நமது மடங்கள் கோவில்கள் சிலவற்றில் இன்னும் வெளிப் படுத்தாது இருக்கின்றன என்று தெரிகிறது. இவற்றை இதுகாறும் வெளியாக்காதது பெரிய குற்றம். இனியாவது தாமதமின்றி இவற்றை வெளிப்படுத்தி பத்திமான்களது ஆதரவை மடங்களும் கோயில்களும் சம்பாதித்துக் கொள்ளுதல். (9) பொதுமக்களுக்கு நூல் நிலையங்களும் வாசக நிலையங்களும் நிறுவுதல். (10) கூடியவரையில் தெய்வ நம்பிக்கை உடையவர்கள், நல்லொழுக்க முடையவர்கள், சாதி சமயச் செருக்கற்றவர்கள், ஜீவகாருண்ய முடையவர்கள் ஆகியவர்களை



மட்டில் மடம் கோயில்களில் பணிக்கு அமர்த்தல் இவற்றை ஒட்டி இன்னொன்றும் சிறப்பாகச் சொல்ல விரும்புகிறேன்: நம் தமிழ்நாட்டுப் பெரியோர்கள் அருளிச்செய்த திருவாய் மொழிகள், தேவார திருவாசகங்கள், திருப்புகழ்கள், திருப்பாடல்கள், திரு அருட்பாக்கள் முதலியவற்றுக்குச் சமானமாக இந்நாட்டுப் பொதுமக்கட்குப் பத்திமை உண்டாக்கும் வகையில் வேறெதையும் சேர்த்துச் சொல்ல முடியாது. இவற்றைச் சொற்குற்றம், பொருட்குற்றம், இசைக்குற்றங்களாகிய ஸ்வர லயக் குற்றங்கள் இல்லாமல், தெளிவாகவும் உணர்ச்சியோடும் பத்திமையோடும் பாடவைப்பது கோயில் நிர்வாகத்தின் தனிக் கடமை ஆகும். இங்ஙனம் பாடினால், ஜாதி சமயச் செருக்கும் அவற்றிற்கு நிகராகத் தோன்றியிருக்கும் உலோகாயத மனப்பான்மையும் இந்த நாட்டைவிட்டுக் கூடிய சீக்கிரம்—ஓராண்டெல்லைக்குள்ளேயே—பறந்து போகும். இதைச் செய்வது உங்களது முதற்பணி. இவ்வாறாக நமது நாட்டின் அமைதியும், மொழி வளர்ச்சியும், கலை வளர்ச்சியும், அறங்கள் நிலைபெறுதலும், பத்திமை பரவுதலும் பெரும்பாலும் மடங்கள் கோயில்கள் இவற்றின் மேற்போக்கைப் பொறுத்தே இருக்கிறது என்று மீண்டும் வற்புறுத்திச்சொல்கிறேன்.

இப்போது 25 மடங்களும் கோயில்களும் கட்டளைகளுமே மேற்சொன்ன இந்த வகையான நற்காரியங்கள் சிலவற்றில் ஈடுபட்டிருக்கின்றன. இவை நடத்துவன: தேவார பிரபந்த பாடசாலைகள் 20, ஆகமவேத பாடசாலைகள் 15, தமிழ்க் கல்லூரிகள் 3, உயர்தரக் கலாசாலை 1, வைத்தியசாலை 1. ஆனால், அவை நமது கோடிக்கணக்கான ஜனத்தொகை வெள்ளத்தில் துளிகள்போல் சிறுத்திருக்கின்றன. அநேகமாக ஒவ்வொரு பெரிய மடமும்

பெரிய கோயிலும் இந்தச் சற்காரியங்களில் சிலவற்றைத் தனித்தனியாகவும், சிலவற்றை ஒன்றுசேர்த்தும் உடனே காலதாமதமில்லாமல் செய்யவேண்டியது இன்றியமை யாதது. இன்று நான் சொன்ன விஷயங்கள் உங்கட்கு முற்றிலும் புதிதாக இரா. ஆனாலும், இவற்றைச் சொல்லி, பெரும் பொறுப்பாளர்களான உங்களது கருத்துக்களை யும், சொற்களையும், செயல்களையும் இந்தக் கால்வாயில் திருப்பி, விரைவில்—அதாவது மாதக் கணக்கில்—பயன் தரும்படி செய்வதே எனது நோக்கம். இந்த எனது நோக்கத்தை மடாதிபதிகளும், தர்மகர்த்தர்களும், கல்வி மான்களும், பத்திமான்களும், செல்வர்களும், உழைப் பாளிகளும், ஊர்த்தலைவர்களும், நாட்டுத்தலைவர்களும், உத்தியோகஸ்தர்களும், செல்வாக்கு உள்ளவர்களும் கூடி யிருக்கும் இப்பேரவை விரைவில் நிறைவேற்றி வைக்கு மென எதிர்பார்க்கிறேன். இங்ஙனம் நடத்தவேண்டிய பொறுப்பு அரசனைச் சார்ந்தது என்று நமது முன் னோர்கள் சட்டம் வகுத்திருக்கிறார்கள்.

"நாடோறு மன்னவன் நாட்டில் தவநெறி
நாடோறு நாடி அவன்நெறி நாடானேல்
நாடோறு நாடு கேடுமுடன் நண்ணுமால்
நாடோறும் செல்வம் நரபதி குன்றுமே"

என்பதுதான் அச்சட்டம். இந்நாளில் இயங்குவது குடி யரசாகையால் இங்ஙனம் வகுத்த பொறுப்பு பெருங்குடி மக்களாகிய உங்களையும் உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரி சபையையுமே சாரும்.

தமிழ்நாடு செழித்தோங்க வேண்டுமானால், தமிழ் நாட்டில் மெய்உழைப்பாளிகள் சச்சரவிடாமல் இருக்க வேண்டுமானால், தமிழ்நாட்டில் சமய பேதங்கடந்த தெய்வ உணர்ச்சி வளரவேண்டுமானால், தமிழ்நாட்டில் ஒரு குலத்



துக்கு ஒரு நீதி என்பது ஒழிய வேண்டுமானால், தமிழ் நாட்டில் மொழிவளம் கலைவளம் பெருக வேண்டுமானால், தமிழ்நாட்டில் எந்த ஏழைக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், படிக்கப் பள்ளிக்கூடமும், நோய் தீர்த்துக்கொள்ள மருத்துவ நிலையமும் இருக்க வேண்டுமானால், தமிழ்நாட்டில் "கடவுள் மறுப்பு" ஒழிய வேண்டுமானால், தமிழ்நாட்டில் எல்லா மக்கட்கும் உடன் பிறந்தார் உணர்ச்சி நிலைபெற வேண்டுமானால், தமிழ் நாட்டில் முன் காலம்போல் பத்திமான்கள் உதிக்கவேண்டு மானால், இவை எல்லாவற்றிற்கும் நிலைக்களனாக உள்ள நமது மடங்களும் கோயில்களும் இப்போதிருப்பதைக் காட்டிலும் நூறு மடங்கு விளக்கமுறல்வேண்டும். அவை பொதுமக்களது கஷ்ட நஷ்டங்களைத் தமதாகக்கொண்டு அவற்றைத் தீர்க்க முன்வரல் வேண்டும். ஒவ்வொரு கோயிலும் ஒவ்வொரு மடமும் தெய்வ விளக்கமுற்று, அஃதாவது, பொதுமக்களது நல்லறிவிற்கும் அன்பிற்கும் உரிமையாகி நடைபெறுதல்வேண்டும். இதை இப்போதே செய்விக்க வேண்டுமென்பது எனது பேரவா. இந்த நல் நோக்கத்திற்கு நீங்கள் எல்லோரும் உங்களது மன மார்ந்த ஆதரவை விரைவில் கொடுத்து உதவுவீர்களென எதிர்பார்க்கிறேன்.

அங்ஙனம் நாம் எல்லோரும்-அரசும் குடிகளும்-ஒன்று சேர்ந்து, மடங்களையும் கோயில்களையும் சரியான முறை யில் பரிபாலிக்காவிடில், இன்னின்ன கொடுமைகள் நாட்டில் நேரிடும் என்பதையும் நமது பெரியோர்கள் எடுத்துக்காட்டி நம்மை எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

"முன்னவனார் கோவில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடும் காசினிக்கு
என்னருள் நந்தி எடுத்துரைத்தானே."

என்று சொல்லி, பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே அவர்கள் நம்மை அச்சுறுத்தி இருக்கிறார்கள்.

நீங்கள் எல்லோரும் இதுவரையில் பொறுமையாக இருந்து நான் சொன்னவற்றைக் கேட்டதற்காக உங்களுக்கு மனமார வணக்கம் செய்கிறேன். நமது நாடு வாழ்க! உலகத்தில் துன்பம் தொலைக! இன்பம் நிறைக! மக்கட் பிறவியில் சமத்துவமும் அமைதியும் உடன் பிறந்தார் அன்பும் ஆதரவும் நிலைபெறுமாக! தெய்வத் திருவருள் வாழ்க!

---

1938-ல் இராஜபாளையத்தில் நடந்த
நாற்பதாவது தமிழ்மாகாண

## 9. அரசியல் மாநாட்டின் தலைமையுரை.

பாண்டிநாட்டிலே இப்புராதன நகரத்திலே அன்பும், அறிவும், ஆற்றலும் உள்ள இவ்வறவோர் குழாத்தில் கடல் மடைதிறந்த வெள்ளம்போல் பேசவல்ல நாவலர்களும், தியாகிகளும், அநேகர் இருந்தும் இச் சிறியேனைத் தலைமை வகிக்கும்படி கட்டளையிட்டதற்காக மாகாணத்திலுள்ள காங்கிரஸ் சபைகளுக்கும், நண்பர்களுக்கும், வரவேற்புக் கழகத்தாருக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

"அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

அன்பர் பணியே ஆருயிர்ப்பணி; ஆருயிர்ப்பணியே தேசப் பணி ; தேசப்பணியே தெய்வப்பணி.

ஒரு நாட்டின் நாகரீகமும் கலைவளர்ச்சியும் மேன்மையுறவேண்டுமானால் அந்நாட்டில் நிறுவப்பட்டிருக்கும் வர்த்தக சங்கங்கள், கல்விக்கழகங்கள், சரித்திர விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்கள்—யாவும் மனிதனுடைய முன்னேற்றத்திற்கு உதவியாக நிற்கக்கூடியவைகளாய் இருக்க வேண்டும். ஒரு நாட்டின் பெருமைக்கு அறிவு வளர்ச்சி தான் அடிப்படை. அறிவு வளர்ச்சிக்குச் செல்வப்பெருக்கு வேண்டும். செல்வப்பெருக்கிற்கு விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலியவை வேண்டும். அவையெல்லாம் முன்னேறவேண்டுமானால் பிரஜா சுதந்திரம் வேண்டும். பிரஜா சுதந்திரம் வேண்டுமானால் மக்களுக்குள் கூட்டுறவு வேண்டும். கூட்டுறவிற்கு நல்லுணர்ச்சியும், தேசாபிமானமும், சகோதரப் பான்மையும் வேண்டும்.

சுருங்கச் சொல்லுங்கால், தேசநலத்திற்குரிய எல்லாக் காரியங்களும் செவ்வனே நடைபெறவேண்டுமானால் சுயராஜ்யம் வேண்டும். ஆனால், சுயராஜ்யமோ நாம் செய்யும் தேசப்பணியைப் பொறுத்திருக்கிறது. தேசப்பணியாற்றாத வரையில் நாட்டுமக்களுக்குச் சுகமும் இல்லை; சுதந்திரமும் இல்லை. நம்தேசமே நம் தாயகம் என்பதை உணர்ந்து, தேசத்தினிடத்தே இடையறா அன்பு பூண்டு ஒருவரையொருவர் நேசித்து, ஒரே குடும்பத்தாரைப்போல வாழ்ந்துவரவே கடவுள் நம்மை ஒரு தேசத்தினராய்ப் பிறப்பித்திருக்கிறார்; பிறப்பித்து, தனக்கும், தேசத்திற்கும் உலகிற்கும் தொண்டுசெய்யச் சந்தர்ப்பம் அளித்திருக்கிறார் என்பதை நம்மில் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

### பண்டைக்காலத்தில் நமது தேசத்தின் நிலை

பல்லாயிர ஆண்டுகளாக நம் நாடு நாகரிகத்திலும், கலைவளர்ச்சியிலும், சரித்திர விஞ்ஞான ஆராய்ச்சியிலும், லௌகிக பாரமார்த்திக வாழ்விலும் மேன்மையுற்று எப்படி உயர்ந்தநிலையை அடைந்திருந்ததென்பதைச் சற்றுச் சிந்திப்போம்.

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்."

என்ற வள்ளுவரின் பொய்யாமொழிக்கிணங்கப் பிறவிப் பெருங்கடல் கடக்கும்பொருட்டுத் தேவைகளைக் குறைத்துக்கொண்டு, ஐம்புலன்களை அடக்கி, இயற்கை வனப்புவாய்ந்த மலைகளிலும், மலைச்சாரல்களிலும், வனங்களிலும், நதிதீரங்களிலும், பர்ணகசாலைகள் ஏற்படுத்திக்கொண்டு தபோதனர்களாயும், வைராக்கிய சீலர்களாயும், கடவுள் தன்மையை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அறிந்து, அன்பின்



பெருக்கால் உலகம் உய்யவேண்டி, ஞானக்களஞ்சியமாகிய உபநிஷத்துக்களைக் குருகுலங்களில் சிஷ்யர்களுக்குப் பயிற்சி யளிப்பித்து, பெருவாழ்வு வாழ்ந்த வசிஷ்ட, விஸ்வாமித்திர, பிருகு, பாரத்வாச, யாக்ஞவல்கியாதி மகரிஷிகளென்ன? தன்னுயிரேபோல் மன்னுயிரைப் பாவித்து தெய்வீக அரசாட்சியை ஸ்தாபித்து நடத்திய மனு, மாந்தாதா, சனகர், சிபி, இராமர், தருமர், அசோகர், மனுநீதிகண்டசோழன், அக்பர் முதலான ராஜரிஷிகளென்ன? மகாகாவியங்களான இராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசங்கள் மூலமாக உலகை உய்வித்த வால்மீகி, கம்பர், வில்லி, இளங்கோவடிகள் முதலிய கவிஞர்களென்ன?

சிற்ப ஓவிய சாஸ்திரங்களில் தலைசிறந்து விளங்கிய மயன், விஸ்வகர்மா முதலியவர்களென்ன? சாகுந்தலம், குமாரசம்பவம், மேக சந்தேசம் முதலிய நாடகங்களை யளித்த காளிதாசாதி நாடகாசிரியர்களென்ன? வேத சாத்திரங்களிலே நியாய, வைசேஷிக, சாங்கிய, யோக, மீமாம்சாதி சாத்திரங்களில் கரைகண்ட சாங்கிய பதஞ்சல்யாதி முனிவர்களென்ன? பீஜ கணிதத்தையும், க்ஷேத்திரகணிதத்தையும் முறையே சித்தாந்த சிரோன்மணியின் மூலமாகவும், லலிதா விஸ்தாரத்தின் மூலமாகவும் உலகிற்களித்த பாஸ்கராசார்யர், ஆர்யபட்டர் முதலியவர்களென்ன? பாஷாஞானத்தில் தேர்ச்சியடைந்து வியாகர்ணத்தை உலகிற்களித்த பாணினி, அகத்தியர், தொல்காப்பியனார் முதலியவர்களென்ன? சோதிட சாத்திரத்திலே பிர்ம்ம, சூர்ய, சோம, பிரகஸ்பதிய, கார்கிய, நாரத, பராசரீய, புலஸ்திய, வசிஷ்ட என்ற ஒன்பதுவித சித்தாந்தங்களில் பாஷ்யம் எழுதிய முறையிலே, "பிரஹத் சம்ஹிதா," என்கிற சோதிடக் கிரந்தத்தில் பூகோள

சாஸ்திரம், சிற்பம் முதலிய கலைகளைப்பற்றி எழுதியிருக்கும் 'வராஹமிஹிரரின்' பெருமையென்ன? சங்கீத சாஸ்திரத்தில் விஞ்ஞானத்தின் மூலமாக பஞ்சபூதங்களையும் தன்வயப்படுத்தும் சக்தியை அடைந்திருந்த தும்புருநாரதரும், சைவசமய குரவர் நால்வரும், ஆழ்வாராதியர் முதலிய பக்த சிகாமணிகளும், அக்பர் சக்கரவர்த்தியின் காலத்தின் ஆஸ்தான வித்துவான்களான கோபால்நாயக், தான்ஸன் என்கிற சங்கீத விற்பன்னர்களும் என்ன? ஆயுர்வேத, யூனானி, சித்தமுறைகளிலே தேர்ச்சிகொண்ட, தன்வந்திரி, சாகரர், சஸ்சுதர், அகத்தியர், போகர் முதலிய சித்தர்களென்ன? தனுர்வேதத்திலேயும், யுத்தசாஸ்திரத்திலேயும் காணப்படும் பலவித அஸ்திர சஸ்திரங்களால் போர்முறை வகுத்த விஸ்வாமித்திரர், இராமர், பரசுராமர், பீஷ்மர், துரோணர், அர்ஜுனன் முதலியவர்கள் என்ன? பத்மவியூகம், மகரவியூகம், சகடவியூகம், கோமுத்திரிகா முதலிய வியூகங்களாக சேனைகளை வகுத்து நடத்தி, அந்தர்பேதி, மத்தியபேதி என்ற முறைகளால் சைன்னியங்களை சின்னபின்னமாக்கி, யுத்த தர்மத்தைவிடாது அவலம்பித்து நடத்தினது என்ன? மனுதர்ம சாஸ்திரம், சுக்கிரநீதி, சாணக்கியர் அர்த்தசாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களின் உதவியைக்கொண்டு ராஜரீகத்தை நடத்தினது என்ன? துவைத, வசிஷ்டாத்வைத, அத்வைத, வேதாந்த, சித்தாந்தங்களை அளித்த மாத்வர், இராமானுஜர், சங்கரர் முதலிய வேதாந்த சித்தாந்திகள் என்ன? தர்ம சாஸ்திரங்களை அளித்த பராசரர், யாஞ்யவல்கர் முதலியவர் என்ன? எக்காலத்திற்கும், எந்நாட்டிற்கும் பொதுவாய், ஓதற்கெளிதாய், செவிக்கும் சிந்தைக்கும் இன்பம் பயப்பதாய், எச்சமயத்தினர்க்கும் ஒத்ததாய் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களைக்கொடுத்த



திருவள்ளுவர், ஔவையார் ஆகியவர்கள் வகுத்த அறநூற்கள் என்ன?

இவைகளை நோக்குங்கால், நம் தேசத்தின் பண்டைய உன்னத நிலைமை நமக்கு வியப்பை உண்டுபண்ணவில்லையா?

**பண்டைக்காலத்தில் கிராமங்களின் நிலைமை**

இக்காலம் குடியானவன் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும், படுக்கப் பாயும், அறிவு வளர்ச்சியுமின்றி அவதிப்படும்பொழுது, பண்டைக்காலத்திய சோழ அரசர்களின் ஆட்சியில், எப்படியிருந்தார்கள் என்பதை சர்க்கார் அறிக்கைகள் சிலாசாசனங்கள் மூலமாக ஆராய்வோமானால் நன்றாக அறியலாம். அக்காலத்தில் நில உரிமைகளும் விவசாய முறைகளும் கைத்தொழில்களும் வெகு நேர்மையாக நடந்து வந்தன என்றும், அதனால் நீர்வளம் நிலவளம்பொங்கிச் செழித்தோங்கி வந்ததென்றும் நன்கு விளங்குகிறது. அக்காலத்தில் எவனுக்கும் தனி உரிமை கிடையாது. கிராமத்திலுள்ள நிலங்களெல்லாம் அக் கிராமத்தாருக்குப் பொது உடைமை. அதற்குத்தான் கிராமசமுதாயம் என்று பெயர். கிராமவாசிகள் சேர்ந்து முறைவைத்து நிலங்களைப் பயிரிட்டு விளைந்த பொருள்களை அனைவரும் பகிர்ந்து அனுபவித்து வந்தார்கள். ஒருவன் மற்றொருவனுக்கு நிலத்தை விக்கிரயம் செய்ய முடியாது. விளைந்த பொருளில் ஆறில் ஒரு பங்கு அரசனுக்குத் தீர்வையாகக் கொடுத்துவந்தார்கள். அதற்குமேல் தீர்வை கிடையாது.

தீர்வையும், விளைந்த பொருளிலேயே தவிர விலை மதிக்கும் நாணயத்தில் அல்ல. எவ்வளவு விளைந்ததோ

அதில்தான் பங்கு; விளையாவிட்டால் தீர்வையில்லை. அரசன் பங்கைக் கொடுக்கும் பொறுப்பு கிராமத்திற்கே தவிர தனி மனிதனுக்கல்ல. எந்த அரசன் ஆண்டாலும், எந்தப் புரட்சி ஏற்பட்டாலும், இந்த மாமூல் முறைக்கு மாற்றமில்லை.

### புராதனக் கோயில்களே நாகரிக வளர்ச்சியின் சின்னங்கள்

ஒவ்வொரு கிராமத்தின் நடுவில் கோவிலும், கோவிலைச்சுற்றி நெடுமாட வீதிகளும், வீடுகளும், வீட்டிற்குப் பின்னால் தோட்டங்களும் உண்டு. கிராமத்தைச் சுற்றி சாகுபடியாகும் நிலங்கள்போக, இரண்டாந்தர நிலங்களில் சுமார் 1200 முழ அகலம் வரையில் மேய்ச்சல் நிலங்களாகவும், மேய்ச்சல் நிலங்களைச் சுற்றிலும் கிராமக்காடுகளுமாகியிருந்தன. அக்காடுகளில் உழவர்களுடைய கால்நடைகள் தாராளமாக மேய்ந்து வந்தன. கருவி செய்யவும் வீடுகட்டவும் வேண்டும் மரங்களும், எரிக்க விறகும், விவசாயத்திற்கு வேண்டும் தழை எருவும், சருகும் எல்லாம் விவசாயிகள் அக்காடுகள்மூலம் இலவசமாய் அனுபவித்து வந்தார்கள். கோயில்களுக்கும் கிராம சேவை செய்வோர்க்கும் மான்யங்கள் விடப்பட்டிருந்தன. கிராம சமுதாயத்திற்குச் சேவை செய்யும்பொருட்டு புரோகிதன், அம்பட்டன், வண்ணான், குயவன், தச்சன், கருமான், கணக்கன், கிராம பெரியதனக்காரன், தோட்டி, தலையாரி, நீர்க்கட்டி, வைத்தியன், சக்கிலி முதலியவர்களுக்கும், மான்யங்கள் அரசாங்கத்தாரால் விடப்பட்டிருந்தன. மான்யங்கள் அன்றியும், கிராம குடும்பஸ்தன் ஒவ்வொருவனும், மேற்கண்ட தொழிலாளிகளின் சேவைக்குத்தக்கபடி மிராசு வரும்படியும் கொடுத்துவந்தான். கிராமக் குடிதண்ணீருக்குக் கிணறுகள், குளங்கள் வெட்டி



வைத்தனர். நீர்ப்பாசனத்திற்கு ஏரிகள் வெட்டிவைத்தனர். அவைகளைச் சீரான நிலைமையில் வைத்துக்கொள்ள ஜலாசய நிர்மாண மான்யங்களும் விடப்பட்டிருந்தன. வழிப்போக்கர்கள் தங்குவதற்கு ஊர்தோறும், சத்திரம் சாவடிகள் இருந்தன. கோவில்கள் பண்டைக்காலத்தில் கலாவிளக்கங்களாக இருந்தன. சிற்பம், சங்கீதம், நிருத்தியம், காயகம், கணிதம், ஜோதிஷம், கவித்வம் முதலிய பற்பலத்துறைக் கலைஞர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அக்கலைகளின் வளர்ச்சிக்காக மான்யங்களும் விடப்பட்டிருந்தன. கோயில்களில் கவிஞர்களின் அரங்கேற்றுப்படிகளும், மதசம்பந்தமான பரிஷத்துகளும் நடந்துவந்தன. கிராமத்திற்குவேண்டிய தேவைகளைக் கிராமத்திலேயே உற்பத்திசெய்து அனுபவித்து வந்ததனால் கிராமத்தின் செல்வம் வெளியேறாமல் ஜனங்கள் சுபிட்சமாக வாழ்ந்து வந்தார்கள். கிராமத் தொழிலாளி, மான்யங்களை விற்கவும் வாங்கவும் கூடாதென்ற சட்டம் இருந்ததனால், கிராமக் கைத்தொழில்கள் முறைதவறாது செவ்வனே நடந்துவந்தன. கிராமத்தில் களவு என்பதே கிடையாது. அப்படி ஏதாவது களவு போனால் கிராமக் காவற்காரன் கண்டுபிடித்துக் கொடுக்கவேண்டும். [illegible]பிடிக்க முடியவில்லையானால் அரசனுக்குத் தெரிவிக்க, அரசாங்க பொக்கிஷத்திலிருந்து, களவுபோன பொருளுக்குத் தொகை கொடுக்கப்பட்டு வந்தது.

1816-ம் வருஷத்திற்குப்பிறகு கிராமத்தொழிலாளியின் மான்யங்களைப் பட்டா செய்துவிடலாமென்றும், விற்கலாமென்றும், பிரிட்டிஷ் அரசாங்கம் சுதந்திரம் கொடுத்துவிட்டதனால், அநேக கிராமங்களில் தச்சன், கருமான் முதலிய தொழிலாளிகளே இல்லாமல் போய் கிராமத்தார் திண்டாடும் நிலைமைக்கு வந்துவிட்டார்கள்.

115486

ஒவ்வொரு பெரிய கிராமமும், முப்பது (வார்டு) பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, பகுதிக்கு ஒரு அங்கத்தினராக முப்பது அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்து அங்கத்தினர்கள் கொண்ட ஆறு பஞ்சாயத்துகள் மூலமாக நிர்வகிக்கப்பட்டு வந்தது. நியாய விசாரணை, நீர்ப்பாசனம், கோயில் பரிபாலனம், வரி வசூல், சத்திரம் சாவடி பரிபாலனம் முதலிய ஒவ்வொன்றும் ஒவ்வொரு பஞ்சாயத்தின் நிர்வாகத்துள் அடங்கிக்கிடந்தது.

மேலேகண்ட பஞ்சாயத்துகளில் உறுப்பினராயிருப்போர் ஒழுக்கமுள்ளவர்களாகவும், வேதம் இதிகாசம் புராணம், தர்மசாஸ்திரம் முதலியன படித்து அதன்படி நடப்பவர்களாகவும், முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவராகவும், ஒரு குடும்பத்திற்கு விட்ட சொத்திற்கு நாலில் ஒரு பங்காவது வரியாகச் செலுத்துபவராகவும் இருக்கவேண்டும். வரிசெலுத்தும் யோக்கியதாம்சம் பெற்றவராயிருந்தும், ஒழுக்கமில்லாதவராகவும், பஞ்சாயத்து நிர்வாகத்தில் சரிவரக் கணக்குகளைச் சமர்ப்பிக்கத் தவறியவராகவும் இருந்தால், அவரும் அவரைச்சேர்ந்த சுற்றத்தார்களும் வாக்காளராகவோ அபேட்சகர்களாகவோ இருக்கத் தகுதியற்றவராகக் கருதப்பட்டனர். இங்ஙனமாகக் கிராமங்கள் நிர்வகிக்கப்பட்டு, உண்டி, உடை, உறையுள் நிறைய, அறிவு வளர்ச்சி நிலையங்களாகவும், குடியரசு நிலையங்களாகவும் விளங்கி வந்தன.

**தற்கால நிலைமை**

பழைய புகழைப் பாடிக்கொண்டிருப்பதில் என்ன பயன்? ஆனாலும், பண்டைக்காலத்தில் எவ்வளவு மேன்மையுற்றிருந்தோம், இப்பொழுது எவ்வளவு தாழ்வுற்றிருக்கிறோமென்பதை எடுத்துக்காட்ட பழைய நிலையைப்பற்றிய



சிந்தனை பயன்தருகிறது. 16-ம் நூற்றாண்டில் விவசாயம் கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளில் மேன்மையுற்று விளங்கிய இந்தியா, சைனா முதலிய தேசங்களில் வியாபாரம் செய்யவேண்டிப் புகுந்த ஆங்கிலநாட்டார், படிப்படியாய் சுதேச அரசர்களுக்குள் சண்டையைப் புகுத்தி தேசத்தைக் கொஞ்சம்கொஞ்சமாகக் கைப்பற்றிக் கொண்டிருந்தனர். 18-ம் நூற்றாண்டில் நீராவியின் மூலமாக யந்திரங்களை நடத்தக் கண்டுபிடித்தனர். அதிலிருந்து யந்திரசாலைகளில் மூலப்பொருள்களைக் கைத்தொழில் பொருள்களாக்கி, உலகத்தின் வெவ்வேறு நாடுகளில் கப்பல்கள் ரெயில்வேக்கள் மூலமாகக்கொண்டு குவித்து, கீழ் நாட்டுக் கைத்தொழில்களை அழித்துப் பொருள்களைக் கொள்ளைகொண்டு போகலாயினர். இதைக்கண்ட ஜர்மனிபோன்ற ஏனைய ஐரோப்பிய நாட்டினர் வியாபாரப் போட்டியினால் பொறாமைகொள்ள, அதனால் 1914-ம் வருஷம் உலகயுத்தம் ஆரம்பமாயிற்று. யுத்தமுடிவில் வார்சேல்ஸ் ஒப்பந்தம் ஏற்பட்டது. தோற்றுப்போன நாடான ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளை, ஏற்கனவே அதிகக் குடியேற்ற நாடுகளை வைத்துக்கொண்டிருந்த இங்கிலாந்து பிரான்சு தேசங்கள் பெரும்பங்கு போட்டுக் கொண்டன. அதனால் வருத்தமடைந்த இத்தாலியும், முன்னிருந்த நிலைமையை மீண்டு அடைய விரைந்தெழுந்த ஜெர்மனியும், முஸலோனி ஹிட்லர் முதலிய சர்வாதிகாரிகளை வைத்துக்கொண்டு யுத்தசன்னத்தமாயின. அபிசீனியா, ஸ்பெயின், ஆஸ்ட்ரியா முதலிய தேசங்களைக் கைப்பற்றி, ஜெக் தேசத்தை பயமுறுத்திப் பிடிக்கும்தருவாயில் இங்கிலாந்தும் பிரான்சும், ஜெர்மனி, இத்தாலியின் சர்வாதிகாரிகளுக்குப் பயந்து வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு, ஜெக்கோவைப் பலிகொடுத்து, மியூனிச் ஒப்பந்

த்தை ஏற்படுத்தி, தற்காலிகமாக யுத்தத்தை நிறுத்தியிருந்தன. திரும்பவும் யுத்தபயம் மீதூர, தாம் அடைந்த விஞ்ஞான சாஸ்திரத்தின் உதவியைக்கொண்டு மானிட தர்மத்தை மறந்து, புதிதாகப் போர்க்கருவிகளையும், விஷக் காற்றையும் கண்டுபிடித்துக்கொண்டும், அவற்றிலிருந்து தப்ப, பூமிக்கடியில் எலிகளைப்போல் பாசறைகளையும், திருடர்களைப்போல் முகமூடிகளையும் தயார்செய்தும் வருகின்றனர்.

மற்றொரு பக்கம், நமது தேசத்திலோ மகாத்மாஜீ காங்கிரசில் ஈடுபட்டார். அதுமுதல் அன்பை அடிப்படையாகக்கொண்ட உண்மை, அஹிம்சை, தியாகம், பணிவு, சேவை ஆகிய ஆயுதங்களின் உதவியால், தன்னையும், தன் தேசத்தையும் முன்னுக்குக் கொண்டுவர, "உண்மையைக் கடைப்பிடித்து, துன்பம் சகித்தல்" என்ற சத்தியாக்கிரக முறையை அரசியலில் புகுத்தினர். அதன் காரணமாய் மானிட கோடிகளுக்கு ஆசைமேலீட்டினால் ஏற்படுகிற அசத்தியம், அதர்மம், துவேஷம், ஆகிய இழிகுணங்கள் குறையப்பெற்று, மாக்கள் பலர் மக்களாயினர். ஆங்கில அரசாங்கத்தைப் பணியவைத்து உறுதிமொழி வாங்கிக்கொண்டு, 1935-ம் வருஷத்து இந்திய சட்டத்தின் மூலமாக முழுச் சுதந்தரத்தை அடைய முடியாமலிருந்தாலும், அதன் ஒரு நிழல் ஆகிய மாகாண சுயாட்சியை நடத்திவைக்க சட்டசபைப் பிரவேசத்தைக் கைக்கொள்ளுமாறு காந்திஜீ காங்கிரசுக்கு யோசனை கூறினர். அதன்படி இன்று 8 மாகாணங்களில் காங்கிரஸ் அரசாட்சி நடந்து வருகிறது.

**மகாத்மாவின் மணிவாசகம்**

"கலால் வருமானம் ஒழிக்கப்பட்டு கல்வி தானே வளர வழிதேடப்படும். ஜெயில்கள் சிறைச்சாலைகளாக



இருப்பது தடுக்கப்பட்டு, சீர்திருத்தச் சாலைகளாகவும், தொழிற்சாலைகளாகவும் ஆக்கப்படும். உப்பு, பாமர மக்களின் உபயோகத்திற்காக இலவசமாகவே வழங்கப்படும். கதர் எங்கும் பரப்பப்படும். உத்யோகஸ்தர்கள், சம்பளங்களைக் குறைத்துக்கொண்டு எளிய வாழ்க்கையை அனுஷ்டிப்பார்கள்."—என்றெல்லாம் மகாத்மா கூறுவதை பொதுஜனங்கள் கவனிக்கவேண்டும்.

**உள்நாட்டுத் தொழில்**

நம் நாட்டின் தொழில்கள் வளர்ச்சி அடைய, வருங் காலத்திலேனும் வழி உண்டாவென்று யோசியுங்கள். ரயில்வேக்கள், கப்பல் போக்குவரத்து சாதனங்கள், தங்க இரும்புச்சுரங்கங்கள் எல்லாம் இன்று அன்னியர் பங்கிலேயே இருக்கின்றன. காப்பி, தேயிலைத்தோட்டங்கள் யாரிடமிருக்கின்றன? அன்னியரிடத்திலன்றோ? சணல் தொழிற்சாலைகள் பெரும்பாலும் வெள்ளையர் கையிலன்றோ இருக்கின்றன? இந்த உள்நாட்டுத் தொழில்களின் கதி ஒருபுறமிருக்கட்டும்.

**வெளிநாட்டுத் தொழில்**

வெளிநாட்டுத் தொழில்களை எடுத்துக்கொள்ளுங்கள். நமது சாமான்களை வெளிநாடுகளில் விற்பனை செய்ய வேண்டுமானால், நாம் அன்னிய ரயில்வே, கப்பல்களின் மூலமாகத்தான் ஏற்றுமதி செய்யவேண்டும். உள்நாட்டு வியாபாரத்திற்கு இருக்கும் ரயில்வே கப்பல் கட்டணங்களைவிட, வெளிநாட்டு ஏற்றுமதிக்கு ரயில்வே கட்டணச் சலுகை காட்டப்படுகிறது. சாமான்களை அன்னியக் கம்பெனிகளிலே இன்ஷியூர் செய்யவேண்டும்; (நாணய மாற்றுதல்) எக்சேஞ் முதலியவைகள் அன்னியர் பாங்கி

களின் மூலமே நடத்தப்படவேண்டும். சாமான்களை வாங்குபவரும், விற்பவரும், தரகர்களும், அன்னியர்களே. கேபிள்ஸ் வகையராக்களும் அன்னியருடையதே. சாமான் கண்ட்ராக்ட்டுகளில் கையாளப்படுவது பிரிட்டிஷ் ஸ்டர்லிங் நாணய விகிதங்களேயாகும். பிரிட்டிஷார் தவிர மற்ற நாடுகளுடன் வர்த்தகம்செய்ய வேண்டுமென்றால் பிரிட்டிஷார் மூலமாகத்தான் செய்யவேண்டியிருக்கிறது. தவிர, தங்கள் தேசத்தின் வியாபாரப் பெருக்கிற்குத் தகுந்தபடி, நமது தேசத்தில் ஏற்றுமதி, இறக்குமதி வரிகள் கொடுமையாக விதிக்கப்படுகின்றன.

இதிலிருந்து நாம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எப்படி வியாபாரம் செய்துவாழ முடியுமென்பதை யோசித்துப் பாருங்கள்.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், நம்முடைய மூலப் பொருள்களுக்கும் கைத்தொழில் பொருள்களுக்கும் மார்க்கெட் ஏற்படவேண்டுமானால், ரயில்வே, கப்பல் கம்பெனி, நாணய மாற்றுமுறை, பேங்கிங், இன்ஷியூரன்ஸ், வெளிநாட்டுப் பொருள்களுக்குச் சுங்கம் போடவோ வராமல் தடுக்கவோ வசதி, நிதி நிர்வாகம் முதலிய பல துறைகளில் நமக்குப் பூரா அதிகாரமும் வேண்டும். இவைகளுக்கெல்லாம் நமக்கு வழங்கப்போகும் மத்திய அரசாங்கத்தின் சமஷ்டித் திட்டத்தில் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. அத்துடன், ராணுவமும் நம் அதிகாரத்திற்கு உட்படவில்லை. இது தவிர, சமஷ்டி அரசாங்கத்தின் மேல்சபை, கீழ்சபைகளில் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு ஜாதிவாரியாகத் தேர்ந்தெடுக்க பிரதிநிதித்வமும், பிற்போக்குள்ள சுதேச சமஸ்தானாதிபதிகளுக்குத் தங்கள் பிரதிநிதிகளை நியமிக்கும் அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.



இதனால் மத்திய அரசாங்கத்தில் ஜனப் பிரதிநிதிகளுக்குள் ஒற்றுமை ஏற்படமுடியாத நிலைமையைச் சிருஷ்டித்திருக்கிறார்கள். மிகவும் குறைந்த அதிகாரம் கொடுத்து நம்மை ஏமாற்றப் பார்க்கிறார்கள். அதை ஒத்துக்கொண்டு நிர்வாகம் நடத்திப் பலனடைய முடியாத நிலைமையில் இருக்கிறோம். அதைப்பற்றி நாம் எவ்வளவோ கிளர்ச்சி செய்தும், திரும்பவும் ராஜப்பிரதிநிதியவர்கள் கல்கத்தா ஐரோப்பிய வியாபாரிகள் சங்க கிருஸ்துமஸ்விருந்துக் கொண்டாட்டத்தின் பொழுது பேசிய பேச்சிலிருந்து, நாம் விரும்பியபடி மாறுதல் செய்யாமல் சமஷ்டியை நம்மீது திணிக்கவோ, அல்லது தாற்காலீகமாகக் கவனியாமல் ஒத்திப்போடவோ, யோசனை செய்வதாகத் தெரிகிறது. மேலும், சுதேச சமஸ்தானாதிபதிகளின் இலாக்காக்களில் பொறுப்பாட்சி ஏற்படுத்த வேண்டுமென்று, சமஸ்தான ஜனங்கள் கிளர்ச்சி செய்து சட்டமறுப்பும் செய்துகொண்டு வரும்போது, சமஸ்தானாதிபதிகள் தங்கள் சமஸ்தான ஜனங்களுக்கு பொறுப்பாட்சி அளிப்பதோ அளிக்காமல் இருப்பதோ அவர்களைப்பொறுத்த விஷயமென்றும், தாங்கள் அதைப் பற்றி நிர்ப்பந்திப்பதில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இது ஒருவாறு சூசகமாக சமஸ்தானாதிபதிகளைப் பொறுப்பாட்சி கொடுக்கவேண்டாமென்று தெரிவித்து, சமஷ்டி விஷயத்தைக் காங்கிரசின் கோரிக்கைக்கு விரோதமாகத் திணிப்பதற்கோ, அல்லது ஒத்திப் போடுவதற்கோ யோசனை கூறுவதாக ஏற்படுகிறது. அம்மாதிரி நிலைமை ஏற்படாமல் தடுக்க, காங்கிரஸ் தன் முழு பலத்தையும் உபயோகித்து, பொதுமக்களையும் மாகாண அரசாங்கங்களையும் கிளர்ச்சி செய்விக்க ஏற்பாடு செய்து, அவசியமானால் சட்டமறுப்பும் செய்ய மகாத்மாவின் யோசனையை எதிர்பார்க்குமாக.

### மாகாண அரசாங்கத்தின் நன்மைகள்

நமது மாகாண அரசாங்கத்தை நாம் கைப்பற்றின பிறகு, காங்கிரஸ் நிர்மாணத் திட்டங்களாகிய கதர், மது விலக்கு, தீண்டாமை, கிராமப் புனருத்தாரணம் முதலிய துறைகளிலே, மாகாண அரசாங்கச் சட்டத்தின் மூலமாகக் கிடைத்த அதிகாரத்தை உபயோகித்து மாகாண அரசாங்கப் பொருளாதார நிலைமைக்குத் தகுந்தபடி பொதுமக்களுக்கு நன்மைசெய்யவேண்டுமென்ற அவா நமக்கு அதிகமாக இருக்கிறது. எனவே, ராஜாஜியின் தலைமையில் இருக்கும் மந்திரி சபையார், கையால் நூற்றுக் கையால் நெய்த கதர் தவிர, மற்றத் துணி வியாபாரிகளுக்கு லைசென்ஸ் வரி விதித்து கதர் அபிவிர்த்திக்கு ஏற்பாடு செய்தனர். ஏழைமக்களின் வறுமை, பசி, பிணி, ஒழுக்கம், அவர்கள் குடும்பத்தின் பொருளாதார முன்னேற்றம் முதலியவைகளைக் கவனிக்கும் முறையில், சென்ற வருஷம் சேலம் ஜில்லாவிலும், இவ்வருஷம் சித்தூர் கடப்பை முதலிய ஜில்லாக்களிலேயும் மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளனர். அரிஜனங்கள் மற்ற ஜாதி இந்துக்களைப்போலப் பொது ஸ்தலங்களில் தடையில்லாமல் செல்லச் சட்டம் செய்ததுடன், மலையாள ஜில்லாவில் முதலாவதாகக் கோயில்களில் செல்லவும் சட்டம் செய்தனர். தேசிய பாஷையான ஹிந்தியை 125 பள்ளிகளில் கட்டாயபாடமாகக் கற்பிக்கச்செய்ததோடு தாய்ப்பாஷையிலேயே கல்வி கற்பிக்கவேண்டுமென்று உத்திரவிட்டனர். கிராமப்புனருத்தாரணத்தை யுத்தேசித்து விவசாயக்கடன் நிவாரண மசோதாவின் மூலமாக நம் மாகாண விவசாயிகளின் கடனை 204 கோடியிலிருந்து சுமார் 100 கோடியாகக் குறைத்தனர். சென்ற வருஷம், தான்யங்களின் விலைக்குறைவை யுத்தேசித்து, விவசாயிகளுக்கு நில வரியில் 75 லட்சம் ரூபாய் குறைத்துக் கொடுத்தனர். ஜன சமூகத்தின் சுகாதாரத்தைக் கருதி, பொதுஜன சுகாதார மசோதாவை நிறைவேற்றினர். ஜமீன்தார்கள் ஜமீன் குடிகளிடத்தில் நீர்ப்பாசன வசதி, வரிகொடுக்கும் ஆற்றல் முதலியவைகளை உத்தேசிக்காமல், நிலவரியை அடிக்கடி உயர்த்தி, பலவித அநியாய வரிகளைப் போட்டு, கசக்கிப் பிழிந்துகொண்டு வருவதைத் தடுக்கும் நோக்கத்தோடு, ஜமீன்தார்களுக்கும் குடிகளுக்கும் இருக்கிற பாத்தியதைப்பற்றி விசாரிக்கச் செய்தனர். அதன் பயனாக பெரும்பான்மைக் கமிட்டியாரின் எஸ்டேட் லாண்ட் ஆக்ட் ரிப்போர்ட் வெளிவந்துள்ளது. இன்னோரன்ன பலவித நன்மைகளும் வரவேற்கத்தகுந்தனவேயாகும்.



### நிலவரி முறை

உலகத்தில் மற்ற நாடுகளில் வாழும் மக்களின் தேவைகளைவிட, நமது நாட்டு மக்களின் தேவைகள் ரொம்பவும் சொற்பம். ஒவ்வொரு மனித குடும்பமும் உலகத்தில் வாழ்வதற்கு, உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும், படுக்கப் பாயும், இன்னும் குறைந்த அளவு சௌகரியங்களைச் செய்துகொள்வதற்கும் வேண்டியதுபோக, மிகுதியைத்தான் அரசாங்கம் வரியாக வசூலிக்கலாம். அதனால்தான், பண்டை அரசர்கள் ஆறில் ஒரு கடமை என்று வசூலித்தார்கள்போலும். இப்பொழுது நம்மை ஆளும் ஆங்கிலேயர் நாட்டிலே நிலத்திலிருந்து கிடைக்கிற வருமானத்திற்குத்தான் வரி. அதிலும் 120 பவுன் வருமானத்திற்குமேல்தான் வரி விதிக்கப்படுகிறது. கல்யாணமானவனுக்கும் கல்யாணமாகாதவனுக்கும் வரி விதிப்பதில் வித்தியாசம் உண்டு. கல்யாணமாகாதவனுக்கு வரியதிகம். ஏனெனில், அவனுக்கு குடும்பபாரம் இல்லை. ஆதலினால்

அவனுக்குச் செலவு அதிகம் இல்லை. ஆனால், கல்யாணமானவனுக்கோ மனைவிக்காக 60 பவுன் வருமானமும், ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்விச் செலவிற்காக 50 பவுனும், ஒரு குடும்பத்தில் வியாதியினாலோ, தள்ளாமையினாலோ வேலை செய்ய இயலாதவனுக்காக ஒரு தொகையும் போக, அதற்குமேல் வருவாய் வந்தால்தான் வரியுண்டு. இன்னும் பிரான்ஸ் தேசத்தில் நூற்றுக்கு பத்தும், ஜெர்மெனி தேசத்தில் நூற்றுக்கு இருபதும், ஜப்பான் தேசத்தில் நிலத்தின் விலையில் 400-ல் ஒரு பங்கும் வரி விதித்திருக்கிறார்கள். ஆனால், நமது தேசத்திலோ, மனிதன் உலகில் உயிர்வாழ வேண்டிய இன்றியமையாத குறைந்த தேவைகளான உண்டி, உடை இவைகளுக்கு வசதி இருந்தாலும் இல்லாவிட்டாலும், வரி கொடுத்தே தீரவேண்டும். அதுவும் இரண்டணா நிலத்திலிருந்து வந்தால் ஓரணா வரி கொடுக்கவேண்டும். நமது மாகாணத்தில் மற்ற மாகாணங்களைவிட நிலவரி அதிகம் என்பது கீழ்க்காணும் புள்ளி விவரங்களால் தெரிந்துகொள்ளலாம்.

| | | | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| நம் மாகாணத்தில் சராசரி நிலவரி | (ஏக்கர் ஒன்றுக்கு) | | | 2 | 9 | 0 |
| பர்மா | ,, | ,, | ,, | 2 | 1 | 2 |
| பம்பாய் | ,, | ,, | ,, | 1 | 11 | 3 |
| மத்திய மாகாணம் | ,, | ,, | ,, | 1 | 6 | 11 |

இக்கணக்கின்படி நம் மாகாணத்தில் மத்திய மாகாணத்தை விட அதிக நிலவரி ஒரு ஏக்கருக்கு 1 ரூ. 2 அ. 1 பை; பம்பாயைவிட 13 அ. 9 பை; பர்மாவைவிட 7 அ. 10 பை. என்பது தெளிவாகிறது.

வருமான வரியோ 2000 ரூபாய்க்கு உட்பட்டவர்களுக்குக் கிடையாது. நிலவரும்படி அப்படியல்ல. 2000



உள்ளவன், 1000 ரூபாய் தீர்வை செலுத்தவேண்டும். இதரத்துறைகளில் ரூபாய் 2000 வருமானம் உள்ளவர், 67 ரூ. 11 அ. 4 பைதான் வருமான வரியாகச் செலுத்த வேண்டும்.

நமது காங்கிரஸ் அரசாங்கத்தார், நமது மாகாணத்தில் சுமார் 75 லட்ச ரூபாய் இந்த வருஷத்தில் வஜா செய்திருந்தாலும், அது எவ்விதத்திலும் வருவாய்க்குத் தகுந்த வஜா அல்ல. இவ்வருஷத்திய அரசாங்கத்தின் பொருளாதார நிலைமைக்குத் தகுந்தவாறு இங்ஙனம் வஜா செய்திருந்தாலும், இனிமேல் நிலத்தீர்வை நிர்ணயிக்கையில் கட்டுப்படியாகாத நிலத்து (Uneconomic Holdings) க்காவது வரியில்லாமல் செய்து, சாகுபடிச்செலவு, பருவ வேறுபாடு, நிலங்களின் தரம், ஜலாசயங்களின் தரம் முதலியவைகளை, வரியை அதிகப்படுத்தும் உத்தேசத்துடன் உயர்த்தியிருப்பதைச் சரியான முறையில் செய்வதுடன், சாவி வஜா சட்டங்களை ஜீவகாருண்ய முறைக்குத் தகுந்தபடி திருத்த ஏற்பாடு செய்யவேண்டும்; தவிர, நிலத்தீர்வையைக் குறைந்த அளவில் (Flat-rate) சராசரியாகப்போட்டு பயிர்களின் வருமானத்திற்குத் தகுந்தபடி வரிப்போட ஏற்பாடு செய்யவேண்டும். அதுவுமன்றி, ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், இனாம்தாரர்கள் முதலியவர்களுக்குப் பிரகாசம் கமிட்டி மெஜாரிட்டியாரின் ரிப்போர்ட்டுப்படி சட்டம் செய்யவேண்டும்.

விவசாயிகளின் கடன் 1895-ம் வருஷத்தில் நமது மாகாணத்தில் 45 கோடியிலிருந்தது இன்று 204 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. வருவாயோ சராசரி 30 ரூபாயிலிருந்து இன்று 11 ரூ. 12 அணுவுக்குக் குறைந்திருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் நேரடியாக விவசாயம் செய்தவர்கள், 1921-ம் வருஷத்தில் சுமார் 7½

கோடி. 1931-ம் வருஷத்தில் 6 கோடியே 12 லக்ஷம். பண்ணையாட்களின் எண்ணிக்கை 1921-ம் வருஷத்தில் இரண்டுகோடி பதினாறு லட்சத்திலிருந்து 1931-ம் வருஷத்தில் மூன்றுகோடியே பதினைந்து லட்சமாக உயர்ந்திருக்கிறது. பொருளாதாரமந்தத்தின் ஆரம்பத்தசையிலேயே ஜெர்மனி, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, டென்மார்க், பின்லண்ட் முதலிய தேசங்களில் வட்டி பூராவும் தள்ளியும், அசலில் ஒருபாகம் குறைத்தும், கோர்ட்டின் மூலமாய் வசூலிக்காமல் நிறுத்தியுமிருக்கின்றனர். மாகாண அரசாங்கம் நமக்குச் சிறிது உதவிசெய்திருந்தாலும், அது போதுமான பாதுகாப்பு அளிக்கவில்லையாகையால், நீண்ட காலத் தவணைக்குக் குறைந்த வட்டிக்கு மேற்கண்ட குறைந்த கடன்களைத் தீர்க்க வசதிகள் அளிக்கவேண்டும். ஏலம்போடும் சொத்துக்களுக்கு விலையை நிர்ணயிக்கச் செய்து, அதை அரசாங்கமே விவசாயிகளிடத்திலிருந்து, லேவாதேவிக்காரர்களிடத்தில் நிலம் போகாமலிருக்க, வேறு ஸ்தாபனங்களின் மூலமாய் ஏலமெடுத்து, இத்தனை வருஷங்களுக்கு வட்டி இல்லையென்றும், அதன் பிறகு, குறைந்த வட்டியில் நீண்டகால வருஷாந்திரத் தவணைகளாக பணத்தைச் செலுத்தினால் சொத்துச் சேர்ப்பிக்கப் படும் என்றும் சட்டம் செய்தல்வேண்டும். ஒவ்வொரு விவசாயிக்கும், அவன் ஜீவியத்திற்குக் குறைந்தது, இவ்வளவு ஏக்கர் நிலம், வீடு, கால்நடைகள், விவசாயக் கருவி என்று நிர்ணயித்து, அதற்குமேல் இருக்கும் சொத்துக்களைத்தான் கடன்காரர்கள் எடுத்துக்கொள்ளலாமென்று திட்டம் செய்யவேண்டும். இப்படிப் பற்பல விதங்களாக விவசாயிகளை உய்விக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். அப்படி அரசாங்கமே பொறுப்பு ஏற்றுக்கொள்ள இயலாவிட்டால், கடன் கொடுத்தவர்கள் குறைந்த வட்டிக்கு



நீண்டகால தவணைகளில் பெற்றுக்கொள்ளச் சட்டம் செய்யவேண்டும். தவிர, கிராம பாப்பர் சட்டம், லேவாதேவிக்காரர் சட்டம், (Rural Insolvancy Act, Money-lender's bill) முதலிய சட்டங்கள் செய்யவும் ஏற்பாடு செய்யவேண்டும்.

விவசாயிகளின் கடனை நிவர்த்திக்க, கடன் நிவாரணச் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. எனினும், அந்தச் சட்டத்தின் மூலமாக நிவாரணமளித்திருக்கும் வெண்ணிலைக்கடன்கள் செல்லுபடி ஆகாதவையென்று செய்ய, கோர்ட்டுகளின் மூலமாகக் கிளர்ச்சி நடைபெறுகிறது. அம்மாதிரி நிலையேற்படாமல் இருக்க, மத்திய கவர்மெண்டாரிடத்திலாவது தெரிவித்துத் தகுந்த சட்டம் செய்விக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

**ஸ்தல ஸ்தாபனங்களும் அவைகளின் கடமைகளும்**

நமது தமிழ் மாகாணத்தில் இருக்கிற சுமார் 40 முனிசிபாலிடிகளில் 30 முனிசிபாலிடிகளையும், 11 ஜில்லா போர்டுகளில் கோயம்புத்தூர் நீலகிரி தவிர மற்ற ஜில்லா போர்டுகளையும் நாம் கைப்பற்றியிருக்கிறோம். முன்னிருந்த ஸ்தலஸ்தாபன நிர்வாகத்தைவிடப் பெரும்பான்மையாக லஞ்சத்தைக் குறைத்து, ஊழல்களை ஏறக்குறையத் தவிர்த்திருந்தாலும், கல்வி விஷயத்தில் குறைபாடிருக்கிறது. குறிப்பாக, ஜில்லா போர்டு பிரதம கல்விக்கு, நமது மாகாண அரசாங்கம் சுமார் 2 கோடி ரூபாய்க்குமேல் செலவழித்துக்கொண்டு வருகிறது. ஆயினும், அதன் முழுப் பலனையும் அடைய முடியாத நிலைமையில் ஜில்லா போர்டார்களின் கல்வி நிர்வாகம் இருந்துவருகிறது. அவைகளைச் சரிவர நடத்த அடியிற்கண்ட சீர்திருத்தங்களை மாகாண அரசாங்கத்தாரும் ஜில்லா போர்டாரும் செய்யக் கோரப்படுகின்றனர்.

(1) பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்த்த பிறகு குறைந்தது பிரைமரி வகுப்பு முடியும் வரையிலாவது கட்டாயமாக அவர்களைப் பள்ளிக்கு அனுப்பவேண்டுமென்று சட்டம் செய்தல்.

(2) உபாத்தியாயர்களை அடிக்கடி மாற்றுவது கூடாது என்று ஏற்பாடு செய்தல.

(3) உபாத்தியாயர்கள் சரிவரக் கல்வி கற்பிக்கிறார்களா என்று பல துறைகளில் கண்காணிக்கச் செய்தல்.

(4) கல்வி இலாகா டிப்டி இன்ஸ்பெக்டர்கள் சரிவரக் கவனிக்கிறார்களா என்று அவர்களைக் கண்காணிக்க ஏற்பாடு செய்தல்.

(5) வார்தா கல்வித்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்தல்.

(6) கிராமப் புனருத்தாரண திட்டத்தைக் கிராமாந்தரப் பிரதம பள்ளிகளில் உபாத்தியாயர்களின் மூலமாகக் கடைப்பிடித்துப் பயிற்சியளிக்க, S. S. L. C. க்குக் குறையாத பட்டம் பெற்றவர்களாயும், ஒழுக்கமும், உற்சாகமு முடையவர்களாயும் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்குச் செலக்ஷன் போர்டுகளை ஏற்பாடு செய்தல்.

(7) இவைகள் எல்லாம் சரிவர நடக்கின்றனவா என்று கண்காணிக்க, திடீர்சோதனை (Surprise Visit) செய்யும்படி அந்தந்த ஜில்லாப் பிரதிநிதிகளையும், (M. L. A. க்களையும்) பார்லிமெண்டரிக் காரியதரிசிகளையும், கல்வி மந்திரி அவர்களையும் ஏற்பாடு செய்தல்.

(இப்படிப் பலவிதமான ஏற்பாடுகளையும் செய்தால் தான் பிரதமக் கல்விக்குச் செலவிடும் பணம் பயனுள்ளதாகும்.)



(8) மாகாணக் காங்கிரஸ் கமிட்டியாரும், ஸ்தல ஸ்தாபனங்களைப் பலதுறைகளில் கண்காணித்து அவைகளைச் சரிவர நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் தலைமையில் கூடும் அகில இந்தியத் தொழில் முன்னேற்ற போர்டார் (All India Industrial Planning Board) எந்தெந்தத் தொழில்களை மாகாண அரசாங்கங்கள் ஆரம்பித்து நடத்தவேண்டுமென்று தெரிவிக்கிறார்களோ அவைகளை எல்லாம் கவனித்து, ஸ்தல ஸ்தாபனங்களோடு கலந்து, தொழில்களை ஆரம்பித்து நடத்த ஏற்பாடு செய்தல்.

### பஞ்ச நிவாரணம்

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி."

என்றார் திருவள்ளுவர்.

இவ்வாண்டு, தமிழ்நாடு முற்றிலும் காவேரிப் பாசனமுள்ள தஞ்சாவூர், திருச்சிறுப்பள்ளியின் ஒரு பகுதி, மதுரை ஜில்லாவில் பெரியாறு பாசனத்தின் ஒரு பகுதி—இவைகள் தவிர, மற்ற ஜில்லாக்களில் பருவமழை இல்லாமையினாலே புன்செய்ப்பயிர்களாகிய கம்பு, வரகு, சோளம், நிலக்கடலை முதலிய பயிர்கள் வதங்கி மாசூலில்லாது போய்விட்டது. மேலும், நன்செயில் நெல் பயிரிட்டு மழையில்லாததனால் தீய்ந்தும், கரம்பாயும் இருப்பதினாலே, மாகாணம் பூராவும் பஞ்சநிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆதலின், விவசாயிகளுக்குத் தாராளமாக வரிவஜா கொடுக்க ஏற்பாடு செய்வதுடன், அடியிற்கண்ட பரிகாரங்கள் செய்யவும் வேண்டப்படுகிறது.

(1) விவசாயிகளின் ஜீவனத்திற்காகப் பஞ்ச நிவாரண வேலைகளைத் துவக்க ஏற்பாடு செய்தல்.

(2) வரி வஜாசெய்யும் வரையில் வரி வசூலிக்காமல் நிறுத்தி வைத்தல்.

(3) அவர்களுக்கு விதை, மாட்டுத் தீவனத்திற்கு வைக்கோல், புல் முதலியவற்றிற்கு டிப்போக்கள் ஏற்படுத்துவதும் தவிர, அவர்கள் வாழ்வதற்குக் கடன் முதலியன கொடுக்க ஏற்பாடு செய்தல்.

(4) தான்ய விலைகளைக் கட்டுப்படுத்தல்.

(5) தான்ய டிப்போக்கள் ஏற்படுத்துவதுடன் தான்ய பாங்கு (Bank) களையும் ஏற்படுத்தல்.

மேற்கண்டவைகளை அரசாங்கத்தார் தாமதிக்காது உடனே ஏற்பாடு செய்யவேண்டும். ஸ்தல ஸ்தாபனங்களும், அரசாங்கமும் சேர்ந்து கதர் உற்பத்திச்சாலைகளை ஏற்படுத்தி, ஜனங்களுக்கு வேலைகொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாகாண அரசாங்கத்தின் வருவாய் சுமார் பதினாறு கோடி ரூபாய். அது பூராவும் கிராமஜனங்களால் கொடுக்கப்பட்டிருந்தும் சுமார் 11 கோடி ரூபாய், அரசாங்க நிர்வாகச் செலவுகளில் செலவழிக்கப்படுகிறது. அரசாங்க உத்தியோகஸ்தர்களின் சம்பளச் செலவு 1918-ம் வருஷம் 3·94கோடி ரூபாயாயிருந்து இன்று 11 கோடி ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. ஜனங்களின் வரும்படியோ மூன்றில் இரண்டுமடங்கு குறைந்தும் கடன் ஒன்றுக்கு நாலரை மடங்கு அதிகமாகியும் இருக்கையில், சம்பளச்செலவை ஒன்றுக்கு $2\frac{3}{4}$ மடங்கு அதிகமாக்கி ஜனங்களின் வரி கொடுக்கும் ஆற்றலை நோக்காது உதாசினமாகச் செலவழிப்பது பொருந்தாது. ஆகையால், உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களை, 50 ரூபாய்க்கு மேற்பட்டு 100 ரூபாய் வரையிலேயும் 100-க்கு 10 சதவீதமும், 100-க்குமேல் 200 வரையில் 25 சதமும், 200-க்குமேல் 500 வரையில் 40 சதமும் குறைப்பதுடன், 500-க்குமேல் சம்பளமே கொடுக்கப்படாமல் சாசுவதமான ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமவாசிகள் கொடுக்கும் வரியில் 100-க்கு 50 விழுக்காடாவது, கிராம ஜனங்களின் முன்னேற்றத்திற்கு, கிராமங்களில் செலவு செய்யும் வகையில் அரசாங்க வரவு செலவுகளை மாற்றியமைக்கவேண்டும்.



**வேலையில்லாத் திண்டாட்டமும், ஏழ்மை நிலைமையும்**

> "பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்
> அணியென்ப நாட்டிற்குஇவ் வைந்து"

என்பது திருக்குறள்.

நம் நாட்டில் வருடாவருடம் 50 இலட்சம் வீதம் ஜன சங்கியை பெருகிக்கொண்டே வருகிறது. விளை நிலமோ 22 கோடி ஏக்கர்கள். சுமார் 40 கோடி மக்கட் தொகையுள்ள இத்தேசத்தில், ஒவ்வொருவருக்கும் சராசரி அரை ஏக்கர் நிலந்தான் சாகுபடிக்குக் கிடைக்கிறது. விளைச்சலும் மற்றத் தேசத்தைவிட ரொம்பவும் குறைவு. உதாரணமாக, நெல் விளைவை எடுத்துக்கொள்வோம்.

| | |
|---|---|
| நமது தேசத்தில் சராசரி 1 ஏக்கருக்கு | 825 ராத்தல் |
| ஸ்பெயின் தேசத்தில் சராசரி 1 ஏக்கருக்கு | 5780 ராத்தல் |
| கோதுமை விளைவு சராசரி நம் தேசத்தில் | 630 ராத்தல் |
| நெதர்லண்டு தேசத்தில் சராசரி | 2700 ராத்தல் |
| ஹாவாய் நாட்டிலே கரும்பு சராசரி 1 ஏக்கருக்கு | 56 டன் |
| நமது நாட்டிலே சராசரி | 16 டன் |
| நம் நாட்டில் சராசரி கொட்டையெடுத்த பஞ்சு 1 ஏக்கருக்கு | 82 ராத்தல் |
| எகிப்து தேசத்தில் சராசரி 1 ஏக்கருக்கு | 410 ,, |

அமெரிக்காவில் (U.S.A.) 1850 வருஷத்தில் 1 பசு சராசரி 1500 ராத்தல் பால் கொடுத்தது.

1935-ம் வருஷத்தில் சராசரி 5000 ராத்தல் பால் கொடுத்தது.

நம் தேசத்தில் சராசரி 1 வருஷத்தில் 800 ராத்தல் பால் கொடுக்கிறது.

மேய்க்காலுக்குரிய பூமி அமெரிக்காவில் (U. S. A.) 1 மாட்டிற்கு சராசரி 12 ஏக்கர்

| | | |
|---|---|---|
| நியூஜிலாண்டில் 1 மாட்டிற்குச் சராசரி | | 8 ஏக்கர் |
| ஜப்பானில் சராசரி | ,, | 6·7 ,, |
| இங்கிலாந்தில் | ,, | 3·5 ,, |
| நமது தேசத்திலோ | ,, | 0·75 சென்ட். |

மேற்கண்டவைகளைக் கவனித்தால் விவசாயம், கோசம்ரக்ஷணை முதலிய துறைகளில், நாம் எவ்வளவு பிற்போக்கடைந்திருக்கிறோம் என்பது விளங்கவில்லையா? அன்னிய அரசாங்கத்தாரின் அலட்சிய புத்தி ஒருபுறமும், நமது அறியாமையினால் எழுந்த ஊக்கமின்மை மற்றொரு புறமுமாக இன்று நாட்டில் ஏழ்மைநிலை வந்துவிட்டது. 70 இலட்சம் மக்கள், மாற்றுடைக்கோ, புடவைக்கோ வகையில்லாமல், தெருவில் பிச்சையெடுத்து நாடோடிகளாகத்திரியும் தேசம், உலகத்திலேயே வேறொன்றில்லையென்பது நம் நினைவிலிருக்கட்டும்.

**நம் நாட்டிற்கு வேண்டுவது யாது?**

> " கஞ்சி குடிப்பதற்கிலார்—இதன்
> காரணங்க ளிவையென்னும் அறிவுமிலார்"

எல்லா மாந்தருக்கும் உண்டி, உடை, உறையுள், அறிவு வளர்ச்சி, சுதந்திரம் ஆகியவை வேண்டியிருக்கின்றன. இதற்கு நாம் அரசாங்கத்தாரைக் குறைகூறிக்கொண்டிருப்பதுமட்டும் போதாது. நமது வீழ்ச்சியிலிருந்து மீட்சிபெறவேண்டுமானால், நாமும் நம் விவசாயத்தை அபி



விருத்தி செய்யவேண்டும். தான்ய அபிவிருத்தியுடன் நின்றுவிடக்கூடாது. கரும்பு, பழத்தோட்டம், கறிகாய், பஞ்சு, எண்ணெய் வித்துக்கள் முதலிய பொருள்களை விளைவிக்க வேண்டும். மகாத்மா காந்தியடிகள் கோலிய கிராமப் புனருத்தாரணத் திட்டத்தை அவலம்பிப்பதுடன் தேகத்திற்கு ஆரோக்கியத்தையும், புஷ்டியையும் தரத்தக்க கைக்குத்தலரிசி, செக்கு எண்ணெய், நாட்டு வெல்லம், சர்க்கரை, தேனீவளர்த்தல், பால்பண்ணை அபிவிருத்தி, காகிதம் செய்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், புல் பூண்டுகளையும் மலஜலங்களையும் கழிவுப்பொருள்களாகப் போகவிடாமல் சரியான முறையில் எரு தயாரித்தல் முதலிய விஷயங்களிலும் கவனத்தைச் செலுத்திப் பயனடைய வேண்டும்.

மேற்கூறிய அனைத்தையும் செய்து முடிக்கவேண்டுமானால், மக்களிடையே பலமும் ஆதரவும் தேடவேண்டும். அதற்குக் காங்கிரஸ் சபைகளைப் பலப்படுத்தி, வேலை முறையை வகுத்துக்கொண்டு, திட்டத்தை நிறைவேற்றப் பயிற்சிபெற்ற தொண்டர் குழாங்களை நிறுவி, அன்பு, அஹிம்சை, தியாகம், பணிவு, சேவை இவைகளைக் கைப்பிடித்து, நம் நாட்டிற்கும் உலகிற்கும் தொண்டாற்ற வேண்டும்.

**சமூகத்தொண்டின் மேன்மை**

நாம் இங்கு உற்சாகமாகக்கூடிப் பிரிவதில் பயனில்லை. உண்மையில் நம் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டு வராவிட்டால், நம் காலத்தையும், பொருளையும் வீணாக்கினவர்களாகக் கருதப்படுவோம்.

தேசமென்பது கேவலம் சந்தைக்கூட்டமல்ல. அது ஒரு சமுதாயத்தின் சங்கம். பொது உரிமையும் சுதந்திரமு

மின்றி தேசம் கிடையாது. அப்போது உரிமையும் சுதந்திரமும், ஜாதிபேதத்தாலும், வகுப்புப் பிரிவினாலும், சமூக ஏற்றத்தாழ்வினாலும், தடைபடுகின்றன. சமுதாயத்தைச் சேர்ந்த பெரும்பாலாருடைய கல்வியறிவும் சாமர்த்தியமும் மேல் ஓங்காதவாறு குன்றிவிடுகின்றன. பொதுவான ஒரு தர்மத்தை அவலம்பிக்காமலும் அங்கீகரிக்காமலும் இருக்கும் சமுதாயத்தைச் சேர்ந்த இடம் தேசமல்ல. அத்தகைய நிலையிலிருப்பவர்களை ஒரு சமுதாயத்தாரென்று கூறுதல் ஒவ்வாது. அவர்கள் ஏதோ தெய்வகதியாக ஓரிடத்தில் சேர்க்கப்பட்ட மனிதவர்க்கமேயன்றி, ஒரே ஞேயமும், ஒரே நோக்கமும், ஒரே உணர்ச்சியும்கொண்ட சமுதாயத்தாரல்ல. தேசமே ஒரு பெரிய கோயிலாக நமக்கு இருக்க வேண்டும். அக்கோயிலுக்கு மக்களே அஸ்திவாரம். தேச மக்களில், படிப்பில்லாத ஒருவன் இருக்கும் வரையில், வாக்குரிமை பெறாதவனொருவன் இருக்கும் வரையில், வேலையின்றிக் கஷ்டப்படுபவன் ஒருவனிருக்கும் வரையில், உரிமையின்றி அடிமையாக ஒருவனிருக்கும் வரையில், அது ஒரு நாகரீக தேசமாகமாட்டாது.

வாக்குரிமை, கல்வி, வேலை, உரிமை—இந்நான்கும் ஒரு தேசத்தின் தூண்கள். அத்தூண்களை நன்கு நிறுத்துவதற்குரிய ஆதாரங்களைத் தேடவேண்டும். ஆகவே, தேசத்தைக் காப்பாற்றும் விஷயத்தில், சமுதாயத்தைச்சேர்ந்த ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்யவேண்டும். ஆதலின், "எழுமின்! விழிமின்! கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின்!"

"எவ்வுயிர்க்குயிரா மீசன் யிணையடி வாழ்க! அய்யன்
செவ்விய வடிவ மாகும் இருவரு ளியற்கை வாழ்க!
அவ்விரு தொடர்பு கொண்ட அடிகளார் காந்தி வாழ்க!
இவ்வுல கெங்கு மன்னர் இயல்அற நெறியே வாழ்க!

## 10. அலுவலாளர் கடமை

நான் இன்று பேசப்போவது கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள் இம்மாதம் 15-ம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்யப்போவதுபற்றி. தங்களுக்கு அதிகச் சம்பளமும் அலவன்ஸும் கொடுக்கவேண்டுமென்று சர்க்காரை நிர்ப்பந்திப்பதற்காக அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள். சென்ற வருடக் கடைசியில் தான் மந்திரி சபையின் சப் கமிட்டி ஒன்று இவ் விஷயத்தைப்பற்றி தீர ஆராய்ந்து, சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும்—பெரும்பாலாருக்கு நூற்றுக்கு ஐம்பது வீதமும், சிலருக்கு இன்னும் அதிகமாகவும்—சம்பளத்தை அதிகரிக்குமாறு சிபார்சு செய்தது என்பதை இந்தச் சமயத்தில் உங்களுக்கு நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன். அவ்வாறு கொடுத்த சம்பள உயர்வால், சர்க்காருக்கு 3½ கோடி ரூபாய் அதிகச் செலவு ஆயிற்று. அதோடு ரூ. 40-க்குக் கீழ் சம்பளம் பெறுபவர்களுக்கு ரூ. 16-ம், ரூ. 100-வரை சம்பளம் பெறுபவர்களுக்கு ரூ. 18-ம், ரூ. 100-க்குமேல் சம்பளம் வாங்குபவர்களுக்கு 17½ சதவிகிதமும் பஞ்சப்படி கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் பஞ்சப்படி கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளத்தில் சுமார் 100-க்கு 100 வீதம் ஆகிறது. சமீபத்தில்தான் செக்ரடேரியட் உத்தியோகஸ்தர்கள் சங்கம் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக பயமுறுத்தி, பின் வாபஸ் பெற்றார்கள். சர்க்கார் பஞ்சப்படி விஷயத்தையும், வீட்டு வாடகை அலவன்ஸ் விஷயத்தையும் மீண்டும் கவனித்து, சம்பள அதிகரிப்பைப்பற்றிய சர்க்கார் உத்தரவிலுள்ள குற்றங் குறைகளை நீக்குவதுபற்றி இப்பொழுது ஆலோசித்துவருகிறார்கள். மாகாணத்தின் பொருளாதார நிலைமை சீர்ப்பட்டவுடன் அடிப்படைச் சம்பளத்தை மாற்றுவது

பற்றியும் கவனிக்கப்படும். இவை எல்லாம் கெஜட் பதிவில்லாத எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் சாரும். அப்படி இருந்தும் கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள் சங்கம் இம்மாதம் 15-ம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்வதாகத் தீர்மானித்திருக்கிறது. எந்த சர்க்காரும் அதன் ஊழியர்கள் இம்மாதிரி நடந்துகொள்வதைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது.

இச் சந்தர்ப்பத்தில் சர்க்கார் தன் ஊழியர்களுக்கு மட்டும் சம்பளமாக ரூ. 24 கோடி கொடுக்கிறது என்பதை நான் உங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். இவ் வருடத்தில் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்காக ஒருகோடி ரூபாய் செலவாகும். புதிதாக நியமிக்கப்போகும் 'ஹோம்கார்ட்ஸ்', 'சிவில் கார்ட்ஸ்' 'ஸ்பெஷல் போலீசு' ஆகியவற்றிற்குச் சுமார் மூன்றுகோடி ரூபாய் செலவாகும். இம் மாகாணத்தின் சராசரி வருமானம் ரூ. 48 கோடி என்று இம்மாகாண மக்கள் அறிவார்கள். 1948-ம் வருடம் அக்டோபர் மாதத்துடன் மாகாணம் பூராவும் மதுவிலக்கு அமுலுக்கு வருகிறது. அதன் மூலமாக சர்க்காருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ. 17 கோடி நட்டம். மதுவிலக்கை அமுலில் கொண்டு வருவதற்கு வருடம் ஒன்றுக்கு இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாய் செலவாகும்.

மொத்தத்தில், சர்க்காரின் வருமானத்தின் பெரும் பாகம் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காகத்தான் இருக்கும். அதனால், கல்வி, கிராமப்புனருத்தாரணம், வைத்திய வசதி, குடிதண்ணீர்த் திட்டம், ரோடுகள், நீர்ப்பாசன வசதி முதலிய தேசமுன்னேற்றத்திற்கு வேண்டிய பணிகளுக்கு அதிகப் பணம் இருக்காது. இந்த வருடத்தில் சம்பளத்திற்காகச் செலவழியும் பணத்தை



1939-40-ம் வருடத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தால் இந்த விஷயம் தெளிவாகும். அவ் வருடத்தில் சம்பளச் செலவு ரூ. 8 கோடி 16 லக்ஷம். இவ் வருடத்தியச் செலவு அதைப்போல் 3 அல்லது 4 மடங்கு அதிகம்.

மாகாணத்தின் தற்போதைய செல்வ நிலைமையில் சம்பளங்களையும் அலவன்ஸ்களையும் இன்னும் அதிகரிக்க முடியாது. நமது வரிகள்மூலம் வருமானம் அதிகரிக்காது. வருமானவரி சுங்கவரி முதலிய சுலபத்தில் அதிகரிக்கக் கூடிய வரிகளை விதிப்பதால் மத்திய சர்க்கார் வருமானம் அதிகமாயிருக்கிறது. ஆகையால், அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க முடிகிறது. மத்திய சர்க்கார் கொடுக்கும் அளவுக்கு நாம் ஏன் கொடுக்கக்கூடாது என்பவர்களுக்கு நான் கூறும் பதில் இதுதான். இப்பொழுதிருப்பதைவிட வரி விகிதத்தை அதிகமாக்கவோ, புதிய வரிகள் விதிக்கவோ நம்மால் முடியாது. வரி கொடுப்பவர்களுக்கு நாம் இப்பொழுது எதுவும் அதிக சௌகரியங்கள் செய்து கொடுக்கவில்லை. அவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும் விலைவாசிகள் உயர்ந்ததால் உண்டான நிலைமையைச் சமாளிக்கக்கூடிய வகையில் இருப்பதாக எண்ணக் காரணங்கள் எதுவும் இல்லை.

இம்மாதிரி சந்தர்ப்பத்தில்தான் கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள் அதிகச் சம்பளத்துக்காக வேண்டி வேலை நிறுத்தமும் செய்யத் துணிந்திருக்கிறார்கள். அவ்வாறு செய்வதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா என்பதை யோசித்துத் தீர்மானிக்கும்படி இம்மாகாண மக்களுக்கே விட்டுவிடுகிறேன். குறைந்த சம்பளம் வாங்கும் தங்கள் ஊழியர்களிடம் சர்க்காருக்கு எவ்வளவுதான் அனுதாபம் இருந்தபோதிலும், அவர்கள் சாதாரண கிராம வாசியைக் காட்டிலும் எவ்வளவோ மேலான உணவு, உடை, வீட்டு

வசதிகள் பெற்று இருக்கிறார்கள் என்பதையும், அவர்களுடைய வருமானம் சாதாரண கிராமவாசியின் வருமானத்தைவிடப் பன்மடங்கு அதிகமானது என்பதையும் நான் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது.

தங்கள் நிலைமையை நன்கு மறுபடியும் ஆலோசித்து, தங்களுக்கும் பொதுமக்களுக்கும் பல துன்பங்களை விளைவிக்கும் வழியில் இறங்கவேண்டாமென்று மறுபடியும் கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதையும் கவனிக்காமல் அவர்கள் வேலைநிறுத்தம் செய்வதாயிருந்தால், இது தங்கள் சர்க்கார் என்பதை மனதில்கொண்டு நிர்வாகம் நடைபெறும் பொருட்டு எல்லா வழிகளிலும் வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இவ் வேலைநிறுத்தம் சர்க்கார் அவர்களுக்குச் செய்யவிருக்கும் தொண்டைச்செய்யவொட்டாதபடி தடுக்கும் முயற்சி என்பதைப் பொதுமக்கள் உணருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

## 11. ஏரி குளங்களைச் செப்பனிடுவோம்

இன்று இந்தியாவின் பிரச்னைகளிலெல்லாம் பெரிய பிரச்னை உணவுப் பிரச்னையே. யுத்தகாலத்திற்கு முன்பே நாம் உணவுப்பொருள்களை ஏராளமாக இறக்குமதி செய்துகொண்டிருந்தோம். வடநாட்டுக்கு வேண்டிய கோதுமை ஓரளவிலும், தென்னாட்டிற்கு வேண்டிய அரிசி சிறிது மிகுந்த அளவிலும் இறக்குமதியாகிக்கொண் டிருந்தன. யுத்தம் வரவே இந்த இறக்குமதியும் நின்றது. தவிர வெளிநாட்டில் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த துருப்புகளுக்காக இங்கிருந்து உணவுப்பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டிய நிலையும் ஏற்பட்டது. இதனாலேயே வங்காளத்தில் பஞ்சமும், தென்னாட்டில் மிகுந்த கஷ்டமான நிலைமையும் ஏற்பட்டதை எல்லோரும் அறிவார்கள்.

### மக்கள் தொகையும் பெருகுகிறது

அதற்குப் பின் நமது தேசம் இரு கூறாகத் துண்டிக்கப்பட்டது. உணவு உற்பத்தியில் உபரியாக இருந்த சிந்து மாகாணமும், மேற்குப் பாஞ்சாலமும் நமக்கு உணவு உதவியளிக்காத வழியில் போய்விட்டன. இதனிடையில் மக்கள் தொகையும் பெருகிக்கொண்டே வருகின்றது. வருடா வருடம் சென்னை மாகாணத்தில் மட்டும் ஐந்து லட்சம் பேர் அதிகமாகிக்கொண் டிருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு தேடியாக வேண்டும். ஆண்டுதோறும் சுமார் 100 கோடி ரூபாய்க்குமேல் உணவுப்பொருள்கள் இறக்குமதி செய்வதற்காகச் செலவு செய்து வருகிறார்கள். இங்கிலாந்தில் நமக்கிருந்த ஸ்டர்லிங் மிச்சமெல்லாம் கரைந்து வருகிறது. இன்னும் எவ்வளவு நாளைக்குத்தான் இப்படிப் போக முடியும்?

## தொலையாத அன்ன விசாரம்

உணவுப்பொருள்களுக்காக 100 கோடி ரூபாய்க்கு மேல் செலவுசெய்து வருவதால் நமது தொழில்வளர்ச்சிக்கு வேண்டிய இயந்திரங்களை, முக்கியமான மூலப்பொருள்களை வேண்டிய அளவு இறக்குமதிசெய்ய முடியாத நிலைமையிலிருக்கிறோம். இதனால் நமது பொருளாதார வளர்ச்சி தடைபட்டுவிட்டது. உலகத்தில் யுத்தத்தினால் சீர்கேடடைந்த பல தேசங்கள் அவற்றைச் சமாளித்துக் கொண்டு இப்பொழுது தலைதூக்கி நிற்கின்றன. அவைகள் உணவுப் பிரச்னையை ஒருவாறாகத் தீர்த்துக்கொண்டு, இரந்தோ, கடன்பட்டோ, எப்படியும் பொருளாதார நிலைமையைச் சரிக்கட்டிக்கொண்டு ஏற்றுமதி செய்வதற்கும் முன்வந்துவிட்டன. நாமோ, அன்னவிசாரம் அதுவே விசாரமாக இன்னும் இருந்து வருகிறோம்.

## நமது தேவை என்ன?

நமது மாகாணத்தைப் பொறுத்தவரையும் நிலைமை எப்படி இருக்கிறது? அதை நிவர்த்திக்க என்ன செய்ய வேண்டும் என்பதைக் கவனிக்கவேண்டியது நம்மில் எல்லோருடைய கடமையுமாகும். இப்பொழுது நம் மாகாணத்தின் ஜனத்தொகை 5,38,46,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில் நூற்றுக்கு 81·2 பேர் வயது வந்தோர்கள் என்பது கணக்கு. வயது வந்தவர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒரு ராத்தல் அல்லது 16 அவுன்ஸ் உணவு வீதம் கணக்குப் பார்த்தால் 71,23,000 டன் ஒரு வருஷத்திற்கு வேண்டும். 1948-49-ல் உற்பத்தியானது 64,66,000 டன் உணவுப் பொருள்தான். ஆகவே, குறைந்தது 6½ லட்சம் டன் நம் மாகாணத்தில் பற்றாக்குறையாக இருக்கிறது. இந்த 16 அவுன்ஸ் விகிதம்கூடக் குறைவானது



தான். யுத்தத்திற்கு முன் நாம் கிட்டத்தட்ட சராசரி' உற்பத்தியும் இறக்குமதியும் உள்பட தலைக்கு 20 அவுன்ஸ் உட்கொண்டு வந்திருக்கிறோம். இந்த 20 அவுன்ஸ் விகிதாசாரத்தை உடனடியாக மீண்டும் பெற முடியாதுபோனாலும் நம்முடைய மக்களுக்கு 16 அவுன்ஸ் விகிதமாவது கொடுத்துத்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் மக்கள் வலியிழந்து, நோய் மிகுந்து நடைப் பிணங்களாக ஊர்ந்து செல்லும் நிலைமை ஏற்படும்.

## பல திட்டங்கள்

நாம் உடனடியாக அதிக உற்பத்தி செய்யவேண்டியது சுமார் 6½ லட்சம் டன் உணவு தானியமாகும். இந்த 6½ லட்சம் டன் உணவு தானியத்தையும் அதற்கு மேலாகவும் உற்பத்தி செய்வதற்குச் சென்னை மாகாணத்தில் எத்தனையோ திட்டங்களிருக்கின்றன. நல்ல விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட விதைகளை விவசாயிகள் உபயோகித்தால் மட்டுமே இந்த அதிக உற்பத்தி கிடைத்துவிடுமென்று நிபுணர்கள் கூறுகிறார்கள். ரசாயன எருக்களைத் தகுந்த அளவில், உகந்த முறையில் போட்டுப் பயிர் செய்தாலும் பற்றாக்குறை நீங்குவதற்குப் போதுமானதாகும். கிணறுகளைப் பெருக்கி, உழவர்கள் திருந்தப் பயிர் செய்வார்களானால், அதனாலும் மிக்க பலன் கைகூடும். துங்கபத்ரா, பவானி ஆகிய இரண்டு நீர்ப்பாசனத் திட்டங்கள் முற்றுப்பெற்றால் வருடமொன்றுக்குச் சுமார் 3லட்சம் டன் உணவு உற்பத்தியாகலாம். சாகுபடியாகாமல் கிடக்கும் 4 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை டிராக்டர் முதலிய இயந்திரக் கருவிகளைக்கொண்டு உழுது சாகுபடி செய்வதாலேயே 2 லட்சம் டன் உணவு தானியம் உற்பத்தியாகலாம். இன்னும் கிருஷ்ணா - பெண்ணாறு திட்டத்தாலும், ராமபாதசாகர் திட்டத்தினாலும் 50 லட்சம் ஏக்கருக்குமேல்

சாகுபடியாகலாம் என்று நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் முடிவடைந்தால், நம் மாகாணத்தின் உணவுப் பற்றாக்குறை நீங்குவதோடு உபரி உற்பத்தியும் உண்டாகக் கூடும்.

### காலம் பிடிக்கும்

ஆனால், இவையெல்லாம் உடனடியாக முடிவடைந்து பயன்தரக்கூடிய திட்டங்களா? விஞ்ஞான முறையில் தயாரித்த விதைகளை விவசாயிகளுக்கு வேண்டுமளவு தயாரித்துக் கொடுக்க எவ்வளவுதான் திட்டமிட்டாலும் அது பூர்த்தியடைவதற்குப் பல வருடங்களாகும். அத்தகைய உயர்ந்த விதைகளை விவசாய இலாகா வேண்டிய அளவுக்கு உற்பத்தி செய்தாலுங்கூட விவசாயிகளுடைய பழக்க வழக்கங்கள் மாறி புதிதாக வந்த விதைகளை உபயோகிக்கும் அறிவும் மனப்பான்மையும் வருவதற்குக் காலம் பிடிக்கும். அப்படியே வந்தாலும், புதுவகையான விதைகளைத் தகுந்த காலத்தில் வாங்கி வைத்துக்கொள்ளும் பணவசதியும், தானிய சேமிப்பு வசதியும் பெரும்பாலான ஏழை விவசாயிகளுக்கு ஏற்பட பல வருடங்களாகும். எனவே, இந்தத் துறைகளில் உடனடியான வெற்றி காண முடியாது. விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட விதைகளை உற்பத்தி செய்தல், விநியோகம் செய்தல் என்ற திட்டத்தினால் நம் பற்றாக்குறைப் பிரச்னையை உடனடியாகத் தீர்த்துவிட முடியாது.

விஞ்ஞான முறையில் தயார் செய்த விதைத் திட்டத்தினால் எவ்வாறு உணவுப் பிரச்னையை விரைவில் தீர்க்கமுடியாதோ அவ்வாறே விஞ்ஞான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட எருக்களை உபயோகிக்கும் திட்டத்தாலும் இயலாது. போதிய இரசாயன எரு நம் நாட்டில் உற்பத்தியாவதில்லை.



நமது நாட்டில் மட்டுமல்ல, உலக உற்பத்தியே குறைவாகத்தான் இருக்கிறது. அவைகளை இறக்குமதி செய்தாகவேண்டும். அதற்கு டாலர் போன்ற தட்டுமுட்டான நாணயக் கையிருப்பு வேண்டும். இவையெல்லாம் இப்பொழுது மிக நெருக்கடியான நிலைமையிலிருக்கின்றன.

### கிணறு வெட்டச் செலவு செய்த ரூ. 5 கோடி

கிணறு தோண்டும் திட்டத்தினால் உடனடியாக நன்மை உண்டாவது உண்மையே. ஆயினும், சென்ற ஐந்து வருடங்களில் இந்தத் துறையில் செய்த வேலையையும், அதில் ஏற்பட்ட பலாபலன்களையும் கவனித்தால், கிணறு வெட்டும் திட்டத்தினால் மட்டும் நம்முடைய பிரச்சினை தீர்ந்துவிடாது என்பது நன்கு விளங்கும். 1944-லிருந்து 1948-49 வரை ரூ. 5,07,00,000-க்கு மேல் கிணறு வெட்டும் மானியமாக சென்னை அரசாங்கத்தார் வழங்கியிருக்கிறார்கள். அதன் பலனாக ஏற்பட்ட அதிக உற்பத்தி ஏறக்குறைய 50,000 டன்னுக்குமேல் இருக்காது. நமது பற்றாக்குறையோ கிட்டத்தட்ட ஏழு லட்சம் டன் அளவாக இருக்கிறது.

### உடனடியாகப் பிரச்சினை தீராது

இனி சிறியவும் பெரியவுமான மராமத்து நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக்கொள்வோமானால், அவை முடிவடைந்து பயன் தருவதற்குப் பல வருடங்கள் ஆகும். துங்கபத்ரா, கீழ் பவானி ஆகிய இரண்டு திட்டங்களும் முடிவடைய இன்னும் சுமார் ஐந்தாறு ஆண்டுகளாகும். 25 கோடி ரூபாய் வரையில் செலவாகும். எவ்வளவோ இயந்திரங்கள் அயல் நாடுகளிலிருந்து வரவேண்டியிருக்கின்றன. எத்தனையோ நிபுணர்கள் வேண்டும். காலாகாலத்தில் இயந்திரங்கள் வரத் தவறிவிட்டால் வேலைகள் முடிவடை

வதில் தாமதப்படும். இவற்றிற்கே இப்படியானல், கிருஷ்ணு - பெண்ணுறு, ராமபாதசாகர் போன்ற திட்டங்கள் முடிவடைய பத்து முதல் பதினைந்து வருடங்களாகலாம். ரூபாய் 200 கோடிக்குமேல் 300 கோடி வரையிலும் செலவாகும். இவற்ருல் நமது உடனடி உணவுப் பிரச்னை தீருவதற்கில்லை.

### சிறுமராமத்து வேலைகளின் பலன்

மராமத்து இலாகாவின் மேற்பார்வையிலும் ரெவின்யூ இலாகாவின் மேற்பார்வையிலும் சில சிறு நீர்ப்பாசனத் திட்டங்களிருக்கின்றன. பாசனங்களைப் பழுது பார்ப்பதால் அதிக உற்பத்தி ஏற்படுகிறது. சென்ற ஐந்தாண்டுகளில் இந்த வகையில் ரூ. 91 லட்சம் செலவில் 150 வேலைகள் வரை செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. இவற்ருல் ஏற்பட்ட அதிக உற்பத்தி 2,88,000 டன் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

எனவே, இதுவரை அதிக உணவு உற்பத்தித் திட்டத்தில் செய்த வேலைகளிலெல்லாம் இந்தச் சிறு மராமத்துத் திட்டங்களில் செய்த முயற்சியே விரைவில் பலன் கொடுத்திருக்கிறது.

### முக்கியமான திட்டம்

ஆனல், இதனினும் விரைவாகவும், இதனிலும் அதிகப் பலன் கொடுப்பதாகவும் இன்னெரு திட்டமிருக்கிறது. அந்தத் திட்டத்தை அரசாங்கத்தார் நிறைவேற்றுவார்களானல், அது நமது மாகாண உணவுப் பற்ருக்குறை விரைவில் தீர்வதோடு சிறப்பாக விவசாய மக்களுக்கும், பொதுவாக எல்லோருக்கும் நிரந்தரமான நன்மையும் உண்டாகும் என்று நான் நம்புகிறேன். அதுதான் ஏரி, குளங்களைப் பழுது பார்க்கும் திட்டம்.



இந்த ஏரி, குளங்கள் தென்னுட்டுக்கே சிறப்பாயமைந்தவை. சில மிகச் சிறியவை; சில பிரம்மாண்டமானவை. சிறியவும் பெரியவுமாக மாகாணம் முழுதும் 35,000 இருக்கின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இவற்றுள் ரயத்துவாரி பிரதேசங்களில் 27,000-மும், ஜமீன் பிரதேசங்களில் 8,000-முமாகும். ஏறக்குறைய 35,00,000 ஏக்கரா ரயத்துவாரிப் பிரதேசங்கள் மட்டும் இந்தக் கண்வாய், குளங்களால் நீர்ப்பாசனம் பெறுகின்றன என்பது அரசாங்கக் கணக்கு. இவற்றுள் எத்தனையோ பழுதாய்க் கிடக்கின்றன. பல தூர்ந்துவிட்டன. ஒரு சில மானுமாரிப் புன்செய் நிலங்களாகி விட்டன. சில வருடங்களுக்கு முன்வரையில் அரசாங்கத்தார் ஆண்டுதோறும் வெளியிடும் பருவநிலை விளைச்சல் அறிக்கையில் இத்தனை ஏரி, குளங்கள் பழுதாகக் கிடக்கின்றன என்ற விளக்கம் வருவதுண்டு. ஆனல் சென்ற பத்துப் பதினைந்து வருடங்களாக இந்தக் கணக்கும் வருவதில்லை. எனவே, இந்த 35,000 கண்வாய்களில் எத்தனை, என்னென்ன நிலைமையில் இருக்கின்றன வென்பதைத் தெரிவிக்கக்கூடத் தகுந்த புள்ளி விவரங்களில்லை. அதிலும் ஜமீன்களுக்குட்பட்ட ஏரிகளைப்பற்றி ஏதுமே தெரியாத நிலைமையிலிருக்கிறேம்.

### தூர்ந்தவை அநேகம்

காலப்போக்கில் அரசாங்கத்தாருடைய கவனக் குறைவால் எத்தனையோ ஆயிரம் ஏரி, குளங்கள் தூர்ந்துவிட்டன என்பதற்குப் பல சான்றுகளைக் காட்டலாம். 1852-வது ஆண்டில் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட மராமத்துக் கமிஷன் அறிக்கையில் 14 ரயத்துவாரி ஜில்லாக்களில் மட்டும் 53,000 ஏரி, குளங்கள் இருந்தனவென்றும், இவற்றுள் 43,000 பழுதாக இருந்தனவென்றும்

குறிக்கப்பட் டிருக்கின்றது. இந்த 14 ஜில்லாக்களில் தஞ்சாவூர் சேரவில்லை. இப்பொழுது 22 ஜில்லாக்கள் சேர்ந்துமே 35,000 கண்வாய்கள் இருக்கின்றனவென்றால், ஒன்றுக்குப் பாதிக்குமேல் பாழடைந்து விட்டன என்பதை எவரும் மறுக்க முடியாது.

இப்படியாக ஆயிரக் கணக்கான ஏரிகள் தூர்ந்து விடுமா என்று கேட்டால், காலக் கதியில் கவனியாவிட்டால் தூர்ந்துதான் விடுமென்பதை எஞ்சினீயர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். சென்னை மாகாணத்தின் நீர்ப் பாசனத் தலைமை எஞ்சினீயராயிருந்த கர்னல் எல்லிஸ் என்பவர் 1926-ல் வெளியிட்ட நீர்ப்பாசனம் என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் :—"தென்னிந்தியாவிலுள்ள ஏரி, குளங்கள் வெகு நாட்களாக வெகு விரைவாகத் தூர்ந்து வருகின்றன. ஏரிகள் பலவற்றில் நூற்றுக் கணக்கான வருடங்களாக வண்டல் படிந்துள்ளது. அதனால் அவற்றில் முன்னளவு இப்பொழுது நீர் பெருகுவதில்லை. இது பயிர்களுக்குப் பெரிய நட்டத்தை உண்டாக்குகிறது. இதைத் தடுக்க இதுவரையும் சரியான திட்டமொன்றும் வகுக்கப்பட வில்லை. இப்படியே போய்க் கொண்டிருக்குமானால், காலம் செல்லச் செல்ல நிலைமை மிகவும் மோசமாய்விடும்."

## இனியும் அலட்சியமாயிருந்தால்?

மேலும் தக்க காலத்தில் பழுது பார்க்காவிட்டால் எத்தனை வருடங்களில் ஏரி குளங்கள் இருந்த இடம் தெரியாமல் தூர்ந்துவிடும் என்றும் அவர் கணக்குப் போட்டிருக்கின்றார். 50 கோடி கன அடியுள்ள ஒரு ஏரியானது 250 வருடங்களிலும், 8 கோடி கன அடி அளவுள்ள ஒரு ஏரி 40 வருடங்களிலும் அலட்சியத்தால்



ஒன்றுக்குப் பாதி தூர்ந்து விடுமாம். இதிலும் தென்னாட்டுக் குளங்கள் சங்கிலித் தொடர்போல் வரிசையாக அமைந்திருப்பதால், மேல் கண்ணாறுகளிலுள்ள பெரிய ஏரிகள் கீழ்க் கண்ணாற்றிலுள்ள ஏரிகளைவிட விரைவில் தூர்ந்து விடுகின்றன. எனவே, இன்னும் சில காலம் அலட்சியமாக இருப்போமேயானால், இந்த 35,000 குளங்களிலும்கூட எத்தனையோ உருத்தெரியாத முறையில் நிரந்து மண்ணோடு மண்ணாகி விடும்.

## மூதாதைகள் வைத்துப்போன பொக்கிஷங்கள்

இந்தக் குளங்கள் தென்னாட்டிற்கு நம் முன்னோர்கள் வைத்துப்போன விலைமதிப்பற்ற பொக்கிஷங்கள். இவற்றில் பல மிகப் பிரம்மாண்டமானவை என்றும் சில சிறியனவென்றும் சொன்னோம். சிறியனவாயும் பெரியனவாயும் உள்ள அவை மிகப் பழைமை வாய்ந்தவை. அவைகள், என்று அமைக்கப்பட்டனவென்று தம் வாழ்நாளில் கண்டதாகச் சொல்ல ஒருவருமில்லை. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கும் முன்னே வாழ்ந்ததாகச் சொல்லப்படும் தொல்குடி மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் பல ஏரிகளை வெட்டினர். உலகத்திலேயே நீர்ப்பாசனத் திட்டங்களை முதல் முதல் வகுத்தவர் சோழ மன்னர்களென்று சரித்திரம் கூறுகின்றது. பின்னே வந்த பல்லவ, சாளுக்கிய, ஹோய்சால, விஜயநகர மன்னர்கள் பற்பல ஏரிகளை அமைத்தனர். பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் வேலையில்லாத மக்களுக்கு வேலையளிக்கும் பெரிய பொருளாதார சாதனமாக அமைந்ததுபோலும், ஏரி தோண்டும் பணி. இறைவன் திருப்பணியோடும் ஏரியைப் பெருக்கும் பணி இணைக்கப்பட்டது. திருப்பதி தேவஸ்தானத்தைப்பற்றிய கல் வெட்டுகளைப் பார்த்தால்

எத்தனையோ நிலங்கள் ஏரி, குளம் தோண்டும் பணிக்காக மான்யமாக வழங்கப்பட்டிருப்பது தெரிகிறது. அரசர்களும் இதில் ஈடுபட்டனர்; பொதுமக்களும் ஈடுபட்டனர். இருவருடைய ஊக்கத்தாலும், ஒத்துழைப்பாலும் எழுந்தவை இன்று நாடெங்கும் கிடக்கும் நிதியங்களான பெரிய ஏரி குளங்கள். இவற்றைப்பற்றி நாட்டுப்புறங்களில் வழங்கும் கர்ண பரம்பரையான கதைகள் எத்தனையோ!

## கொல்லபாமா தியாகம்

சமீபத்தில் வானொலி மூலம் இவைகளின் பெருமையை எடுத்துச் சொன்ன மராமத்து இலாகா மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம், நெல்லூரில் அனந்தசாகரம் எனப்படும் ஏரி ஏற்பட்ட வரலாற்றைப்பற்றி ருசிகரமான ஒரு கதை சொல்லியிருக்கிறார். விஜயநகர மன்னர் மன்னரான கிருஷ்ணதேவராயருடைய மந்திரியின் மைந்தன் ஒருவனை கொண்டமுரசு என்பானைக் குதிரை வாங்க அரசன் நெல்லூர்ச் சீமைக்கு ஏவினான். குதிரை வாங்கச் சென்ற கொண்டமுரசு மக்கள் படும் வறுமையைக் கண்டு பெரியதொரு குளம் வெட்டினான். ஏரிப்பணி முடியக் கன்னி ஒருத்தியைப் பலியிடுவது இன்றியமையாததாகிவிட்டது. கொல்லபாமா என்ற இடைச்சிறுமி வலியவந்து உயிரைப் பலி கொடுத்தாளாம். என்னே மாதர்தம் தியாகம்! கொல்லபாமா ஏரிக்கரையில் இன்றும் தெய்வமாக நின்று அடியார் வணக்கம் கொள்ளுகிறாள். பரி வாங்கிச் செல்ல விரைந்த மந்திரி மைந்தன் வாராமையைக் கண்டு நேரில் சென்று விசாரிக்கவே, குதிரைக்கு ஈடாக மேலான பெருங்குளத்தைக் கண்டான் கிருஷ்ணதேவராயன். மந்திரி மைந்தன்பால் சினந் தணிந்தான்; தனது தம்பியாகிய அனந்ததேவராயன் பெயரை அந்த ஏரிக்குச் சூட்டினான்.



அது இன்னும் 'அனந்த சாகரம்' என்ற பெயர்கொண்டு 4,000 ஏக்கர் நஞ்சைக்கு நீர் வழங்கி வருகின்றது. குதிரை வாங்கச் சென்ற பணத்தைக் கோயில் கட்டிய மணிவாசகப் பெருமான் கதையைக் கொண்டமுரசு வரலாறு நினைவூட்டுகிறது. இங்ஙனமாக ஏரிகளைப்பற்றிய கதைகளும் தியாகச் செயல்களும் எத்தனையோ தென்னாட்டில் நிலவுகின்றன.

## 350 கோடி ரூபா சொத்து

15 ஜில்லாக்களிலுள்ள கண்வாய்கள்மட்டும் 15 கோடி ரூபாய் பெறுமான சொத்து என்று 100 வருடத்திற்கு முன் கம்பெனியார் கணக்கிட்டார்கள். இன்று நாடெங்குமுள்ள கண்வாய்கள் 350 கோடி ரூபாய் பெறுமான சொத்தென்று மதிப்பிடுகிறார்கள். சுமார் 35,00,000 ஏக்கரா ரயத்துவாரிப் பிரதேசங்களில் மட்டும் ஏரி, குளங்களால் சாகுபடியாகின்றது. ஆண்டொன்றுக்கு 95 லட்சம் ரூபாய்க்குமேல் தண்ணீர் வரியாகமட்டும் இந்த ஏரி குளங்கள் மூலம் அரசாங்கத்துக்கு வருமானம் வருகிறது.

## காட்டன் இடித்துரைத்தார்

இந்த ஏரிகளின் முக்கியத்துவத்தையும் தென்னாட்டுக்கு அவற்றால் உண்டாகும் தனிச் சிறப்பையும் இன்றியமையாத் தன்மையையும் முதல் முதல் எடுத்துச் சொன்னவர், கிழக்கிந்தியக் கம்பெனியில் வேலைபார்த்த சர். ஆர்தர் காட்டன் என்னும் சிறந்த எஞ்சினீயராகும். அவர், கம்பெனியார் இவற்றின்மேல் கவலைகொள்ளாது இருப்பதை அச்சமின்றி மேற்சென்று இடித்துக் காட்டினார். விவசாய முறையில் தென்னாடு வடநாடுபோலில்லை என்று விளக்கினார். வடநாட்டிலே மழையாலும், பனியாலும் வருடத்தில் ஒன்பது மாதங்களில் நிலங்கள் சாகுபடி

யாகின்றன. தென்னாட்டிலோ எப்பொழுதும் வானையே நோக்கி உழவர்கள் வாழவேண்டியிருக்கிறது. வான் சிறக்கும் கால் நீரை வகுத்துத் தேக்கி வைத்துக்கொள்ளாவிட்டால் பருவமழையில்லாத காலங்களில் பயிர் செய்வது அரிதாய்விடும். இந்த நுட்பத்தை அறிந்தல்லவோ நம் மூதாதையர் ஏரி, குளங்களைத் தோண்டியமைத்தனர்!

சர். ஆர்தர் காட்டன் எடுத்துரைத்த அறிவுரைகளைப் பின்னே 1852-ல் வந்த மராமத்துக் கமிஷனும் ஆமோதித்தது. ஆயினும், பல வருடங்கள் உருப்படியான வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. 1880-ல் பஞ்சக் கமிஷன் அதிகாரிகள் விடுத்த அறிக்கையில் ஏரி குளங்கள் பழுது பார்க்கப்பட வேண்டியதைப்பற்றி மீண்டும் வற்புறுத்தினார்கள். ஏரி, குளங்களால் விவசாயம் வளர்ச்சியடைவதோடு நாட்டு மக்களுக்கு அவை ஒரு சமூகக்கோட்டையைப் போல் அமைந்திருப்பதையும் எடுத்துக் காட்டினார்கள். பஞ்சம் ஏற்படும் காலங்களில் மக்களைத் தாங்கவல்லனவென்றும் எடுத்துக் காட்டினார்கள். மக்களினத்திற்கு மட்டுமல்ல; மாக்களாகிய ஆடுமாடுகளுக்கும்கூட அவைகள் தாயகமாய் விளங்கின என்பதையும் வற்புறுத்தியுள்ளனர்.

## விபரீத நிலைமை

ரயத்துவாரிப் பிரதேசத்தில் மட்டுமுள்ள 27,000 ஏரி குளங்களால் மாகாணத்துக்கு ஆண்டொன்றுக்கு 95 லட்சம் ரூபாய் தண்ணீர் வரியாக வருகிறதென்று குறிப்பிட்டோம். ஆனால், இதில், இந்த ஏரி குளங்களைப் பழுது பார்க்கும் வகையில் ரூ. 25 லட்சத்துக்குமேல் செலவு செய்யப்படவில்லை; எஞ்சிய 70 லட்சம் ரூபாயும் பொதுநிதிக்கு ஒதுக்கப்பட்டுவிடுகிறது. இப்படி ஒதுக்கப்படுவது



பொருத்தமற்றதென்று சொல்லலாம். ஏனெனில் ஏரி, குளங்களைக் கட்டுவதற்கு அரசாங்கத்தார் எவ்விதச் செலவும் செய்யவில்லை; நம் மூதாதையர் உழைப்பால் ஆயிரக்கணக்கான வருடங்களாய் நம் சொத்தாக இருந்து வருபவை அவை. கோதாவரி அணைக்கட்டு, காவிரிப் பேரணைக்கட்டு, மேட்டூர் அணைக்கட்டு போன்ற நீர்ப்பாசனத் திட்டங்களெல்லாம் பொதுநிதியிலிருந்து பணம் செலவுசெய்து கட்டப்பெற்றவை. அவைகளுக்காக அரசாங்கம் கடன்பட்டுள்ளது. அந்தக் கடனை வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுக்கவேண்டும்; எனவே, அந்த அணைக்கட்டுகளால் சாகுபடியாகும் நிலங்களுக்கு அதிக வரி விதிப்பதும், அதை அரசாங்கப் பொதுநிதியில் சேர்த்துக்கொள்வதும் முறையானதாகும். ஏரி குளங்களைச் செப்பனிடுவதற்கன்றோ முதலில் செலவு செய்யவேண்டும்? ஆனால், நிலைமை என்ன? நேர்மாறாக இருக்கிறது. எந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் அரசாங்கப் பொதுநிதியிலிருந்து கோடிகோடியாகச் செலவு செய்து முடிக்கப்பட்டனவோ, எவற்றிலிருந்து பொதுநிதிக்கு அதிக வருமானம் நியாயமாய் வரவேண்டுமோ, அவற்றில்தான் அதிக மிச்சம் வருவதில்லை. ஆனால், எவை மக்கள் காவலுக்காக எழுந்தன என்று கருதப்படுகின்றனவோ, எவற்றில் லாபநட்டத்தைப் பாராமல் செலவு செய்யவேண்டுமென்ற நியதி இருக்கிறதோ, எவற்றால் அரசாங்கப் பொக்கிஷத்துக்கு லாபம் ஏற்படவேண்டுமென்று எதிர்பார்க்கக்கூடாதென்றிருக்கிறதோ—அந்த ஏரி குளங்களால்தான் அதிக வருமானம் பொதுநிதிக்குச் சேருகிறது. காரணம் அவற்றைச் சரியாகக் கவனியாமல் பழுது பார்ப்பதற்கும் செப்பனிடுவதற்கும் வேண்டிய பொருளைச் செலவு செய்யாமலிருப்பதேயாகும்.

## தவறான வரிவசூல் முறை

இது தவறான வரி வசூல் முறை; தவறான செலவு செய்யும் முறையும்கூட. இந்தத் தவறான வரி வசூலிக்கும் முறையால், அநேக ஏரி குளங்களின்பேரால் அவற்றின் தேக்கத் தகுதிக்கு மிஞ்சிய அளவு ஆயக்கட்டாக அடங்கலில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒன்றிரண்டு உதாரணங்கள் காட்டுகிறேன். தென் ஆற்காடு ஜில்லாவில், திண்டிவனம் தாலுகாவில், கிளியனூர் கிராமமிருக்கிறது. அங்கே பெரிய ஏரி ஒன்று உள்ளது. 1890-ல் நடந்த செட்டில்மெண்டு காலத்தில் பெரிய ஏரியின் ஆயக்கட்டின் பரப்பு 208 ஏகரா என்றிருந்தது. மறு செட்டில்மெண்டு நடந்த காலத்தில் இந்த ஆயக்கட்டு 243·23 ஏக்கராவாகப் பதிவு செய்யப்பட்டுவிட்டது. இத்துடன் இப்பொழுது 48 ஏக்கர் புன்செயில் நன்செய்ச் சாகுபடி செய்யப்படுகிறது. நாலு மாதம் நீர்ப்பிடிப்பு என்று முதல் செட்டில்மெண்டில் கணக்கிட்டிருந்த ஏரி, பிறகு 2½ அடி கலிங்கல் நீர் மட்டம் குறைக்கப்பட்டிருக்கிறது. அதனால் 4 மாத நீர்ப்பிடிப்பு ஏரி சுமார் 2 மாதந்தான் சப்ளை செய்கிறது. பருவ மழை காலத்தில் பரந்து பெய்யாமல் பருவந் தவறி ஏக காலத்தில் ஒரே மழையாகப் பெய்து விடுவதால், ஏரி ஒரு தடவைக்குமேல் நிரம்புவதில்லை. எனவே, நீர்ப்பிடிப்புக் குறைந்தும் ஆயக்கட்டு மிகுந்தும் போய்க்கொண்டிருப்பதால், ஒருபோக சாகுபடிக்கு வேண்டிய ஐந்து மாத நீர்ப்பிடிப்புக்குரிய தேக்கத்துக்குப் பதிலாக 2 மாதத் தேக்கமே இருக்கிறது. இதனால் நல்ல மழை பெய்தாலும் மிகுதியாக நீர் வழிந்து சமுத்திரத்துக்குப் போகிறதே தவிர, ஆயக்கட்டுக்கு 2 மாத சப்ளைக்குமேல் தேங்கும் நிலைமையில் இல்லை. அடிக்கடி பயிர் சாவி ஏற்படுகிறது. அரசாங்கம் விரும்பினால் கலிங்கலையும் கரையையும் உயர்த்தி முன்



இருந்த நிலைமைக்கு ஏரியை 5 மாத நீர்ப்பிடிப்புக்குக் கொண்டுவரலாம். விவசாயிகள் பயிரிடுஞ் செலவுகூடக் கிடைக்காமல் நஷ்டமடைகிறார்கள். பூர்வீகமாக இருந்த ஆயக்கட்டுப் பரப்புக்குக்கூடப் போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. மற்றொரு உதாரணம்: கிருஷ்ணகிரி தாலுகாவிலே, சின்னம்பள்ளி என்ற ஒரு சிறு ஏரி இருக்கிறது. தஸ்தாவேஜில் கண்டபடி இதன் ஆயக்கட்டு 11 ஏக்கர்; இன்றைக்கு அந்த ஏரித் தேக்கத்தால் 3 ஏக்கர் கூட சாகுபடி செய்யமுடியாது. நான்குமுறை பெருகுவதாக எட்டிலிருக்கிறது. ஒருதரம்கூடப் பெருகும் நிலைமையில் இன்றைக்கு இல்லை. இன்னும் எத்தனையோ உதாரணங்கள் காட்டலாம். பெரும்பாலான ஏரி, குளங்களும் இந்த நிலைமையில்தானிருக்கும். தவறான வரி வசூலிப்பு முறையால் தேக்கத்துக்கு மிகுந்த ஆயக்கட்டு விஸ்தீரணம் அடங்கலில்; தவறான செலவு முறையால் வண்டல் படிந்து தூர்ந்து வரும் நிலைமை; இப்படியாக மத்தளத்துக்கு இருபுறம் இடி யென்ற நிலைமையில் இருக்கிறது, ஏரி குளங்களும் அவற்றால் நடக்கும் விவசாயத்தின் நிலைமையும்.

கலிங்கலை உயர்த்தி ஆயக்கட்டை விஸ்தரிக்க எண்ணுங்கால், மராமத்து இலாகா தவறான ஊகங்களுடன் சில காரியங்களைச் செய்யத் தொடங்குகிறது. விளைச்சல் ஒன்றுக்கு ஏரிகள் மும்முறை பெருகுவதாக எண்ணுகிறார்கள். ஆனால், இயற்கைக் கோளாறுகளினால், முன்னர்ப் போல் இப்போதெல்லாம் மும்முறை பெருகுவதில்லை. ஒரு முறைக்குமேல் பெருகுமென எதிர்பார்க்க முடியாது. இரண்டாவதாக, ஒரு அடி கலிங்கலை உயர்த்துவதால் அந்த அளவுக்கு அதிகத் தண்ணீர் தேங்குமென எண்ணி ஆயக்கட்டை உயர்த்த முற்படுகின்றனர். உண்மைநிலையை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதையே இது காட்டு

கிறது. இப்போதுள்ள ஆயக்கட்டுக்கே ஏரிகள் தண்ணீர் சப்ளை செய்யும் நிலையில் இல்லை. கலிங்கலை உயர்த்துவதால் இருக்கும் ஆயக்கட்டு நன்றாகத் தண்ணீர் சப்ளை செய்ய முடியும். எனவே, இன்னும் ஆயக்கட்டை உயர்த்துவது புத்திசாலித்தனமான காரியமல்ல.

மராமத்து இலாகாவின் யோசனையற்ற காரியங்கள் பலவற்றில் இங்கு இரண்டை மட்டும் குறிப்பிகிறேன். தென் ஆற்காடு ஜில்லாவில் உள்ள ஆனபாக்கம் என்ற ஊரில் ஒரு ஏரி உள்ளது. (சர்வே நிர் 200) அந்த ஏரியின் நீர்ப்பிடிப்பு நிலத்தின் பரப்பு 169 ஏக்கர் 30 செண்டு; ஆயக்கட்டு 287 ஏக்கர் 30 செண்டு. இந்த ஏரியின் நீர்ப்பிடிப்பு மட்டத்தை 1 அடி உயர்த்தி ஆயக்கட்டை 200 ஏக்கர் அதிகரிக்க மராமத்து இலாகாவினர் திட்டமிட்டிருக்கின்றனர். இதே ஜில்லாவைச் சேர்ந்த குஞ்சிமங்கலம் கிராமத்திலுள்ள குளத்தின் நீர்ப்பிடிப்பு நிலத்தின் பரப்பு 90 ஏக்கர் 49 செண்டு; அதன் ஆயக்கட்டு 194 ஏக்கர் 88 செண்டு. இது ஒரு நாலாந்தரக் குளமாகும்; அதாவது இதில் 15 நாள் முதல் 2 மாதத் தண்ணீர்தான் பிடிக்கும். இக்குளத்தில் 5 அடி உயரத்திற்குத் தண்ணீர்ப் பெருகினாலும் அத்தண்ணீர் 90 ஏக்கர் நிலச் சாகுபடிக்குத்தான் போதுமானதாகும். இக்குளத்தின் நீர்மட்டத்தை 1½ அடி உயர்த்தி ஆயக்கட்டை 200 ஏக்கர் அதிகரிக்க மராமத்து இலாகாவினர் திட்டமிட்டிருக்கின்றனர். இத்தகைய திட்டங்கள் நிறைவேறினால் சர்க்கார் நிறைய வரி வசூல் செய்துகொள்ளலாம்; ஆனால், விளைச்சலுக்குவேண்டிய தண்ணீர் விவசாயிகளுக்கு நிச்சயம் கிடைக்கப்போவதில்லை.

இத்தகைய தவறான ஊகங்களுடனும் அஸ்திவாரமற்ற கணக்கீடுகளையும் கொண்டு மராமத்து இலாகா காரியங்கள் செய்யப் புகுந்தால் தீங்குகள் பல நேரும். குளங்கள் விரைவில் வற்றி, வறண்டு பயிர்கள் சாவியாகி விவசாய மக்கள் பெரு நட்டமடைவர். விவசாயிகளின் நலனுக்குப் பதில் தீமையே விளையும். தண்ணீர்த் தட்டுப்பாட்டால் விவசாயிகளுக்குள் சண்டையும் சச்சரவும் நேர்ந்து அமைதியான கிராமங்கள் குழப்பங்கள் மலிந்து நிலைகுலைந்து நிற்க நேரிடும்.

அதோடு குளங்களிலிருந்து மண்ணெடுக்க வரும் விவசாயிகளுக்குக் கட்டுப்பாடுகள் போட்டு, விவசாய உபயோகத்துக்காக எடுக்கிறார்களா அல்லது வேறு விஷயங்களுக்காக எடுக்கிறார்களா என்று கேட்டுத் தொந்தரவு செய்வதும், உத்தரவில்லாமல் மண்ணெடுத்த விவசாயிகளுக்கு அபராதம் போட்டுக் கஷ்டப்படுத்துவதுமாகிய முறைகளும், ஏரி குளங்கள் தூர்ந்து போவதற்குத் துணை புரிகின்றன.

எனவே, உணவு உற்பத்தியைப் பெருக்கும் பிரச்சினை ஒருபுறமிருக்க, அதையெல்லாம் சம்மந்தப்படுத்தாமலே, அரசாங்கத்துக்கு இந்த விஷயத்தில் இயல்பான, நியாயமான ஒரு பொறுப்பு இருக்கிறதென்று ஏற்படுகிறது. இதையே 100 வருஷங்களுக்கு முன்பு, சர். ஆர்தர் காட்டன் எடுத்துக் காட்டினார். 70 வருஷங்களுக்குமுன் பஞ்சக் கமிஷன் அங்கத்தினர்கள் சுட்டிக் காட்டினார்கள். 50 வருஷங்களுக்கு முன் நீர்ப்பாசனக் கமிஷனர்கள் வற்புறுத்திக் கூறியுள்ளனர். எனினும், உருப்படியாக ஒன்றும் நடைபெறவில்லை. தேசம் விடுதலை அடைந்த பிறகு இப்பொழுதாவது நாம் இதைச் செய்து முடிக்க வேண்டாமா?

விடுதலையின் கடமையாகச் செய்யத் தவறிய நாம், பஞ்சத்தின் கொடுமையால் இன்று செய்து முடிக்க

வேண்டியவர்களாகிறோம். இதையும் இதையொட்டிய மராமத்துப் பணிகளையும் மாகாணம் பூராவிலும் நல்ல முறையில் செய்ய 19 கோடி ரூபாய் பிடிக்குமென்றும் எட்டு வருஷங்களாகு மென்றும், அதற்கான, செலவில் பாதியை மத்திய அரசாங்கம் தரவேண்டு மென்றும் கணக்கிட்டு நான் ஒரு திட்டம்போட்டிருந்தேன். 1949—50-ம் வருட பட்ஜெட்டில் ஒரு கோடி ரூபாய் இந்த விஷயத்துக்காக ஒதுக்கியும் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டமானது இப்போது 10 அல்லது 12 கோடியாகி, 5 அல்லது 6 வருடங்களில் முடிப்பது என்று மாற்றப்பட்டு மாகாண அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் ஒப்புக்கொண்டிருப்பதாக அறிகிறோம். குறைந்த காலத்திலும், குறைந்த செலவிலும் வேலை நடைபெற்றால் எல்லோருக்கும் நல்லதுதான். ஆனால், நான் போட்ட செலவு மதிப்புக்கு ஏதோ ஒருவிதக் கணக்காவது அடிப்படையாக வைத்திருக்கிறேன். திருத்தப்பட்ட மதிப்புக்கோ, தொகையைக் குறைத்துக் காட்டவேண்டுமென்ற நோக்கம் தவிர வேறெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நான் போட்ட 19 கோடி ரூபாயென்ற மதிப்பின் விவரத்தை இங்கே தருகிறேன். அதிலிருந்து செய்யவேண்டிய வேலையின் விவரமும் நன்றாக விளங்கும்.

## செய்யவேண்டியது என்ன ?

1. ரயத்துவாரிப் பிரதேசங்களில் மொத்தம் 27,000 ஏரி, குளங்களிருக்கின்றன. இவற்றுள் 200 ஏகரா ஆயக்கட்டுக்கு மேற்பட்ட ஏரிகளெல்லாம் சென்ற 70 வருட காலமாக மராமத்து இலாகாவின் மேற்பார்வையிலிருந்து வருகின்றன. இத்தகைய ஏரிகள் 2000. எஞ்சியவை ரெவினியூ இலாகாவின் மேற்பார்வையிலிருக்கின்றன. மராமத்து



இலாகாவின் மேற்பார்வையிலிருக்கும் ஏரிகளைப் பழுது பார்க்க, சமீப காலம் வரையிலும் ஒரு தனி அமைப்பு ஏற்பாடாகியிருந்தது. எனவே, அந்த ஏரிகளில் ஒரு சில நல்ல நிலைமையிலிருக்கலாம். ஆனால், பொதுவாக எல்லா ஏரி, குளங்களுமே கவனிக்கப்படவேண்டிய நிலையில்தானிருக்கின்றன.

இந்த ஏரி, குளங்களில் இப்போது செய்யவேண்டியது என்னவென்றால், அவற்றின் நீர்ப்பிடிப்பை அதிகரிக்க வேண்டும். இதற்காக ஏரி குளங்களைத் திரும்பவும் அடிமண் அகழ்ந்து, வண்டல் நீக்கி, ஆழமாக்குவதென்பது அசாத்தியம். அதற்கு ஏராளமான பணம் வேண்டியதோடு, எடுத்த மண்ணை என்னசெய்வது என்பது பெரிய கவலையாகிவிடும். கரைகளில் கொஞ்சம்தான் போடமுடியும். எனவே, செய்யவேண்டியதென்னவென்றால், கரைகளைத் திருத்தி, உயர்த்தி, உறுதிப்படுத்திச் செப்பனிடவேண்டும். அவ்வாறே மடைகளையும், கலிங்கல்களையும் உயர்த்தி வடிகால்களைச் சீர்திருத்தி அமைக்கவேண்டும். இவையெல்லாம் செய்தால், ஏரி, குளங்களில் அதிகத் தண்ணீர் பெருகும். இவற்றைச் செய்வதற்காகச் சராசரி ஏரி ஒன்றுக்கு 3000 ரூபாய் என்று வைத்துக்கொண்டால், 27,000 ஏரிகளுக்கும் சுமார் 8 கோடி ரூபாய் வேண்டுமென்பது ஒருவாறான மதிப்பு. ஏரி ஒன்றுக்கு ரூ. 3000 என்ற இந்தக் கணக்கு ஒரு சராசரி மதிப்பேயானாலும், என் சிறு விவசாய அனுபவத்தில் அது அநேகமாகச் சரியாயிருக்குமென்றே பட்டது.

## ஜமீன்தாரி ஏரி, குளங்கள்

2. இதுபோக, ஜமீன்தாரி பிரதேசங்களில் சுமார் 8000 ஏரி, குளங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்

கிறது. இந்த நீர்நிலைகள் ரயத்துவாரிப் பிரதேசங்களிலிருப்பனவற்றைவிட மிகவும் மோசமான நிலையிலிருப்பதால் இவற்றைச் செப்பனிட மேலே சொன்ன ரூ. 3000 கணக்கைவிட அதிகமாய்ப் போடவேண்டும். ஏரி ஒன்றுக்கு ரூ. 4000 என்று வைத்துக்கொண்டால் தோராயமாக ரூ. 3 கோடி இந்த வகையில் செலவாகும். ஜமீன்தாரி ஏரி, குளங்களைப் பார்த்தவர்கள் இந்த வேலை முடிவதற்குக் குறைந்தது 8 முதல் 10 வருடங்கள் வரையாவது ஆகுமென்று கருதுகிறார்கள்.

3. எவ்வளவுதான் ஏரி, குளங்களைச் செப்பனிட்டு வைத்தாலும், பெரும்பாலானவை, மழை பெய்தால் பெருகும் நிலையிலிருப்பவைகளே. எனவே, மழை பெய்யத் தவறிய காலத்திலும், விவசாயிகள் நிலைமையைச் சமாளித்துக் கொள்ளுகிற முறையில் அவர்களுக்கு வேறு விதமான ஒருவகைக் காப்பு இருக்கவேண்டும். ஏரி, குளங்களின் ஆயக்கட்டில் ஆங்காங்கே கிணறுகளை வெட்டி வைத்திருந்தால், ஏரி, குளங்கள் பெருகாத காலங்களில் இந்தக்கிணறுகளின் இறவை நீரால் விவசாயிகள் சாகுபடி செய்துகொள்வார்கள். இத்தகைய கிணறுகள் எல்லா ஆயக்கட்டுகளிலும் வேண்டிய அவசியம் ஏற்படாது. ஏதோ அத்துக்காக வேண்டியதே தவிர, அந்தக் குளப்புறக் கிணறுகளையே நம்பிக்கொண்டிருக்க முடியாது. ஆனாலும் அவை இன்றியமையாதனவே. ரயத்துவாரிப் பிரதேசங்களில் ஏறக்குறைய 35 லட்சம் ஏகரா நன்செய் ஆயக்கட்டாக இருக்கிறது. ஜமீன் பிரதேசங்களில் சுமார் 15 லட்சம் ஏகரா வைத்துக்கொண்டால், மொத்தம் 50 லட்சம் ஏகரா ஏரி குளங்களால் மாகாணத்தில் பயிர் செய்யக் கூடியவை. இவற்றிற்குக் குறைந்தது 50,000 கிணறுகளாவது வேண்டும். கிணறு ஒன்றுக்கு ரூ. 500 என்ற



கணக்கில் 50,000 கிணறுகளுக்கும் இரண்டரைக் கோடி ரூபாய் பிடிக்குமென்பது ஒரு பருமனான மதிப்பு.

**இருபோக சாகுபடியும் முடியும்**

4. இவை தவிர, மாகாணத்தின் பல பிரதேசங்களில் வாய்க்கால்கள், குட்டைகள், ஊருணிகள், கசங்கள் போன்று ஊற்றுச் சுரப்பால் உழவர்க்கு நீர் ஊட்டும் நீர்நிலைகள் பல இருக்கின்றன. சுமார் 3 லட்சம் ஏகராவுக்கு மேல் இவற்றால் சாகுபடியாகிறது. இவற்றையெல்லாம் திருத்தி அமைத்தால் இன்னும் எத்தனையோ ஆயிரம் ஏகரா நிலங்கள் சாகுபடி யாவதோடு, இப்பொழுது தண்ணீர் பாயும் நிலங்களுக்குத் தயங்காமல் பாய்ச்சலும் ஏற்படும். மேலும் இரண்டு போக சாகுபடியுங்கூடச் செய்ய முடியும். இவற்றையெல்லாம் செப்பனிட ரூ. 2½ கோடி பிடிக்கும். காலமும் ஐந்து வருடங்களாவது ஆகும். ஆற்றுப் படுகை அல்லது ஊற்று மிகுதியுள்ள மணற் பரப்புக்கொண்ட ஆயக்கட்டுகளில் குழாய்க் கிணறுகள் போடுவதற்குரிய செலவும் அடங்கும்.

5. கடைசியாக இதையொட்டிச் செய்யவேண்டிய வேலை அணைக்கட்டுகளைப் பழுது பார்த்தலாகும். ஆற்றுப் பாசனங்களும், ஆற்றுப் பாசனம் பெறும் குளப்பாசனங்களும், அணைக்கட்டுகளையே நம்பியிருக்கின்றன. இந்த அணைக்கட்டுகளில் பலவற்றிற்குப் பழைய அரசர்கள் கட்டி வைத்துவிட்ட பிறகு எந்தச் சீர்திருத்தமும் செய்ததாகத் தெரியவில்லை. மணலும் சேறும் அணைத்தலையில் சேர்ந்து சப்ளை கால்வாய்களுக்குப் போதிய பாய்ச்சல் இல்லாமல் போய்விட்டது. இவற்றையெல்லாம் பழுது பார்த்து வேண்டிய இடங்களில் மணற் போக்கிகளையும் மதகுகளை (ரெகுலெட்டர்களை) யும் சரிசெய்வதற்குச் சுமார் 2 கோடி ரூபாய் வேண்டுமென்பது என் மதிப்பு.

### சர்க்கார் இதை நிறைவேற்றுவதே நியாயம்

ஏரிகளின் நீர்ப்பிடிப்பை அதிகரிக்கும் முயற்சியில், ஏரிகளின் எதிர் வாயிலிருக்கும் நிலையங்களை வாங்கவேண்டி வரும். இதற்குச் சுமார் ரூ. 1 கோடி பிடிக்கும். எனவே, ஏரி குளம் செப்பனிடும் திட்டம் என்பது மேற்கூறிய ஐந்து அம்சங்களைக் கொண்டதும், 19 கோடிவரை செலவு பிடிப்பதும், 5 முதல் 8 வருஷங்கள்வரை ஆகக்கூடியது மான ஒரு திட்டமாகும். இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றிவைப்பது அரசாங்கத்தாரின் கடமையும் அதைச் செய்துகொடுக்க வேண்டுமென்று அரசாங்கத் தாரைக் கேட்பது விவசாயிகளின் உரிமையுமாகும். ஏரியின் நீர்ப்பிடிப்பு அல்லது சப்ளை செய்யும் ஆற்றலுக்கு அதிக மான ஆயக்கட்டைப் பாசன நிலமாகப் பதிவு செய்து, அரசாங்கம் தண்ணீர் வரி வசூல் செய்கிறது, போதிய தண்ணீர் சப்ளை செய்யாமலே. விவசாயிகளுடைய தற் காப்புக்காக (புரொட்டக்டிவ்) அமைந்தவை ஏரி குளங்கள். அவற்றிற்காக லாப நட்டத்தைக் கணக்குப் பாராமல் செலவு செய்ய வேண்டுமென்று சொல்லி, 95 லட்ச ரூபாய் வசூலித்து 20 லட்ச ரூபாய்கூடச் செலவு செய்வதில்லை அரசாங்கம். எனவே, எப்படியும் இந்தத் திட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றித்தர வேண்டிய நியாயம் இயல் பாக இருக்கிறது.

ஆனால், இன்றைய பண நெருக்கடியிலும் உணவுக் கஷ்டத்திலும், இயல்பான நியாயம், அரசாங்கத்தின் கடமை, மக்கள் உரிமை என்பவைகளை அதிகமாக வற் புறுத்துவதற்கில்லை. முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவென்றால், இந்தத் திட்டத்தினால் நமது உணவுப் பிரச்சினை நீங்குவதற்கு வழியுண்டா? உண்டானால் எந்த அளவுக்கு நீங்கும் என்பவைகளே யாகும். அப்படி



உணவுப் பிரச்சினை நீங்குமானால், கூட்டத்தை எல்லோரும் வற்புறுத்த நியாயமுண்டு; அரசாங்கமும் வரவேற்க இடமுண்டு.

### 50 லட்சம் ஏகராவுக்கு நல்ல பாசனம்

இன்று ரயத்துவாரிப் பிரதேசங்களில்மட்டும் ஏரி குளங்களால் பாசனம் பெறும் நிலப்பரப்பு கிட்டத்தட்ட 31 லட்சம் ஏகராவாகும். ஊருணி, கசம், குட்டைகளால் பயிராகிறவை 4 லட்சம் ஏகரா, ஆக 35 லட்சம் ஏகரா. ஜமீன் பிரதேசங்களிலிருக்கும் நீர் நிலைகளுக்கும் இந்தக் கணக்குப்போட்டு, அதோடு அணைக்கட்டுச் சீர்திருத்தத் தால் அதிகப் பாசனம் ஏற்படும் ஆற்றுப்புரவு, குளப்புரவு முதலியவற்றையும் கணக்குப் போட்டுப் பார்த்தால், மொத்தத்தில் இப்பொழுது இருக்கும் 50 லட்சம் ஏகரா வாவது நல்ல முறையில் பாசனம் பெறுவது நிச்சயம். இது தவிர ஏரிகளின் நீர்த்தேக்கத்தை உயர்த்துவதனால் அண்மையிலுள்ள கிணறுகளில்கூட நீர்மட்டம் எப்பொழு தும் உயர்ந்தே இருக்கும். கிணற்று விவசாயம் செய்பவர் களுக்கு இது மிகவும் சாதகமாக இருக்கும்.

### தவறான கருத்தின் குளறுபடி

ஐம்பது லட்சம் ஏகரா நல்ல முறையில் பாசனம் பெறுமென்று சொல்லுகிறேனே தவிர 50 லட்சம் ஏகரா புதிதாகப் பாசனம் பெறுமென்று சொல்லவில்லை. இதை எதற்காகச் சொல்லவந்தேனென்றால், சிலர் இப்படிப் புதி தாக 50 லட்சம் ஏகரா பயிராகுமென்று நினைத்து அதனால் 20 லட்சம் டன் உணவு தானியம் உற்பத்தியாகும்; மாகாணத்தின் பற்றாக்குறை நீங்குவதோடு உபரியாக ஏற்றுமதிக்கு வேண்டியதும் சாகுபடியாகுமென்று கருதி விட்டார்கள். உண்மை என்னவென்றால், இப்போது

10, 15 நாள் பெருகி நிற்கும் குளங்களெல்லாம் இனி பல மாதங்கள் பெருகி நிற்கக்கூடிய நிலை ஏற்படும். இப்போது ஒருமுறை தண்ணீர்ப் பாய்ச்சலோடு சாகுபடியாக வேண்டிய நிலங்கள் இனி முழுப்பாசனத்தையும் பெறக்கூடும். அதனால் கால்மேனி, அரைமேனி விளைச்சல் காணும் நிலங்கள் இனிமேல் முழுமேனி சாகுபடியாகலாம். ஊற்றுக் கால்வாய்கள், குட்டைகள், குளங்கள் முதலியன இருக்குமிடங்களில் 2 முதல் 3 போகம்கூடச் சாகுபடி ஆகலாம். இந்த முறையில் மாகாணத்தின் மொத்த உற்பத்தி கணிசமான அளவில் அதிகமாகும்.

### 40 வருடங்களுக்கு முன்னால் இருந்த நிலைமைக்கு வந்தால்?

இதனால் புது நிலங்கள் சாகுபடியாகாதென்பது பொருளல்ல. ஏரி குளங்களின் ஆயக்கட்டுகளுக்கு முழுப்பாசன வசதி அளிப்பதோடு ஆயக்கட்டை ஓரளவுக்கு விஸ்தரிப்பதற்கும் இத்திட்டத்தால் முடியும். எப்படி யென்றால் 1910-க்கும் 1915-க்கும் இடையில் நம்மாகாணத்திலுள்ள ஏரி குளங்களால் சராசரி 116 ஏக்கர் சாகுபடியாகியிருக்கிறது. 1945 முதல் 1948 வரையுள்ள சராசரிக் கணக்கைப் பார்த்தால் ஒரு ஏரிக்கு 93 ஏக்கர்தான் சாகுபடியாகியிருக்கிறது. அதாவது சென்ற 40 வருட காலக் கணக்கில் ஏறக்குறைய ஏரி, குளங்களால் சாகுபடியான நிலப்பரப்பில் கால்பாகம் குறைந்திருக்கிறது. ஏரி, குளங்களைச் செப்பனிட்டு திரும்பவும் 40 வருடங்களுக்கு முன்னிருந்த நிலையை அடையச் செய்ய முடியுமானால், 7 அல்லது 8 லட்சம் ஏகரா நிலம் இப்பொழுது பெயரளவில் ஆயக்கட்டாக இருந்து உண்மையில் சாவியாகிப் பயிர் நட்டம் தருவது இனிமேல் முழுப்பயன் கொடுக்கும். இவற்றிலிருந்து மட்டும் 3 அல்லது 4 லட்சம் டன் உணவுத் தானி



யம் அதிகமாக உற்பத்தி செய்யலாம். இதனால் இன்று விவசாயிகளுக்குச் சாகுபடிச் செலவு வகையில் நட்டமாகிவரும் 5 கோடி ரூபாயாவது மீதியாகும். அரசாங்கம் செய்ய வேண்டிய வரி வஜாவும் குறையும்.

மேலும், இப்பொழுது நம் மாகாணத்தில் ஒரு கோடி ஏகரா நிலத்தில் நெல் சாகுபடியாகிறது. இதில் 83 லட்சம் ஏகரா நீர்ப்பாசனம் பெறக்கூடியவை. இந்த 83 லட்சம் ஏகராவில் 36 லட்சம் ஏகரா நிலம் ஒரு போகம் விளைபவை. இந்த 36 லட்சம் ஏகராவில் ஒன்றுக்குப் பாதி நிலத்தில் இன்னும் ஒருபோகம் சாகுபடி செய்வதற்கு வேண்டிய தண்ணீர் வசதி ஏற்பட்டால் 8 அல்லது 9 லட்சம் டன் அதிகமாகத் தான்யம் உற்பத்தியாகப்போகின்றது. ஆகவே, இவ்வாறெல்லாம் கணக்குப் பார்த்தால் தகுந்த அளவு இந்தத் திட்டத்தினால் உற்பத்தி பெருகுவது நிச்சயம். நம் உணவுப் பற்றுக்குறையை, இத்திட்டம் முடிவடைந்தால் பெரிதும் சமாளித்துக் கொள்ளலாமென்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருக்கின்றன.

### திட்டத்தைத் தொடங்குக

நான் அதிகமாய் எதிர்பார்க்கலாம். அரசாங்கத்தார் சமீபத்தில் இத்திட்டத்தினால் 1½ லட்சம் டன் தானியம் தான் அதிகம் உற்பத்தியாகுமென்று கருதுகிறார்கள். நான் தெரிவித்தபடி எல்லா ஏரிகளையும் பழுது பார்த்துக் கலிங்கல்களை உயர்த்தி, நீர்ப்பிடிப்பு ஒரு போக சாகுபடிக்குத் தகுந்தபடி ஏற்பாடு செய்வதாக இருந்தால், அவசியம் 19 கோடி ரூபாய் வேண்டியிருக்கும். 8 வருடம் வரையிலும் ஆகுமென்று எதிர்பார்க்கிறேன். அவர்கள் 10 கோடி ரூபாய் போதுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள். 5 வருடத்தில் முடித்துவிடலாமென்றும் கருதுகிறார்கள். ஆகவே,

அதனல் வரும் பலாபலன்களை அவர்கள் குறைத்து மதிப்பிட்டதில் வியப்பொன்றுமில்லை.

அவர்கள் கருதுவது போலவே குறைந்தபட்சமாக 1½ லட்சம் டன் அதிக உற்பத்தி என்றும், ரூ. 10 கோடி போதுமானதென்றும் வைத்துக்கொள்வோம். அப்படியாஞலும் திட்டத்தைத் தொடங்கி நடத்தவேண்டுமென்று நான் சொல்லுகிறேன். 10 கோடி செலவு செய்து 5 வருடங்களில் திட்டம் முடியாவிட்டால் பிறகு அதைத் தொடர்ந்து நடத்திக்கொள்ளலாம்.

10 கோடி ரூபாய் செலவுசெய்து 1½ லட்சம் டன் தானியம் உற்பத்தி செய்வதா என்று சிலர் கேட்கலாம். ஏரி மராமத்து லாபத்தை உத்தேசித்து நடத்தவேண்டிய பணி அல்லவென்றும், ஏரி, குளங்களைக் கட்டுவதற்காக அரசாங்கம் எந்தவித முதலையும் போடவில்லை யென்றும், அவைகள் சமூகத்தின் பொதுக் காப்புக்காக, பராமரிக்கப்பட வேண்டியவை என்றும் நான் முன்னே சொன்னேன். ஆனல், இந்தப் பண நெருக்கடிக் காலத்தில் ஏரி, குளங்களுக்காகச் செலவு செய்யும் திட்டத்தினல், நேரடியான லாபம் உண்டா என்றும் கவனிப்பதில் தவறென்றுமில்லை.

### வருஷத்திற்கு ரூ. 19 கோடி லாபம்

குறைந்தபட்சக் கணக்கின்படி, உற்பத்தியாகும் 1½ லட்சம் டன்னுக்குப் பதில் இறக்குமதி செய்வதானல், இன்றைய விலையில் ஆண்டுதோறும் 3 கோடி ரூபாயாவது வெளிநாட்டுக்கு அனுப்பியாகவேண்டும். உள்நாட்டில் அந்த 1½ லட்சம் டன் தானியம் உற்பத்தி செய்வதால், இந்த 3 கோடி ரூபாய் விவசாயிகளுக்கே போகிறது. அதோடு இப்பொழுது ஏரி குளங்களின் நீர்ப்பிடிப்புக் குறைவால் விவசாயிகளுக்கு ஒரு வருஷத்தில் ஏற்படும்



சாகுபடிச் செலவாகிய 5 கோடி ரூபாய் நஷ்டம் லாபமாகும். அதனல் நாட்டின் பொருளாதார நிலையும் பல துறைகளில் உயரும். எனவே, மொத்தம் ரூ. 10 கோடி செலவு செய்ததன் பயனக 8 கோடி ரூபாய் வருஷா வருஷம் நம் மாகாணத்திற்கே திரும்பி வருகிறது. இந்தப் 10 கோடி ரூபாயும் பொதுநிதியில் மற்ற வருமானங்களிலிருந்து செலவு செய்வதாக நினைத்துக்கொள்வது கூடாது. வருஷா வருஷம் 75 லட்ச ரூபாயாக ஏரி குளங்களின் கீழ்ப்பட்ட ஆயக்கட்டுகளில் சென்ற 15 ஆண்டுகளில்மட்டுமே நீர்வரியாக அரசாங்கம் 10 கோடி ரூபாய் வசூலித்துப் பொதுநிதிக்குச் சேர்த்திருக்கிறது. அதைத்தான் இப்பொழுது செலவு செய்யவேண்டும். இப்படி இந்தப் பதினைந்து வருஷங்கள் தவிர, அதற்குமுன் எத்தனையோ வருஷங்களாக அரசாங்கம் சேர்த்துக் கொண்டே வந்திருக்கிறது. அதை இங்குக் கணக்கு எடுக்கவில்லை. இவை எல்லாம் ஏரி குளங்களால் ஏற்படும் அதிக உற்பத்தி ஒன்றறை லட்சம் டன் உணவு தான்யமென்று அரசாங்கம் இன்று மதிப்பிடும் குறைந்தபட்சக் கணக்கை வைத்துத்தான். என்னுடைய கணக்குப்படி இதற்காகச் செலவு செய்யப்படவேண்டும் 19 கோடி ரூபாய் செலவழித்து, திட்டம் நிறைவேற்றினல், வருஷா வருஷம் 19 கோடி ரூபாய் ஜனங்களுக்கு வருமானமாக வருமென்பதாகும்.

### நிர்வகிப்பது எப்படி ?

எனவே, இதுகாறும் கூறியவற்றால் இத்திட்டத்தின், அவசியமும், அதனல் மக்களுக்கு வரும் லாபம் இவ்வளவாகும் என்றும் ஒருவாறாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இனி இதை எந்த முறையில் நிர்வகிப்பதென்ப

தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். நாம் எந்த நிர்மாணத்திட்டத்தை எடுத்தாலும் அதில் பொது ஜனங்களுக்கும் ஊக்கம், உணர்ச்சி உண்டாகும் படி அந்தத் திட்டத்தை நிர்வாகம் செய்யவேண்டும். எல்லாவற்றையுமே அரசாங்கம் செய்வதென்றால், அதில் மக்களுக்கு எவ்வித பாத்தியதையும், சிரத்தையும் இல்லாமல் போய்விடும். எந்த முறையில் நிர்வாகம் ஏற்பட்டால் சுதந்திரம் ஏற்பட்டதென்பதாக மக்கள் மனதில் படுமோ அந்த முறையில் செய்யவேண்டும். இந்த ஏரி குளங்கள் சமூகப் பொதுச் சொத்து. அவற்றைப் பழுது பார்க்கும் வேலையை எந்த விவசாயிகள் தண்ணீருக்காகத் தவங்கிடக்கிறார்களோ அவர்கள் கையில் விட்டு அவர்களுக்கு அதில் ஊக்கமும், சிரத்தையும் உண்டாகும் நிலைமையை ஏற்படுத்தவேண்டும். இதனால் நான் குடிமராமத்து முறை வேண்டுமென்று சொல்லவில்லை. தற்காலம் இருக்கும் நிலையில் உணவுப்பிரச்சினை ஒரு அவசரப் பிரச்சினையாயிருக்கிறது. குடிமராமத்து முறையில் அவசரமாகச் செய்து முடிக்கவேண்டிய இந்தப் பெரிய திட்டத்தைச் செய்வதற்கு இடையூறுகள் ஏற்படலாம். ஆனால், மராமத்து இலாகா தற்போது கையாளும் கொள்கை சரியானதென்பதல்ல. சிவப்பு நாடா சற்று நெகிழ்ந்து கொடுக்கக்கூடிய முறையில், பிரஸ்தாப விஷயத்தின் நிர்வாகமுறை அமையவேண்டும். ஏரி குளங்களைச் சர்வே செய்வது, மதிப்பிடுவது, காண்டிராக்ட் விடுவது, வேலை முடிப்பது முதலியனவெல்லாம் அந்தந்த இடங்களிலேயே ஒன்றையொன்று தொடர்ந்து நடைபெறவேண்டும். வேலைகளை நடத்தும் ஸ்தல அதிகாரிகளுக்கு அவசர அதிகாரங்கள் கொடுக்கப்படல்வேண்டும். சென்னைக்கும் குக்கிராமங்களுக்கும் முடிவில்லாத நீண்ட முறையில் கடிதப் போக்கு



வரத்துகள் நடந்துகொண்டிருந்தால் திட்டத்தில் வெற்றி காண முடியாது. இதை மராமத்து இலாகாவில் இப்பொழுதும் இருக்கும் நிர்வாக முறையிலிருந்து சொல்லுகிறேன். 1943-44 முதல் 1947—48 வரை 2,76,00,000 ரூபாய்க்குமேல் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக மராமத்து இலாகாவுக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால், செலவு செய்தது 92,18,000 ரூபாய்தான். 1945—48-ல் 67,00,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. மராமத்து இலாகாவில் செலவு செய்யப்பட்டது 16,00,000 ரூபாய்தான். 1946—47-ல் 59,00,000 ரூபாய் ஒதுக்கியும் 8,00,000 ரூபாய்க்குத்தான் வேலை நடந்திருக்கிறது.

### மாமூல் முறையில் பாதகமே

இந்தப் புள்ளி விவரங்களெல்லாம் நாட்டுமக்களுக்கு ஒரு படிப்பினை. அதாவது எடுத்துக்கொண்ட திட்டத்துக்கு மாமூல் முறையில் நடக்கும் நிர்வாக முறையைக் கையாண்டால் பாதகமாகவே முடியும். என்னுடைய கருத்து என்னவென்றால் இதற்குத் தன் முழு நேரத்தையும் செலுத்தும் முறையில் ஒரு தனி மந்திரியோ, உதவி மந்திரியோ நியமிக்கப்படவேண்டும். பல ஜில்லாக்களில் ஏக காலத்தில் வேலை செய்யக்கூடிய முறையில் ஆங்காங்கே ஜில்லாக் கலெக்டர்களுடைய சார்பில் மராமத்து நிபுணர்கள் வேலை செய்யவேண்டும். விவசாயிகளைக் கலந்துகொண்டு பணம் செலவு செய்யும் அதிகாரம் கலெக்டர்களுக்கு வழங்கப்படவேண்டும். எஞ்சினீயர்கள் பஞ்சம் என்ற கூக்குரலைக் கிளப்புவதில் பயனில்லை. இதற்கென்று மத்திய, மாகாண அரசாங்கங்கள் ஒன்று சேர்ந்து வருஷா வருஷம் பட்ஜெட்டில் பணம் ஒதுக்கவேண்டும். அப்படி ஒதுக்கப்படும் பணத்தை அந்தந்த வருஷமே செலவு

செய்ய முயலவேண்டும். செலவு செய்ய முடியாமல் போனால், அதைத் தனியாக ஒரு (நிதி) பண்டாக வைத்து வேலை நடத்தவேண்டுமே தவிரக் காலவரையாகிவிட்டது; செலவு செய்யவில்லை; அதனால் பணம் போய்விட்டது என்றெல்லாம் சொல்வது கூடாது. இந்த வேலைகளைச் செய்து முடிக்கப் பெரும்பாலும் மேதைகளான எஞ்சினீயர்கள், நிபுணர்கள் தேவையில்லை. அப்படிப்பட்டவர்கள் ஒரு சிலர் இருந்தால் போதுமானது. பெரும்பாலும் ஓவர்வீயர்களே இதைச் செய்வதற்கு வேண்டிய அனுபவம் உடையவர்களாயிருக்கிறார்கள். மேலும், கிருஷ்ணா—பெண்ணாறு, துங்கபத்திரா போன்ற அணைத்திட்டங்களைப் போல இத்திட்டத்திற்கு இயந்திரம் ஒன்றும் தேவையில்லை.

## அரை நிர்வாண மேஸ்திரிகள் திறமை

சி. ஆர். மார்க்கம் என்னும் அறிஞர் கிழக்கு ஸ்பெயின் நீர்ப்பாசன அமைப்புத்திட்டத்தைப்பற்றிய தமது அறிக்கையில் கூறியிருப்பதாவது :—"நீர்ப்பாசனத் திட்டங்கள் தென் இந்தியாவில் தொன்று தொட்டுத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த அனுபவத்தால் எக்காலத்துக்கும் உரிய சிறந்த எஞ்சினீயர்கள் இந்நாட்டில் இருந்து வந்துள்ளனர். நூற்றாண்டுக் காலமாக பரம்பரையாக வந்த அனுபவத்தால் விவசாயிகளும், ஒட்டர்கள் என்று கூறப்படும் ஒரு ஜாதியினரும் எஞ்சினீயரிங் அனுபவமும் நிர்வாகத் திறனும் படைத்திருந்தனர். ஏரி நீர்ப்பாசன அமைப்புத் திட்டங்களில் ஆங்கிலேய எஞ்சினீயர்கள் கூட தென்னிந்திய மராமத்து வேலை செய்துவந்த அரை நிர்வாண மேஸ்திரிகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய யிருக்கின்றன. கால்வாய்கள்



பிரித்து வயல்களுக்குத் தண்ணீரைச் சப்ளை செய்வதில் பழங்காலத் தென்னிந்திய முறை ஆங்கில முறையைவிட மிகச் சிறந்த தொன்றாகும் என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது." அன்றிருந்த தமிழகத்து நிபுணர்கள் இன்னும் அழிந்து போய்விடவில்லை. இன்னும் பல கிராமங்களில் நாம் காண்கிறோம். இவர்களை நாம் நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

## ராணுவத்தை உபயோகிக்கலாம்

கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சிக்காலத்தில் சிப்பாய்களை (Sappers & Miners) நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைப்பதற்கும் ரஸ்தா அமைப்பதற்கும் உபயோகித்ததாக ஸர் ஆர்தர் காட்டன் கூறுகிறார். அன்றிருந்த சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ் இன்றும் நமது ராணுவத்தில் உள்ளனர். தற்போது அவர்களிடம் புல்டோஸர் போன்ற கருவிகளெல்லாம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பயன்படுத்தி நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்களுக்கு நமது ராணுவத்தை உபயோகிக்கலாம்.

இந்த வகையில் மாமூலிலிருந்து சற்று விலகி மக்கள் கூட்டுறவைப் பெறக்கூடிய முறையில் அமைந்த ஒரு திட்ட நிர்வாக இலாகாவை ஏற்படுத்தி அதன் மூலம் இந்தத் திட்டத்தை நடத்தினால் வெற்றி விரைவில் ஏற்படும். நமது உணவுப் பஞ்சம் ஒருவாறு நிவர்த்தியாகுமென்று நான் முழுமனதுடன் நம்புகிறேன். இந்தத் திட்டத்தைப் பொது மக்கள் கவனமாகப் படித்து வேண்டியன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

# 12. விவசாயச் சீர்திருத்தமும் தொழில் சமநிலையும்

## முன்னுரை

விவசாயச் சீர்திருத்தங்களுக்கு நம் நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள அவசரமும் அவசியமும் என்றும் இருந்ததில்லை. நாட்டில் ஏற்பட்டுள்ள மகத்தான உணவுத் தட்டுப்பாட்டினாலும், உணவு இறக்குமதி செய்வதற்கு வேண்டிய டாலர் நிதி நம்மிடம் குறைவாக இருப்பதாலும், உதவிப் பொருள் அளித்து உணவுப் பொருள்களை அரசாங்கமே வாங்கும் முறையினால் ஏற்படும் அதிகச் செலவினாலும், உழவருட் பலர் மிகவும் தாழ்ந்த வாழ்நிலையில் இருந்து வருவதாலும், தற்சமயம் தோன்றியுள்ள நெருக்கடியைச் சமாளிக்கவேண்டுமானால், தைரியமான விவசாயத் திட்டத்தை உடனே வகுத்து நிறைவேற்றவேண்டியது அவசியமாகும். அப்படியிருந்தும், யுத்த பிற்காலச் சீரமைப்புத் திட்டங்களில் விவசாயச்சீர் திருத்தத்தின்மீது தேவையான சிரத்தை செலுத்தப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். ஆலைத்தொழில் சீரமைப்புக்காகவும், வியாபார மறுமலர்ச்சிக்காகவும் நடைபெறும் மகாநாடுகள், செய்யப்படும் ஆராய்ச்சிகள், வெளிவரும் இலக்கியங்கள், இயற்றப்படும் சட்டங்கள் முதலியவற்றோடு ஒத்திட்டுப் பார்க்கும்போது, விவசாயத் துறையில் அக்கறையோ அனுதாபமோ அதிகம் காட்டப்படவில்லை என்பது நன்கு விளங்கும்

## மக்கள் வரலாற்றில் நான்கு நிலைகள்

நிலத்தை மையமாகக்கொண்டு அதைச் சுற்றியே சமுதாயம் நடைபெற்ற காலம் ஒன்றுண்டு. அப்போது பொருளாதார சம்பந்தமான நடவடிக்கைகளெல்லாம்



விவசாயத்துக்குத் துணைசெய்வனவாகவே இருந்தன; விவசாயத்தையே அடிப்படையாக அக்கால மனிதன் மேற்கொண்டிருந்தான். அத்தகைய காலம் 'நிலப் பிரபுத்துவகாலம்' எனப்படும். இதைத்தான்,

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
> தொழுதுண்டு பின்செல் பவர்"

என்று வள்ளுவர் வருணித்தார் போலும்.

அக்காலம் படிப்படியாக மாறி, வியாபாரச் செல்வாக்கு மேம்பட்ட காலம் தோன்றலாயிற்று. அச்சமயம் வியாபாரியே எல்லா வகையிலும் முக்கியமானவனாக விளங்கினான். அதற்குப் பின்பு, 'தொழிற் புரட்சிக் காலம்' மலர்ந்தது. அப்போது யந்திரத்தொழில் முதலாளிகள் பெருகவே, அவர்களுக்கு வேண்டிய மார்க்கெட்டுகள் மூலப்பொருள்கள் ஆகியவற்றுக்கான குடியேற்றப் பிரதேசங்களைப் பெறுவதில் போட்டி ஏற்பட்டு, ஏகாதிபத்திய யுத்தங்கள் நடைபெறலாயின. இதற்கு அடுத்தபடியாக 'அதிகார வர்க்க யுகம்' தோன்றலாம். ஏற்கெனவே ரஷ்யாவில் தொழில் நுட்பம் உணர்ந்த ஒரு கூட்டத்தார் அடிமை நாடு ஒன்றை நிருவகித்து நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையை மாற்றி, விவசாயம், வியாபாரம், தொழில், உத்தியோகம் ஆகிய இவற்றுக்கிடையே ஒருவித சமநிலை ஏற்படுத்த இயலுமா? இதைக் குறித்து நான் வேண்டியமட்டும் சிந்தித்து, ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். அதாவது, மேற்சொன்ன நான்கு பகுதிகளிடையே தக்கவகையில் சமஅதிகாரம் ஏற்படுத்தத் தவறியதன் விளைவாகத்தான், நம் சமுதாயத்திலே பொருளாதாரத் துறையில் பலவிதத் தொல்லைகள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய சமநிலை இல்லாத காரணத்தால், எப்போதும்

சுரண்டலும் வர்க்கப் போராட்டமும் நடைபெற்று வருகின்றன. நிலப்பிரபுத்துவ காலத்தில், நிலச்சுவான் எல்லா வர்க்கத்தாரையும் சுரண்டினான். வியாபாரிகள் செல்வாக்கு ஓங்கியிருந்த காலத்தில், விவசாயிகள், கைத்தொழிலாளர்கள் ஆகிய எல்லோரையும் வியாபாரி சுரண்டினான். தொழில் யுகத்திலே, தொழில் துறையில் அதிக செல்வாக்குப்பெற்ற முதலாளிகளுடன் வியாபாரி ஏற்ற வகையில் ஐக்கியமாகி, பொதுவாக விவசாயிகளைச் சுரண்டுவதில் கிடைக்கும் லாபத்தில் பங்குபெறலானான். இவ்வாறு பொருளாதாரப் போராட்டம் ஏற்பட்ட மூன்று கட்டங்களிலும் உத்தியோகஸ்தர்கள் அதிகாரத்தில் யார் இருக்கிறார்களோ, அவர்களுக்குச் சேவகம் செய்துகொண்டு எப்போதும் சௌகரியமாக வாழ்ந்து வந்துள்ளனர். அடுத்தபடி, அவர்கள் மற்ற எல்லோரையும் நீக்கிவிட்டுத், தாமே அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் போலும். (அதுதான் கம்யூனிஸம் அல்லது பொதுவுடைமை என்பது.)

## விவசாயி சுரண்டப்பட்ட விதம்

தொழில், வியாபாரம், உத்தியோகம் ஆகிய துறைகளுக்கே பொதுவாழ்க்கையில் எப்போதும் முக்கியத்துவம் அளிப்பதற்கும், தேசிய வருவாயில் பெரும் பகுதியை மேற்சொன்னவற்றுக்கே அதிகமாகக் கொடுப்பதற்கும் காரணம், மேற்கூறிய துறைகள் வளர்ச்சியுற்றால்தான் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள அதிகப்படியான ஜனங்களுக்கு ஏற்ற வேலைகள் தரவும், அதன் மூலம் கிராமங்களிலுள்ள வறுமையைப் போக்கவும் முடியும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், சென்றகாலச் சரித்திர நிகழ்ச்சிகளை ஆராய்பவருக்கு மேலே கூறப்பட்டுள்ள பழைய கொள்கை



எவ்வளவு தவறானது என்பது நன்கு விளங்கும். காலஞ்சென்ற லார்ட் ஸ்டாம்ப் என்னும் பிரசித்திபெற்ற புள்ளிவிவர நிபுணர், "கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாக மிகக்குறைந்த விலை கொடுத்துப் பெற்ற விவசாயப் பொருள்களைத் துய்த்தே உலகம் வாழ்ந்து வந்துள்ளது" என்று ஒரு சமயம் கூறினார். விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான செலவு, விவசாயிக்கும் அவன் குடும்பத்துக்கும் தேவையாகும் ஊதியம் ஆகியவற்றைக் கணக்கிட்டு, அதற்கேற்றபடி விவசாயப் பொருள்களின் விலை நிர்ணயிக்கப்படுவதில்லை. ஆலை முதலாளிகள் விவசாய மூலப் பொருளால் செய்த பண்டத்திற்கு விற்கும் விலையைப் பொறுத்தும், அவர்கள் விரும்பிப் பெறும் லாபத்தைப் பொறுத்துந்தான் விவசாயப் பொருள்களின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. தேசிய வருவாயைப் பகிர்ந்துகொள்வதில் கைத்தொழில் முதலாளிகள், அவரைச் சார்ந்தொழுகும் வியாபாரிகள், மற்றும் பலவித உத்தியோகம் செய்வோர் ஆகியோர்தான் முதலிடம் பெறுகின்றனர். இவர்கள் பெற்றுக்கொண்டது போக, எஞ்சியுள்ள அற்பத் தொகையே உழவர்களுக்குக் கிடைக்கின்றது.

## யந்திரத் தொழில் அபிவிருத்தி

யந்திரத் தொழில் வளர்ச்சியை ஆதரிக்கும் அறிஞர்கள் கூறுவதற்கிணங்க, அதனால் உண்மையான நன்மைகள் ஏதாவது ஏற்பட்டுள்ளனவா? யந்திரத் தொழில் வளர்ச்சியால் மனித வர்க்கத்தின் க்ஷேமத்துக்கு எவ்வளவு நன்மை விளைந்துள்ளது என்று கணக்கிட்டுப் பார்த்தால், எனக்குச் சந்தேகம்தான் தோன்றுகிறது. பண வருவாய் பெருகுவதாலோ, அல்லது பொருள்கள் உற்பத்தி அதிகமாவதாலோ மட்டும் சமுதாயத்திற்கு க்ஷேமம் ஏற்பட்டுவிடும்

என்று நம்புவதற்கில்லை. எனவே, இவைகளை வைத்துக் கொண்டு நன்மை, தீமைகளைக் கணிப்பது இயலாத காரியம். சரியான கணக்கில் வரவு செலவு இனங்கள் பின்வருமாறு குறிக்கப்படவேண்டும். அதாவது, மூலப் பொருள்களைக் கைப்பற்றும் போட்டியின் விளைவாகத் தொடர்ந்து ஏற்பட்ட யுத்தங்களால் லட்சக்கணக்கான மக்கள் உயிர் இழந்ததும், அல்லற்பட்டதும், சொல்லொணுத் துன்பங்களுக்காளானதும் மேற்சொன்ன கணக்கில் செலவினத்தில் அடங்கும். மற்றும், முதலாளித்துவ அமைப்பிலே காணப்படும் தரித்திரம், நோய், கேவல நிலைமை முதலியன தாண்டவமாடும் நகரத்துச் சேரிகளும் மேலே சொன்ன செலவினத்திலேதான் சேரும். அதோடன்றி, அமைதியின்மை, வேலையின்மை, பாதுகாப்பின்மை, வர்க்க முரண்பாட்டால் ஏற்படும் மனக்கசப்பு ஆகியவைகளும் அச்செலவினத்திலே அடங்கும். வருவாய் இனத்தில் வேண்டுமானல், மிகப்பெரிய யந்திரங்கள், மனித உழைப்பைக் குறைத்துத் தொழில் திறமையை வளர்க்கும் பல்வேறு சாதனங்கள், மோட்டார்கள், ஆகாய விமானங்கள், ப்ளாஸ்டிக் பொருள்கள், நைலான் பட்டு வகைகள், அணுசக்தி முதலியவற்றைச் சேர்க்கலாம். தொழில் வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள இவைகளுங்கூட மனித வர்க்கத்தின் க்ஷேமத்தை அடிப்படையாகவைத்துப் பார்க்கும்போது உண்மையான நலன்கள் என்று கருதுவதற்கில்லை. புற உலகிலேபுதிய அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என்று வைத்துக்கொண்டாலும், மனிதவர்க்கத்துக் கிடையில் நல்லுறவே இல்லை எனலாம். இந்த வர்க்க முரண்பாடு நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வருவதைப் பார்க்கும்போது, எதிர்கால சமுதாய அமைப்பைப்பற்றி அச்சம் உண்டாகிறது.



## விஞ்ஞான வளர்ச்சி வேண்டும்

இவ்வாறெல்லாம் நான் சொல்வதால், முக்கிய யந்திரத் தொழில்கள் நிறுவுவதை எதிர்க்கிறேன் என்றே, அல்லது பழங்காலத்து முறைப்படி, எளிய பொருளாதார நிலைக்கு நாம் திரும்பிச் செல்லவேண்டுமென்று கூறுவதாகவோ யாரும் கொள்ளக்கூடாது. அவ்வாறு சொல்வது விஞ்ஞான அபிவிருத்திக்கும், மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்துக்கும் எதிரிடையான காரியமாகும். விஞ்ஞானம் சமுதாயத்திலுள்ள பல்வேறு வர்க்கத்தினரிடையே முரண்பாட்டை வளர்க்காமல், அவர்களுக்கிடையே ஒற்றுமையை உண்டாக்க முடியுமா என்பதைக்காணவே நான் ஆவலுடன் முயன்று வருகிறேன். ஒரு வகுப்பு மற்றொரு வகுப்பின் மீதும், ஒரு தொழில்துறை மற்றொரு தொழில்துறைமீதும் ஆதிக்கம் செலுத்தும் வகையில் அமைந்துள்ள தற்கால முறைக்குப்பதிலாக, தேசிய வருவாயைச் சமமாகப் பகிர்ந்தளிக்கும் வகையில் நால்வகை முயற்சியிலும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு ஒன்றை நிறுவமுடியுமா என்று நான் ஆராய்ந்து வருகிறேன். பணத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள பொருளாதாரம் க்ஷேமத்தை அடிப்படையாகக்கொள்ள இயலுமா என்பதைக் குறித்துத்தான் ஆலோசித்து வருகிறேன்.

## காந்தியடிகள் காட்டிய வழி

அத்தகைய சமுதாயம் ஒன்றை நிறுவ இயலும் என்று மகாத்மா காந்தியடிகள் நம்பிவந்தார். அதற்காகத்தான் அவர் புரட்சிகரமான சிந்தனையாளராகத் திகழ்ந்து பெருமை பெற்றுர். காந்தியப் பொருளாதாரக் கொள்கைகள் பிற்போக்கானவையாய் இல்லாமல், புதிய இலட்சியத்தோடு சமுதாயத்தைப் புதிய முறையில் அமைக்க வழி

கோலுவனவாயுள்ளன. சமுதாயத்தின் ஒவ்வொரு பொருளாதாரப்பகுதியும் தானே இயங்கவேண்டும். தன்னைத் தானே உயர்த்தும் முயற்சியில் சமுதாயத்தின் மொத்த நலனையும் மனதில் கொண்டு வேலை செய்யவேண்டும். இதுதான் வர்க்கத்துவேஷத்தையும், உலகமெங்கும், பரந்து கொல்லும் யுத்தங்களையும் தடுக்கின்ற முறையாகும்.

## சமநிலைப் பொருளாதாரம்

அப்படிப்பட்ட சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமானால், பிரச்சினையின் அடிப்படையிலிருந்தே நாம் ஆராய்ச்சியைத் தொடங்கவேண்டியது அவசியம். "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்றார் திருவள்ளுவர். அத்தகைய அடிப்படைத் தொழிலான விவசாயத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்று பார்க்கவேண்டும். தற்காலத்தில் அது மிகவும் பழையகால முறையை ஒட்டியே நடைபெற்று வருகிறது. லாபமற்ற சின்னஞ்சிறு நிலப் பகுதிகள் ஏராளமாகத் தனித்தனியே இருப்பதற்கு எந்த வித நியாயமும் இல்லை. குடியானவனிடம் அறியாமை, எழுத்தறிவின்மை, நிலையற்ற தன்மை ஆகியவை குடிகொண்டுள்ளன. இவற்றால் சிறந்த முறையில் விவசாயதசை நடத்துவதற்கு எப்போதும் பெரிய முட்டுக்கட்டை ஏற்பட்டு வந்திருக்கிறது. விவசாயத் துறையில் உள்ள ஜன நெருக்கம், வேண்டிய அளவு வேலையின்மை, அதன் விளைவாக ஏற்படும் வேலையில்லாத் திண்டாட்டம், இயற்கையில் நிகழும் மாறுதல்கள் முதலிய பல்வேறு அபாயங்கள், அத்தொழிலை எதிர்த்து நிற்கின்றன. நியாயம், சமத்துவ முயற்சிகள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட எந்த ஒரு சமுதாயத்திலும் இவற்றைச் சகித்துக்கொண்டிருக்க முடியாது. இதற்குள்ள விமோசனம், கைத்தொழில்



துறையில் பரவல் முறையைக் கையாள்வதும், தற்காலத்தில் சீர்குலைந்துள்ள நகரவாசத்தை நாடிச் செல்வதை மாற்றி அமைக்கத் திட்டமிடுவதும் மட்டுமன்றி, தொழிற் சமநிலை பொருளாதாரத்தை உருப்படுத்துவதுமாகும். தொழிற் சமநிலைப் பொருளாதாரம் என்று நான் கூறும்போது, விவசாயம், வாணிபம், தொழில் ஆகிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ள ஜனத்தொகை விகிதாசாரம் சமநிலை அடையவேண்டும், என்று நான் குறிப்பிடவில்லை. இத்தொடருக்கு நான் கொள்ளும் பொருள், மேற்சொன்ன மூன்று வகைப்பட்ட தொழில்களைச் செய்வோருக்கான நலன்களைச் சமமாகச் செய்யவேண்டுமென்பதேயாகும். தற்காலத்தில் கைத்தொழில், வியாபாரம், உத்தியோகம் ஆகியவற்றில் கிடைக்கும் ஊதியம் விவசாயத்தில் வரும் ஊதியத்தைவிட மிகவும் அதிகமாக உள்ளது. மேற்சொன்ன மூன்று வகை முயற்சிகள் என்ன என்று பார்த்தால், அவை பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு நவீன நாகரீகத்தில் முதிர்ந்துள்ள தற்கால மக்களுக்கு அளிக்கப்படுவதற்கு மததியிலுள்ள சிக்கலான மூன்றுவிதக் கட்டங்களே தவிர, வேறொன்றுமில்லை. இது உண்மையானால், விவசாயத்தைவிடத் தொழிலிலேயோ அல்லது வியாபாரத்திலேயோ அதிக லாபம் கிடைப்பதற்கு நியாயம் உண்டா? நியாயம் ஒரு பக்கம் இருக்க, விவசாயம் அபிவிருத்தியாக வழி ஏற்படுகிறதா? எனவே, நான் கருதும் "தொழில் சமநிலை"ப் பொருளாதாரத்தில், எல்லாத் தொழில்களுக்கும் சமமான லாபம் கிடைக்கும் வகையில் முயற்சிகள் நடைபெறும்; கொள்கை அமைக்கப்பெறும்.

## கூட்டுறவுப் பொது அமைப்பு

நால்வகைத் தொழில்களும் சரி நிகர் சமானம் என்பதை அடிப்படையாகக்கொண்ட "சமநிலைப் பொருளா

தார" த்தை எவ்வாறு அமைப்பது? அதற்குக் கூட்டுறவு
முறையை நான் கொள்கின்றேன். இந்தியாவில் இதுவரை
யில் கூட்டுறவு முறை அதிகமாக வெற்றிபெறவில்லை என்
பதை நான் அறிந்தே இருக்கிறேன். ஜாயின்ட் ஸ்டாக்
முயற்சியால் ஏற்பட்டுள்ள பலன்களையும், கூட்டுறவு
முறையால் ஏற்பட்டுள்ள பலன்களையும் ஒத்திட்டுப் பார்த்
தால், முன்னே சொன்னது பின்னே சொன்னதைவிட
மிகவும் அதிகமாக இருந்து வருகிறது. இதற்குக் காரணம்,
கூட்டுறவு முறை மனிதனின் பொருளாதார உணர்ச்சியை
விட மனித வர்க்கத்தின் நற்பண்பையே அதிகமாக நம்பி
வருவதேயாகும். சென்ற நூற்றாண்டின் இறுதியில் சர்
ப்ரெடரிக் நிக்கல்ஸன் என்பவர் சொன்ன கூட்டுறவுக் கருத்
துக்கள் லட்சியம் ஒன்றையே அடிப்படையாகக்கொண்
டன. ஆனால், இப்பொழுது வேண்டியது, பொது நன்
மையை அடைவதற்காக, ஒவ்வொரு தனி மனிதனும்
பொருளாதார உணர்ச்சியோடும் பாடுபடுவதற்கேற்ற வகை
யில் அமைந்த கூட்டுறவு முயற்சியேயாகும். இதை வேறு
வகையில் கூறவேண்டுமானால், ஜாயின்ட் ஸ்டாக் வியாபார
முறை, லட்சியக் கூட்டுறவு முறை ஆகிய இவற்றின் சிறந்த
அம்சங்களெல்லாம் நியாயமான வகையில் தக்கவாறு ஒன்று
கலந்த ஒரு முறையே இப்போது தேவை என்று சொல்ல
லாம். 'ஒரு மனிதன், ஒரு ஓட்டு' என்ற கொள்கை மாறி,
கூட்டுறவு முயற்சியிலே, அது முதலீடாக இருந்தாலும்
சரி, தொழில் யூனிட்டுகளாக இருந்தாலும் சரி, போட்ட
பங்குக்கு ஏற்ற ஓட்டுரிமை உண்டு, என்ற கொள்கை உண்
டாக வேண்டும். கூட்டுறவுச் சங்கத்து நஷ்டங்கள் அங்கத்
தினரை எம்மட்டும் பாதிக்கும் என்ற நிலைமை மாறி, நஷ்
டப் பொறுப்புக்கு வரையறை வகுக்கவேண்டும்.



## கூட்டுறவுக் கொள்கையில் மாறுதல் வேண்டும்

இரண்டாவதாக, கூட்டுறவு முறை இனிமேல் வளர்ந்
தோங்கவேண்டுமானால், அதற்கே உரிய கொள்கைகளை
மட்டும் நம்பியிருக்கக்கூடாது. கூட்டுறவு முறையை அப்
படியே பின்பற்றவேண்டும் என்றுள்ள ஒரு சிலர் அத்துறை
யில் சிறிதளவு கட்டாயத்தைப்புகுத்துவதையும் விரும்ப
மாட்டார்கள். ஆனால், சுமார் ஐம்பது வருடங்களாக நடை
பெற்ற கூட்டுறவு இயக்கத்தில் ஓரளவு கட்டாயமும் இல்லா
திருந்ததால், கிராமாந்திரப் பிரச்சினைகளில் முக்கிய அம்
சங்களைத் தீர்க்கவே இயலாமல் போய்விட்டது. ஜெர்மனி
யிலும், டென்மார்க்கிலும், வெற்றிகரமாய் விளங்கிய முறை,
நம் நாட்டிலும் அதே வகையில் இருக்கவேண்டும் என்ற
அவசியமில்லை. கூட்டுறவு இயக்கத்தில் 45 வருடங்களாக
நமக்கேற்பட்ட அனுபவம் உணர்த்தும் உண்மை ஏதாவ
திருந்தால் அது இதுதான்: கூட்டுறவு முறையின் அடிப்
படைக் கொள்கைகளில் திருத்தம் காணவேண்டியது அவசி
யம். கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கம் எதுவாயிருப்பினும்,
கடன் சௌகரியங்கள் செய்து தருவதாயிருந்தாலும் சரி,
உபயோகப் பொருள்களை சப்ளை செய்வதாயிருந்தாலும்
சரி, சிக்கன முறையை வளர்ப்பதா யிருந்தாலும் சரி,
சிறந்த வாழ்க்கை நடத்துவதற்கான வழியை வகுப்பதா
யிருந்தாலும் சரி, எல்லாக் கிராமவாசிகளும் கூட்டுறவு சங்
கத்தில் சேருமாறு கட்டாயப்படுத்தவேண்டும். அப்
பொழுதுதான் கூட்டுறவு முறையை நன்றாக நடத்தி, நிச்சய
மாக வெற்றி காணமுடியும். தான, தண்ட முறைகளைத் தக்க
வாறு கையாள்வதன்மூலம் இது சம்பந்தமாக அதிகப்படி
யான பலன்கள் ஏற்படும்.

## நான் காண விரும்பும் சமுதாயம்

மனித வர்க்கத்தின் எல்லாத் துறைகளிலும் எல்லா நடவடிக்கைகளும் கூட்டுறவு முறையில் நடத்தப்பட்டு நன்மையடையக்கூடிய ஒரு சமுதாயத்தைக் காணவே நான் துடிக்கின்றேன். கூட்டுறவுப் பொது அமைப்பை லட்சியமாகக்கொண்டே எல்லாச் சீர்திருத்தங்களும் நடைபெறவேண்டும். அத்தகைய சமுதாயத்திலே ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது கிராமத் தொகுதிகளிலும் உள்ள மக்கள் எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் அமைந்த கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கும். இச் சங்கங்கள் ஒவ்வொரு கிராமவாசிக்கும் ஒவ்வொரு குடியானவனுக்கும் அத்தியாவசியமாக வேண்டப்படும் பொருள்களான மண்ணெண்ணெய், உப்பு, துணி முதலியவற்றை சப்ளை செய்து வரும். அதோடன்றி, அவர்களுக்குத் தேவையாகும் எரு வகைகள், நல்ல விதைகள், ரஸாயன உரங்கள், மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள விவசாயக்கருவிகள் முதலியவற்றையும் சப்ளை செய்யும். தேவையானால், ட்ராக்டர்கள் போன்று விவசாயத்திற்குப் பயன்படும் யந்திரங்களையும் அவை அளித்துதவும். மற்றும், விதைக்கும் பருவத்தில் விவசாய வேலைகளுக்குத் தேவையாகும் பணத்தைக் கடனாகக் கொடுத்து, அதை அறுவடை காலத்தில் திரும்பப் பெற்றுக்கொள்ளும். விவசாயிகள் தங்களிடமுள்ள அதிகப்படியான தானியங்களையோ அல்லது மற்றப் பொருள்களையோ விற்க வேண்டுமானால், அதற்கும் மேற்குறித்த கூட்டுறவுச் சங்கங்களுக்கே கொண்டுவந்து சேர்க்கவேண்டும். இந்தக் கூட்டுறவுச்சங்கங்கள் ஒவ்வொன்றுடனும் தானியபாங்க் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் மூன்று பெரிய நோக்கங்கள் நிறைவேறும். முதலாவதாக, தானிய பாங்கியில், டெபாஸிட் செய்யப்பட்டுள்ள தானியங்களைச் சரியான நேரத்தில் கூட்டுறவு மார்க்கெட்டிங் ஏஜென்ஸி மூலம் விற்பதனால், விவசாயிக்கு உயர்ந்தபட்ச விலை கிடைக்கும். இரண்டாவதாக, அத்தகைய பாங்க் உள்ள பிரதேசத்தில் உணவு நெருக்கடி ஏற்படும்போது, மகசூல் கிடைக்கும் காலத்திற்கும் மகசூல் கிடைக்காத காலத்திற்கும் இடையில் தானியக்கையிருப்பு வைத்துக்கொண்டு மக்களுக்கு அளிக்க சௌகரியப்படும். மூன்றாவதாக, விவசாயப்பொருள்களில் உபரியாய் இருப்பவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து, அவற்றின், விலையைக் குறைத்துவிட அனுமதிக்காமல், ஒழுங்கான முறையில் வைத்திருக்க உதவும்.



## விவசாயத் துணைத்தொழில்கள்

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களுடன், கிராமவாசிகளுக்கு முழுநேர வேலை யளிப்பதற்காகத் தகுந்தமுறையில் விவசாயத் துணைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். கிராமாந்திரப் பிரதேசங்களில் வறுமை தாண்டவமாடுவதற்கான முக்கிய காரணங்களில் விவசாயத் துணைத்தொழில்களைப் புறக்கணிப்பதும் ஒன்றாகும். தகுதிவாய்ந்த விவசாயத்துணைத்தொழில்களை விஞ்ஞான ரீதியில் திட்டமிட்டு அபிவிருத்தி செய்தால், விவசாயிகளுக்கு வேண்டிய வேலையும் லாபமும் கிடைக்கும். விவசாயப் பண்டங்களை அப்படியே வெளி நாடுகளுக்கோ அல்லது தொழிற்சாலைகளுள்ள பிரதேசங்களுக்கோ அனுப்புவதற்குப் பதிலாக, அவற்றில் பெரும் பகுதியை ஏகதேசமாகச் செய்துமுடித்த பொருள்களாக அனுப்ப இயலும். கரும்பை ஆலையிலிட்டுச் சாறு பிழிந்து வெல்லமாக மாற்றலாம்; எண்ணெய் வித்துக்களைச் செக்காடி எண்ணெயையும் பிண்ணாக்கையும் உண்டாக்கலாம்;

விளைந்த பருத்தியிலிருந்து கொட்டையை நீக்கலாம் இன்னும் இதைப்போன்ற பலவற்றைச் செய்யலாம். இந்தியாவிலுள்ள பல்வேறு விவசாயப் பொருள்களிலிருந்து அநேக விவசாயக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய இடமிருக்கிறது. இவையெல்லாம் கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்டு, ஏற்கெனவே தோன்றியுள்ள கூட்டுறவுத் திட்டத்தில் இணைக்கப்படவேண்டும். இவை ஒருபுறமிருக்க, பாய்கள், பிரம்புக்கூடைகள், மேஜை நாற்காலி முதலிய தட்டுமுட்டுச் சாமான்கள், டப்பியில் அடைக்கப்பட்ட பழவகைகள், தோல் சாமான்கள், பொத்தான்கள், மற்றும் இவைபோன்ற உபயோகப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான உப கைத்தொழில்களும் கூட்டுறவு முறையில் அமைக்கப்படவேண்டும். பல்வேறு பிரதேசங்களிலுள்ள கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு மத்திய மார்க்கெட்டிங் ஸ்தாபனத்துடன் இணைக்கப்படலாம். ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள மக்களிடையே சிக்கனப் பழக்கங்களை உண்டாக்கி வளர்ப்பதற்கு விவசாயக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் முயல வேண்டும். அதற்காக, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் உதவியால் பொருள்கள் விற்கப்படும்போது, குறைந்த அளவுள்ள ஒரு தொகையைப் பிடித்துக்கொண்டு அதைக் 'கையாளும் நிதி' (Revolving fund) என்ற பெயரால் சேர்த்துவைக்கவேண்டும். இந்தக் 'கையாளும நிதி' முதலில் சிறிதாக இருந்தாலும், மேற்சொன்ன இரு வகையான கூட்டுறவுச் சங்கங்கள் தீவிரமாக வேலைசெய்ய தொடங்கிய உடனே மேன்மேலும் அதிகரித்துக் கொண்டே செல்லும். காலம் செல்லச்செல்ல, இந்த நிதியானது குன்றாது வளர்ந்து செல்லத்தக்க பொருளாதார அமைப்பின் அஸ்திவாரமாக அமையும்.



### பல்வகையான சேவை

கூட்டுறவு இயக்கம் நூற்றுக்கணக்கான வழிகளில் உருக்கொள்ளலாம். கூட்டுறவுச் சங்கம் நிலத்தை ஒன்றுபடுத்த முற்பட்டு, கடைசியாகக் கூட்டுறவுச் சாகுபடியை நடத்திவைக்கலாம். விவசாயிகளுக்குத் தக்க துணைத் தொழில்களை அளிப்பதற்காகக் கூட்டுறவுச் சங்கம் ஒரு கிளை ஸ்தாபனத்தை ஏற்படுத்தலாம். இத்தகைய நிலையில்தான் யந்திரத் தொழில்களை பிரித்துச் சிறிதாக்கி நாடெங்கும் அமைக்கவேண்டும் என்ற 'பரவல்' கொள்கையால் ஏற்படும் நன்மை விளங்கும். அப்பொழுதுதான் குறைந்த செலவில் மின்சார சப்ளை, சுலபமான மார்க்கெட்டிங் வசதிகள் ஏற்படுத்தல், தொழில் நுட்ப சம்பந்தமான அபிவிருத்தி முதலியவற்றைச் சரியானவகையில் அறிந்து பாராட்டலாம். வண்டல் மண்ணை எடுத்தல், வாய்க்கால் தோண்டுதல், காடுகளை வளர்த்தல், ரஸ்தாக்களைப்போடுதல், பள்ளிக்கூடங்கள், பொதுக்கட்டிடங்கள், தனிப்பட்டவரின் கட்டிடங்கள் ஆகியவற்றைக் கட்டுதல் முதலியவற்றுக்காகக் கூட்டுறவுச் சங்கங்களைப் பயன்படுத்தலாம். எனவே, கூட்டுறவுப் பொது அமைப்பினால் கிராமவாசிகளுக்குத் தன்னம்பிக்கையும் சுகவாழ்வும் ஏற்படும். ஆயினும், அப்படிப்பட்ட நிலையைத் திடீரென உண்டாக்கிவிடமுடியாது. அதற்குக் காலம் வேண்டும்; படிப்படியாக முன்னேறவேண்டும்.

### தனிப்பட்டவர் முயற்சிக்கு வசதி

ஆனால், அதுவரையில் இந்தியக் கிராமப்பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையில் இருப்பதை அனுமதிக்கமுடியாது. கூட்டுறவுப் பொது அமைப்பை ஒரேயடியாக உண்டாக்க முடியாமற்போனால், சில காலத்திற்குத்

தனிப்பட்டவர் முயற்சியை அனுமதித்து, புதியமுறைகளின் மூலம் விவசாய உற்பத்தியைப் பெருக்க இடமளிக்கவேண்டும். இந்த லட்சியங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான விவசாயச் சீர்திருத்தங்களை வெகு சீக்கிரத்தில் ஆராய்ந்து காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டும்.

சீர்திருத்தங்களைச் செய்யவேண்டிய முக்கிய வழிகளையும், அவற்றை நிறைவேற்றவேண்டிய முறைகளையும் விரிவாக எடுத்துரைப்பதற்கு முன்பு இந்தப் பிரச்சினையை அணுகும் விதத்தைப்பற்றி ஓர் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். நம்முடைய தேசம் பரந்த, உபகண்டமாக இருப்பதால், அங்கங்கேயுள்ள குத்தகைமுறை, வாரம், மகசூல், விவசாய சம்பந்தமான வழக்கங்கள், வசதிகள் முதலியன மாகாணத்திற்கு மாகாணம் மாறுபடுகின்றன. அதோடன்றி, அவை ஜில்லாவுக்கு ஜில்லாவும், சில சமயங்களில் கிராமத்துக்குக் கிராமமும் வித்தியாசப்படுகின்றன. இத்தகைய வேறுபாடுகளைக்கண்டு நாம் மலைத்துவிடாமல், தகுந்தவகையில் அடிப்படையான நோக்கங்களையும் கொள்கைகளையும் வரையறுக்கவேண்டும். அதே சமயத்தில் நாடெங்கும் ஒரே நிலப்படிதான் உள்ளது என்றும், எங்கும் ஒரேமாதிரியான நிலைமைதான் உள்ளது என்றும் கொண்டு, எதிர்ப்புகளைத் தவிடுபொடியாக்கும் சட்டங்களை இயற்றுவதிலோ, அல்லது எவரும் அறிந்த பரிகாரங்களைச் செய்வதிலோ நாம்ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நம்நாட்டில் பலவகைப்பட்டநிலம், பலவகைப்பட்டநிலைமை இருக்கின்றன என்று கவனியாமல், ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் செய்யப்படுவனவற்றை, அப்படியே பின்பற்றவேண்டும் என்று கொள்வதும் கூடாது. ஆயினும், மற்ற நாடுகளிலுள்ள வழக்கங்கள், கொள்கைகள் ஆகியவற்றை நம்முடைய நாட்டு வேலைமுறைகளை வகுத்துக்கொள்வதற்குச் சிறந்த வழிகாட்டியாகக்கொள்ளலாம். சுருக்கமான இந்தக் குறிப்புரையுடன், தற்சமயம் நாம் அக்கரை செலுத்திவரும் விவசாயச் சீர்திருத்தங்களைப்பற்றிய அவசரமான நடவடிக்கைகளை விரிவாக ஆராயலாம்.



## துண்டு நிலப் பகுதிகளை ஒன்று சேர்த்தல்

தனித்தனியாகப் பலரிடமுள்ள லாபமற்ற சிறு நிலப் பகுதிகளை ஒன்றுசேர்க்கும் விஷயம் நிலச்சீர்திருத்தத் திட்டத்தின் முன்னணியான அம்சங்களுள் ஒன்றாகும் என்று நான் கருதுகிறேன். சென்னை மாகாணத்திலே நிலம் அநேக உப பிரிவுகளாக்கப்பட்டு சிறுசிறு துண்டுகளாகச் செய்யப்பட்டுள்ளன. வருடந்தோறும் இந்த நிலைமை மேலும் மேலும் வளர்ந்துகொண்டே செல்லுகின்றது. ஒவ்வொரு விவசாயிக்கும் சராசரியாகக் கிடைக்கும் சாகுபடி நிலம் சுமார் 0·86 ஏகராவும், அவ்வாறே ஒரு குடும்பத்துக்கு சராசரியாக சுமார் 5·29 ஏகராக்களும் ஆகும். மொத்தக் குடும்பங்களில் 50 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர் சுமார் 2 ஏகராவும், 30 சதவிகிதத்தினர் 2 ஏகரா முதல் 5 ஏகராவுக்குள்ளேயும், 7 சதவிகிதத்தினர் 5 ஏகரா முதல் 10 ஏகரா வரையிலும் பெற்றுள்ளனர். 10 ஏகராவுக்கு மேல், நிலம் வைத்துள்ளவர் 10 சத விதத்துக்கு மேற்பட்டில்லை. நிலத்தின்மீதுள்ள ஜனத்தொகை நெருக்கம், வாரிசுச்சட்டம், துணைத்தொழில்கள் இல்லாமை, நிலத்தைப் பெற்றிருப்பதனால் சமுதாயத்தில் நிலவும் பொய் மதிப்பு முதலிய எல்லாமும் சேர்ந்து இந்தத் தாழ்நிலையை உண்டாக்கியுள்ளன. இவை போதாவென்று, சமீபகாலத்திலே சமூகச்சட்டமொன்றும் வந்

துள்ளது. அதாவது, இந்து குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கும் சொத்தில் பங்குண்டு என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தங்களுக்குள்ள உரிமைகள் யாவற்றையும் பெண்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு, ஆனால், இத்தகைய சமூகச் சட்டங்களால் பொருளாதாரத் துறையில் ஏற்படும் பலாபலன்களையும் அறிந்து அவற்றிற்கான பரிகாரமும் செய்யப்படவேண்டும். சென்னையிலே சம்பிரதாயக் கூட்டுறவு முறையை நாம் பரீட்சார்த்தமாக நடத்திப்பார்த்தோம், ஆனால், நாம் கண்ட பலன் இதுதான். பத்து வருஷ காலத்திற்குள் சுமார் 20 கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டு, அவற்றின் மூலம் 1,463 ஏகரா நிலம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக இரண்டு விஷயங்களைக் குறித்து யோசிக்கலாம். முதலாவது, தக்க வழிகளால் துண்டுபட்ட நிலப்பகுதிகளை ஐக்கியப்படுத்தலாகும்; இரண்டாவது, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வயல்களைப் பிரிப்பதைத் தடை செய்யும் சட்டத்தை ஏற்படுத்துவதாகும். இந்த இரு விஷயங்களிலும் நாங்கள் அக்கறை செலுத்திவருகிறோம். வெகுசீக்கிரத்தில் அவற்றிற்காகத் தேவையாகும் சட்டங்கள் கொண்டுவரப்படும் என்று நம்புகிறோம். அதே சமயத்தில் இந்தச் சீர்திருத்தத்தின் விளைவாக வேலையிழக்கும் மக்களை ஏற்ற வகையில் வேறு தொழில்களில் ஈடுபடுத்துவதற்காகக் கிராமக்கைத்தொழில்களை ஆரம்பித்தால்தான் மேற்சொன்ன பிரச்சினை முழுவதையும் தீர்த்தவர்கள் ஆவோம்.

## எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாம்?

உயர்ந்த பட்சமாக ஒருவன் எவ்வளவு நிலம் வைத்திருக்கலாம் என்பதைப்பற்றியும், பொருளாதாரத் துறையில் லாபமளிக்கக்கூடிய சரியான நிலப்பகுதியின் அளவு



எவ்வளவு என்பதைப்பற்றியும் கேள்வி பிறந்துள்ளது. இத்துறையில் தெளிவற்ற கருத்துக்களும் ஒரே வகையான எண்ணங்களும் இருந்து வருவதை நான் அடிக்கடி கவனித்திருக்கிறேன். அதாவது, தஞ்சாவூர், கோதாவரி, டெல்டா முதலிய இடங்களிலுள்ள வளம் செறிந்த நிலத்திலும், ராஜபுதனத்திலுள்ள வறட்சியான பூமியிலும் விவசாய நிலைமை ஒரே மாதிரியாக இருப்பதுபோல் எண்ணிப் பேசுகிறார்கள். வாழ்க்கைத் தரம் சரியான வகையில் அமைய வேண்டுமானால் குடும்பம் ஒவ்வொன்றும், மாதம் ஒன்றுக்குக் குறைந்தது நூறு ரூபாயாவது பெறவேண்டும் என்ற கருத்தைக் காங்கிரஸ் பொருளாதாரத் திட்டக் கமிட்டி தெளிவாகக் கூறியுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டுதான் லாபகரமான நிலப்பகுதியின் அளவை நிச்சயிக்கவேண்டும். இந்த வகையில் கணக்கிட்டுப் பார்த்தால் லாபகரமான நிலப்பகுதியானது நன்செய்ப் பூமியாய் இருந்தால் 20 ஏகராவும், தோட்டப் பூமியாய் இருந்தால் 10 ஏகராவும், புஞ்சைப் பூமியாய் இருந்தால் 30 ஏகராவுமாக இருக்கலாம். இதுவும் மேல் வாரியான மதிப்பீடேயாகும். இதைப்போன்று, ஒருவன் வைத்துக்கொள்ளக்கூடிய அதிகப்பட்சமான நிலத்தின் அளவை நிர்ணயிக்கும்போது, அவனுக்குக் கிடைக்கும் வருவாயையும், யந்திர முதலாளி ஒருவனுடைய வருவாயையும் ஒத்திட்டுப் பார்க்கவேண்டியது நியாயமாகும். ஆலை முதலாளி 4,000 ரூபாய் வருமானம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளபோது, அதே வருமானத்தை ஒரு நிலச்சுவான்தாரரும் பெற அனுமதிக்காமலிருப்பதற்கு எந்தவிதக் காரணமும் இல்லை. ஒரு வியாபாரி, அல்லது ஆலை முதலாளி எவ்வளவு வருவாயை அடைகிறார்களோ, அதே அளவுள்ள வருவாயை ஒரு விவசாயியும் பெறவேண்டும் என்ற அடிப்படையில்

விவசாயி வைத்துக்கொள்ளக்கூடிய உயர்ந்தபட்ச நில அளவையும் நிர்ணயிக்கவேண்டும். இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட உயர்ந்த பட்ச அளவுக்கு மேலுள்ள நிலங்களை மார்க்கெட் விலைக்கேற்ப வாங்கி மற்றவர்களுக்கு வினியோகிக்கலாம்.

## குத்தகை முறை

அடுத்தபடியாக, வாரம்தாரரின் நிலம், அவன் செலுத்தவேண்டிய வாரம், அவனுக்கும் நிலச் சொந்தக்காரனுக்கும் கூலியாளுக்கும் உள்ள தொடர்பு ஆகியவற்றைக் கவனிப்போம். பரோபகார சிந்தை வாய்ந்த கவர்னர் சர் தாமஸ் மன்ரோ தீர்க்க தரிசனத்துடன் செய்த காரியத்தின் பலனாக, நம் மாகாணத்திலுள்ள மொத்த நிலப்பரப்பான 125,829 சதுர மைல்களில் 75,604 சதுர மைல்கள் கொண்ட பூமி கடந்த நூற்றைம்பது ஆண்டுகளாக ரயத்துவாரி முறையில் இருந்து வருகிறது. நிலச் சொந்தக்காரர்கள் அந்தந்த ஸ்தலத்தில் இல்லாமல் இருப்பதன் காரணமாகப் பல தீமைகள் விளைவதுண்டு. அதாவது, வார விகிதாசாரங்கள் அளவுகடந்திருப்பதோடு, குத்தகை ஒப்பந்தங்கள் நிலையற்றனவாய் இருக்கும். ஆனால், ரயத்துவாரி முறையிலுள்ள நிலங்கள் விஸ்தாரமாக வினியோகிக்கப்பட்டிருப்பதன் காரணமாக, நம் மாகாணத்தில் மேலே கூறப்பட்ட தலத்திலில்லா நிலச்சுவான் முறையால் ஏற்படும் கெடுதிகள் வளரவில்லை. மற்றும், விவசாயம் செய்யும் வர்க்கம், விவசாயம் செய்யாத வர்க்கம் என்ற தனித்தனி வர்க்கங்களோ, அல்லது ஜாதிகளோ இங்கே அபிவிருத்தியடையவில்லை. எல்லா வகுப்பாரும் நிலத்தைப் பெற்றுள்ளனர். எந்தவித அகௌரவமோ அல்லது வெறுப்போ காட்டாமல் எல்லோரும் விவசாயத்தில் ஈடு



படுகின்றனர். ஏறக்குறைய 60 சத விகிதத்தினர் தங்கள் சொந்த நிலங்களைச் சாகுபடிசெய்கின்றனர். 15 சத விகிதத்தினர் தங்களிடமுள்ள குறைவான நிலங்களைச் சாகுபடி செய்வதுடன், தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காக மற்றவரின் நிலங்களையும் பயிர் செய்கின்றனர். சொந்தத்திற்கு நிலமே இல்லாமல் சாகுபடி செய்யும் வாரம்தாரர்கள், சாகுபடி செய்யாமலேயுள்ள நிலச் சொந்தக்காரர்கள் ஆகியோர் மொத்த விவசாயிகளின் ஜனத்தொகையில் தனித்தனியே 14 சத விகிதத்தினராக உள்ளனர். அதிலும் சாகுபடி செய்யாத நிலச்சொந்தக்காரர்கள் என்று கூறப்படுவோரும் உடல் உழைப்புக் கொண்டு வேலைசெய்யவில்லை என்பதைத் தவிர, மற்றப்படி விவசாய வேலைகள் அவர்களின் மேற்பார்வையில்தான் நடைபெறுகின்றன. நம் மாகாணத்தில் 4,000-க்கு மேற்பட்ட கிராமங்களிலுள்ள நிலைமையைப்பற்றி விரிவான விசாரணை நடத்திப் பார்த்ததில், சமீப காலத்திலே பெரும்பாலான நிலவிற்பனை விவசாயிகளுக்குள்ளேதான் நடைபெற்றிருக்கும் விஷயம் தெளிவாகியிருக்கிறது. எனவே, பஞ்சாபில் ஏற்பட்ட நிலப் பராதீனச் சட்டம்போன்ற கடுமையான நடவடிக்கைகள் நம் மாகாணத்திற்கு அவசியமில்லை.

## நம் மாகாணத்தின் சிறப்பியல்பு

இதன் விளைவு என்ன? நிலச்சொந்தக்காரருக்கும் வாரம்தாரருக்கும் பொதுவாக மற்ற இடங்களில் துவேஷமும் மனக்கசப்பும் ஏற்பட்டு விவசாய சம்பந்தமான தொடர்பு பாதிக்கப்பட்டிருக்கையில், நம் மாகாணத்தில் மலையாளப் பிரதேசம், ஜமீன்தாரிப் பிரதேசங்கள் ஆகியவை தவிர மற்ற இடங்களில் அந்த நிலைமை

அவ்வளவு அதிகமாக உண்டாவில்லை. மலையாளத்திலுள்ள நில வார விஷயம் பல்வகைப்பட்டதாகவும் சிக்கல் நிறைந்ததாகவும் இருப்பதால், விவசாய சம்பந்தமான பிரச்சினைகளை 1887-ம்௵ முதல் சட்டத்தின்மூலம் ஒழுங்கு செய்ய ஆரம்பிக்கப்பட்டது. வாரம்தாரரைத் தம்மிஷ்டம்போல் நிலச் சொந்தக்காரர்கள் வெளியேற்ற விடாமலும், அவர்களிடமிருந்து அதிகமான வாரத்தை வசூலிக்காமலும் தடை செய்ததன்மூலம் வாரம்தாரருக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது. நிலம் சீக்கிரத்தில் வளம் குன்றிப்போகாமல் பாதுகாக்கப்படுவதால் நிலச் சொந்தக்காரருக்கும் நன்மை ஏற்படுகிறது. ஆயினும், மலையாளப் பிரதேசத்திலிருக்கும் வாரம்தாரர்களின் குடிவார பாத்தியதையையும் வார அளவையும் மேலும் அதிகமாக நிர்ணயிக்கவேண்டும் என்று உணர்ந்து வருகிறோம். இதைப்பற்றிய விரிவான சட்டமொன்றை இயற்றுவதைக் குறித்துத் தீவிரமான ஆலோசனை நடந்து வருகிறது.

### ஜமீன்தாரிப் பிரச்சினை

ஆனால், இந்தப் பிரச்சினை ஜமீன்தாரிப் பிரதேசங்களில் அதிக சிக்கலானதாக இருக்கிறது. முழு இனாம்கள் உள்பட இந்த ஜமீன்தாரிப் பிரதேசங்கள் மொத்தத்திலே நான்கில் ஒரு பங்காக (அதாவது மொத்த நிலப்பரப்பான 125,828 சதுர மைல்களில் 33,077 சதுர மைல்கள்) உள்ளன. ஆயினும், இந்தியாவின் சில பகுதிகளில் நிலச் சொந்தக்காரருக்கும் அதை உண்மையாய் சாகுபடி செய்வோருக்கும் இடையே சுமார் 17 தரகர்கள் இருப்பது போன்று இங்கே உப குத்தகை முறை நடைபெறவில்லை. ஆனால், குத்தகை முறையை நிர்ணயித்தல், நியாயமான



வார அளவுகள், விற்பதற்கான உரிமை ஆகிய விஷயங்களில் அபிவிருத்தி ஏற்படவேண்டியது மிகவும் அவசியமாகும். கடந்த நாற்பதாண்டுகளாக இது சம்பந்தமாகச் சட்டங்களைத் தொடர்ந்து செய்து பார்த்ததில், இப்பிரதேசங்களை நம் மாகாணத்தின் மற்றப் பகுதிகளிலுள்ள ரயத்துவாரி முறைக்குச் சமமாக மாற்றினாலன்றி, தக்க பலன் ஏற்படாதென்பது உறுதியாயிற்று.

### வார விகிதங்கள், வரி இழைத்தல்

குத்தகை முறைகளைப்பற்றி மேலே சொன்னவெல்லாம் வார விகிதங்களுக்கும், வரியில் சேரவேண்டியவற்றை வசூலிப்பதற்கும் அப்படியே பொருந்தும். பொருளாதார நியதிகளைச் சரியாக அறிந்து, அந்த அடிப்படையின்மீது அமைந்த வழக்கமே மொத்த ரயத்துவாரி முறையில் பிரதான அம்சமாக அமைந்துள்ளது. ஜில்லாவுக்கு ஜில்லா வாரம் வித்தியாசப்படுகிறது. ஒரு பயிருக்கும் மற்றொரு பயிருக்கும் வாரத்தில் வேறுபாடிருக்கிறது. நிலத்தின் வளம், நீர்ப்பாசன வசதிகள், செய்யப்படும் பயிர்களின் எண்ணிக்கை ஆகியவற்றையும் பொறுத்திருக்கின்றது. நிகர உற்பத்தியைப் பார்க்கும்போது வித்தியாசம் அதிகப்படுகின்றது. தஞ்சாவூர், கோயமுத்தூர் ஆகிய இடங்களில் வாரம் குறைவாகக் காணப்படுகிறது. ஆனால், அந்த இடங்களில் களத்து மேடுகளிலே வாரம்தாரருக்கு மாமூல்படி கொடுக்கப்பட்டுவரும் தானிய அளவையும், வாரமில்லாமலே சாகுபடிசெய்ய அனுமதித்துள்ள சில நிலங்களிலிருந்து கிடைக்கும் மகசூலும் கணித்து ரூபாய்க் கணக்கில் சரியாக மதிப்பிட முடியாது விடப்பட்டிருக்கிறது. முன்னே குறிப்பிட்டபடி நம் மாகாணத்திலுள்ள 4,000-க்கு மேற்பட்ட கிராமங்களிலே

விரிவான விசாரணை நடத்திப் பார்த்ததிலிருந்து, பொதுவாக வார விகிதங்கள் நியாயமாகவும், குத்தகைகள் கூடிய வரையில் நிலையாகவும் உள்ளன என்று தெரிகிறது. அதோடன்றி, பெரும்பாலான நிலங்களை அவற்றிற்குரிய சொந்தக்காரர்களே சாகுபடிசெய்து வருகிறார்கள் என்றும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. எனவே, இப்படிப்பட்ட நிலைமையில் பம்பாயில் உள்ளதுமாதிரி ரயத்துவாரிப் பிரதேசங்களில் குடிவாரச் சட்டம் இயற்றவேண்டிய அவசியமோ, அல்லது சீர்திருத்தவாதிகளில் சிலர் கூறுவதுபோன்ற நில நியாயசபைகளை ஏற்படுத்துவதற்கான அவசரமோ நம் மாகாணத்திலே, மலையாள ஜில்லா தவிர மற்ற இடங்களில் இன்னும் உண்டாகவில்லை. மலையாள ஜில்லாவில்மட்டும் நில நியாயசபைகளை நிரந்தரமான ஸ்தாபனங்களாக நிறுவவேண்டும். ரயத்துக்களையும் நிலச்சுவான்களையும் கொண்ட அந்த சபைகளுக்கு ரெவின்யூ இலாகா அதிகாரிகளில்லாமல், சர்க்கார் விவசாய இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் தலைமை தாங்குவார்கள். மற்ற இடங்களில் பிரச்சினைகள் தோன்றினால் அவ்வப்போது குறிப்பிட்ட காரியத்துக்கான நில நியாயசபைகளை நியமித்தால் போதுமானதாகும்.

### வரி வஜா

வாரங்களைப்பற்றிய பிரச்சினையை விடுத்து மேற்செல்வதற்குமுன், வரி வஜா முறையைப்பற்றி ஒரு சிறிது கூறவேண்டியது அவசியம். பருவமழை பெய்யாததாலோ, அல்லது வெள்ளத்தால் நஷ்டம் ஏற்படும்போதோ விளைச்சலின் ஒரு பகுதியை நிலச்சொந்தக்காரர் பயிரிடுவோனுக்கு வஜா செய்துவிட வேண்டுமென்று சட்டபூர்வமாக ஏன் விதிக்கக்கூடாது என்று அடிக்கடி கேட்கப்



பட்டுவருகிறது. மொத்த விளைச்சலைப் பகிர்ந்துகொள்ளும் முறையானது நம் மாகாணத்தில் முன்னே மேற்சொன்ன வகையிலே வழக்கத்தில் இருப்பதால், இதற்காகச் சட்டம் இயற்றுவதில் அர்த்தமே இல்லை. வேண்டியது என்னவென்றால், அரசாங்கத்தினரிடமிருந்து நியாயமான ஒரு பகுதியை நிலச்சுவான்தார் பெற்று, அந்த வரி வஜாவை வாரம்தாரருக்கு அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும். ரெவின்யூ போர்டாரின் நிரந்தர உத்தரவுகளின்படி அணுவாரி மதிப்பீட்டின் அடிப்படையில் தற்சமயம் அமைத்துள்ள திட்டத்தின் பிரகாரம் அளிக்கப்படும் வரிவஜா போதிய நன்மை தருவதாயில்லை. விவசாயத்திற்குத் தேவையாகும் செலவையோ, அல்லது பஞ்சகாலத்திலும் வெள்ளம் வரும் காலத்திலும் விவசாய குடும்பங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களிலிருந்து நிவாரணம் அளித்து அவர்களைப் பராமரிப்பதற்கோ தேவையாகும் பொருட்செலவையோ கணக்கிட்டு அவற்றிற்கேற்ப வரிவஜா அளிக்கப்படுவதில்லை. எனவே, விவசாய இன்ஷூரன்ஸ் திட்டத்தை விரிவான முறையில் நிறுவும்வரையில், வரிவஜா அளிக்கும் விஷயத்தில் அரசாங்கம் இன்னும் அதிக தாராளமான கொள்கையை அனுசரிக்கவேண்டும். இந்த விஷயங்களில் சென்னை சர்க்கார் கவனம் செலுத்தி வருகின்றனர்.

### விவசாயக் கூலியாளர் பிரச்சினை

விவசாய சம்பந்தமான எல்லா ஆராய்ச்சிகளுக்கும் அச்சாணியாயிருப்பது விவசாயக் கூலியாளர் பிரச்சினையாகும். விவசாயக் கூலியாளர் நிலைமை பரிதாபம் நிறைந்தது; அவர்கள் சரித்திரமே ஒரு சோகக் கதை என்று கூறலாம். நம் சென்னை மாகாணத்தின் கிராம மக்களில்

நிலமில்லாத விவசாயக் கூலியாளர்களின் எண்ணிக்கை சுமார் 15 சத விகிதம்தான் இருக்கின்றது. ஆயினும், அவர்களில் பெரும்பாலோர் வறுமை, நோய், அறியாமை, அசுத்தம், சோம்பல் ஆகிய பஞ்ச அரக்கர்களால் அழுத்தப்பட்டுள்ளனர். ஆறாவதாக, மற்றொரு அரக்கனும் அவர்களை விழுங்க நெருங்குகிறான். பொய்ப் பிரசாரம் செய்வோரின் பலாத்கார கோஷங்களுக்குக் கிஸான்கள் இரையாகி யந்திரத்தொழில் துறையைச் சார்ந்த தொழிலாளர்களின் வேகச் செயல்களைக் கண்மூடித்தனமாய்ப் பின்பற்ற முயலுகின்றனர். 'யந்திரத்தொழிற் கூலியாளர் தலைமை வகிக்க, விவசாயக் கூலியாளர் பின்பற்றவேண்டும்' என்ற ரஷ்ய நாட்டுக் கொள்கை அவர்களிடையே வெளிப்படையாக, வேண்டுமென்றே பிரசாரம் செய்யப்பட்டுவருகிறது.

## நியாயமான கூலி விகித நிர்ணயம்

விவசாயக் கூலியாளரின் நிலைமையில் உடனடியாக அபிவிருத்தி ஏற்படவேண்டியது அவசியம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. யுத்தகாலத்தில் விலைவாசிகள் உயரவே, கூலியும் அதிகம் உயர்ந்தது. 1946-ம் வருடத்தில் எடுத்த கூலிக் கணக்கின்படி, சென்ற ஐந்து ஆண்டுகளில் வயல்களில் வேலைசெய்யும் ஆண் கூலியாளரின் தான்யக் கூலி விகிதங்கள் 252 சத விகிதமாகவும், ரொக்கக் கூலி விகிதங்கள் 240 சத விகிதமாகவும், பெண் கூலியாளரின் தானியக் கூலி 203 சத விகிதமாகவும், ரொக்கக் கூலி 197 சத விகிதமாகவும் அதிகரித்தன. ஆனால், நெல், சோளம், கம்பு முதலிய தானியங்களின் விலை 111 சத விகிதம்தான் உயர்ந்திருந்தது. ஆகவே, முன்னிருந்ததைவிட இப்போது விவசாயக் கூலியாளரின் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதென்றாலும், மேலும் அபிவிருத்தி உண்டாக



வேண்டும். இந்தக் கொள்கையை ஒப்புக்கொண்டதன் விளைவாகத்தான் மத்திய சர்க்கார் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அச்சட்டத்தின் ஷரத்துகளை மாகாண சர்க்கார்கள் நிறைவேற்றி வைப்பதற்கு மூன்று வருஷத் தவணை தரப்பட்டிருக்கிறது. ஆயினும், விவசாயச் செலவுகளைக் கவனிக்காமல் கூலி விகிதங்களை நிர்ணயிக்க இயலாது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் தானியங்களின் அளவு, இங்கிருந்து ஏற்றுமதியாகும் தானியங்களின் அளவு, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தானியங்களைக்கொண்டு செல்வதற்கான போக்குவரவு சாதனங்கள் முதலியவற்றைச் சரியான வகையில் ஒழுங்குபடுத்தும் வரையில், தானியங்களின் விலை ஒரே நிலையில் இருக்க இயலாது. எல்லாவற்றிற்கும் மேலாக, விவசாயப் பொருளாதாரத் துறையிலுள்ள நிலையற்ற தன்மையை ஒழிக்கவேண்டும்; அல்லது குறைக்கவாவதுவேண்டும். அப்போதுதான் தொழிலாளருக்குத் தக்க கூலியும், வேண்டிய அளவு வேலையும் கிடைக்கும். விவசாயக்கூலியாளருக்கு கூலி விகிதத்தை நிர்ணயித்துவிட்டு, அதைக் கொடுக்கவேண்டிய விவசாயிகளின் வருமானத்துக்கு மட்டும் அதிருஷ்டத்தை நம்பி இருக்குமாறு செய்துவிடுவோமேயானால் அது நியாயமாகாது. அதோடன்றி, அது பொருளாதார முறைக்குத் தவறானதாகவுமாகும். வியாபாரம், தொழில், உத்தியோகம் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்திற்கே சமமான வகையில் விவசாயத்திலிருந்தும் வருமானம் கிடைக்கும்படி செய்யாத வரையில், விவசாயத் தொழிலாளரின் கூலியை உயர்த்துவதோ அல்லது அவர்களது வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்வதோ பொருளாதார ரீதியாகப் பார்த்தால் நடவாத காரியங்களாகும்.

## சமூக, கலாசார அபிவிருத்தி

கூலி விகிதப் பிரச்சினையோடு, கிராமங்களில் குடி
யிருப்பு வசதி முதலிய பல சௌகரியங்களை அமைப்பது
பற்றிய பிரச்சினையையும் நாம் தீர்க்கவேண்டி யிருக்கிறது.
குறைந்த செலவில் சுத்தமான வீடுகள், பொழுதுபோக்குக்
கான நிலையங்கள், பள்ளிக்கூடங்கள் முதலியவற்றைக்
கட்டுவதற்கு அவசியமான எல்லாச் சாமான்களும் நம்
நாட்டில் உள்ளன. ஆங்காங்கே கிடைக்கும் கட்டடச்
சாமான்களுக்கேற்ற வகையில் திட்டமிட்டு நாடெங்கும்
குடியிருப்புக்கான வீடுகளைக் கட்டவேண்டியது உடனடி
யான முக்கிய வேலையாகும். விவசாயம், கிராமக் கைத்
தொழில்கள் ஆகியவற்றில் அதிகப்பற்று உண்டாவதை
அடிப்படை நோக்கமாகக்கொண்ட புதிய திட்டப்படி
கல்வி போதிக்கப்படவேண்டும். அத்துடன் சமூக,
கலாசார அபிவிருத்தி சம்பந்தமான விஷயங்களும் கற்றுத்
தரப்படலாம். இதன் துணையால், விவசாயக் கூலியாளரின்
திறமை அதிகமாகும். இந்த மாகாணத்தில் மதுவிலக்கு
அமுல் நடத்திவைக்கத் தொடங்கியது முதல் விவசாயத்
தொழிலாளர் வாழ்விலே ஒரு புது சகாப்தம் ஆரம்பமாகி
விட்டதென்று கூறலாம். பொருளாதாரத் துறையிலும்,
சமூகத் துறையிலும் அவர்கள் பெரிதும் முன்னேற நல்ல
சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது.

## சமநிலைப் பொருளாதாரத்தில் விவசாயக் கூலியாளர் நிலை

ஆயினும், விவசாயக் கூலியாளருக்கு வேண்டிய
இன்றியமையாத தேவைகளைத் திட்டமாக வரையறுத்துக்
கூறுவது ஓரளவு சாத்தியமேயாகும். குறைந்தபட்ச
வாழ்க்கை வசதிகளைத் தொழிலாளர் நிச்சயம் பெறத்தான்
வேண்டும். தொழிலாளரைச் சுரண்டி, அவர்கள் உற்பத்தி



செய்த உபரிப் பொருள்களைப் பிறர் உண்டுகளிக்க யாரை
யும் அனுமதிக்கலாகாது. ஒவ்வொரு தொழிலாளியும்
தான் செய்த தொழிலின் பயனை அனுபவிக்க அனுமதி
யளிக்கப்படவேண்டும். முன்னே விளக்கிய சமநிலைப்
பொருளாதார முறையில் விவசாய வருவாயைப் பகிர்ந்
தளிக்கும்போது, முதலாவதாக வேலைசெய்கின்ற தொழி
லாளிக்கும், நிலத்தை ஈந்து முதலையும் போட்டு மேற்
பார்வையும் செய்கின்ற நிலச் சொந்தக்காரருக்கும், விவ
சாயத்துக்கு வேண்டிய மற்றக் காரியங்களைச் செய்கின்ற
வாரம்தாரருக்கும் தக்கவாறு பங்கு கொடுக்கப்பட
வேண்டும். மொத்த வருவாயில் மேற்சொன்ன பங்குகளே
முதலிடம் பெறவேண்டும். இவ்வாறு விவசாய உற்பத்
திக்காக ஒத்துழைத்த ஒவ்வொருவரும் பெறுகிற ஊதியம்
கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பெறுகின்ற
ஊதியத்துக்குச் சமமாக இருக்கவேண்டும். அதற்கு
மேலுள்ள உபரி அளவை மேலே கூறிய மூன்று தரப்
பாரும் பங்கிட்டுக்கொள்ளலாம். இம்முறையினால் லாபத்
தில் பங்குகொள்வதேயன்றி தொழிலாளருக்கு உற்சாக
மும் உண்டாக வழியேற்படுகிறது. விவசாயத்திலிருந்து
கிடைக்கும் வருமானம் இவ்வாறு புதிய வகையில் பகிர்ந்
தளிக்கப்படுமானால். கூலியாளர் விவசாய உற்பத்தியைப்
பெருக்குவதிலும், தங்கள் திறமையை வளர்த்துக்கொள்
வதிலும் அதிக அக்கறை செலுத்துவார்கள்.

இவ்வாறு பங்கிட்டுக்கொள்ளும் திட்டம் அங்கீகரிக்கப்
பட்டு, விவசாயத் தொழிலாளருக்குத் துணைத் தொழில்
களை அளிப்பதற்காக விவசாயக் கைத்தொழில்கள் ஆரம்
பிக்கப்படுமேயானால், அவர்களுடைய பங்கு மேலும்
அதிகமாகும். இதன் விளைவாக யந்திரத் தொழிலாளர்,
உழவுத் தொழிலாளர் என்ற இருவகையான தொழி

ளாளர்களின் வருமானத்தில் உள்ள பெரு வித்தியாசம் குறைய ஆரம்பித்து, இறுதியில் மறைந்தே விடும்.

ஆதலால், விவசாயத்தில் சம்பந்தப்பட்ட எல்லோரும் விளைச்சலைப் பெருக்க முயற்சி செய்யவேண்டுமென்பதே உடனடியான தேவையாகும். அத்தகைய இலாபகரமான விளைச்சல் இல்லாமையால், விவசாயத் தொழிலாளி, பயிர் செய்யும் நிலத்துக்குரிய இதர பாகஸ்தரின் பங்குகளைக் குறைத்துத் தனக்குக் கிடைக்கவேண்டிய பிரதிபலனை அதிகரித்துக்கொள்வதே தற்கால முறையாக நடைபெற்று வருகிறது. (இதர பாகஸ்தருடைய பங்குகள், தொழில், வர்த்தகத் துறைகளில் இப்போது இருந்துவரும் பங்குகளைக் காட்டிலும் குறைந்திருப்பது யாவரும் அறிந்த விஷயமே). விவசாயத் தொழிலாளி மட்டும் தனக்குரிய பிரதிபலனை அதிகரித்துக்கொள்வதால் சமாதானநிலைமைக்குச் சிறிது பங்கம் ஏற்படுகிறது. இத்தகைய சமாதான பங்கம் பெருவாரியாய் நிகழாதபோதிலும் (குத்தகை சம்பந்தமான சச்சரவுகளை நீக்குவதற்குக் குறிப்பிட்ட சில நியாய சபைகள் சமரச நிலைமைகளை நிறுவுவதற்குப் போதியனவாய் இருந்த போதிலும்) அவ்விதமான இகலிய நிலைமை விவசாயத் திறமைக்கும், அதிக விளைச்சலுக்கும் அநுகூலமாயிராது. ஆகையால், விவசாயத் தொழிலாளியின் வாழ்க்கை நிலைமை உயரவேண்டுமானால், தொழில் பிரதேசங்களில் இப்போது இருந்துவரும் வருந்தத்தக்க நிலைமைக்கு எவ்விதத்திலும் குறையாத கிராமங்களின் அசுத்த நிலைமை நீங்கவேண்டுமானால், தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள், அரசாங்கத்தார், வர்த்தகர், உத்தியோகஸ்தர்கள் ஆகிய எல்லோரும் விவசாயத்தைப் பாதுகாக்கத் துரிதப்படுவதுடன், மூலப் பொருள்களை விளைவிப்போருக்கு அம்மூலப் பொருள்களுக்குரிய தகுந்த விலை



களைக் கொடுக்க முற்படவேண்டும். அப்போதுதான், நிரந்தரமான, உண்மையான பரிகாரம் ஏற்படும்; வேளாண்மையில் முக்கிய ஒரு பாகஸ்தனான விவசாயத் தொழிலாளியும் தனக்குரிய நியாயமான பங்கைப் பெறுவான்.

விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பலதரப்பட்ட விவசாயிகளை ஒரே தரமாக ஆக்கிவிட்டால், விவசாய சம்பந்தப்பட்ட தகராறுகள் நீங்கிவிடும் என்ற ஒரு குறுக்கு வழியைச் சிலர் கூறுகின்றனர். எத்தேசத்தாரும் இலட்சியமாகக் கொள்ளக்கூடிய சிறந்த விவசாயக் கொள்கை இதுவே என்றுகூடச் சிலர் சொல்வதை நான் கேள்விப்பட்டதும் உண்டு. ஆனால் ஆலைத் தொழில், வர்த்தகம் உத்தியோகம் ஆகிய துறைகளில் இக்கொள்கையை மெய்யாகப் பயன்படுத்திக் கொள்ளலாமென்று மட்டும் நான் எங்கும் கேள்விப்படவில்லை. தொழில் நுணுக்க நிபுணர், மேற்பார்வையாளர், தரகர் இல்லாமல் தொழிலாளரை மட்டும் கொண்டு ஆலைத்தொழில்களை நடத்துவதென்றோ, அல்லது எல்லா உத்தியோகத் துறைகளையும், சூப்பரின்டெண்டுகள், அதிகாரிகள், காரியஸ்தர்கள் உதவியின்றிக் குமாஸ்தாக்களைக்கொண்டே நடத்துவதென்றோ, சீர்திருத்தக்காரர்கள் யோசித்திருப்பார்களாவென்று நான் ஐயுறுகிறேன். மாறுதலில்லாத ஒரேபடித்தான சமுதாயத்தை நிறுவுவதும், ஒட்டுணித் தன்மைவாய்ந்த தரகனை நீக்குவதும் ஒன்றெனக் கொள்ளலாகாது. யந்திரத் தொழில் உற்பத்தியை எப்படியாவது பெருக்கும் ஏக நோக்கத்துடன் விவசாயியின் க்ஷேமலாபங்களையும் அடக்கி வைத்துள்ள ரஷ்யா தேசத்திலுங்கூடத் தொகுதிப் பண்ணை முறையில், "டோஸ்" "ஆர்ட்டெல்" "கம்யூன்" என்று வெவ்வேறு விதமான வர்க்கங்கள் உள. திறமையை விருத்திசெய்வதற்கும், உற்பத்தியை அதிகப்படுத்துவதற்

கும் எப்போதும் வேண்டுவது "விவசாய தாரதம்மிய ஏணியாகும்." என் கற்பனையில் தோன்றியுள்ள கூட்டுறவு ஜனநாயக சமுதாயத்தில் வேறு வேறான தொழில்களை நடத்தி, அவரவர் உதவியுள்ள மூலதனம் தொழில் நுணுக்கம், நிர்வாகத்திறமை, சேவை ஆகியவற்றிற்கேற்ப வேறு வேறான பலன்களை அநுபவிக்கும் அங்கத்தினர்கள் இருப்பார்கள்.

## விவசாயப் பொருள்களைத் தக்க விலையில் விற்க

இப்போது நிலவிவருகிற இலாபகரமான விலை நிலைமையில் விவசாயப் பொருள்களுக்குக் குறைந்தபட்ச விலைகளை நிர்ணயிக்கும் பிரச்சினை முக்கியத்துவம் வாய்ந்திராவிடினும், எந்த விவசாயச் சீர்திருத்தத் திட்டத்துக்கும் மூலாதாரமானதாகும். விலை நிர்ணயக் கொள்கைகளை ஆதரிக்கும் எல்லாத்திட்டங்களும், அவற்றைப் பரீட்சித்துப் பார்த்த நாடுகளில் இடையூறுகளுக்கு இலக்காகி இருக்கின்றன. அதற்குக் காரணம் யாது? இதர பொருளாதாரத்துறைகளிலுள்ள விலைப் போக்குகளினின்றும், விவசாய விலைநிர்ணயக் கொள்கைகளை ஆதரிக்கும் திட்டங்கள் பிரிக்கப்பட்டு ஆலோசிக்கப்படுவதேயாகும். விவசாயப் பொருள்களுக்குரிய குறைந்தபட்ச விலைப் பிரச்சினையை, விவசாயத்துக்குப் புறம்பான பொருள்கள், தொழில்கள், உத்தியோகங்கள் ஆகியவையோடு சமமாக இணைத்தாலொழிய, குறைந்தபட்ச விலைக் கொள்கை எதுவும், தேசத்தின் செல்வத்தைத் தொடர்ந்து உறிஞ்சிக் கொண்டிருக்குமல்லாமல் நிலைத்திருக்க முடியாது. ஆதலால், அதற்கு நான் கூறும் பரிகாரம் பின்வருமாறு:—

விவசாயப் பொருள்கள் சம்பந்தப்பட்டமட்டில், விவசாய மூலப்பொருள்கள் உற்பத்தியிலிருந்து, அவற்றி



லிருந்து பண்டங்கள் பூர்த்தி செய்யப்படும் வரையில் உள்ள எல்லா உற்பத்திக் கட்டங்களிலும் ஏற்படும் செலவை ஜாக்கிரதையோடு கவனிக்கவேண்டும். உதாரணமாகப் பருத்தியை எடுத்துக்கொள்வோம். முதன் முதலில் பருத்தியின் உற்பத்திச் செலவையும், அதிலேற்படும் குறைந்தபட்ச இலாபத்தையும் கணக்கிடவேண்டும். அதன்பிறகு, பருத்தியினின்று கொட்டையை நீக்குவதால் ஏற்படும் செலவையும் அத்தொழிலில் ஈடுபட்டுள்ளவனுக்குரிய இலாபத்தையும். நூல் நூற்பதில் ஏற்படும் செலவையும், நூல் நூற்பவனின் இலாபத்தையும், நெய்வதில் ஏற்படும் செலவையும், நெசவாளியின் இலாபத்தையும், சாயமிடுதலின் செலவையும், சாயக்காரன் இலாபத்தையும், ஜவுளி வியாபாரியின் செலவையும், அவனடையும் இலாபத்தையும் கணக்கிடவேண்டும். தற்காலம், இத்தகைய பலதிறப்பட்ட உற்பத்தியாளர் அடையும் இலாபம் அதிகமாக மாறுபடும். உற்பத்திக் கட்டங்களில் பலதிறப்பட்ட உற்பத்தியாளரின் இலாப விகிதத்தை ஒரே படித்தாக ஏற்படுத்துவதே நமது நோக்கமாக இருக்கவேண்டும். இதர பொருள்கள் விஷயத்திலும் இதேமாதிரி கணக்கிட்டால் அப்பொருள்களின் விலைகளை நிர்ணயிக்கக்கூடும். உற்பத்தியின் பல கட்டங்களில் ஏற்படும் செலவுகளையும் விலைகளையும் நுணுகி ஆராய்ந்தால், உற்பத்தியாளருள் சில வகுப்பினர் அடையும் நியாயமற்ற அல்லது அபரிமிதமான லாபங்களை நாம் தெரிந்துகொள்ளலாம். இத்தகைய விஷயங்களால், ஆரம்ப உற்பத்தியாளரின் பொருள்களின் விலையை உயர்த்துவதற்கோ அல்லது செய்து முடித்த பொருள்களின் விலையை அவற்றை உபயோகித்துக் கொள்பவற்கு அநுகூலமாகக் குறைப்பதற்கோ ஏற்றபடியாக இலாப விகிதத்தைக்குறைக்கலாம். இது ஒரு பிரயாசையும் சிக்கலு

மான மார்க்கம். ஆனால், பிரயாசைக்கேற்ற பலனுண்டு. இதற்காக இல்லாவிட்டாலும் ஆலைத் தொழிலாளரின் கூலியை நிர்ணயிக்கவாகிலும் உற்பத்திச் செலவு கணக்கைத் துரிதமுடன் நுணுகி ஆராயவேண்டும்; அவ்விதம் செய்து முடித்தால் இவ்வாராய்ச்சியை, விவசாயிகளுக்கு அநுகூல மான நியாய விலைகளை நிர்ணயிப்பதில் பெருவாரியாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

### கிராமக் கடன் சுமை

இன்னும் எத்தனையோ பல வழிகளில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றி ஆலோசிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அவற்றுள், விவசாயக் கடன் பற்றியவை மாயமான்போல் போகப்போக பிடிகொடுக்கா தவையாக இருக்கின்றன. கிராமக்கடன் நெடுநாளாய் இருந்துவரும் பிரச்சினை என்பது யாவரும் அறிந்தவிஷயம். சமீப காலத்தில் அரசாங்கத்திற்காக இப்பிரச்சினைகளைப் பற்றி ஆராய்ந்த பொருளாதார நிபுணர் கூறியுள்ளபடி, இம்மாகாணத்து மொத்தக் கிராமக்கடன் 1939-ம் வருஷத்தில், அதாவது யுத்தத்திற்கு முன்பு, சற்றேறக்குறைய 272 கோடி ரூபாயாகும். 1945-ம் வருஷத்தில் விவசாயப் பொருள் விலை ஏற்றத்தின் காரணமாகக் கிராமக்கடன் 218 கோடிக்குக் குறைந்தது. நிகரக் குறைச்சல் 54 கோடி மாத்திரம். ஆனால் யுத்த வருஷங்களில் நிலம் வாங்கு வதற்காகச் செலவிட்ட 27 கோடியைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் கடனின் மொத்தக்குறைச்சல் ஏறக்குறைய 82 கோடியாகும். இக் கடன்தொகையில் 10 கோடி குறைந்த தற்கு விவசாயக் கடன் நிவாரணச் சட்டம் சம்பந்தமான நடவடிக்கையே காரணமாகும். ஏறக்குறைய 47 கோடி ரூபா குறைந்ததற்கு நிலவிக்கிரயங்களே காரணமாகும்.



யுத்தகால விலை ஏற்றத்தால் ஏறக்குறைய 25 கோடி ரூபா குறைந்தது. தற்காலத்தில் விவசாயப் பொருள்களின் விலை ஏற்றத்தால் கடனின் உண்மைப் பளுவை நன்றாய் உணர்வதற்கில்லை. ஆனால் பொருளாதார மந்தம் நிகழ்ந் தாலும், திடீரென விவசாயப் பொருள்கள் விலை சாய்ந்தா லும் கடன் பிரச்சினை மிக்க அபாய நிலைமையை அடையும். சென்னை அரசாங்கத்தார் சமீபகாலத்தில் விவசாயக் கடன். நிவாரணச் சட்டத்தைத் திருத்தி அதன் வியாபகத்தைப் பரப்பி அதன் விளைவுகளைக் கூர்ந்து கவனித்துவருகிறார் கள். விலையேற்றமும் உபயோகிக்கும் பொருள்களின் குறைச்சலும் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் விவசாயிக ளிடையே சிக்கனத்தை ஊக்குவதற்கான முயற்சியைக் குறித்து அரசாங்கத்தார் சிந்தித்து வருகிறார்கள். நேஷ னல் சேவிங்ஸ் இயக்கம் கிராம மக்களின் ஆதரவைப் பெற்றுவருகிறது. எதிர்கால விலை வீழ்ச்சியால் விவசாயி களின் பொருளாதார நிலை திடீரெனச் சீரழிவதைத் தடுக்க, நில அடமான பாங்குகள், கூட்டுறவு இலாகா ஆகியவற்றின் உதவியைக்கொண்டு கடன் நிவர்த்திக்கான வழிகள் ஆராயப்படுகின்றன.

### விவசாயத்துக்குப் பொருளுதவி

கிராமக்கடன் நிவர்த்தியும், கூட்டுறவு மூலம் கடன் கொடுக்கும் உபாயமும் போதிய அளவு முற்போக்கு அடையவில்லை. திடமான விவசாய நன்மையை விருத்தி செய்ய நாட்டிலுள்ள ஜாயின்ட்ஸ்டாக்கு கமர்ஷியல் பாங்கு கள் நடத்திவரும் விவகாரத்தில் கால்பாகத்தை விவசாயிக ளுடன்நடத்தக் கட்டாயப்படுத்தப்படவேண்டும். மூலதனம் முடங்கிப்போகும் காரணம்பற்றி விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க இயலாதென்பதே கமர்ஷியல் பாங்குகளின் வாத

மாகும். ஆனால் விவசாயிகள், வறட்சியாலும் வெள்ளம் முதலியவற்றாலும் விளைச்சலுக்குச் சேதம் ஏற்படுவதைத் தடுக்கக் கட்டாய இன்ஷூரன்ஸில் ஈடுபடுவதாலும், தங்கள் கால்நடைகளை இன்ஷூர் செய்யும் திட்டத்தை அதோடு இணைப்பதாலும் கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி முதலிய வியாதிகளைத் தடுக்கப் போதுமான வைத்திய சேவையைப் பயன்படுத்திக்கொள்வதாலும், நாணயத்துக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரர்களாகி, வியாபாரிகள், தரகர்களைப்போல் பாங்கர்களுக்கு இனியவர்களாக விளங்குவார்கள். இங்ஙனம் திருந்திய விவசாய நிலையிலுங்கூடக் கமர்ஷியல் பாங்குகள் கடன் கொடுக்கத் தயங்குமாயின் இந்திய ரிசர்வ் பாங்க், தன் விவசாயக் கடன் இலாகாவின் மூலமாய் முன்வந்து அங்கீகரிக்கப்பட்ட விவசாயக் கணக்குப் பட்டிகளைச் சுலபமாய் ரீ டிஸ்கவுண்ட் செய்யக்கூடிய அவசியமான வசதிகளை ஏற்படுத்தவேண்டும். இவை எல்லாம் பாங்க் சம்பந்தமான சம்பிரதாயக் கோட்பாடுகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் முரண்பாடுடையவைகளாய் இருக்கலாம். ஆனால் தீர யோசிக்குங்கால் பாங்க் விவகாரங்கள் யாவும், பொதுமக்களின் நம்பிக்கையைப் போன்ற திடமற்ற விஷயங்களையும் அநுமானங்களையும் அடிப்பீடமாகக் கொண்டவைதாமே. சமூகத்தில் விவசாயம் தக்க இடம் பெறுமாயின், அவ்வித மாறுதலால், பாங்குகள் பலனடைய முற்படுவது நிச்சயம்.

## நிலவரிச் சீர்திருத்தம்

நிலவரித்துறையில் சீர்திருத்தம் நெடுங்காலத்துக்கு முன்னே ஏற்பட்டிருக்கவேண்டும். அநேக ஆண்டுகளாக மாகாணப் பணவருவாய்க்குப் பேராதரவாய் இருந்து வந்ததால் நிலவரி முறை மிக்க பிற்போக்குடையதாக விளங்குகிறது. சிறிதும் தாமதிக்காமல் இக்குறைபாட்டை



நீக்குவது அத்தியாவசியமாகும். தற்கால நிலவரிக்குப் பதிலாக நிலத்தின் விஸ்தீர்ணம் வளமை முதலியவற்றைக் கவனித்து ஒரு சிறு வரி நிர்ணயிக்கப்பட்டு, அதோடுகூட விவசாய வருமானத்தின்பேரில் படிப்படியாய் உயரும் வரியும் விதிக்கப்படவேண்டும். ஜமீன்தாரி முறையை நீக்கி ரயத்துவாரி முறையைப் புகுத்தியவுடனே சென்னை அரசாங்கத்தார் இச்சீர்திருத்த விஷயத்தை எடுத்துக் கொள்வார்கள்.

## தரிசு திருத்திப் பயிர் செய்தல்

விவசாய உற்பத்திப் பொருள்களை அதிகப்படுத்தும்
முறைகளில், உழவுக்கேற்ற வெட்டவெளிகளையும் தரிசு
நிலங்களையும் பண்படுத்திப் பயன்பெறுவது முக்கிய
மானது. துரதிர்ஷ்டவசமாய், உழவுக்கேற்ற வெட்ட
வெளிகள். தரிசுநிலங்கள் இவற்றின் மொத்த விஸ்தீர
ணத்தை இதுவரையில் சரியாக அளந்து கணக்கெடுக்க
வில்லை. ஒரு சிறு மூலதனம், உழைப்பு, மதி நுட்பம்
ஆகியவற்றைத் துணையாகக்கொண்டு, இப்போது வெறும்
வெட்டவெளிகளெனக் கருதப்படும் நிலங்களில் பெரும்
பாகத்தைப் பலன் தரத்தக்க கழனிகளாக மாற்றிவிடலாம்.
ஆதலால், அகில இந்திய தரிசுநிலஅளவை அவசரமான
தொன்றாகும்.

வெட்டவெளிகளையும் தரிசு நிலங்களையும் சீர்செய்து பயன்படுத்திக்கொள்வதற்கு இன்றியமையாதது மனித உழைப்பேயாகும். இப்போது சைன்யங்களிலிருந்து கலைக்கப்பட்ட சிப்பாய்கள் பலர் இருக்கின்றனர். சென்னை மாகாணத்தில் அவர்களுக்காக ஒரு சில குடியேற்றத் திட்டங்கள் ஏற்பாடாகியிருக்கின்றன. அங்குக் கூட்டுறவுப் பண்ணைத்தொழில் பரீக்ஷார்த்தமாக நடந்தேறி

வருகிறது. மலையாளத்து வயநாடு திட்டத்தால் 28 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பண்பாட்டுக்கு எடுக்கப்பட்டுள்ளன. மேலும் வெட்டவெளிகளைச் சீர்படுத்தி உழவுக்கு லாயக்காக்க வேண்டிய பல இதரத் திட்டங்களை, முக்கியமாய் கூடலூரிலும் ஏஜென்ஸி பிரதேசங்களிலும், சென்னை அரசாங்கத்தார் பரிசீலனை செய்துவருகிறார்கள்.

இப்பிரதேசங்களின் அபிவிருத்தி அவசரத் தேவையாகும். அவ்வபிவிருத்தி மனித உழைப்பையும், நீர்ப்பாய்ச்சலுக்கான வசதிகளையும் விலை மலிவான மின்சார சக்தியையும், பொறுத்திருக்கிறது. சென்னை மாகாணத்தில் சில பெரிய நீர் மின்சாரத் திட்டங்கள் உள்ளன. இத்திட்டங்களின் பெரும்பாகம் கிரிட் முறையில் பாதுகாக்கப்பட்டுள்ளன. ஆனபோதிலும் தேவைக்கேற்ற மின்சார சக்தி சப்ளை ஆவதில்லை.

## கால்நடைகள் அபிவிருத்தி

மேனாடுகளில், கால்நடைகளை வளர்ப்பது, தானியம் பயிரிடுவதைப்போல விவசாயத்தின் ஒரு முக்கிய பிரிவாகும். கால்நடைகளின் சேவையும் மதிப்பும் அதிகமாயிருக்கிற இந்தியாவில் கால்நடைகள் இன்னும் சரியாகப் பரிபாலிக்கப்படுவதில்லை. சேலம் ஜில்லாவிலுள்ள ஹோசூரிலும், குண்டூர் ஜில்லாவிலுள்ள லாமிலும் இருக்கும் இரண்டு கால்நடை ஆராய்ச்சி நிலையங்கள் ஜில்லாக்களுக்கு சப்ளை செய்யப் பொலி காளைகளை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றன. இதற்காகக் காங்கேயம், ஒங்கோல், ஹஸிக்கார், சிந்தி எருதுக்கள் கூட்டங்கூட்டமாக வைத்துப் பரிபாலிக்கப்படுகின்றன. சமீப காலத்தில், இரு காரியங்களுக்கு உதவக்கூடிய கால்நடைகளை உற்பத்தி செய்யக்கூடிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. உயர்தர ஆரோக்கியமுள்ள கால்நடைகளை



உற்பத்தி செய்வதற்கு அநுகூலமாகத் தொத்துவியாதிகளை அடியோடு அகற்றுவதற்கும், முக்கியமாய்க் கீழ்த்தரமான கால்நடைகளைக் கழித்துத் தள்ளுவதற்கும் அதிகக் கஷ்டம் எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஸ்தலஸ்தாபனங்கள், கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் மூலமாய்ப் பொலி காளைகள் விநியோகப்படுகின்றன.

## மின்சார சக்தி

தண்ணீர் இறைப்பதற்கும், கரும்பாலை, எண்ணெய்ச் செக்குகள் ஓட்டுவதற்கும் மற்றும் அநேக உப கைத்தொழில்கள் செய்வதற்கும் மின்சார சக்தியின் தேவை மிகுந்துவருகிறது. போதுமான மின்சாரசக்தியின் சப்ளை ஏற்பட்டால் கிராமவாழ்க்கையைச் செல்வாக்குள்ளதாகச் செய்வதற்கு வேண்டிய இதர தேவை, விசேஷ தண்ணீர் சப்ளையேயாகும். இவ்விரு சாதனங்களும் உண்டானால் விவசாயம் வெகு சீக்கிரம் முன்னேற்றமடையக்கூடும். ஆதலால் விவசாயச்சீர்திருத்த வாதிகள் ஒவ்வொருவரும் “அதிக மின்சாரசக்தி, அதிக ஜலம்” என்பதையே வற்புறுத்திக் கொண்டிருக்கவேண்டும்.

## நீர்ப்பாசனத் திட்டங்கள்—ஏரிகள்

தண்ணீர் சப்ளை விஷயத்தில்மட்டும் சோழமன்னர் காலத்திலிருந்தே நாம் கவலை எடுத்து வந்திருக்கிறோம். பயிரிடப்பட்டுவரும் பிரதேசங்களில் நீர்ப்பாய்ச்சலுக்குட்பட்டிருக்கிற நிலப் பிரதேசம் 27 சத விகிதமேயாகும். இவற்றுள் பேர்பாதி பாகம் பெரிய பாய்ச்சல் திட்டங்களாலும், மற்றொரு பாதி கிணறுகள், குளங்கள், கால்வாய்கள் முதலியவற்றாலும் பாய்ச்சப்படுகின்றன. பணமுடை ஏற்பட்டிருந்தபோதிலும், சிறுசிறு நீர்ப்பாசனத் திட்டங்களின் அபிவிருத்திக்காக—முந்திய வருஷத்தைக்

காட்டிலும் இரட்டிப்பான செலவு, அதாவது கிட்டத்தட்ட 37 இலட்சம், அடுத்த வருஷத்திற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் இது கடலில் கரைத்த பெருங் காயமாகும். விவசாயப் பாதுகாப்புக்கான நீர்ப்பாசனத் துக்கு மூலாதார முக்கியத்துவம் வாய்ந்த குளங்களே தேங்கிய நீரால் பயிர் பட்டுப்போகாத வண்ணம் பெரிதும் காப்பாற்றுகின்றன. துரதிர்ஷ்ட வசமாய் அக்குளங்களில் அநேகம் பாழடைந்து கிடக்கின்றன. சற்றேறத்தாழ 32 இலட்சம் ஏகர் நிலங்களுக்கு நீர் பாய்ச்சக்கூடிய 33,000 குளங்கள் இம்மாகாணத்தில் இப்போது இருக்கின்றன. ஆனால் இக்குளங்களைப் பழுது பார்ப்பதாலும், புதுப்பிப்ப தாலும் இன்னும் அதிகப் பிரதேசங்களுக்கு நீர் பாய்ச்சக் கூடும். ஏரிக்கரைகளை உயர்த்தவேண்டும். கலுங்கல்கள் தண்ணறைகளின் மட்டத்தை அவ்வப்போது கவனித்து வரவேண்டும். இந்த வேலைகளுக்கு ஐந்து வருஷ காலத் தில் குறைந்த பட்சம் 15 லிருந்து 20 கோடி செலவாகும்; ஆயினும், விவசாய பாதுகாப்புக்கு முக்கியமான வேலைகள். இவற்றின் பெயரைச் சொல்லி ரயத்துகளிடமிருந்து ஜலத் தீர்வை வசூல் செய்வதால், அரசாங்கத்தார்க்கு அதிகப் பொறுப்பு இருக்கிறது. ஆதலால் அவர்கள் தாமத மில்லாமல் ஒழுங்கான முறையில் ஏரிகளைப் புதுப்பிக்கும் திட்டத்தை உடனே கையாள்வார்கள். உணவுப் பிரச்சினை யின் நெருக்கடி, இந்த மாகாணத்தையும் கடந்த ஓர் விஷய மாக இருக்கிறது. நமது மாகாணத்தின் பொருளாதார நிலைமையை நன்கு உணர்ந்துள்ள இந்திய அரசாங்கத்தார், கஷ்ட ஜீவனம் செய்துவருகிற குடியானவர்களுக்கு ஜீவா தாரமான தண்ணீர் சப்ளை விஷயத்தில் இம்மாகாணத்திற்கு உதாரத்துவத்துடன் பணவுதவி செய்வார்கள் என்று நம்புகிறோம்.



### அணைக்கட்டுகள்

நமது நாட்டின் புராதன என்ஜினியர்கள் இன்று எவரும் பிரமிக்கத்தக்க ஆற்றலுடன் ஆறுகளின் நீர்ப் போக்கைத் தடுக்க நிருமாணித்த இம்மாகாணத்து அணைக் கட்டுகள் பல பாழடைந்திருக்கின்றன. அவற்றைத் தீவிர மாகப் பழுதுபார்த்துச் சீர்திருத்தும் விஷயத்தில் நமது கவனத்தைச் செலுத்தவேண்டும். அவைகள் பராமரிப் பில்லாமற் போனதால் சில இடங்களில் ஆற்றுப்படுகைகள் பெரும் பள்ளங்களாகிவிட்டன. சில இடங்களில் தூர்ந்து போயின. பாதுகாப்பமைந்த நீர்ப்பாசன வேலை களை உள்ளடக்கிய நம்முடைய யுத்த பிற்காலத்திட்டங் களில், தகுந்த ரெகுலேட்டர்களை நிருமாணித்து அணைக் கட்டுகளைப் புதுப்பிக்கும் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது ஒன்றாகும். இது விஷயத்திலும் அடுத்த ஐந்து வருட காலத்தில் குறைந்தது 5 கோடி ரூபாய் செலவாகும். இந்திய அரசாங்கத்தார் நமக்குப் பொரு ளுதவி செய்ய முன்வராவிடில், மாகாண அரசாங்கத் தாருக்குச் சற்று முட்டுப்பாடு ஏற்பட்டுவிடும்.

### கிணறுகள்

அணைக்கட்டுக்கு அடுத்தபடி முக்கியத்துவம் வாய்ந் தவை கிணறுகள். மேற்சொன்ன நீர்ப்பாசனத் திட்டங்க ளால் பாய்ச்சல்பெறாத பரப்புவாய்ந்த பிரதேசங்கள் இம்மாகாணத்தில் இருக்கின்றன. இத்தகைய நிலங்களுக்கு நீர் அளிக்கக்கூடியவை கிணறுகளேயாம். பாதுகாப்புப் பாசன அதிர்ஷ்டம் பெற்ற பிரதேசங்களிலும்கூட பருவக் காற்றுத்தவறும் போதும், குளங்கள் வற்றிப்போகும் போதும், கிணறுகள் பேராதரவாயிருக்கின்றன. உணவுப் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் கிணறுகள் தோண்டும் தீவிர

திட்டத்தால் பண உதவிகொண்டு பல லட்சம் செலவில் அநேக ஆயிரக்கணக்கான புதுக் கிணறுகள் தோண்டப் பட்டன. பழைய கிணறுகள் புதுப்பிக்கப்பட்டன. இது விஷயத்தில் இன்னும் செய்யவேண்டியது அதிகமிருக் கிறது. குளங்களைப் புதுப்பித்தல், ஊற்றுஜலமெடுத்தல் முதலியவற்றில் ஈடுபடவேண்டியிருக்கிறது. குடிமராமத்து விஷயத்தில் கவனம்செலுத்த வேண்டியிருக்கிறது. அது விஷயத்தில் அடுத்த ஐந்து வருட காலத்துக்குக் குறைந் தது 8 கோடி ரூபாய் தேவையிருக்கும்.

## பெரிய நீர்த்தேக்கத் திட்டங்கள்

பெருவாரியான ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தவை. அவற்றால் விவ சாயத்துக்குப் பாதுகாப்பு உண்டாவதோடு உற்பத்தியும் அதிகமாகிறது. பல காரியங்களுக்குப் பயன்படும் தன் மையால், அதிகப்படியான நிலங்களைப் பயிரிடுவதோடு, அவற்றால் உற்பத்தியாகும் மின்சாரத்தைக்கொண்டு கிராமப் பிரதேசங்களில் கணக்கற்ற கைத்தொழில்களை ஆரம்பிக்கலாம். அதனால் கைத்தொழில்கள் பரவல் தன்மை அடையும். பட்டணப் பிரதேசங்களில் கைத் தொழில் நெருக்கம் சிறிது சிறிதாய்க் குறையும். நாம் சமீபகாலத்தில் ஆரம்பித்துவைத்த துங்கபத்திரை, ராம பாதசாகரத்திட்டங்கள் அத்திறத்தன. சென்னை அர சாங்கத்தாரின் அடுத்த கால நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டத்துள் வரும் கிருஷ்ணா பெண்ணையாறு திட்டம் இன்னொரு பெரிய முயற்சியாகும். இத்திட்டம் நிறை வேறினால் 25 லட்சம் ஏகரா விஸ்தீரணமுள்ள நிலங்களை உழுது பயிர் செய்யலாம். செலவு 80 கோடிக்கு மேலாகும். ராமபாத சாகரத் திட்டத்தால் இன்னும் 23 இலட்சம்



ஏகரா நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சுவதுமன்றி, 21 இலட்சம் ஏகரா நிலங்களுக்கு அபிவிருத்தியான முறையில் ஜலவசதி யுண்டாகும். துங்கபத்திரைத் திட்டத்தால், சென்னை மாகாணத்தில் 3 இலட்சம் ஏகரா விஸ்தீரணமுள்ள பிர தேசத்துக்கு நீர் பாய்ச்சலாம். இருநூறு அல்லது முந் நூறு கோடி செலவில் இம்மூன்று பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பூர்த்தியானதும் மொத்தத்தில் 50 இலட்சம் ஏகருக்கு மேற்பட்ட நிலங்கள் நீர்ப்பாசனம்பெறும். அதே விஸ்தீரணமுள்ள நிலங்கள் அபிவிருத்தியான முறையில் ஜலவசதியும் பெறக்கூடும். இவையன்றி இன்னும் ஆறு பெரிய திட்டங்களைக்குறித்து ஆலோசனை நடக்கிறது. இத்திட்டங்கள் உருவாக்கப்பட்டால் இம் மாகாணத்தின் பொருளாதார நிலை பல பங்கு உயரும்.

## அறிவு வளர்ச்சி

மனித சக்தியில் கவனம்செலுத்தாத எந்த விவசாயச் சீர்திருத்தமும் வெற்றிபெறமுடியாது. பயிரிடுவதற்கான உன்னத வழிகளை விவசாயி கற்கவேண்டும்; உற்பத்திக் கான சாதனங்களையும் காலத்தைத் தக்கவாறு பயன் படுத்திக்கொள்ளும் விதத்தையும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். சற்றேறத்தாழ 400 இலட்ச விவசாயிக ளடங்கிய நமது மாகாணத்தில், இரண்டு விவசாயக் கல்லூரிகளிலும் நான்கு விவசாயப் பாடசாலைகளிலும் இப்போது கற்பித்துவரும் விஷயங்களை இன்னும் விரிவான முறையிலும் பிரத்தியட்ச முறையிலும் கற்பிக்கவேண்டும். அதனால் நமது விவசாயக் கல்விமுறை முழுவதையும் சீர் திருத்தியமைப்பது அவசியமாகும். எதிர்காலப் பாட சாலைகளில் எண்ணும் எழுத்துக்களையுமன்றி, தொழிலைப் பற்றியும், கழனிகளின் நிர்வாகத்தைப்பற்றியும் தெளிந்த

அறிவு பெறக்கூடிய விஷயங்களையும் கற்பிக்கவேண்டும். பள்ளி மாணவர்களை அந்தந்தப் பிரதேச விவசாயத் துணைத்தொழில் துறைகளில் பழக்குவிக்கவேண்டும். புதிதாக அமைக்கப்படும் கூட்டுறவு சமுதாயத்தில் ஏற்படும் எல்லாவிதத் தொழில்களிலும் அவர்களைச் சாதுரியமுடையவர்களாக்கவேண்டும். பாடசாலையில், பண்ணை வகுப்பும், துணைத்தொழில் வகுப்பும், கலை வகுப்பும் கலந்திருக்க வேண்டும். படிப்பை முடிக்கும் ஒவ்வொரு மாணவனும் திறமைவாய்ந்த தொழிலாளியாக இருப்பதுமல்லாமல், இலாபகரமான தொழிலில் ஈடுபடுபவனாகவும் இருக்க வேண்டும். விவசாயத்தைக் குறித்தும் துணைத்தொழில்களைக் குறித்தும் நூதன கருத்துக்களை இளைஞரோடு முதியோர்க்கும் அறிவுறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இவ்வேற்பாடுகள் காலத்திலும் கருத்துக்களிலும் வாலிபருக்கும் வயது வந்தோர்க்கும் ஏற்பட்டுள்ள பிளவை நீக்குவதுமன்றி, விவசாய விருத்தியில் அறிவுக்கெட்டாதிருந்த நிலையைப் பரிகரிக்கவும் கூடும். (அதாவது ஏட்டுப்படிப்பால் ஏற்பட்ட அறிவை நடைமுறையில் பயன்படுத்திக்கொள்வது). இவை யாவும் கஷ்டம் நிறைந்தவை என்பது எனக்குத் தெரியும். லார்ட் மெக்காலே காலத்திலிருந்து பலவருஷங்களாக உண்டாயிருக்கிற வாசனைப் பழக்கத்தைத் திடீரென்று விட்டொழிப்பது எளிதன்று; ஆனால், ஊக்கத்துடன் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். மடிமை ஒழிந்தால், வெற்றி நிச்சயமாகும்.

'அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்'

என்பது வள்ளுவர் வாய்மொழி.



கல்வியறிவோடு நெருங்கிய தொடர்புடையது ஆராய்ச்சியாகும். தொழில், விவசாயம், வர்த்தகம் இவற் றில் ஆராய்ச்சி செய்வது அரசாங்கத்தின் அல்லது அர சாங்கத்துப் பணவுதவி பெறும் பல்கலைக் கழகங்களின் பொறுப்பென்று இப்போது இந்தியாவில் கருதப்படு கிறது. எல்லா விஷயங்களிலும் சுயேச்சையான ஆராய்ச்சி செய்வதற்குத் தனிப்பட்டவர்கள் கொடுக்கும் பணம் போதாது என்பது உண்மையே. ஆனால் ஆலைத்தொழில் ஆராய்ச்சியை விருத்திசெய்வதற்குப் பொதுப்பணத்தோடு மானேஜிங் ஏஜண்டுகளுக்கும் மற்றும் தாகர்களுக்கும் கொடுக்கும் அளவுக்குமீறிய அதிக லாபத்தின் ஒரு பாகத் தையும் கஷ்டமில்லாமல் போடலாம் என்பது யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டியதாகும். இன்னும் சொல்லப் போனால், தேசிய ஆராய்ச்சி நிதி என்று ஒன்று ஏற்படுத்தி அதற்கு ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட மூலதனம் கொண்ட கம்பெனிகளெல்லாம் இலாபத்தில் ஒரு குறிப் பிட்ட விகிதம் கொடுக்கவேண்டும் என்றும், அப்படி யில்லாதுபோனால் லைசென்ஸ் ரத்து செய்யப்படுமென்றும் "கம்பெனிச் சட்டத்தில்" ஒரு திருத்தம் செய்யப்பட வேண்டுமென்றும் கூறுவேன். ஆனால் விவசாய ஆராய்ச்சி விஷயம் வேறு. அரசாங்கம் விவசாய ஆராய்ச்சியை எப்போதும்போல் நடத்தி வரவேண்டும். இன்னும் நீண்ட காலம்வரையில் அவர்களே இவ்வாராய்ச்சியை அதிகப்படி யாக நடத்திவரவேண்டும். மேனாட்டில் இருந்து வருவது போல் ஆலைத்தொழில் ஆராய்ச்சிக்குப் பணவுதவி செய்யும் பொறுப்பு ஆலை முதலாளிகள் மீது சுமத்தப்பட்டுவிட்டால், விவசாய ஆராய்ச்சி செய்வதற்குச் சந்தேகமில்லாமல் உற்சாகம் ஏற்படும்.

## விஞ்ஞானத்தைப் பயன்படுத்தும் விதம்

விவசாயப் பழக்க வழக்கங்களில் விஞ்ஞான சாஸ் திரம் ஏற்படுத்திய மாறுதல் மிக்க ஆச்சரியப்படத்தக்கது. விவசாய ரசாயன சாஸ்திரம், பௌதிக சாஸ்திரம், சிற் றுயிர்களைக் குறித்த சாஸ்திரம், சூழ்நிலைக்கலை, தாவர வர்க்கரோக சாஸ்திரம், கால்நடை சாஸ்திரம், என்ஜினி யரிங் சாஸ்திரம் இவை எல்லாம் விவசாய விருத்தியோடு இணைக்கப்பட்டுள்ளன.

நமது முன்னோர்கள் சிந்தனையை ஒரு நிலைப்படுத் தும் பழக்கத்தால் எங்கும் நிறைந்த இயற்கையை, பரா சக்தியைத், துருவி, இரகசியங்களை அறிந்து உலகுக்கு வெளிப்படுத்தி யுள்ளார்கள். பற்றுமற்றில்லாது சத்தி யமே இலட்சியமாக அவர்கள் அண்ட பகிரண்ட சரா சரங்களில் உள்ள பல நுட்பங்களையும் உணர்ந்தனர். இக் காலத்தில் நமது புராதன தீர்க்கதரிசிகளை ஒருவாறாய் ஒக்கும் விஞ்ஞான சாஸ்திரிகள் அணுசக்தியைக் கட்டுப் படுத்தும் வழியை அறிந்துள்ளார்கள். ஆனால், துர்- அதிர்ஷ்டவசமாய் நாச காரியங்களுக்கு அதைப் பயன் படுத்திக் கொள்ளுகிறார்கள். கண்டுபிடிக்கப்பட்ட எல்லா வித நூதன சாதனங்களையும் ஆக்க வேலைகளுக்கு மாத்தி ரம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். விஞ்ஞான ரீதி யான ஆராய்ச்சிக்கு விவசாயத்தில் எல்லையற்ற இடமிருக் கின்றது. ரஷியா, கனடா ஆகிய நாடுகளில் நிகழ்ந்த தாவர சம்பந்தமான ஆராய்ச்சியின் பயனாகச் செடிகள் மரங்களின் உற்பத்தி விருத்தி யடைந்திருக்கிறது. கரும்பின் ஆராய்ச்சியில் நாம் அடைந்த வெற்றிபோல, தானியங்கள், காய்கறிகள், பழவகைகள் விஷயமாகவும் பெற முயற்சி செய்யவேண்டும். விஞ்ஞான ஆராய்ச்சியை



விதைகள், கால்நடைகள் இவற்றின் விருத்திக்கான வழி யில் உபயோகிக்கவேண்டும்.

விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியில் வரும் வெற்றி பெரிதே. அவ்வெற்றியை விவசாயப் பழக்க வழக்கங் களுக்குப் பயன்படுத்திக்கொள்வது அதனினும் பெரி தாகும். செயற்கை எருக்களை உபயோகித்தல், சுத்த மான, விருத்திகரமான பலவேறு விதைகளை அதிகமாய் உபயோகித்தல், அதிக விஸ்தீர்ணமுள்ள பிரதேசங்களில் கால்நடைகளுக்குப் பயன்படும் நூதன உணவு வகை களையும் நிலங்களுக்குத் தேவையான தழை எருக்களையும் உற்பத்தி செய்தல், சீதோஷ்ண ஸ்திதியை விருத்தி செய்வதற்குக் காடுகளை வளர்த்தல், மரங்களும் விறகு களும் குடியானவர்க்கு எளிதில் கிடைக்கச் செய்தல், கரை கட்டுதல், ஆறுகளைக் கட்டுப்படுத்தல், நிலச்சரிவைத் தடுக்கும் வழிகளைக் காணல் முதலிய முயற்சிகளில் ஈடு படுவது விஞ்ஞான சாஸ்திரத்தையும் விவசாயத்தையும் இணைக்கக்கூடிய மார்க்கமாகும். அதோடு, விஞ்ஞான ரீதியான விவசாய முன்னேற்றத்தை அவ்வப்போது புள்ளி விவரங்களைக்கொண்டு அளந்தறியவேண்டும். சரியான ஒரு விவசாயச் சீர்திருத்தத் திட்டத்தில் புள்ளி விவரங் களைத் திரட்டிப் பொருள் கண்டு உதவக்கூடிய ஸ்தாபனம் ஒன்று அத்தியாவசியமானதாகும்.

### முடிவுரை

மேற்சொன்னவற்றிலிருந்து, நான் விவசாய சம்பந்த மான பிரச்சினைகளைப்பற்றிய முக்கிய அம்சங்களைப் பொது வான முறையில் குறிக்க முயன்றிருக்கிறேன் என்பது விளங்கும். கற்பனையோ, வெறும் கனவோ என்று சிலர் சொல்லும் வண்ணமான இவ்விர பல பரிகாரங்களைச் சொல்

லத் துணிந்துள்ளேன் என்பதையும் அறிவேன். சென்னை அரசாங்கத்தார் விவசாயச் சீர்திருத்தத்துறையில் இது வரையில் என்னென்ன செய்துள்ளார்கள்; அண்மையிலும், சேய்மையிலும் என்னென்ன செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பனவற்றைப்பற்றி விரிவான முறையில் இந்த அரசாங்கத்துப் பொருளாதார ஆலோசகர் ஒரு அறிக்கை தயாரித்து வருகிறார். அது இம்மாகாணத்து மொழிகளில் விரைவில் வெளிவரும். நான் இங்கு குறித்த இந்தப் பொது விசாரணையிலிருந்து இப்போது உத்தேசித்துள்ள விவசாயச் சீர்திருத்தங்களுக்குச் சமீபகால, சேய்மைக்கால அம்சங்கள் என்று இரண்டு அம்சங்கள் உண்டு என்பது வெளிப்படை. சமீபகால அம்சம் இடைப்பட்ட காலத்தைக் குறிக்கும். நீண்டகாலப் பிரிவு கூட்டுறவுப் பொது அமைப்பு ஏற்படுத்தி அதில் பொருளாதார சமநிலையை நிலைநிறுத்தும் குறிக்கோளை உடையது. இந்தக் கூட்டுறவுப் பொது அமைப்பில் தொழில், வாணிபம், உத்தியோகம் ஆகியவைகளோடு விவசாயமும் சரிநிகர் சமானமாக மதிப்புப்பெற்று விளங்கவேண்டும். இந்த இரண்டு லட்சியங்களையும் காரியத்தில் நிறைவேற்றி வைப்பதற்குச் சட்டமியற்றுதல் அவசியமானாலுங்கூட, அதனை ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் கையாளவேண்டும். எடுத்ததற்கெல்லாம் சட்டமியற்றுவதால், பெருவாரியான சமயங்களில் அதனுடைய முக்கிய நோக்கமே பாழாகிவிடக்கூடும். "மன்னரும் சட்டமும் மக்களுடைய துன்ப இன்பப் பண்புகள் உருக்கொள உதவுவதன்றி, முழுதுமாய் நிற்றல் முடியாக் காரியம்" என்பது ஒரு ஆங்கிலக் கவியின் கூற்று.

சட்டங்களால் சாதிக்கக்கூடிய காரியங்களும் உண்டு. துண்டு நிலப்பகுதிகளை ஒன்றுபடுத்துதல், நிலவரி விதி



களையும் உத்தரவுகளையும் தொகுத்துச் செப்பனிட்டுத் தருதல், வரி வஜாவைத் தாராளமாக அளித்தல், தற்போதுள்ள பிற்போக்கான நிலவரியை மாற்றித் தர்வாரியான விவசாய வருமான வரி முறையை ஏற்படுத்துதல், நில நியாய சபைகள் அமைத்து அவற்றின் மூலம் நியாயமான குத்தகை விகிதத்தை நிர்ணயித்தல், விவசாயத் தொழிலாளர்க்கு நியாயமான கூலிகளை வழங்குதல் முதலிய காரியங்களைச் சட்டங்களால் சாதிக்கலாம். அவற்றிற்கு வேண்டிய சட்டங்களை இயற்றுவதற்கு நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்னும் சில காரியங்களில் சர்க்காரே தீவிரமாகப் பங்கு கொள்ளவேண்டியிருக்கின்றது. அவையாவது: உற்பத்திக்கும் பாதுகாப்புக்கும் வேண்டிய நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குதல், குளங்களைப் புதுப்பித்தல், ஊறு வெட்டுதல், அணைக்கட்டுகளைத் திருத்தி அமைத்தல், தரிசான நிலங்களைப் பயிர் செய்வதற்குரிய முறையில் பண்படுத்தல், ஜலமின்சாரத் திட்டங்களை அமைத்தல், கிராமக் கல்வியைப் பரப்புதல், விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஊக்கமளித்து விவசாயத்திற்கு நடைமுறையில் பயனுண்டாகும் வசதிகளைச் செய்தல் முதலியவையாகும். மேலே கூறப்பட்டுள்ள ஒவ்வொன்றிலும் சென்னை சர்க்கார் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகின்றனர். விவசாயிகளின் கடன்பளுவைக் குறைத்து, அவர்களுக்குப் பண உதவி செய்யும் வகையில் சென்னை சர்க்கார் சில முக்கியமான சட்டங்களியற்றி ஓரளவிற்கு வெற்றியுங் கண்டுள்ளனர்.

ஆனால், இவற்றையெல்லாம்விட ஆலை முதலாளர், வியாபாரி, உத்தியோகஸ்தர் ஆகியவர்களின் வாழ்க்கையைப்போலவே விவசாயிகளின் வாழ்க்கையும் உயரவழி

செய்வதே மிக அவசியமானதாகும். அதாவது, விவசாயிகளுக்கு ஆலைத்தொழிலாளர்களைப் போலவே கூலி விகிதம், வேலை செய்வதற்குரிய நிபந்தனைகள் ஆகியவைகளில் மட்டும் சமத்துவம் இருந்தால் போதாது; அவர்கள் நிலச்சொந்தக்காரர்களோடு சம பங்காளர்கள் என்ற மதிப்பும் ஏற்படவேண்டும். இதற்காக விவசாயத் துறையிலேயே ஒரு புதிய மாற்றம் ஏற்படவேண்டும். இதைத்தான் நான் சமநிலைப் பொருளாதாரம் என்று கூறுகிறேன். இந்தச் சமநிலையை உண்டாக்குவதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் வேண்டும். சட்டங்கள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றைவிட, சுயநலமின்றிப் பொதுநலப்பணியில் ஆர்வம் மிகுந்த ஆண்களும் பெண்களும் ஏகோபித்து மனப்பூர்வமாகவும் தீவிரமாகவும் செய்யும் ஒத்துழைப்பே முக்கியமானது.

இது விஷயத்தில் மகாத்மாஜியின் ஆக்க வேலைகளை நிறைவேற்றிவைக்க விரும்பும் சேவக சேவிகைகளுக்கு, பலனுள்ள முறையில் உழைப்பதற்கான அரிய வாய்ப்பு உண்டு. இத்தகைய சேவக சேவிகைகள் சமூகத்துக்குத் தொண்டுபுரியும் ஆர்வத்துடன் கிராமவாசிகளுக்கு நண்பர்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருக்கவேண்டும். அவர்கள் அதிக தீவிரமாக விவசாயச் சீர்திருத்தங்களை வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டுவரப் பலவிதத்திலும் முயற்சி செய்யவேண்டும். இத்தகைய சேவக சேவிகைகளின் குறையாத ஆர்வத்துக்கும், சலியாத உற்சாகத்துக்கும் எந்தச் சட்டமும் இணையாகாது. இப்புராதன நாட்டின் லட்சக்கணக்கான விவசாயிகளுடைய எதிர்கால வாழ்க்கையின் முன்னேற்றம் தன்னலமற்ற தொண்டர்களின் தளராத ஊக்கத்தைப் பொறுத்திருக்கிறது.



அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா | பக்கம் 205



# 13. பட்டமளிப்பு விழாப் பேருரை

புராதன சோழ நாட்டிலே, பஞ்சபூத தலங்களில்
ஒன்றான ஆகாச தலமான இப்புராதன நகரிலே, பல்
கலைக் கழகப் பட்டமளிப்பு விழாக் கொண்டாட்டத்தில்
கலந்துகொள்ளும்படியாக எனக்குச் சந்தர்ப்பம் அளித்த
மேன்மை தங்கிய சான்ஸலர் (Chancellor) அவர்களுக்கும்
சர்வகலாசாலையாருக்கும் எனது வணக்கத்தையும் வந்த
னத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

என்றார் திருவள்ளுவர். பிறவிப் பெரும்பயனை நாம்
அடைதல்பொருட்டு ஆனந்தத் தாண்டவம் புரியும் சபா
நாயகரான நடராசமூர்த்தி இந்தச் சிதம்பரத்திலே எழுந்
தருளியிருக்கிறார். இங்குதான் ஆழ்வாராதிகளால் பாடப்
பெற்ற கோவிந்தராஜப் பெருமாளும் எழுந்தருளியிருக்
கிறார். இங்குதான் பதஞ்சலி, வியாக்ரபாதர் முதலிய
மகா தபோதனர்கள் கடவுளைத் தொழுது முக்தியை
யடைந்தார்களென்றும், இங்குதான் சைவ சமயாசாரியர்க
ளான அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், நந்தனார்
முதலிய நாயன்மார்கள் பக்திப் பரவசத்தினால் தேவார
திருவாசகங்களைப் பாடினார்களென்றும், இங்குதான் திரு
மந்திரத்தையளித்த திருமூலரின் சமாதி விளங்குகிறதென்
றும் அறிந்து பெருமைவாய்ந்த இந்த க்ஷேத்திரத்தைத்
தெரிந்தெடுத்து, இந்தப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்
திய செட்டியார் அவர்களுக்கும், நண்பர்களுக்கும், நமது
வந்தனம் உரித்தாகுக.

## பண்டைக் காலத்தில் நமது தேசத்தின் நிலை

நம்மிற் பலர் இன்றும் நமது பண்டைய நாகரிகத்தின் தன்மை இத்தகையது என்று அறியாமலிருக்கின்றனர். பல்லாயிர ஆண்டுகளாக நமது நாடு நாகரிகத்திலும், கலை வளர்ச்சியிலும், சரித்திர விஞ்ஞான ஆராய்ச்சியிலும், லௌகிக பாரமார்த்திக வாழ்விலும் மேன்மையுற்று எவ்வளவு உயர்ந்த நிலையை அடைந்திருந்ததென்பதைச் சற்று முதலில் சிந்திப்போம்.

அப்படி நோக்குங்கால் நம் தேசத்தின் பண்டைய உன்னத நிலைமை, நமக்கு வியப்பை உண்டுபண்ண வில்லையா? நமது பழம் பெருமையைப் பாராட்டிமட்டும் பெருமையடையவேண்டும் என்பதற்காக நான் இவற்றைச் சொல்லவில்லை. மறைவாகப் பழங்கதைகள் நமக்குள்ளே பேசுவதில் பெருமையில்லை யென்பதை நானறிவேன். ஆயினும், நமது இன்றைய தாழ்ந்த நிலையை நோக்கி, நாம் என்றும் இத் தாழ்ந்த நிலையிலேயே இருந்ததாகத் தப்பபிப்பிராயம் நம்மில் பலரிடை நிலவியுள்ளதை நீக்கவும், நாம் நடந்துகொள்ளும் முறை இத்தகைய பெரியோரின் சந்ததிகள் நாம் என்பதற்குத் தகுதியானவாறு இருக்க வேண்டும் என்பதற்காகவும் குறிப்பிடுகிறேன்.

இவ்வளவு பண்புள்ளவர்களாக அவர்கள் இருந்ததற்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் ஓர் இலட்சியத்தைக் குறிக்கோளாகக்கொண்டு, அதற்குத் தகுந்த முறையிலே மாணவர்களை லௌகிக பாரமார்த்திகத் துறையிலே குருகுலங்களில் பயிற்சியளிக்க ஆரம்பித்தது தான். அவர்கள் இலட்சியம் என்ன?

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"



இந்தத் தத்துவத்தைச் சரிவர அடையவேண்டுமென்றால், ஜீவாத்மாவைப் பிணித்திருக்கும் பஞ்சகோசங்களின் திரைகளைச் சரியாக அறிந்து நீக்கி, ஜீவாத்மாவைத் தன் வயப்படுத்தவேண்டும். அதைத் தன்வயப்படுத்தவேண்டு மென்றால், பஞ்சகோசங்களில் முக்கியமான மனோமய கோசத்தைச் சரிப்படுத்தினால்தான் மற்றவைகளைத் தன் வயப்படுத்த முடியும். மனிதன் என்ற வார்த்தைக்கே, மனத்தையுடையவன் என்று பொருள். இந்த மனது எப்பொழுதும் ஒரு வரையறைக்குட்பட்டிருப்பதில்லை. அது எப்பொழுதும் சலித்துக்கொண்டே இருக்கும். கட்டுப்படாமல் ஓடிக்கொண்டே இருக்கும். அதைத் தன் வயப்படுத்த வேண்டுமென்றால், பிராணமய கோசமான மூச்சைத் தன்வயப்படுத்தவேண்டும். மூச்சைத் தன்வயப் படுத்தவேண்டுமென்றால் பிராணாயாமம் செய்யவேண்டும். பிராணாயாமம் செய்யவேண்டுமென்றால் இயம நியமங் களைச் சரிவர அனுஷ்டிக்கவேண்டும். இயம நியமங்களை அனுஷ்டிக்க வேண்டுமென்றால் நல்ல உணவு உட்கொள்ள வேண்டும். அதற்குத்தான் சத்வாகாரம் என்று சொல்லு வார்கள். உண்ணும் ஆகாரத்துக்கும் நம்முடைய குணத் துக்கும் சம்பந்தமிருக்கிறது. அதற்குத் தகுந்த முறையிலே தான் நம்முடைய மனமும் பண்படுகிறது. இப்படித் தன் வயப்பட்ட மனிதர்கள்தான் தக்ஷசீலம், விக்ரமசைலம், நவத்வீபம், காசி, காஞ்சி முதலிய இடங்களிலே குருகுலங் களில் குலபதிகளாக இருந்து மாணவர்களைப் பண்படுத்திக் கொண்டு வந்தார்கள். அவர்கள் பிரம்மத்தை யடைந்த வர்களாக இருந்ததோடு, பிரம்ம மார்க்கத்தில் அழைத்துச் செல்லப்படுபவர்கள் என்ற அர்த்தமுடையதான பிரம்ம சாரிகள் என்ற பதத்தையும் மாணவர்களுக்குச் சூட்டித் தம்மோடு அழைத்துச் சென்றார்கள். பிரம்மசரியத்தைச்

சரிவரக் கட்டுப்பிடிக்க எண்ணித் தாறுமாறாக ஓடிக்கொண்டிருக்கும் மூச்சுக் காற்றைத் தன்வழிக்குக் கொண்டுவரப் பிரயத்தனம் செய்தார்கள். அதற்குத்தான் பிராணாயாமம் என்று பெயர். அந்தப் பிராணாயாமம் சரிவரச் செய்ய ஆரம்பித்தால், ஓடிக்கொண்டிருக்கும் மனதை ஒருமுகப் படுத்த முடியும். தன்வயப்பட்ட மனதையுடையவன் தான் விஞ்ஞானி ஆகின்றான். குருகுல ஆசிரியர்கள் மாணவர்களைக் கடவுளறிவை அடையும் மார்க்கத்திலேயே அழைத்துச் சென்றாலும், லௌகிகத் துறையிலேயும் எவ்வளவு முன்னேற்றம் அடையச் செய்தார்கள் என்பதை அடியிற் குறிப்பிட்ட 64 கலா ஞானத்தின் பெயர் வரிசை மூலமாக உங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.

1. அக்கரவிலக்கணம் (The Knowledge of spelling and reading, orthography, the science of reading)
2. இலிகிதம் (Calligraphy, Penmanship)
3. கணிதம் (The Science of Numbers, Arithmetic)
4. வேதம் (Hindu Veda or law)
5. புராணம் (Mythology)
6. வியாகரணம் (Grammar)
7. நீதி சாஸ்திரம் (Jurisprudence)
8. சோதிடம் (Astronomy and Astrology)
9. தரும சாஸ்திரம் (Moral Philosophy)
10. யோக சாஸ்திரம் (Silent devotion)
11. மந்திர சாஸ்திரம் (Magic, Hypnotism etc)
12. சகுன சாஸ்திரம் (Science of Omens)
13. சிற்ப சாஸ்திரம் (Sculpture)
14. வைத்திய சாஸ்திரம் (Medicine)



15. உருவ சாஸ்திரம் (Physiognomy)
16. இதிகாசம் (History)
17. காவியம் (Epic Poetry)
18. அலங்காரம் (Science of Rhetoric)
19. மதுர பாடணம் (Eloquence)
20. நாடகம் (Dramaturgy)
21. நிருத்தம் (Dancing)
22. சத்தப்பிரமம் (Music—vocal)
23. வீணை (Veena—Instrumental Music)
24. வேணு (புல்லாங்குழல்) (Flute)
25. மிருதங்கம் (மத்தளம்) (Mridanga—drum)
26. தாளம் (Musical beat or rhythm)
27. அத்திர பரீக்ஷை (Archery)
28. கனக பரீக்ஷை (பொன்மாற்று பார்த்தல்) (Testing of gold)
29. இரத பரீக்ஷை (தேர் ஏற்றம்) (Charioteering)
30. கஜப் பரீக்ஷை (யானைப் பரீக்ஷையும், யானை யேற்றமும்) (Training of Elephants)
31. அசுவ பரீக்ஷை (குதிரை ஏற்றமும், குதிரைப் பரீக்ஷையும்) (Training of horses)
32. இரத்தின பரீக்ஷை (Testing of Diamonds)
33. பூமி பரீக்ஷை (Soil Science)
34. சங்கிராம விலக்கணம் (Military Art and Tactics)
35. மல்யுத்தம் (Wrestling, Pugilism, Boxing)
36. ஆகருடணம் (The art of calling or summoning by enchantment)
37. உச்சாடனம் (Exorcises)
38. வித்து வேடணம் (Exciting hatred between parties by magical spells) (ஏவல்)

39. மதன சாஸ்திரம் (Erotics, Modus Cocundi)
40. மோகனம் (Libidinous fascinations occasioned by enchantment)
41. வசீகரணம் (The art of subjection by magic the art of bringing one over to another's side or interest by enchantment)
42. இரச வாதம் (Alchemy & Chemistry)
43. காந்தருவ வாதம் (The knowledge of the condition of the celestial Choristers)
44. பைபீலவாதம் (The language of the brute, creatures from emmets upwards) மிருக பாஷை.
45. கவுத்துவவாதம் (The art of restoring pleasure to a sorrowful mind)
46. தாதுவாதம் (நாடி சாஸ்திரம்)
47. காருடம் (Charm, Incantations).
48. நட்டம் (காணாமற்போன பொருளைக் கண்டுபிடித்தல் or நாட்டியம் பழகுவித்தல்).
49. முட்டி (கைக்குள் மூடிக்கொண்டிருப்பதைச் சொல்லல்)
50. ஆகாய கமனம் (வானத்தில் ஊர்ந்து செல்லல்). (Aerial locomotion)
51. பரகாய பிரவேசம் (கூடுவிட்டுக் கூடுபாய்தல்). (Transmigration)
52. ஆகாயப் பிரவேசம் (ஆகாயத்தில் மறைந்து கொள்வது).
53. அதிரிசியம் (The power of making oneself invisible)
54. இந்திரஜாலம் (செப்படு வித்தை, மாயவித்தை)
55. மகேந்திர ஜாலம் (The art of performing wonders in heaven and earth)



56. அக்கினி ஸ்தம்பம் (நெருப்பைச் சுடாமல் கட்டல்) (Controlling fires)
57. ஜலஸ்தம்பம் (ஜலத்தின்மேல் நடத்தல் படுத்திருத்தல் ஜலத்துக்குள் முழுகி வெகுநேரமிருத்தல்). (Treading on water)
58. வாயுஸ்தம்பம் (The art of restraining the wind).
59. திட்டி ஸ்தம்பம் (The art of fascinating the eyes).
60. வாக்கு ஸ்தம்பம் (The art of. fascinating the mouth.
61. சுக்கில ஸ்தம்பம் (The art of retaining the semen விந்தை யடக்கல்)
62. கனனத்தம்பம் (The art of preventing the discovery of things concealed)
63. கட்கத்தம்பம் (The art by which the power of the sword or any other weapon is nullified).
64. அவத்தைப் பிரயோகம் (The power of stationing the soul at pleasure in any of the five stages in full energy by virtue of abstract devotion for converse with the deity)

இந்த அறுபத்து நான்கு கலை வல்லுநர்களே அன்றியும், நமது முன்னோர்கள் எவ்வளவு ஜீவகாருண்ய மூர்த்திகளாகவும் தருமவான்களாகவும் இருந்தார்கள் என்பது அடியிற்கண்ட 32 தர்மங்களினால் தெரியவரும்.

அறம் 32 ஆவன:—

1. ஆதுலர் சாலை: ஏழைகளுக்கு விடுதி (Destitute Home)
2. ஓதுவார்க்குணவு: படிக்கிற பிள்ளைகளுக்கு உண்டி.

3. அறுசமயத்தார்க்குண்டி: எல்லாச் சமயத்தார்களுக்கும் உணவு (Religions feeding)
4. பசுவுக்கு வாயுறை (Feeding Cows)
5. சிறைச் சோறு (Feeding prisoners)
6. ஐயம் பிச்சையிடல்
7. தின்பண்டம் நல்கல்
8. அறவைச்சோறு (Feeding the destitute)
9. மகப் பெறுவித்தல்: பிரசவம் பார்த்தல் (Maternity welfare)
10. மகவு வளர்த்தல் (Child welfare)
11. மகப்பால் வார்த்தல்: பிள்ளைப்பால் உதவுதல்
12. அறவைப் பிணஞ்சுடுதல்: அனாதைப் பிரேதங்களை அடக்கம் செய்தல்
13. அறவைத் தூரியம்: உடையளித்தல்
14. சுண்ணம்: வெள்ளை கொடுத்தல்
15. நோய் மருந்து: வைத்தியம்
16. வண்ணார்: ஏழைகளுக்கு இலவசமாகத் துணி வெளுத்தல்.
17. நாவிதர் : ஏழைகளுக்கு இலவசமாகச் சவரம் செய்தல்
18. கண்ணாடி: முகம் பார்க்கும் கண்ணாடி & வெள்ளெழுத்துக் கண்ணாடி.
19. காதோலை
20. கண்மருந்து: கண் வைத்தியம்.
21. தலைக்கெண்ணெய்
22. பெண் போகம்: காம நோயால் இறந்துபடும் திக்கற்றவர்களுக்கு உதவல்.
23. பிறர் துயர் காத்தல்.
24. தண்ணீர்ப் பந்தல்.



25. மடம் (சத்திரம்).
26. தடம் (சாலை போடல்).
27. சோலை: தோட்டம் வைத்தல்.
28. ஆவுரிஞ்சு தறி: பசுமாடுகள் உடம்பைத் தேய்த்துக்கொள்ள மந்தைவெளியில் கல் நடுதல்.
29. விலங்கிற்குணவு: சக்தியற்ற எல்லாவிதமான விலங்குகளுக்கும் உணவு.
30. ஏறுவிடுதல்: நல்ல ஜாதிமாடுகளை விருத்தியாக்க பொலி காளைகளை இலவசமாய் விடுதல்.
31. விலைகொடுத்து உயிர் விடுவித்தல்; விலை கொடுத்தாகிலும் உயிர்களைக் காப்பாற்றல்.
32. கன்னிகாதானம்; கல்யாணம் செய்து வைத்தல்.

முன் கூறியமாதிரி குருகுலங்களை ஏற்படுத்தி மாணவர்களையும் ஆசிரியர்களையும் போஷிப்பதற்காக கிராமங்களில் மான்யங்களை விட்டு அதன் வருவாயை உபயோகிக்கும்படி நமது அரசர்கள் செய்தார்கள் என்பதை பற்பல மன்னர்களின் சிலாசாஸனங்களைப் பார்த்தால் அறியலாம். ஆனால் அரசர்களோ அல்லது அரசாங்கமோ அந்தக் காலத்தில் இவ்வித குருகுலங்களை மேற்பார்வை செய்யவில்லை. அந்தக் குலபதிகள் இயற்கைவனப்பு வாய்ந்த இடங்களிலே எளிய வாழ்க்கையை நடத்தி, தங்கள் வாழ்க்கையையே உலகத்திற்கு வழிகாட்டியாக இருக்கும்படியான நிலையிலே தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்களாக இருந்ததனால் குருகுலங்கள் தங்குதடையின்றி வளர்வதற்கு ஒத்தாசையாக அரசாங்கமும் பொதுஜனங்களும் நடந்துவந்தார்கள். இம்மாதிரி காடுகள் மலைச்சாரல்களில் நடந்துவந்த குருகுலங்கள் ஜனக்கூட்டம் பெருகப் பெருக, சோழ அரசர்கள் காலத்தில், கடவுள் பக்தியின்

மேலீட்டினால் பிரம்மாண்டமான கோயில்களாகப் பரிணமித்தன. அவைகளைச் சார்ந்து குருகுலங்கள் நிறுவப்பட்டு அவைகளிலே வேத, இதிகாச புராண, தரும சாஸ்திர, சிற்ப, ஓவிய, சங்கீத, நாடக, மருத்துவக் கலைகளையும், பசுமடம், நந்தவனம், ஏழைகளுக்கு அன்னமளிக்கும் சத்திரம், சாவடி முதலியவைகளையும் நடத்துவதற்கு அரசர்களும் பொதுஜனங்களும் மான்யங்களை விட்டுப் போயினர். அவைகள் கலா விளக்கங்களாக இன்று வரையிலும் விளங்கிக்கொண்டிருப்பதற்கு அடிகோலிய நம் முன்னையோர் ஜீவகாருண்யத் தொண்டை என்னென்று புகல்வது? அவற்றை நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட மடாதிபதிகளோ இன்று எந்த நிலைமையில் அதைப் பரிபாலிக்கிறார்கள்? பக்திமான்களான நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும் பாடிய பாடல்கள் நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து ஊற்றெழும் கண்ணீரதனால் நனைந்து உருகிப் பாடியவை அல்லவா? அவர்கள் எந்த மொழியில் எந்தக் கருத்தில் எந்த லட்சியத்தில் பாடினார்கள்? அந்த லட்சியங்கள் இன்று தமிழ்நாட்டிலே பரப்பப்படுகின்றனவா? அவை சரிவர நடைபெறாததற்கு ஒரு பக்கம் பொதுஜனங்களின் அலட்சிய புத்தியும், இன்னொரு பக்கம் அரசாங்கத்தின் சிரத்தைக் குறைவும் காரணமல்லவா என்பதை யோசிக்கவேண்டும். இவைகளெல்லாம் சரிவர நடைபெற வேண்டுமென்றால் பொதுஜனங்கள் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டு தகுந்த முறையிலே சீர்திருத்த ஏற்பாடு செய்யவேண்டும். அறநிலையங்களின் வருவாய் இனிமேல் ஏற்படப்போகும் பல சட்டங்களினாலே பாதிக்கப்படும் நிலையில் இருக்கின்றது என்பதை நம் நினைவில் இருக்கவேண்டும்.



அறத்துறை, கலைத்துறைகளிற்போலவே, அரசியல் துறையிலும் நாம் சிறப்புற்றிருந்தோம். நம் பண்டைய அரசியற் கீழ் எத்தன்மையில் குடும்பங்கள் இருந்தனென்பதைக் கீழ்வரும் பாட்டு நன்கு விளக்குகிறது.

"யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்கா கியர்? என வினவுதி ராயின்
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான் கண்டனையர் என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே"

நீங்கள் எல்லோரும் இப்பல்கலைக் கழகத்தில் கூடியிருப்பது கல்வி கற்றற் பொருட்டாகையால், கல்வி என்ன என்று அடிப்படையை ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியம். நான் சொல்லப்போவது சற்றே பழங்கால வழக்குப்போல் தோன்றினும் அது இந்நாளைய விஞ்ஞான சாஸ்த்ர உண்மைப்படியும் ஒப்ப முடிந்தது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

கல்வி என்பது என்ன? மனிதனிடத்தில் பொதிந்து கிடக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வி. அறிவு மனிதனிடத்தில் இயல்பாக அமைந்திருப்பது. அது புறத்தே இருந்து வருவதொன்றன்று. ஒரு மனிதன் கற்கிறான் என்றால் தன்னிடம் இயல்பாக அமைந்த அறிவைக் கண்டுகொள்கிறான் என்றுதான் சொல்லவேண்டும். ஆராய்ந்து பார்க்குமிடத்து, எல்லையற்ற அறிவுக் களஞ்சியமாகிய ஆன்மாவை மூடியிருக்கும் அறியாமைத் திரையை நீக்குவதே கல்வியாகும். ஒவ்வொரு மனிதனிடத்தும் அறிவுக்களஞ்சியம் உள்ளே பொதிந்து கிடக்

கின்றது. அதைத் திறப்பதற்கு ஒத்தாசைபுரிவதுதான்
ஆசானுடைய தொழில். ஞானம் அனைத்தும் நம்
உள்ளத்தேதான். அதைச் சூழ்ந்திருக்கும் கோசத்தைக்
கிழித்தெறிவதே கல்வி கற்றலாகும். இவ்வாறு படிப்படி
யாகத் திரையை அகற்றுவது அறிவு வளர்ச்சியின்பாற்
படுகின்றது. எவனொருவனுடைய உள்ளத்தினின்றும்
இத்திரை பெரிதும் அகன்றுவிட்டதோ அவன் பேரறிஞன்
ஆகிறான். அகலப்பெறாதவன் பேதையாக இருக்கிறான்.
முற்றும் அகலப்பெற்றவன் முழுதும் உணர்ந்த ஞானி
யாகிறான். கல்லினுள்ளே நெருப்பு இருப்பதைப்போல
உள்ளத்தினுள்ளே அறிவு அமைந்திருக்கின்றது. கல்லை
ஒன்றோடொன்று மோதும்போது நெருப்பு உண்டா
கின்றது. புறத்தே தோன்றும் குறிப்பின்மூலம் அறிவு
வெளியாகின்றது. சகல அறிவும் ஆற்றலும் நம் உள்ளத்தே
இருக்கின்றன. எல்லாவிதமான சக்திகள், இயற்கை
ரகசியங்கள் ஆற்றல்கள் எனப் பலவாறாகக் கூறும் அனைத்
தும் மனத்துள்ளே இருக்கின்றன. மனத்தை ஒருமுகப்
படுத்தி அதை அறிய முயற்சி செய்யும்பொழுது ஞானம்
வெளிப்படுகின்றது. உண்மையில் எவரும் மற்றவரிடம்
கற்பதில்லை. ஒவ்வொருவரும் தாமே கற்றுக்கொள்ள
வேண்டும். புறத்தே உள்ள ஆசான் தூண்டுகிறான்.
அகத்தேயுள்ள ஆசான் விழித்தெழுந்து அறிந்துகொள்ள
நமக்கு உதவி செய்கிறான். ஆகையால், அறிதல் என்பது
என்ன என்பதைத் திருவள்ளுவர் ஞாபகமூட்டுகிறார்.

“சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு”

ஆதலால், பொறிகளின் வழியாகச் செல்லும் புலன்களை
அங்ஙனம் செல்லவிடாமல் மனதைக் கட்டுப்படுத்தித்
தீயவை நீக்கி நல்லவற்றிலேயே நிலைக்கவைத்திருப்பது



அறிவு என்று ஏற்படுகிறது. இதனால்தான் முற்காலங்களில்
நமது மூதாதைகளாகிய ரிஷிகள் குருகுலங்களை ஏற்படுத்தி,
இயற்கையின் மூலமாக இறைவனைக் கண்டுகொண்டு,
“தான் கண்ட இன்பம் பெறுக, இவ்வையகம்” என்ற
கொள்கையை அடிப்படையாகக்கொண்டு சிஷ்யகோடி
களுக்குப் பயிற்சி அளித்து, மானிடத்தன்மையின்
மாண்பை உலகத்தாருக்கு அறிவுறுத்தினார்கள். ஒரு
பக்கம் தாங்களும், மறுபக்கம் தங்கள் சிஷ்யகோடிகளின்
மூலமாக அரசர்களுக்கும் தர்மத்தைப் போதித்தனர்.
அரசர்கள் மூலியமாக குடிகளைக் கடமைகளினின்று வழு
வாமல் இருக்க ஏற்பாடு செய்தார்கள். அதற்குத்தான்
ஆங்கிலத்தில் (Spiritual culture) (ஆத்மீகக் கல்வி)
என்று பெயர். அதை எப்படி நமது ரிஷிகளும்,
நாயன்மார்களும் செய்து வந்தார்கள்? அஹிம்சை
யைக் கடைப்பிடித்து, மனதை ஒருமுகப்படுத்தி, சுய
நலமின்றி, எளிய வாழ்க்கை வாழ்ந்து, துன்பத்தைச்
சகித்து, பிரம்மசர்யத்தை மேற்கொண்டு, ஜீவகாருண்ய
மூர்த்திகளாய், அரசனுக்கும், பிரஜைகளுக்கும், தபோ
தனர்களாகிய ஆண்டிகள் வழிகாட்டிகளாக இருந்தார்கள்.
அவர்கள் பாரமார்த்திக ஞானத்தை மாத்திரம் புகட்டுவ
தோடு நின்றுவிடவில்லை. லௌகீக ஞானமாகிய பல
கலைகளையும், தொழில்களையும் போதித்து வந்தார்கள்
என்பதைக் குறிப்பிடுவதற்காகவே முன்பு 64 கலைகளைப்
பற்றிக் கூறினேன். தற்காலத்தில் 64 கலைகளின் விவரம்
என்னவென்பதுகூட நம்மில் பெரும்பாலோருக்குத் தெரி
யாது. அக் கலைகளுணர்ந்தோர் இல்லையென்றே சொல்லி
விடலாம்.

நமது தற்போதைய கல்வி முறையை எடுத்துக்
கொள்ளுவோம். இப்பொழுது பள்ளிக்கூடங்களிலும்,

கலாசாலைகளிலும் (High Schools) கல்லூரிகளிலும் (Colleges) கொடுத்துவரும் கல்வி எந்த விதமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது என்பதைப் பார்ப்போமானால், அது தேசத்தின் பண்புக்கும், நாகரிகத்துக்கும், சமூகப்பொருளாதார முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைக்கப்படவில்லை. அதைச் சரியாக திருத்தியமைக்கவேண்டிய நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இதுவரையில் நம்முடைய முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த அன்னிய அரசாங்கத்தை நீக்கி இப்பொழுது நாம் சுதந்திரவாயிலை அடைந்திருக்கிறோம். அடைந்ததைப் பயன்படுத்திக்கொண்டு நம் தேசத்தில் இருக்கிற ஜன சமூகத்தின் பொருளாதார, சமூக, ஆத்மீக முன்னேற்றத்திற்குத் தகுந்த முறையில் நடைபெறுவதற்கு நாம் ஏற்பாடு செய்யவேண்டும்.

குழந்தையை எடுத்துக்கொள்வோம். பல பிறவிகளில், தான் அடைந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, இயற்கையின் ஒத்தாசையினால், இறைவனை அடைவதற்கு அனுகுணமாக குழந்தை உலகில் பிறக்கிறது. அதனில் இரண்டுவித சக்திகள் இருக்கின்றன. ஒன்று இறைவனின் சக்தி. அதைத்தான் ஆன்மா என்று சொல்லுகிறோம். மற்றொன்று இயற்கையின் சக்தி. அதைத்தான் உடல் என்று சொல்லுகிறோம். உடல் இருக்கும் வரையில் ஆன்மா இருந்தே தீரும். அது பத்த ஆன்மா என்றும், முத்த ஆன்மா என்றும் இரண்டுவிதமாக மனிதனுடைய ஞானத்திற்குத் தகுந்தபடியும் சூழ்நிலைக்குத் தகுந்தபடியும் அமைகிறது. அந்த ஆன்மாவில் எல்லையற்ற சக்தி நமக்குத் தெரியாமல் பொதிந்து கிடக்கின்றது. அது மலர்வதற்கு வழிகாட்டியாக இருப்பவர்கள் முதலில் தாய், பிறகு தந்தை, பிறகு ஆசிரியன். தாய் தந்தையர்



களின் அன்பின் கனியாகத்தான் குழந்தை தோன்றுகிறது. தோன்றிய பிறகு அன்புணர்ச்சி முதிர்ந்து, பாலாக மாறி உடலை வளர்க்கின்றது. அதற்குப் பிறகு அதனுடைய சூழ்நிலைக்குத் தகுந்தபடி அது வளர்கின்றது. ஆகையால், குழந்தை நன்றாக வளரவேண்டுமென்றால், தாய்தந்தையர்கள் மட்டுமல்ல; சூழ்நிலையும் நன்றாக இருக்கவேண்டும். அதனால்தான் நமது பெரியோர்கள்,

"தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்"

என்ற பழமொழி உபயோகிக்கிறார்கள். தாய்க்கு அதிகப் பொறுப்பு இருக்கின்றது. அவள் ஒழுக்கமுடையவளாகவும், நடை, உடை, பாவனை எல்லாம் குழந்தை வளர்ச்சிக்குத் தகுந்த முறையிலேயே உள்ளனவாகவும் இருக்கவேண்டும். தந்தை விஷயமும் அப்படித்தான். அதனால்தான் நமது முன்னோர்கள்,

"மாத்ரு தேவோபவ, பித்ரு தேவோபவ,
ஆசார்ய தேவோபவ, அதிதி தேவோபவ"

என்று அக்கறையுடன் போற்றினார்கள். மேலும், "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்" என்றார்கள். ஆகையால், தாய் தந்தை, ஆசாரியன் இவர்களுக்கு எவ்வளவு பெரிய பொறுப்பு இருக்கின்றது என்பது ஏற்படுகின்றது. இவருள்ளும் ஆசாரியன் சிறப்பாக என்ன செய்யவேண்டும் என்பதை யோசிப்போம். ஆசாரியன் தேவைகளைக் குறைத்துக்கொண்டு, தன்வயப்பட்ட மனத்தினனாய், தூய வாழ்க்கையை நடத்துபவனாய், இனிய அன்பை அடிப்படையாகக்கொண்டு குழந்தைக்குப் போதிக்க முற்படவேண்டும். குழந்தையின் மனம் பளிங்கு போன்றது. எந்தவிதமான சூழ்நிலையில் அது வளர்க்கப்படுகின்றதோ, அதற்குத் தகுந்த எண்ணமும்,

செய்கையும், அதை உருவாக்குகின்றன. ஒரு செடியை
அதன் இயற்கைக்கு மீறி வளரச்செய்ய முடியாது.
அதைப்போன்றதே குழந்தைக்குக் கல்வி புகட்டுதலும்.
செடி அதன் இயற்கைப்படிதானே வளரும்? அப்படியே
குழந்தையும் தன் இயற்கையை ஒட்டியே தானாகக் கற்றுக்
கொள்கிறது. ஆசாரியன் ஒன்று செய்ய முடியும். அதன்
இயற்கைக்குத் தகுந்தபடி வளர்ச்சி அடைய ஒத்தாசை
செய்ய முடியும். அதன் வளர்ச்சியைத் துரிதப்படுத்த
முடியாது. வளர்ச்சிக்கு இடையூறாக இருப்பவற்றை
நாம் நீக்கலாம். அதற்குமேல் அது பெறும் அனுபவத்தி
லிருந்துதான் அறிவு வளர்ச்சி உண்டாகிறது. ஒரு
விவசாயி ஒரு செடியின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்
பொருட்டுப் பூமியைக் கிளறி, களையை நீக்கி, எருப்
போட்டு நீர்பாய்ச்சி, வேலியிட்டு, மற்ற உயிர்கள் அதை
அழிக்காமல் காப்பாற்றலாம். அதற்குத் தேவையான
காற்று சூரிய ஒளி, முதலியவற்றை இயற்கை அளிக்கிறது.
அதற்கு வேண்டிய அனைத்தும் அது தானே தான் உட்
கொண்டு ஜீரணம் செய்யவேண்டும். அதுபோலத்தான்
ஆசிரியன் தான் கற்பிப்பதாக எண்ணுவதாலேயே அவன்
எல்லாவற்றையும் கெடுத்துவிடுகிறான். நான் முன்கூறிய
வாறு சகல ஞானமும் மனிதனுக்குள்ளே பொதிந்து
கிடக்கிறது. அதைத் தூண்டி எழுப்புதலே தேவை.
அதுவே ஆசிரியனுடைய வேலை. சிறுவர்கள் தங்கள்
சொந்த அறிவை உபயோகப்படுத்தவும் தங்கள் ஐம்புலன்
களைச் சரியாகப் பயன்படுத்தவும் தெரிந்துகொள்ளும்
அளவிற்கு நாம் உதவி செய்தால் போதுமானது.

அதற்காகத்தான், மகாத்மா காந்தியடிகள், அடிப்
படைக் கல்வியில், புஸ்தகம் இல்லாமல், குழந்தைகளுக்குத்
தொழில்கள் மூலமாக உடலுக்கும், உள்ளத்திற்கும்,



மூளைக்கும் தொடர்பு ஏற்படுத்தி, ஐம்புலன்களையும் பண்
படுத்தி, அதன் மூலமாகப் பொருளும் அருளும் உண்டா
கப் பயிற்சியளிக்கப் பாடுபடவேண்டும் என்று எண்ணு
கிறார். அதை நமது தேசத்தில் ஒவ்வொரு கிராமத்திலும்
பரப்பி, வருங்கால சந்ததிகளான குழந்தைகளை நாம் சீர்
திருத்திக் கொண்டுவரவேண்டும். இப்பொழுது நமது
கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் கொடுக்கப்படும் கல்வி
யானது, மனிதனுக்குப் பல துறைகளில் முன்னேற்றம்
அடையும்படியான முறையில் தகுந்த வசதியுடனும்,
பயனளிக்கும் முறையிலும் கொடுக்கப்படாமையால்,
அரசாங்க உத்தியோகத்திற்கு மாத்திரம் பயன்படும்படி
நடத்தப்படுவதால், எங்குபார்த்தாலும் சண்டை சச்சரவு
கள் உண்டாகியிருக்கிறது; உத்தியோக வேட்டையினால்
மனிதனை மனிதன் துவேஷிக்கவும் ஏதுவாகிறது. இந்த
நிலை தேசத்திலிருந்து மாறவேண்டுமென்றால், கலாசாலை
களிலும், சர்வகலாசாலைகளிலும், பல தொழில்களிலும்,
பல கலைகளிலும் முன்னேற்றம் அடையும்படியான
முறையில், அரசாங்கம் கல்வியை மாற்றியமைக்கவேண்டும்
அம்மாதிரி மாற்றியமைக்கும் கல்வியானது ஜன சமூகத்
திற்கு, விவசாயம், வர்த்தகம், கைத்தொழில்கள், இயந்
திரத் தொழில்கள் முதலிய பற்பல துறைகளில் பயன்
படக்கூடியவாறு அமைந்திருக்க வேண்டும். இன்று
கலாசாலைகளில் மாணவர்கள் படிக்கும் படிப்பினால்
ஜனசமூகத்திற்கு விசேஷ பயன் இருப்பதாகத் தெரிய
வில்லை. ஆனால், ஏழைகளிடத்திலிருந்து வாங்கும் வரியி
லிருந்து கோடிக்கணக்கான பணம் கலாசாலைகளுக்கு
மானியங்களாக அளிக்கப்பட்டு வருகின்றது. கிராமங்களி
லிருக்கும் ஏழைகள் உண்ண உணவில்லாமலும், உடுத்த
உடையில்லாமலும், இருக்க இடமில்லாமலும் கஷ்டப்

பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கலாசாலைப் படிப்பு முடிந்து பட்டதாரிகளாக நீங்கள் உலகத்தில் உங்களுடைய காரியங்களைச் செய்ய முற்படப் போகிறீர்கள். எந்த ஏழைகள் கொடுத்த வரியின் ஒரு பகுதியால், பட்டதாரிகளாக ஆனீர்களோ, அந்த ஏழைக் கிராமவாசிகளுக்கு முதலில் தொண்டுசெய்யவேண்டியது உங்கள் கடமை. இளைஞர்களாகிய நீங்கள் இதை மனதில் வைத்துக்கொண்டு தேசத்திற்குச் சேவை செய்ய முற்பட்டால், நமது தேசமும் மற்ற தேசங்களைப்போல் முன்னேற்றம் அடையமுடியும். நம் தேசம் பல துறைகளிலே முன்னேற்றம் அடையவேண்டும். விவசாய நூலில் பயிற்சி பெற்றவர்களும், Soil Scientists, Plant exporers, Chemists, Animal husbandrymen, Plant breeders, Geologists முதலிய துறை வல்லுநர்களுமான ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தேவையாயிருக்கின்றார்கள். அதேமாதிரி தொழில் முன்னேற்றத்திற்குப் பல தொழில் நிபுணர்கள் நமக்குத் தேவை. அம்மாதிரி நிபுணர்களுக்கு நல்ல பயிற்சியளித்துப் பல தேசங்கள் அபிவிருத்தியடைந்திருக்கின்றன. நம் தேசத்திலும் புதுப் புது ஆராய்ச்சிச்சாலைகளை ஏற்படுத்தி, அதன் மூலமாக ஆராய்ச்சி செய்து, தேசமுன்னேற்றத்துக்குத் தகுந்த முறையில் தொழிலையமைத்து, தேசத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நமக்குத் தேவை.

இப்படிப் பல துறைகளில் நாம் முன்னேற்றமடைய வேண்டுமென்றால், உங்களைப்போன்ற பட்டதாரிகள், அந்தத் துறைகளில் வேலை செய்வதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டு, அவைகளில் உங்களுடைய ஆராய்ச்சியைச் செலுத்தி, அந்த ஆராய்ச்சியின் மூலமாகத் தேச



முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு விநாடியும் தொண்டு செய்ய முன்வரவேண்டும். முன்வந்தால், நம் தேசமும் மற்ற தேசங்களைப்போல் எல்லாத் துறைகளிலும் முன்னணியில் நிற்கமுடியும். இம்மாதிரி நம் தேசம் முன்னேற்றம் அடைந்தால், அது உலக முன்னேற்றத்திற்கே அடிகோலியாக இருக்கும்.

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
இவ்வுலக மில்லாகி யாங்கு"

என்பது நமக்கு நினைவிருக்கவேண்டும்.

நமது பழையகாலத்துக் குருகுலங்களிலிருந்து படிப்பு முடிந்ததும் வெளியேறும் மாணாக்கர்களுக்கு ஆசிரியன் கடைசியாக என்ன உபதேசம் செய்துவந்தான் என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். அது பின்வருமாறு:—

"உண்மையைப் பேசு!
கடமையைச் செய்!"

குருவுக்குக் காணிக்கை கொணர்ந்து கொடுத்தபின்,
"சந்ததி என்ற நூல் அறுபட்டுப் போகாமல் காப்பாயாக!"

உண்மையினின்று வழுவாதே!
அறத்தினின்று வழுவாதே!
நலனைப் புறக்கணிக்க வேண்டாம்!
செல்வத்தைப் புறக்கணிக்க வேண்டாம்!
ஓதலும் ஓதுவித்தலும் மறக்கவேண்டாம்!
தேவர்களுக்கும் முன்னோர்களுக்கும் செய்யவேண்டியதை
மறக்கவேண்டாம்.

தாயைத் தெய்வமாகக் கருது.
தந்தையைத் தெய்வமாகக் கருது.
ஆசிரியனைத் தெய்வமாகக் கருது.
வந்த விருந்தினரைத் தெய்வமாகக் கருது.

"எந்தச் செயல்கள் குற்றமற்றனவோ அவையே நீ செய்யத்தக்கவை. மற்றவற்றைச் செய்யக்கூடாது. எங்களிடத்தில் நீ கண்ட நன்

னடத்தையைப் பின்பற்றுவாயாக. அல்லாதது ஒருநாளும் வேண்டாம். எங்களைவிட மேம்பட்ட பெரியார்கள் இருக்கிறார்கள், அவர்களை ஆசனத்தில் அமர்த்திப் பெருமைப்படுத்துவாயாக. கொடுப்பதைச் சிறப்பாகக் கொடு; கொடுப்பதில் லோபித்தனம் காட்டாதே. இகழ்ந்தோ, உதாசீனமாகவோ கொடாதே; கொடுக்கும் சக்தி உனக்கு வாய்த்தது என்று கர்வம் கொள்ளாதே; கொடுப்பதைப் பலர் அறிந்து மெச்சுமாறு டாம்பீகம் செய்யாதே; உன் கொடையைப் பெறுகிறவர்கள்பால் அன்பும் பயபக்தியும் கொண்டு நடந்துகொள்வாயாக. செய்யும் கருமங்களிலேனும் நடக்கும் முறையிலேனும் உனக்கு ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால், விவேகமும், தருமத்தில் பற்றும், இரக்கமும் கொண்ட பெரியோர்கள் அவ் விஷயங்களில் எவ்வாறு நடந்துகொள்கிறார்களோ அவ்வாறு நீயும் செய்வாயாக. விலக்கப்பட்ட விஷயங்களிலும் அவ்வாறே பெரியோர்களைப் பின்பற்றுவாயாக.''

"இதுவே முறை; இதுவே உபதேசம்; இதுவே வேதத்தின் பொருள் விளக்கம்; இதுவே கட்டளை; இப்படி நீ நடப்பாயாக.''

ஒரு நாட்டில் கல்வி கற்றவர்கள் எல்லோரும் மேற்கண்டவாறு உண்மையே பேசி, தருமவழியில் நின்று ஓதுதலை விடாமல், வாழ்க்கை நடத்தினார்களானால் பின் அந்த நாட்டுக்கு வேறென்ன வேண்டும்?

"குருகுலவாசம் முடிந்ததும் குடும்ப வாழ்க்கையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஏன் கஷ்டப்படவேண்டும்? கவலையற்று இன்னும் படித்துக்கொண்டே சுகமாக இருக்கலாம்'' என்று உத்தமரான சீடர்கள் ஒருசிலர் எண்ணக்கூடும். குருகுல கட்டுப்பாடும் சட்டங்களும் முதலில் கஷ்டமாகத் தோன்றினும், வழக்கப்பட்டபின் அதிலேயே மனம் ஈடுபட்டு, குடும்ப வாழ்க்கையின் பாரங்களும் கவலைகளும் வேண்டாமென்று தோன்றுவது இயல்பு. இக்காலத்து மாணவர்களுக்குள்ளும் இந்த மனப்பான்மை உண்டாவதை சில சமயம் பார்க்கிறோம். இதையறிந்தே



உபதேசத்தில் குருதக்ஷிணை கொடுத்து முடிந்ததும், "சந்ததி என்ற நூல் அறுபட்டுப் போகாமல் காப்பாயாக'' என்று சொல்லுகிறார்; அதற்கு விவாகம் செய்து கொண்டு உன் முன்னோர்களுடைய பரம்பரை அறுந்து போகாமல் இல்லறம் நடத்து என்று பொருள். விவாகத் தில் நம் முன்னோர்கள் அறிந்த பயன் இதுவே. காதல் இன்பமோ, உடல் உணர்ச்சி என்ற மிருகத்திற்குச் செய்யும் பூஜைக்கிரமமோ அல்ல, விவாகமும் இல்வாழ்க்கையும். சமுதாயத்திற்கு நாமும் நம்முடைய குலமும் செய்ய வேண்டியசேவை உண்டு. அதைச் செய்வதற்குரிய மக்கள் தொகுதியை ஈந்து புறந்தருதல் நம் கடன் என்பதே விவாகதத்துவம்.

ஆசாரியன் உபதேசப்படி உயர்ந்தோர் எப்படி வாழ்க்கையை நடத்துகிறார்களோ, அதையே வழிகாட்டி யாகக்கொண்டு மற்றவர்களும் உலகத்தில் நடக்க வேண்டும்.

உயர்ந்தோர் அறத்தைக் கடைப்பிடிப்பவர்கள். திருமூலருடைய ஒரு பாட்டை இங்கு ஞாபகப்படுத்துகிறேன்.

"அறத்தை அறியா அறிவே மரமாம்
அறத்தைப் பிழைக்கும் அறிவே மிருகம்
அறத்தைப் புரியும் அறிவே மனிதன்
அறத்தைக் காக்கும் அறிவே கடவுள்.''

நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு டைனமோ போன்றவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. உங்கள் சக்தியை வீணே விரயம் செய்யாமல் பல பயிற்சிக் கழகங்கள் ஏற்படுத்தி ஐந்து வருஷங்களுக்குள் நம் நாட்டின் கல்வித்துறையையே முற்றிலும் மாற்றி அமைத்து, ஜன

சமூகத்தின் அறிவுச் சுடர்களாக விளங்கி, தொழில் வினியோகம், பாதுகாப்பு, அறிவு, அபிவிருத்தி முதலிய வைகள் செவ்வனே நடைபெற ஒழுக்கத்தை அடிப்படை யாகக்கொண்டு ஆண்மையுள்ள வருங்கால சமுதாயத்தை உருவாக்குங்கள். மகாத்மா காந்தி அடிகளின் கனவை நனவாக்க நீங்கள் முயற்சி செய்யுங்கள். ரிக்வேதத்திற் கூறியவாறு,

உங்கள் மந்திரமும் உங்கள் லட்சியமும் ஒன்றாகுக.
உங்கள் யோசனையும் உங்கள் முடிவும் ஒன்றாகுக.
உங்கள் விருப்பங்கள் ஒன்றுபடுக.
உங்கள் இருதயங்கள் ஒன்று படுக.
உங்கள் எண்ணங்கள் ஒன்று படுக.
உங்களுள் பூரண ஒற்றுமை நிலவுக.

சங்கரரின் ஞானமும், ராமானுசரின் பக்தியும், மத்வா சாரியரின் சேவையும், மகாவீரரின் அஹிம்சையும், விவே கானந்தரின் மேதையும், மகாத்மா காந்தியின் சத்திய விரதமும், சேவா உணர்ச்சியும் உங்களிடத்தில் உண்டாகி அருளும், ஆண்மையும் பெருகவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.



அப்பர் அச்சகத் திறப்பு விழா

அப்பர் அச்சகத் திறப்பு விழா — 4 10 '48



சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின்

## 14. அப்பர் அச்சகத் திறப்புவிழா

இக்கழகம் இருபத்தெட்டு ஆண்டுகளாகத் தமிழ் நாட்டிற்குத் தொண்டியற்றி வருகின்றது. பல புத்தகங்கள் கண்கவர் வனப்பினவாய் நல்ல முறையில் பிழையின்றிப் பதிப்பித்து வருகின்றது. எனக்கும் பதினெட்டு ஆண்டுகளாக நன்கு தெரியும். இவர்கள் புத்தகங்களை நான் வாங்கிப் படிப்பது. ஏன்? பிழையின்றியும், அழகாகவும், தெளிவாகவும் இருப்பதினாலேயாம்.

நம் முன்னோர்கள் நல்ல மூளை வலுவுடையவர்களாகவிருந்தார்கள். அதனால் அவர்கள் கல்விக்குப் புத்தகமும் அச்சகமும் அந்நாள் தேவையில்லாமலிருந்தது. அவர்கள் எதையும் எளிதாக நெட்டுருப்பண்ணும் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். காரணம் என்ன? புலனடக்கம் பெற்று வீரியக் கட்டுடையவர்களாக இருந்தார்கள். அதனால் அவர்கள் உடல்வலு, உள்ளவலு, மூளைவலு நன்றாகப் பெற்றிருந்தார்கள். அதனால் நன்றாக உழைத்தார்கள். மறதியில்லாமலிருந்தார்கள். எத்தனைப் பாட்டு வேண்டுமானாலும் நெட்டுருப்பண்ணி ஒப்பித்தார்கள்.

ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் ஆசிரிய மாணாக்கர் முறையில் கல்வி கற்பித்தும் கற்றும் வந்தார்கள். நெட்டுருப்போடும் நீண்ட பழக்கமிருந்துவந்தது. மனிதன் நடக்கும் கல்விக் களஞ்சியமாக இருந்தான். மக்கள் வலுக் குறைவு அடைய அடைய அகத்தே தொகுத்தவற்றை விரிவாகப் புறத்தே தொகுக்கும் நூலகங்களும் நூல்களும் தேவைப்பட்டன. அந்நூல்களை விரிவாகவும் மிகுதியாகவும், எளிதாகவும் உண்டாக்குவதற்கு அச்சகம் முதலிய கருவிகள் தேவைப்பட்டன.

இத்தேவை நம்முடைய வலுக்குறைவைக் காட்டுவதாயிருந்தாலும், நாம் அவற்றைப் போற்றிவரும் நிலையிலிருக்கின்றோம். நம் முன்னோர்கள் நமக்கு அழியாக் கருவூலங்களாக—உணர்வு விளக்காகத் தந்த சுவடிகளை நாம் பொன்னினும் மணியினும் புகழ்மிக்க உயிரினும் போற்றி வரல் வேண்டும். நம்மவர்கள் அறியாமையால் அச்சிடாப் பழைய வைப்பனைய நூல்களின் அருமை பெருமை அறியாது அவைகளைக் கறையானுக்குக் கொடுத்தல், காவிரியினிடல் முதலியவற்றைச் செய்கின்றனர். இவை வருந்தத்தக்கனவே.

எனக்குத் தெரிந்தவரை, திரு. ஆறுமுக நாவலர் அவர்களே முதன் முதல் செந்தமிழ்ச் சமய நூல்களைப் பிழையின்றி அழகுறப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள். அதன்பின், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் அத்தொண்டினைச் செவ்வனே செய்துவருகின்றார்கள். அம்மட்டுமின்றிப் புதிய முறைகளையும் கையாண்டு பலவேறு சிறப்புக் கட்டடமமைந்த பதிப்புக்களும் வெளியிட்டு வருகின்றார்கள். படிப்பு, புத்தகம், படம், கேள்வி என்னும் மூன்றும் பரவவேண்டும். அம் மூன்றினையும் இக்கழகத்தார் செவ்வனே செய்து வருகின்றார்கள்.

சமய நூல்கள் கண்கவர் வனப்பினவாக விருந்தால் அவ்வனப்பால் மனம் இழுக்கப்பட்டு அந்நூல்களை வாங்கிப் படித்து மக்கள் பயன் எய்துவார்கள். இவ்வுண்மையுணர்ந்து கழகத்தார் நல்ல முறையில் பதிப்பித்து வருகின்றார்கள். கழகத்தார் பள்ளிக்கூடம், கல்விச்சாலை, நூல் நிலையம், மணம் முதலிய சிறப்பின்போது வழங்கல் முதலியவற்றிற்கு ஏற்றவாறு புத்தகங்கள் வெளியிட்டுள்ளார்கள். ஒருவகையாக வெளிப்படட்டும் இன்றியமையாததே. அது மருந்தினை வெல்லக்கட்டியிற்



பொதிந்து கொடுப்பதனை யொக்கும். மேனாட்டார் பதிப்பிக்கும் முறையும் இக்கருத்துக் கொண்டதேயாம்.

இருபத்தெட்டு ஆண்டுகளாகப் பல அச்சுக்கூடத்தில் பதிப்பித்துத் தனக்கென உரிய அச்சகமில்லாதிருந்த பெருங்குறை இன்று நீங்குகிறது. அச்சகத்துக்கு வழங்கும் திருப்பெயர் 'அப்பர் பெருமான்' திருப்பெயராகும். அவர் "நாமார்க்கும் குடியல்லோ" மென்று உரங்கொண்டு மொழிந்து, வெளிப்பட்டெழுந்து, வெற்றியுடன் திகழ்ந்த தமிழ்நாட்டு முதல் (நன்மை கடைப்பிடி) சத்தியாக்கிரகி யாவார். மக்களைக் கடவுள் தன்மைக்குக் கொண்டு போவதே பெரியோர் குறிக்கோள். அவ்வுண்மை காட்டவே இப்பெயர் இங்கு அமைத்தனர் போலும்.

நாமகளை வழிபடுவதாகிய நவராத்திரி நமக்கு நினைப்பூட்டுவது என்ன? கல்வி, கைத்தொழில் எல்லாங் கற்கவேண்டும். கல்வியை உள்ளத்தில் மறவாது கற்பதே சிறந்தது. அவ்வாறு கற்பிக்க வேண்டும். அங்ஙனங் கற்கச் செய்வதிலேயே நாடு, மொழி, மக்கள் எல்லார் முன்னேற்றமும் நன்றாக அமையும். எல்லா வளங்களும் அறிவின் வழியே பெருகும். அறிவு விளக்கத்துக்கு நூல் இன்றியமையாது வேண்டும். நூல் வெளிவர அச்சகம் வேண்டும்.

அச்சகம் இப்போதுள்ளவை போதுமான அளவின வன்று. ஆயிரக்கணக்கான மக்களுக்குக் கல்வி பரவ வேண்டும். அதற்கு வேண்டுமளவு நூல் வெளிவரவேண்டும். அதனால் இன்னும் அச்சகம் பலவாறு பெருகவேண்டும். இப்பொழுது நூற்றுக்குப் பதின்மரே கற்றுள்ளனர். முற்காலத்தில் நூற்கல்வி குறைவாக இருந்தாலும் செவிக் கல்வி மிகுதியாக இருந்தது. அக்கல்வியும் செய்யுட் கல்வி

யாக இருந்தது. தொட்டில் முதல் சுடுகாடுக் கட்டைவரை பாட்டாகவே இருந்தது.

அது, தொட்டில் பாட்டு, உழவுப்பாட்டு, வழிநடைப் பாட்டு, வண்டிப்பாட்டு, ஏற்றப்பாட்டு எனத் தனித்தனி வழங்கப்பெறும். நாம் பெரியோர் மரபின் வழிவந்தோமென்பதற்குத் தகுதியுடையவராக இருப்பதற்கு எவருடனும் பகையின்றி எல்லாருக்கும் இயன்ற உதவிசெய்து வரவேண்டும். அங்ஙனம் செய்யாவிட்டால் நம் தகுதிப் பாட்டில் உலகம் ஐயங்கொள்ளும்.

பழங்காலத்துப் புலவர்கள் நிகண்டு முதலிய பெருநூல்களில் வல்லவராக இருந்தனர். நம்நாட்டுச் சித்தர் பாடல்கள் மேலைநாட்டு அறிவியல் நூற்களோடு பெரிதும் ஒத்தன. சித்தர் பாடல்களில் வெளிப்படையாகத் தோன்றும் பொருள்கள் அப்பாடல்களின் மெய்ப்பொருள்கள் அல்ல. அவற்றின் மெய்ப்பொருள்கள் ஆசிரிய மாணாக்கர் மரபின் வழியாக வருவார் வாய்க்கேட்டுத் தெளிய வேண்டும்.

பெரும்பாலும் தற்காலத்தார் வெளிப்பகட்டாராகவே காணப்படுகின்றனர். ஆங்கிலங் கற்றவர்க்கு மேனாட்டு மொழியில் பெரும்பற்று. தமிழ் மொழியில் பற்றும் ஊக்கமும் பயிற்சியுமில்லை. உலகம் போற்றும் இரவீந்திரநாத தாகூர் தாய்மொழிப் பற்றாலேயே உயர்ந்தார். தாய்மொழி—தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஊர்தோறும் அச்சகம் வேண்டும்.

எல்லா மொழியும் தெரியவேண்டும்; அம்மொழிகளை ஒப்பு நோக்கவேண்டும். பிறருக்கு உணர்த்தவேண்டும். சரசுவதி மகாலில் நூல்களைப் போற்றிவந்த முறை வியக்கத்தகுந்தது. அந்நாளில் பனையோலையில் எவ்வளவு



அழகாக எழுத்துக்களைப் பொறித்துள்ளார்கள். சரபோசி மகாராசா அரும்பாடுபட்டு நூற்கள் தொகுத்துவைத்துள்ளார். அவைகளை நான் நேரில் பார்த்தேன். அவைகள் காலப் பழமையால் எடுக்கும்போதே ஒடிந்துவிடுகின்றன. அங்குப் படங்களும் மிக அழகாகக் காணப்படுகின்றன.

'உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்' என்றனர் பாரதியார். உண்மை கடைப்பிடித் தொழுகவேண்டும். நூலோர் உள்ளம் நம்மை மேல் ஊக்கும். நாம் நூல்களை யாவர்க்கும் எளியவாகக் கிடைக்கு முறையில் பரப்பவேண்டும். அதற்கு 'அச்சிடுவோர் சங்கம்' என ஒரு சங்கம் ஊர் ஊராக நிறுவ வேண்டும். சிறு சிறு தொகை தொகுத்து அச்சிடுவோர்க்கு உதவியோ, தாங்களே அச்சிட்டோ வெளிப்படுத்தவேண்டும். தொழிலாளர்க்கு உதவும் பொருட்டு 1908-ல் பைசா பண்டு எனச் சங்கவழிச் சேர்த்த தொகையால் எவ்வளவோ உதவிகள் நடந்தன.

பழைய நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தும் முயற்சியில் அரசியலார் செய்யவேண்டுவன மக்கள் ஆர்வத்தையே பொறுத்திருக்கிறது. என் சர்க்காரும் மத்திய சர்க்காருடன் கலந்தாய்ந்து ஒருங்கிணைந்து பழைய நூல்களை அச்சிட்டுப் பாதுகாக்கும் பணியில் தலையிடும்.

இக்காலத்து மக்கள் எல்லாவகையான உதவியையும் அரசியலாரையே நாடுகின்றனர். அவ்வாறு நாடுங்கால் அரசினர் வரியை மிகுதிப்படுத்துகின்றனர். மக்களே சேர்ந்து தங்கள் தேவைகளைத் தாங்களே நீக்கிக்கொள்ள வேண்டும். முற்காலத்தில் மக்கள் அரசனிடம் எதிர் பார்த்தது வெளிநாட்டுப் படையெடுப்பை விலக்கலும், உள்நாட்டுக் குழப்பத்தை அடக்கலுமாகிய இவ்வளவே யாம்.

மேனாட்டில் தன் நலத்தானே பெரியவன் என்று அழைக்கப்படுவான். நம் நாட்டில் 'தனக்கென வாழாப் பிறர்க் குரியாளனே' பெரியவனென்று அழைக்கப்படுவான். இவ்வுண்மையை முனிவர், நாயன்மார், ஆழ்வார் முதலிய பெரியவர்கள் போற்றப்படுவதாற் காணலாம். அறுபத்துநாலு கலைகளை நம் முன்னோர்கள் வகுத்தவற்றுள் மேல்நாட்டு அறிவியல் நூலும் அடங்கும். நம்முடைய அடிமை வாழ்வால் கலையெல்லாம் மறந்தொழிந்தோம். புதிய கலைகளாக்கும் வாய்ப்பிழந்தோம்.

இப்பொழுது காந்தியடிகள் நன்முயற்சியால் நாட்டுக்கும் நமக்கும் விடுதலையும் உரிமை ஆட்சியும் வந்திருக்கின்றன. காந்தியடிகளால் வந்த உரிமை ஆட்சி உரன்பெற வேண்டுமானால், படித்தோர் ஏனையோர்க்குப் படிப்பிக்க வேண்டும். படிப்போர்க்கும் படிப்பிப்போர்க்கும் எல்லோரும் உதவி செய்யவேண்டும்.

ஒருவர்கூடச் சோம்பலில்லாது எல்லாரும் வேலை செய்யவேண்டும். முன்னேற்றத்திற்குப் பாடுபடவேண்டும்.

நம் நாட்டு ஏழைமையால் சிறு நூலும் வாங்க இயலாதார் பலரிருக்கின்றனர். அவர்களுக்கென மலிந்த பதிப்பு ஒன்று வேண்டும். அதுமட்டும் போதாது; செல்வர் ஏராளமாகப் புத்தகங்களை வாங்கி அவர்களுக்கு நன்கொடையாகவும் அளிக்கவேண்டும்.

அப்பர் பெருமா[illegible] [illegible]ம் மொழிக்கும் தொண்டுபுரிந்[illegible] [illegible]ப்பர் அச்சகம் [illegible]க!

N56
113486